ஸ்ரீ:

பூதத்தாழ்வார் திருவடிகளே சரணம்.

பூதத்தாழ்வார் அருளிச்செய்த

இரண்டாந் திருவந்தாதி

திருக்குடந்தை ப. ஸ்ரீநிவாஸராகவன். (சிரோமணி)
இயற்றிய "அம்ருதவர்ஷிணி" என்னும் உரையுடன்,

திருக்குடந்தை ஸ்ரீ ராமாநுஜ பக்தஸபையாரால்

—: 0 :—

ஸ்ரீ ஜனார்த்தன பிரிண்டிங் வொர்க்ஸ், லிமிடெட்டில்
அச்சிடப்பட்டது.

[illegible]

1938.



பொதுத்தனியன்கள்.

रामानुजदयापात्रं ज्ञानवैराग्यभूषणं ।
श्रीमद्वेङ्कटनाथार्यं वन्देवेदान्तदेशिकं ॥ ॥ १ ॥

लक्ष्मीनाथसमारंभां नाथयामुनमध्यमां ।
अस्मदाचार्यपर्यन्तां वन्देगुरुपरंपराम् ॥ ॥ २ ॥

योनित्यमच्युत पदांबुजयुग्मरुक्म
व्यामोहतस्तदितराणि तृणाय मेने ।
अस्मद्गुरोर्भगवतोऽस्यदयैकसिन्धोः
रामानुजस्य चरणौ शरणं प्रपद्ये ॥ ॥ ३ ॥

माता पिता युवतयस्तनया विभूति
स्सर्वं यदेव नियमेनमदन्वयानां ।
आद्यस्यनः कुलपतेर्वकुळाभिरामं
श्रीमत्तदङ्घ्रियुगळं प्रणमामि मूर्ध्ना ॥ ॥ ४ ॥

भूतं सरश्च महदाह्वय भट्टनाथ
श्रीभक्तिसार कुलशेखर योगिवाहान् ।
भक्तांङ्घ्रिरेणु परकाल यतीन्द्र मिश्रान्
श्रीमत्पराङ्कुशमुनिं प्रणतोऽस्मिनित्यम् ॥ ॥ ५ ॥

ஸ்ரீ:

பூதத்தாழ்வார் அருளிய

இரண்டாந்திருவந்தாதி.

இப்பிரபந்தம் பூதத்தாழ்வார் அருளிச்செய்தது. திருக்கோவலூரில் ம்ருகண்டு முனிவரதில்லத்தின் இடைகழியில் பொய்கையார் பேயார் என்கிற இருவருடன் இவ்வாழ்வார் நிற்குங்கால் திருமால் இவர்களை நெருக்கவே பொய்கையார் "வையந்தகளியா" என்று ஒரு விளக்கேற்றி அப்பெருமானைக்கண்டு மகிழ்ந்து அப்பெருமானது ஸ்வரூப ரூபகுண விபூத்யாதிகளை நூறு பாசுரங்களால் பேசியபின் அடுத்தபடியாக இவ்வாழ்வார் அன்பு ஆர்வம் இன்பு முதலியவைகளைக்கொண்டு விலக்ஷணமான விளக்கொன்றையேற்றி அவனை ஸாக்ஷாத்கரித்து நூறுபாசுரங்களாலே அவ்வநுபவத்தைப் பாடிநின்றார். ஆழ்வார்களுள் முதல்வர்களான மூவருள் இரண்டாவதான விவ்வாழ்வார் அருளிச்செய்தபடியாலும் முதலாவதான முதல் திருவந்தாதி அவதரித்தபின்பு இப்பிரபந்தம் அவதரித்தபடியாலும் இதற்கு இரண்டாந் திருவந்தாதியெனப் பெயர். இது நாலாயிர திவ்யப்பிரபந்தத்தில் இயற்பா என்னும் பகுதியில் இரண்டாவது பிரபந்தமாகவமைந்திருக்கும்.

பொய்கையாழ்வார் இவ்வுலகில் காணப்படும் பொருள்களைக் கொண்டே ஈச்வரனை அறியலாமென்றார். கண்களில் தென்படுகிற பதார்த்தங்களைத்தவிர வேறு காணுதற்காயிருக்கும் பொருள் கிடையாது என்றெண்ணி இவ்வுலகவாழ்க்கையிலே விருப்பமுடையவர்களும் வெளியேகாணப்படும் பொருள்களான பூமி கடல் சூரியன் இவைகளைக்கொண்டு ஈச்வரன் உளனென்றறியலாமென்றார். இவ்வாழ்வார் முதல்வருடன் கூடியிருந்து அப்பெருமானையும் அவனுடைய விபூதிகளையும் அநுபவித்தபடியால், முதல் திருவந்தாதியால் ஈச்வரனையும் அவனுடைய விபூதிகளையும் உள்ளபடி யாவருமறிந்திருப்பார்களெனக்கருதி வெளியே தென்படும் பதார்த்தங்களைக்

கருவியாகக்கொள்ளாமல் உடம்பினுள்ளே பிறக்கக்கூடிய அன்பு ஆர்வம் இன்பு முதலிய அவஸ்த்தாபேதங்களையுடைய பக்தியை ஸாதனமாக்கி அவனைக்காணலாமென்று கருதினார். ஆகவே பொய்கையார் புறம்பேயுள்ள பொருளைக்கொண்டே பகவனைக்காணலாமென்றார். பூதத்தார் உள்ளேயுள்ள பொருளாலேயே காணலாமென்றார். பிறகுபேயார் அவ்வநுபவத்தை நமக்கு விளக்கிக்காட்டினாரென்றும் தோன்றுகிறது. ஆகவே இப்பூதத்தாழ்வார் ஞானச்சுடர் விளக்கேற்றி நாரணனை அநுபவித்து அவ்வநுபவத்தைப் பின்னுள்ளாரும் அறிந்துவாழும்படி இப்பிரபந்தத்தைச் செய்தருளினார்.

ஸ்ரீ:

ஸ்ரீ ஆராவமுதாழ்வான் கோமளவல்லித் தாயார் திருவடிகளே சரணம்.

பூதத்தாழ்வார் பொன்னடிகளே சரணம்.

இரண்டாந் திருவந்தாதி

தனியன் வ்யாக்யானம்.

திருக்குருகைப்பிரான் பிள்ளான் திருவாய்மலர்ந்தருளிய தனியன்.

**என்பிறவிதீர விறைஞ்சினே னின்னமுதா
அன்பே தகளி யளித்தானை—நன்புகழ்சேர்
சீதத்தார் முத்துக்கள் சேருங் கடன்மல்லைப்
பூதத்தார் பொன்னங் கழல்.**

இன் அமுது ஆ	தித்திப்புள்ள அம்ருதமாக	கடல் மல்லை	[illegible]
அன்பே தகளி அளித்தானை	'அன்பே தகளியா' என்று ஆரம்பித்து பாடிய பிரபந்தத்தை நமக்குக் கொடுத்தவரும்	பூதத்தார்	[illegible]
நல் புகழ் சேர்	நல்லதான கீர்த்தியை அடையப் பெற்று	பொன் அம் கழல்	[illegible]
சீதத்து ஆர் முத்துக்கள் சேரும்	குளிர்ச்சியால் பூர்ணமான முத்துக்கள் [illegible] சேருகிற	என் பிறவி தீர	[illegible]
		இறைஞ்சினேன்	[illegible]

என்பிறவிதீர:— இரண்டாந் திருவந்தாதி [illegible] பந்தத்தை நாசஞ்செய்விக்க அருளிச்செய்த [illegible] கொடிய ஸம்ஸாரம் தொலையும்படி [illegible] ன்பது இத்தனியனில் பேசப்படுகிறது. நல்ல கீர்த்தியையுடைய [illegible] தும் கடலிலிருந்து அலைகளால் கொணர்ந்து [illegible] இயுள்ள முத்துக்கள் சேர்ந்திருக்கிறதுமான [illegible]

(மஹாபலிபுரம்) என்கிற திவ்யதேசத்திலவதரித்தவரும், ஸம்ஸாரமாகிற நெருப்பால் சூழப்பட்ட சேதனர்களை அம்ருதம்போல் உய்விக்குமதான அன்பே தகளியா என்று தொடங்கிய பிரபந்தத்தை நமக்குதவினவருமான பூதத்தாழ்வாரை என் பிறவித்துயர் நீங்கக் கருதி வணங்கினேன் என்கிறார்.

என்பிறவிதீர:- பூதத்தாழ்வாருடைய திருவடிகளைப்பற்றினால் ஸம்ஸாரபந்தம் தொலையுமென்பதாம்.

இன்னமுதா:— ஸம்ஸாராக்நி விதீபன வ்யபகத ப்ராணாத்ம ஸஞ்ஜீவிநீம் என்னும்படி ஸம்ஸாரமாகிற தீயால்சூழப்பட்டு ஸர்வேச்வரனாகிற உயிரை இழந்திருக்கும் சேதனர்களைப் பிழைப்பூட்டும்படியான அம்ருதம் போன்ற அன்பே தகளியா என்றுபக்ரமித்துப் பாடிய திருவந்தாதியை நமக்குக் கொடுத்த பரமோபகாரகர். அமுதன்ன சொன்மாலை யேத்தித்தொழுதேன், என்றும் இருந்தமிழ் நன்மாலை இணையடிக்கே சொன்னேன் என்னும்படியான இவர்தம் பாசுரங்களையும் காண்க. ஆகவே "இன்னமுதா அன்பே தகளி யளித்தானை" என்றுமளவால் இவ்வாழ்வாருடைய அறிவின் மேன்மை பேசப்பட்டது.

நன்புகழ்சேர்:— எண்ணிறந்த புகழினான் என்கிற ஸர்வேச்வரன் நித்யவாஸம் செய்வதாலும், பகவத்குணாநுபவத்தாலேயே ஸத்தைபெற்ற பூதத்தாழ்வாருக்குப் பிறந்தகமாயிருப்பதாலும் நல்ல கீர்த்தியையுடையதாயிற்றுத் திருக்கடல்மல்லை என்னும் க்ஷேத்ரம்.

சீதத்தார் முத்துக்கள்:— "வங்கத்தால் மாமணிவந்துந்து முன்னீர் மல்லை" என்னும்படி கடற்கரையிலுள்ள தேசமாதலால் கடலிலிருந்து வந்துசேரும் குளிர்ந்த முத்துக்கள் குவியல் குவியலாக நிறைந்திருக்கும் நிலம். குளிர்ந்த ஸமுத்ரத்தில் உண்டாவதால் முத்துக்கள் குளிர்ச்சியையே இயல்பாகக் கொண்டிருக்கும்.

அல்லது, வானவரால் வணங்கப்படும் முகுந்தனான பரமபத நாதன் கருணையால் நிறைந்தவனாய் எளியனாய்த் தோற்றவந்து சேர்ந்திருக்கும் திவ்யதேசம் எனலுமாம்.

அல்லது இந்நிலத்திலேயே ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டவனென்று சொல்லுவதற்கிடமான பெருமைவாய்ந்த பூதத்தாழ்வாராகிற முத்து சேர்ந்தவிடம் என்றும் கொள்ளலாம்.

கடல்மல்லை பூதத்தார்:— மஹாபலிபுரம் என்று வழங்கப்படுகிற கடல்மல்லை என்னும் திவ்யதேசத்தில் குருக்கத்திப்பந்தரில் ஒரு குருக்கத்திமலரில் ஐப்பசி மாதத்தில் அவிட்ட நக்ஷத்திரத்தில் அவதரித்த பூதத்தாழ்வாருடைய திருவடிகளை "மேவினேனவன் பொன்னடி மெய்மையே" என்னும் கணக்கிலே வணங்கினேன் என்றபடி.

பகவத் குணங்களையே அநுபவித்து உயிர்தரித்திருந்தமையாலும். "ஞானீத்வாத்மைவமேமதம்" என்கிறபடி ஸர்வேச்வரனுக்கு ஆத்மபூதராகச் சொல்லும்படியான ஞானியாயிருந்தபடியாலும் இவ்வாழ்வாருக்குப் பூதத்தார் என்று பெயர். இப்பெயர் வடமொழியில் பூ ஸத்தாயாம் என்கிற தாதுவாலும் ஆத்மவாசியான பூத சப்தத்தாலும் தேர்ந்ததெனக் கொள்க.

தனியன் வ்யாக்யானம் முற்றிற்று.

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீமதே ஹயவதந பரப்ரஹ்மணே நம: ॥

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ॥

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம: ॥

பூதத்தாழ்வார் அருளிச்செய்த

இரண்டாந்திருவந்தாதி.

(திருக்குடந்தை ஸ்ரீ ஆராவமுதாழ்வான் ஸந்நிதி வீதி
ப. ஸ்ரீநிவாஸராகவாசாரியர் இயற்றிய அம்ருதவர்ஷிணீ
என்னும் உரையுடன்)

அன்பேதகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தையிடு திரியா—நன்புருகி
ஞானச்சுடர்விளக்கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான். (1)

அன்பே	பக்தியாகிற ஸ்நேஹமே	ஞான தமிழ் புரிந்த நான்	பகவத்ஞானத்தைத் தரக்கூடிய தமிழ் பாஷாமயமான பிரபந்தத்தைச் செய்த நான்
தகளி ஆ	அகலாகவும்	நன்பு உருகி	ஆத்மாவும் கரையப்பெற்று
ஆர்வமே	அந்த பக்தியாலுண்டான அபிநிவேசமே	நாரணற்கு	ஸ்ரீமந்நாராயணனுக்கு
நெய் ஆக	நெய்யாகவும்	ஞான சுடர் விளக்கு	ஞானமாகிற ப்ரகாசிக்கிற விளக்கை
இன்பு உருகு சிந்தை	எம்பெருமானிடமுள்ள ருசியினால் நீராய் உருகுகிற மனமானது	ஏற்றினேன்	ஏற்றிவைத்தேன்.
இடு திரி ஆ	அகலில் போடப்படுகிற திரியாகவும் செய்துகொண்டு		

அன்பே தகளியா:— உலகத்தில் மனுஷர்கள் ஒளிபொருளை ஒரு அகலில் எண்ணெயை அல்லது நெய்யை வார்த்து [illegible] திரியைப் பொகட்டுத் தீயேற்றிக் காண்பதுபோல் இவ்வாழ்வார் ஸர்வேச்வரனென்கிற பொருளை ஒரு விளக்கேற்றிக் கண்டார். [illegible] மால் உலகிலுள்ள பொருள்களைப் போலிராது விலக்ஷணனாயிருக்கையால் அவனைக் காண்பதற்கு ஓர் விலக்ஷணமான விளக்கை ஏற்றுகிறார். அன்பை அகலாகவும் ஆர்வத்தை நெய்யாகவும் இன்புருகு சிந்தையைத் திரியாகவும் வைத்து அறிவு என்கிற விளக்கையேற்றினார். அன்பு, ஆர்வம், இன்பு என்ற பதங்கள் எம்பெருமானிடமுள்ள காதல் என்கிற ஒரு பொருளையே இங்கு சொல்லுகிறதாயினும் இக்கத் தனித்தனியான பொருளாகக் கருதி அகலாகவும் நெய்யாகவும் திரியாகவும் நிரூபித்திருப்பதற்குக் காரணம் யாதெனில், ஆழ்வார்க்கு எம்பெருமானிடம் உள்ள காதல் [illegible] துபோல் நாளுக்கு நாள் வளர்ந்து ஆர்வம் இன்பு என்கிற அவஸ்தாபேதங்களை யடைந்து அவனையே நோக்கி நிற்கிறது என்பதைக் காட்டுவதற்கென்றே. எம்பெருமானிடம் [illegible] கிற பக்தியென்கிற காதலால்தான் அவனைக் காண [illegible] தோன்றும். அன்பு என்பதே வளர்ந்து ஆர்வம் என் [illegible] யும் அதுவே மீண்டும் வளர்ந்து இன்பு என் [illegible] ந்ததாகக் கொள்க. ஆகவே இப்படி [illegible] ண்டிருக்கிற பக்தியால் பரமாத்ம [illegible] பரமபுருஷனைக் கண்டு [illegible] காணவேண்டியது [illegible] விளக்கினையும் அகலையும் [illegible] மனத்தைத் திரியாக [illegible].

நன்புருகி:— [illegible] பெருமானுக்கு [illegible] ரும் அதும் [illegible] ஆகத்து [illegible] பதுபற்றி அதன் [illegible] இப்படி நன்ஞானத் [illegible] கையுருகிறது என்பதாம்.

ஞானச்சுடர் விளக்கேற்றினேன்:— ஞானமாகிற விளக்கு. கண் காது முதலிய இந்திரியங்களால் அறிய முடியாமல் அறிவிற்கே அகப்படும் பொருளாதலால் அறிவாகிற விளக்கால் நாரணனைக் கண்டாரென்க.

ஞானத்தமிழ் புரிந்த:— பிரபந்தத்தின் ஆரம்பதசையிலேயே செய்துவிட்டதாகப் பேசினர். "என்றால் தன்னை இன்தமிழ்பாடிய வீசனை" தன்சொல்லால் தான் தன்னைக் கீர்த்தித்த மாயன்" என்பதற்கிணங்க ஸர்வேச்வரனே தன்னைக்கொண்டு கவிபாடுவதாக நினைத்தபடியால் அவனுடைய ஸத்யஸங்கல்பதையை நினைத்து "தமிழ் புரிந்த"என்றுபிரபந்தத்தைச்செய்துமுடித்துவிட் டதாகவேபேசினர்.

ஞானத்தால் நன்குணர்ந்து நாரணன்றன் நாமங்கள்
தானத்தால் மற்றவன்பேர் சாற்றினால்— வானத்
தணியமரராக்குவிக்கு மஃதன்றே, நங்கள்
பணியமரர் கோமான் பரிசு. (2)

நாரணன் தன்	ஸ்ரிய: பதியான நாராயணனுடைய	நங்கள் பணி அமரர்	நமக்கு உறவினர்களாயும் பகவத்கைங்கர்யத்தை தொழிலாக கொண்டவர்களுமான நித்யஸூரிகளுக்கு
நாமங்கள்	திருநாமங்களையும்	கோமான்	ஸ்வாமியான ஸர்வேச்வரனுடைய
மற்று	மற்றுமுள்ள	பரிசு	ஸ்வபாவமானது (தன்மை)
அவன் பேர்	அவனுடைய குணங்களைச் சொல்லும் திருநாமங்களையும்	வானத்து அணி அமரர்	பரம வைகுண்டத்திற்கு அலங்காரபூதர்களான நித்யஸூரிகளாக
ஞானத்தால் நன்கு உணர்ந்து	(அன்புடன் கூடின) அறிவினுலே நன்றாய்த் தெரிந்துகொண்டு	ஆக்குவிக்கும் அஃது அன்றே	செய்விக்கு மதுவல்லவா.
தானத்தால்	பக்தி என்கிற ஸ்தானத்தால்		
சாற்றினால்	சொல்லிக்கொண்டிருந்தால்		

இப்படிப் பாட்டும் நல்ல நிலையைக் கொடுக்கக்கூடிய தமிழ்ப் பிரபந்தத்தை செய்யத் தொடங்கின நான் அன்பு ஆர்வம் முதலியவைகளைக் கொண்டு ஸர்வேச்வரனைக் காண்பிக்கும் ஞான விளக்கையேற்றினேன்

னென்றார். இப்பாட்டில் அவனைக் கவிபாடுகிறவர்கள் அடையும் புருஷார்த்தத்தைச் சொல்லுகிறார்.

ஞானத்தால்:— ஸ்ரீமந்நாராயணனுடைய திருநாமங்களை நன்ருய்த் தெரிந்துகொண்டு அவைகளின் அர்த்தங்களையும் செவ்வனே உணர்ந்து, அவ்வர்த்தங்களை அநுஸந்திப்பதால் அவனிடம் பிறந்த ப்ரீதியின் எல்லையிலான பரமபக்தியாலே அவன் திருநாமங்களை வாயாரவாழ்த்தி நிற்கின்றவர்களை நித்யஸூரிநாதனுன பெருமான் தன்னிடம் ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் கைங்கரியம் செய்துகொண்டிருக்கிற நித்யஸூரிகளாகச் செய்துவிடுகிறார். தன்னுடைய நாமங்களை பக்தியால் சொல்லுபவர்களை நித்ய ஸூரிகளாகச் செய்வது தான் பெருமானுடைய தொழில். அது தான் அவனுடைய தன்மை. ஆதலால் நாமும் இப்பிரபந்த [illegible] அவனைப் பேசினுல் நம்மையும் அவன் நித்ய ஸூரிகளாகச் [illegible] வன் என்று, வானோர் வாழ்ச்சி பெறுவதே நாம் அடையும் [illegible] யோஜனம் என்றார்.

இப்பாட்டின் முன்னடிகளுக்கு இரண்டுவகையாகப் [illegible] கூறுவதுண்டு. 'நாராயணனுடைய திருநாமங்களை அறிந்து [illegible] உணர்ந்து அத்திருநாமங்களையே பக்தியுடன் [illegible] ஞல், வானத்தணியமரர் ஆக்குவிக்குமென்பது [illegible] மடியில் 'மற்றவன் பேர்' என்ற பதம் [illegible] ருள் கிடைக்குமாதலால் 'மற்றவன் பேர்' என்ற பதத்தை [illegible] ஆலோசித்து வேறு வகையாகவும் பொருள் கூறுகின்றனர்.

அதாவது எம்பெருமானுக்கு ஆயிரக்கணக்கான [illegible] பினும் அவைகளை இருவகையாகப் பிரிக்கலாம் [illegible] ரூங்கள விக்ரஹத்தைப்பற்றிய நாமங்கள் என்றும் [illegible] களைப் பற்றிச் சொல்லுகிற நாமங்கள் என்றும்.

(வநமாலீ, சார்ங்கீ, சக்ரபாணி: முதலியன [illegible] வரும் திருநாமங்கள்.) ஸத்யஸ: [illegible] முதலியன குணவிஷயங்களைச் சொல்லும் [illegible] ளுள்ள நாமங்கள் என்ற பதத்திற்கு [illegible] பெயர்கள் என்றும், இரண்டாவதுக்கு [illegible]

திற்கு குணவிபூத்யாதிகளைச் சொல்லுகிற நாமங்கள் என்றும் கொண்டு அவனுடைய விக்ரஹ யோகத்தைச் சொல்லும் பெயர்களை நன்றாய் உணர்ந்து, குணவிபூத்யாதிகளைச் சொல்லுகிற பெயர்களை பக்தியால் பேசினால் வானத்தணியமரர் ஆக்குவிக்கும் என்பது.

அவனுடைய திருநாமங்களை சிலப்பேர் வீரப்பேர் என இரு வகையாகப் பிரிப்பதுமுண்டு. வத்ஸல: அநிருத்தா முதலியன சிலப்போர். மதுஸூதந: முராரி: சக்ரந்த: முதலியன வீரப் பேர். ஆனதுபற்றி இப்பாட்டில் முதலடியில் "நாரணன் தன் நாமங்கள்" என்றும். இரண்டாமடியில் "மற்றவன் பேர்" என்றும் பதங்களை ப்ரயோகித்தனென்பார் சிலர்.

மற்றும் சிலர் அவனுக்கு ப்ரஸித்தமாயிருக்கும் நாராயணன் வாஸுதேவன் விஷ்ணு முதலிய நாமங்களை உணர்ந்து மற்றுமுள்ள குணயோகத்தைச் சொல்லும் நாமங்களையும் வாயால் பேசினால் அவன் தன்னை நித்யஸூரிகளாகச் செய்வன் என்பார்கள்.

வானத்தணியமரர்:— பரமபதத்திற்கு அலங்காரபூதர்களான நித்யஸூரிகள். அப்ராக்ருத திவ்ய தேஹமுடையவரான திருவுடைய ரான நித்யஸூரிகள் என்றபடி.

நங்கள் பணியமரர்:— எப்பொழுதும் கைங்கர்யத்தையே தொழிலாகக்கொண்டபடியால் பணியமரர் என்று நித்யஸூரிகளுக்குப் பெயர். தம்மை அவர்களோடு ஒக்க பாவித்துப் பேசுவதால் தமக்கு உறவினர் என்பது பற்றி "நங்கள்" என்றார். அல்லது நம்முடைய பூர்வாசார்யர்களை ஸூரிகள் என்றும் சொல்லலாம். "கோமான்" அவர்களுக்குத் தலைவனான பெருமான்.

பதிக:— அப்பெருமானுடைய ஸ்தானம், இங்ஙனம் செய்யும் அந்த வானத்தணியமரர் புகுகின்றார். நித்யஸூரிகளைப் பற்றிய பெருமையைக் கொண்டாடியவாறு.

பரிசு நறுமலரால் பாற்கடலான் பாதம்
புரிவார் புகழ்பெறுவர் போலாம் புரிவார்கள்
தொல்லமரர் கேள்வித் துலங்கொளிசேர் தோற்றத்து
நல்லமரர் கோமான் நகர். (3)

பரிசு நறு மலரால்	அழுகுமாறாத பரிமளம் மிகுந்த புஷ்பங்களால்
பாற்கடலான் பாதம்	திருப்பாற்கடலில் பள்ளியமர்ந்த பெருமானுடைய திருவடிகளை
புரிவார்	ஆசைப்பட்டுத் தொழுகிறவர்கள்
புரிவார்கள்	பகவானைத் தொழுவதில் விருப்பமுள்ளவர்களான
தொல் அமரர்	பழயர்களான பிரமன் இந்திரன் முதலியதேவர்களுக்கும்
கேள்வி	(காணமுடியாமல்) கேள்வியினால் மாத்திரம் தெரியப்படுகிறதாயும்
துலங்கு ஒளி சேர்தோற்றத்து	நன்றாய் பிரகாசிக்கிற தேஜஸ்ஸோடு கூடின தோற்றத்தையுடையதுமான
நல் அமரர் கோமான் நகர்	நன்மைபொருந்திய தேவர்களான நித்ய ஸூரிகளுடைய ஸ்வாமியான நாராணனுடைய நகரமான ஸ்ரீவைகுண்டத்தை
புகபெறுவர் போலாம்	நுழையப்பெறுவார்கள்

பரிசு:—கீழ்ப்பாட்டில் ஸர்வேச்வரன் தன் திருநாமங்களைச் சொல்லுகிறவர்களை நித்ய ஸூரிகளாகச் செய்கிறான் என்றார். அக்குணத்திலே தாம் ஈடுபட்டதைப் பேசுகிறாரிப்பாட்டில். தன்னடியார்களான தேவர்களுடைய துன்பங்களைத் தொலைப்பதற்கென்று தன் உலகத்தைவிட்டு திருப்பாற்கடலில் வந்து பள்ளியமர்ந்த பெருமானை அப்பொழுது மலர்ந்து பரிமளம் வீசுகிற நல்ல புஷ்பங்களைக் கொண்டுவந்து பக்தியுடன் பூஜிப்பவர்கள் பிரமன், இந்திரன் முதலிய தேவர்களாலும் இதுகாறும் கண்டறியாத தேஜோமயமான பரமபதமென்கிற வானவர் நாட்டை அடைந்து பெருமகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள். இது என்ன அவன் செய்யுமுபகாரத்தின் சீர்மை! என்று வியப்பை அடைகிறார்.

பரிசு நறுமலரால் அப் பெருமானுடைய திருவடிகளை அர்ச்சிப்பதற்குத் தகுந்த செவ்வி மாறாத வாஸனையுள்ள புஷ்பங்களால் தொழுமவர்கள்.

பாற்கடலான் ஸம்ஸாரிகளை அக்கரைப்படுத்தவேணுமென்று நினைத்துத் தன் உலகைவிட்டு நம்மிடம்வந்து சேர்ந்துள்ள ஸௌலப்யனான பெருமான்.

பெறுவர்போலாம்:—போல் என்பது வாக்யாலங்காரம். இங்கு அதற்குப் பொருள்கிடையாது. நித்ய ஸூரிநாதனுடைய நகரத்தை நுழையப் பெறுவார்கள் என்றே பொருள்.

புரிவார்கள் + கேள்வி ஸ்நானம், ஜபம், த்யானம் முதலிய ஸாதனமான தர்மங்களைச் செய்துகொண்டு நம்மிலும் முந்தினவர்களென்று ப்ரஸித்தியுள்ள பிரமன் முதலிய தேவர்களும் ஸ்ரீமந் நாராயணனுடைய லோகமான பரமபதத்தை காதுகளால் கேட்டறிந்திருக்கிறார்களேயல்லது கண்டறிந்ததில்லை. தேவர்களுக்கும் எட்டவொண்ணாத நிலம் ஸ்ரீவைகுண்டம். அத் தேவர்களுடைய நினைவிற்கும் அகப்படாதவிடம். ஆனதுபற்றி தேவர்களும் காதால் கேட்டதன்றி கண்ணால் கண்டறியாதவிடம் என்கிறார்.

துலங்கொளிசேர்:— "ப்ரஹ்மணஸ் ஸதநா தூர்த்வம் தத் விஷ்ணோ: பரமம்பதம்" | சுத்தம் ஸநாதனம் ஜ்யோதி:" | "என்றும் அப்ராக்ருதம் ஸூர்யைர்வந்த்யம் அயுதார்க்க ஸமப்ரபம்" என்றும் 'அத்யர்க்காநல தீப்தம் தத்' என்றும் பதினாயிரம் ஸூரியன்கள் உதித்தாலொத்த ஒளி வீசுகிறதென்றும், ஸூர்ய சந்திராக்நிகளுடைய ஒளியையும் ஒழிக்கவல்லவொளியுள்ளதென்றும் சொல்லியிருப்பதால் இங்கு துலங்கொளிசேர் தோற்றத்து என்றார் முதல் தோற்றத்திலேயே கண் கூசும்படியான ஜ்யோதியானவுலகம் என்பதாம்.

நல்லமரர் கோமான் நகர்:—இந்திராதிகளைப்போல் சில ஸமயங்களில் பகவானை மறவாமல் ஸர்வகாலங்களிலும் பகவத் கைங்கர்யமே தொழிலாகவிருப்பதால் நித்யஸூரிகளை நல்ல அமரர்கள் என்றார். அவர்களுக்கும் நாதனை ஸ்ரீய:பதியை நிர்வாஹகனாகக்கொண்ட நகரம் பரமபதம். அவனைப் பூக்களாலேத்துகிறவர்கள் அவ்வுலகத்தைக் கிட்டுவார்கள் என்றபடி.

நகரிழைத்து நித்திலத்து நாண் மலர்கொண்டு, ஆங்கே
திகழுமணிவயிரம் சேர்த்து—நிகரில்லாப்
பைங்கமல மேந்திப் பணிந்தேன், பனிமலராள்
அங்கம் வலங்கொண்டா னடி. (4)

நகர் இழைத்து	(என்னுடைய நெஞ்சை) கோயிலாக வமைத்து	நிகர் இல்லா பைம் கமலம் ஏந்தி	ஒப்பில்லாத பக்தியாகிற அழகான தாமரைப் புஷ்பத்தை எடுத்துக்கொண்டு
ஆங்கே	அந்தக் கோயிலில்		
நித்திலத்து நாள் மலர் கொண்டு	(ஸ்நேஹமாகிற) முத்தைவெளியிலுள்ள இதழ்களாக வைத்து	பனிமலராள் அங்கம்	குளிர்ந்த தாமரைப் பூவிலுதித்த பெரிய பிராட்டியாருடைய திருமேனியை
திகழும் மணி வயிரம் சேர்த்து	ஒளிமிகுந்த மாணிக்க வயிரங்கள் போன்ற 'சேர்க்கை' 'ஆசை'யென்பவைகளை உள்ளிதழாகவும் தாதுக்களாகவும் வைத்து	வலம்கொண்டான்	தனது வலமார்பினில் வைத்துக் கொண்ட பெருமானுடைய
		அடி பணிந்தேன்	திருவடிகளை தொழுதேன்.

நகரிழைத்து:—இவ்வாழ்வார் முதல் பாசுரத்தில் ஒரு லோக விலக்ஷணமான விளக்கேற்றிப் பெருமானைக் கண்டதாகச் சொன்னதுபோல் இப்பாட்டில் ஒரு விலக்ஷணமான புஷ்பத்தால் எம்பெருமானை திருவடிகளைப் பணிந்தேன் என்கிறார். அப்புஷ்பமாவது பக்தி யென்கிற தாமரைப் புஷ்பம். ஒரு தாமரைப் புஷ்பத்திற்கு வெளியேயுள்ள இதழ்கள் உள்ளிதழ்கள் தாதுக்கள் முதலியன விருப்பதுபோல் இந்த பக்தியாகிற தாமரைக்கும் ஸ்நேஹம் ஸங்கம் காமம் இவைகளாகிற பக்தியின் அவஸ்த்தா பேதங்களை வெளியிதழாகவும் உள்ளிதழாகவும் தாதுவாகவும் அமைக்கிறார்.

பக்தியாகிற தாமரைப் புஷ்பத்திற்கு வெளியிதழ் ஸ்நேஹம் என்பது. ஸ்நேஹம் என்பதையும் இங்கு நேரே சொல்லாமல் "நித்திலத்து" என்று முத்தாகிற வெளியிதழ் என்றார். ஏனெனில் இங்கு பக்தியாகிற தாமரைப்பூவும் பொன்மயமாக விருக்கவேணு மென்று ஆழ்வாருடைய கருத்தாதலால் பொற்றாமரைப்பூவிற்கு முத்துக்களாலிழைத்த இதழ்களிருந்தால் பொருத்தமுற்றிருக்கும் என்று கருதி "நித்திலத்து" என்றார். அதாவது ஸ்நேஹமென்கிற முத்தை வெளியிதழாகக்கொண்டு என்றபடி.

ஸங்கம் என்கிற பக்தியின் அவஸ்தையை " மணி " என்று மாணிக்கக்கல்லாகவைத்து அதை உள்ளிதழாகக் கொண்டும் காமம்

என்பதை வயிரமாகவைத்து அதை தாதுவாகக் கொண்டும் ரத்னங்களாலிழைத்த ஸுவர்ணமயமான தாமரைப் புஷ்பத்தை எடுத்து தன்னுடைய நெஞ்சு என்கிற ராஜதானியிலமர்ந்திருக்கும் திருவாழ் மார்பனுடைய திருவடியில் ஸமர்ப்பித்தேன் என்கிறார்.

இங்கு பக்தியை ஸுவர்ணமயமான தாமரைப்பூவாகவமைத்தும், ஸ்நேஹம் ஸங்கம் காமம் இவைகளை ரத்னமயமான பூவின் அவயவங்களாக வமைத்தும், இப்படி வமைந்த பூவால் பெருமாளைத் தொழுதேன் என்று சொல்வதற்குக்காரணம் யாதெனில், வெளியே அகப்படும் தாமரை, மல்லிகை, முல்லை முதலிய புஷ்பங்களை எடுத்துப் பூஜிப்பதைக்காட்டிலும் உடம்பினுள்ளே பிறக்கும் பக்தியால் பூஜிப்பது மேலானது என்பதுவே. ஆனதுபற்றியே அஹிம்ஸை, இந்திரிய நிக்ரஹம், ஸர்வபூததயை, பொறுமை, ஞானம், தபஸ், த்யானம், ஸத்யம் என்கிற எட்டு வகையான புஷ்பங்கள் பெருமானுக்கு மிகவும் உகப்பானவை என்று வெளியேயுள்ள புஷ்பங்களைக் காட்டிலும் ஆத்ம குணங்களாகிற புஷ்பங்களை மேலானவைகளாக எடுத்துப்பேசினார் முன்னோர்களும்.

இப்படி யமைத்த பக்தியாகிற பூ நிகரில்லாதது என்கிறார். ஈச்வரனிடமுள்ள காதலுக்கு விலைமதிப்பே இல்லையாதலால் நிகரில்லாத புஷ்பம் என்றார். ஈச்வரனை ஒரு இடத்தில் நிறுத்தினாலன்றோ அவன் திருவடிகளில் புஷ்பத்தைச் சேர்க்கலாம்; அவனை எங்கே நிறுத்துவது என்று கேட்க "நகரிழைத்து" என்றார் "நெஞ்சமே நீணகராக விருந்தவென் தஞ்சனே" "கோயில் கொண்டானதனோடு மென்னெஞ்சகம்" என்பதற்கிணங்க, ஸர்வேச்வரன் அடியார்கள் நெஞ்சில் வஸிக்குமியல்பினனாதலால் தன் நெஞ்சையே அவனது ராஜதானியாகவமைத்தார். "மார்வமென்பதோர் கோயிலமைத்து மாதவனென்னும் தெய்வத்தை நாட்டி, ஆர்வமென்பதோர் பூவிடவல்லார்க்கு" என்ற பெரியாழ்வார் பாசுரத்திலும் இவ்வர்த்தம் தெளியவரும்.

"பனிமலராள் அங்கம் வலங்கொண்டான்" நம்முடைய பாபங்களைக்கண்டு பிறக்கும் பெருமானது சீற்றத்தை மாற்றுகிற புருஷகாரபூதையான பிராட்டியை வலமார்பில் கொண்டவனுடைய திருவடியை வணங்கினேன் என்பது.

கீழ்ப்பாட்டில் "பரிசுநறுமலரால் பாற்கடலான் பாதம் புரிவார் + அமர்கோமான் நகர் புகப்பெறுவர்" என்று அருளிச்செய்து இப் பாட்டில் அப்பெருமானை நெஞ்சென்கிற நகரத்தில் எழுந்தருளப் பண்ணி பக்தியென்கிற நிகரில்லாப் பைங்கமலத்தால் அவன் திரு வடியைப் பணிந்தேனென்று சொல்லவே, தனக்கும் அமரர்கோ மான் நகர் அடைவதெளிதேயாகும் என்று ஆழ்வார் ஸந்தோஷித் தார் என்ற பொருள் த்வனிக்கும்.

அடிமூன்றிலிவ்வுலக மன்றளந்தாய் போலும்
அடிமூன்றிரந் தவனி கொண்டாய்—படிநின்ற
நீரோதமேனி நெடுமாலே! நின்னடியை
யாரோத வல்லா ரறிந்து. (5)

படிநின்ற	இப்பூமியில் வாமநனாய் வந்துநின்ற	உலகம்	உலகத்தை
		அடி மூன்றில்	மூன்றடியிலேயே
நீர் ஓதம் மேனி	கடல்போன்ற திருமேனியையுடைய	அளந்தாய் போலும்	அளந்துவிட்டாய் போலும்
நெடுமாலே	ஆச்ரித வாத்ஸல்ய முள்ளபெருமானே	நின் அடியை	அப்படிப் பெருமை வாய்ந்த உன் திரு வடியை
மூன்று அடி	அளப்பதற்கென்று மூன்றடி மண்ணை யாசித்து		நன்றாய் தெரிந் கொண்
அவனி கொண்டாய்	பூமியை ஸ்வாதீனமாக்கிக் கொண்டாய்	ஓத வல்லார் யார்	பேசுவதற்குத் தி மையுள்ளவர் யா இருக்கிறார்? ஒரு ருமில்லை
அன்று	காலத்தில்		

கீழ்ப் பாட்டில் ஒரு விலக்ஷணமான தாமரைமலரைக்கொண் எம்பெருமான் திருவடிகளை வணங்கினேன் என்றார். போல் எம்பெருமானை ஆச்ரயிப்பவர்கள் வேறு யாராவது ;க் றார்களோ என்று தேடிப்பார்த்தார். ஒருவருமகப்படாததா அவன் ஸௌலப்யகுணத்தை அறிந்து அவனை துதிப்பவர்கள் யா இங்கு இருக்கிறானென்கிறார் இப் பாட்டில்.

அடி மூன்றில்:—நீ மஹாபலிச்சக்ரவர்த்தியிடம் மாணுருவாய் சென்று இந்த பூலோகம் அந்தரிக்ஷம் ஸ்வர்க்கலோகம் என்கி

மூன்று லோகங்களையும் மூன்றடிகளால் அளந்து நாம் இவ்வுலகங்களை ஸ்வாதீனங்களாகச் செய்துகொள்வோமென்று நினைத்து மூவடி மண்ணிரந்தாய்; அந்த மஹாபலியும் என்னால் தரப்பட்டதென்று சொல்லவே நீ இரண்டடிகளாலேயே எல்லாவுலகங்களையும் அளந்துவிட்டு மூன்றாமடியை அம்மாவலியின் முடியில் வைத்தாய். நீ அவனிடம் யாசித்தபோதிருந்த எண்ணத்தின்படி மூன்றடிகளால் அளப்பதற்குள் உன்னுடைய ஸௌலப்யம் என்ற குணம் தலையெடுத்து இரண்டடிகளாலேயே அளக்கும்படிசெய்து மஹாபலிக்கு உன் திருவடியைப் பெறும்படியான பாக்யத்தைக் கொடுத்தது. இப்படி இப்பூமியில் வந்துநின்ற கடல்போன்ற திருமேனியையுடைய உன்னுடைய திருவடியை நன்றாய் உணர்ந்து துதிசெய்ய வல்லார் யார் இருக்கிறார்? ஒருவரும் காணப்படவில்லையே! என்று வருந்துகிறார்.

அடிமூன்றில் + அளந்தாய்போலும்:— நீ மாவலியிடம் மண்ணை யாசித்தபடி மூன்றடிகளாலேயே இவ்வுலகங்களை அளந்துவிட்டாயோ? என்று பரிஹாஸமாகக் கேட்கிறார். இதனால் நாம் அறிய வேண்டியது யாதெனில், அவ்வீச்வரன் மாவலியைப் பாதாளலோகத்தில் தள்ளினாலும் அவன் திருவடியை அம்மாவலி தலையிலே தரிக்கப்பெற்றது அவனுடைய ஸௌலப்யகுணத்தாலென்று நிச்சயித்து அவ்வீச்வரனுடைய ஸௌலப்யகுணத்தையே பேசவேண்டுமென்பது.

படிநின்ற:— பூமியிலே வந்துநின்ற, நெடுமாலுக்கு விசேஷணம். இத்தால் ஸௌலப்யகுணம் தெரிவிக்கப்படுகிறது. கடலுக்கு விசேஷணமாகவும் சொல்லலாம். மாவலியிடம் வாமனனாய் வந்த பகவானை இப்பூமியில் கடல் எழுந்துவந்து நிற்பதுபோல் சொல்லலாமென்று கருத்து.

நின் அடியை என்றவிடத்தில் நின்படியை என்றும் பாடமுண்டு. உன்னுடைய தன்மையை என்று பொருள். எம்பெருமானுக்கு மாவலியை யாசிக்கும்பொழுது இரண்டடிகளால் உலகங்களை யளந்துவிட்டு, பிறகு மூன்றாமடிக்கு இடம்கேட்டு மாவலியின் தலையிலே வைத்து அவனை அழுத்தவேணுமென்று எண்ணமிருந்தாலுமிருக்கலாம். ஆழ்வார் அவ்வீசனுடைய ஸௌலப்யகுணத்தைப்

பிரகாசிப்பிக்கவேண்டி, நீ மூன்று லோகங்களையும் மூன்றடிகளால் அளக்கவேணுமென்று கருதி மூவடி மண்ணிரந்து பிறகு அளக்குங் கால் இரண்டடிகளாலேயே அளந்துவிட்டாயே! என்று இரக்கும் போதிருந்த நினைவு அளக்கும்போதில்லையென்று உத்ப்ரேக்ஷித்துப் பாசுரமிட்டது.

அறிந்தைந்து முள்ளடக்கி யாய் மலர்கொண்டு, [ஆர்வம்
செறிந்த மனத்தராய்ச் செவ்வே—அறிந்தவன்றன்
பேரோதி யேத்தும் பெருந்தவத்தோர் காண்பரே
காரோத வண்ணன் கழல். (6)

அறிந்து	ஈச்வரனிடமுள்ள குணங்களையும் இதர பதார்த்தங்களிலுள்ள தோஷங்களையும் தெரிந்து கொண்டு	செவ்வே அறிந்து	(ஜீவனுடைய சேஷத்வத்தை) நன்றாய் உணர்ந்து
		அவன் தன்	அப்பெருமானுடைய
		பேர்	திருநாமங்களை
ஐந்தும் உள் அடக்கி	ஐந்து இந்திரியங்களையும் வெளியே செல்லாதபடி எம்பெருமானிடம் அடக்கி	ஓதி ஏத்தும்	சொல்லிக்கொண்டு துதிசெய்கிற
		பெரும் தவத்தோர்	பெரிய தவம்செய்தவர்கள் (பாக்யசாலிகள்)
ஆய் மலர் கொண்டு	ஆராய்ந்த புஷ்பங்களை எடுத்துக்கொண்டு	கார் ஓதம் வண்ணன்	கருத்த கடல்போன்ற நிறமுள்ள ஸ்வாமியினுடைய
ஆர்வம் செறிந்த	அன்பினால் நிறைந்த	கழல்	திருவடிகளை
மனத்தர் ஆய்	நெஞ்சை உடையவர்களாகி	காண்பர்	பார்ப்பார்கள்.

கீழே அவ்வீச்வரனை அறிந்தேத்தவல்லார் அரிது என்றார். இப்பாட்டில் அவனை ஆச்ரயித்தவர்கள் பாக்யசாலிகள் என்றும் அவர்களே அப்பெருமானது திருவடியைப் பெறுகிறார்களென்றும் பேசுகிறார்.

அறிந்து:—மோக்ஷத்தையடைய விருப்பமுள்ளவர்களுக்கு பர மாத்மநி யோரக்தோ விரக்தோ அபரமாத்மநி என்னும்படி புருஷோ

த்தமனிடம் ஆசையும் மற்ற சப்தாதி விஷயங்களில் ஆசையில்லாமையும் (வெறுப்பும்) அவசியம் இருக்கவேண்டும். பெருமானிடமுள்ள குணங்களைத் தெரிந்துகொண்டால்தான் அவனிடம் ஆசை பிறக்கும். சப்தாதி விஷயங்களிலுள்ள தோஷங்களை அறிந்தால்தான் அவைகளில் விரக்தி பிறக்கும். விஷயாந்தரங்களில் விரக்தி உண்டாகி ஸர்வேச்வரனிடம் ஆசையுண்டானால்தான் ஈச்வரனை ஆச்ரயிக்க புத்தி உண்டாகும். ஆனதுபற்றி எம்பெருமானிடமுள்ள குணங்களையும் சப்தாதி விஷயங்களிலுள்ள அல்பத்வம், அஸ்திரத்வம. ச்ரத்வம், துக்கமூலத்வம், விபரீதாபிமானமூலத்வம், ஸ்வாபாவிகாநந்தவிருத்தத்வம் என்ற ஏழு தோஷங்களையும் நன்றாய் அறிந்துகொண்டு இப்படி அறிந்துகொண்டதின்பயனாக ஐந்து இந்திரியங்களையும் விஷயங்களிலே செல்லாதபடி உள்ளேயடக்கி ஆராய்ந்து பார்த்தெடுத்த செவ்வி மாறாத புஷ்பங்களை எடுத்துக்கொண்டு கபடமில்லாத பக்தியினால் நிறைந்த மனத்துடன் ஞானாநந்தமயஸ் த்வாத்மா சேஷோஹி பரமாத்மந: என்றபடி எம்பெருமானிடம் அடிமையாயிருப்பதுதான் ஜீவனுடைய ஸ்வரூபம் என்று ஜீவனுடைய சேஷத்வத்தையும் உணர்ந்து அப் பெருமானது திருநாமங்களைச் சொல்லித் துதிக்கும் பெரும் பாக்யசாலிகள் கடல்போல் கண்குளிரச்செய்யும் திருமேனியையுடைய பெருமானுடைய திருவடிகளைக் காணப்பெறுவார்கள். ஆதலால் எம்பெருமானுடைய வைலக்ஷண்யத்தையும் மற்றவைகளின் இகழ்வையும் உணர்ந்து ஐம்புலன்களையுமடக்கி உண்மையான பக்தியால் அவனைப் பாடித்துதித்தால் அப்பெருமானது திருவடியைப் பெறுவதாகிற மோக்ஷானந்தத்தை அடையலாமென்பது உபதேசிக்கப்பட்டதாயிற்று.

கழலெடுத்து வாய்மடித்துக் கண்சுழன்று, மாற்றார்
அழலெடுத்த சிந்தையரா யஞ்ச—தழலெடுத்த
போராழி யேந்தினான் பொன்மலர்ச் சேவடியே
ஓராழி நெஞ்சே யுகந்து. (7)

கழல் எடுத்து { திருவடியை உயரே

வாய்மடித்து (பற்களால்கடித்து) உதட்டை மடித்துக்கொண்டு

கண் சுழன்று	கண்களைச் சுழலும்படி செய்துகொண்டு	போர் ஆழி	யுத்தத்திற்கு ஸாதனமான திருவாழியை
மாற்றார்	சத்ருக்களான நமுசி முதலானவர்கள்	ஏந்தினான்	கையிலே தரித்த பெருமானுடைய
அழல் எடுத்த	பயாக்நியால் சூழப்பட்ட	பொன் மலர் சே அடியே	அழகாயும் புஷ்பம் போல் ம்ருதுவாயுமிருக்கிற சிவந்த திருவடிகளையே
சிந்தையர் ஆய்	நெஞ்சையுடையவர்களாய்க்கொண்டு		
அஞ்ச	பயப்படும்படியாக	ஆழி நெஞ்சே	சம்பீரமானமனமே!
தழல் எடுத்த	நெருப்பைவீசுகிற	உகந்து ஓர்	அன்புடன் நினைப்பாயாக.

கீழ்ப்பாட்டில் அவனை ஆச்ரயிப்பவர்கள் அவன் திருவடிகளைக் காணப்பெறுவார்கள் என்றார். ஆனதுபற்றி அவனையே ஆச்ரயிப்பாய் என்று தம் திருவுள்ளத்திற்கு உபதேசிக்கிறாரிப்பாட்டில். தமது திருவுள்ளமும் அவனை ஆச்ரயிப்பதற்கு இடையூறுகள் பல உண்டாகின்றனவே என்று வினவ, ஆழ்வார், இடையூறுகள் நேர்ந்தால் நமுசி பட்டபாடு படுமென்றும் உரைக்கிறார்.

கழலெடுத்து:— ஸர்வேச்வரன் வாமநனாய்வந்து மூவடி மண்ணிரந்து பிறகு த்ரிவிக்ரமனாய் வளர்ந்து மூவுலகங்களையும் அளக்கப்புகவே மாவலியின் மகனான நமுசியென்பவன் அப் பெருமானைத் தகைந்து நீ இங்ஙனம் அளப்பது சரியன்று. சிறிய திருவடிகளைக் காட்டிப் பெரிய அடிகளால் அளக்கலாமோ? இது என்ன மோசம்? என் தகப்பன் உன்னைக்கண்டு மோசம்போய்விட்டான் என்று பலவாறாகப் பேச, பெருமானும் சரீரம் என்றால் ஒருகால் தென்பட்ட பரிமாணமளவாகவே எப்பொழுதுமிராது. வளரக்கூடிய வியல்புள்ளது. என் உடம்பு வளர்ந்து பெரிதாய்விட்டபடியால் இங்ஙனம் அளக்கும்படி நேர்ந்தது என்று பலவாறாக ஸமாதானமுரைக்கவும் அதைக் கேளாமல் மீண்டும் பெருமானை எதிர்க்க, பெருமானும் மிகுந்த சினங்கொண்டு தனது பற்களால் வாயை மடித்துக்கொண்டு அந்த நமுசியென்பவன் பயம் என்கிற நெருப்பால் சூழப்பட்டு பயப்படும்படி தன் கண்களை சுழற்றிக்கொண்டு தன் திருவடியால் நமுசியை வானில் தூக்கிச் சுழற்றியடித்தான் என்கிற வர

லாற்றை அநுஸந்தித்து அங்ஙனம் விரோதி நிரஸநசீலனான பெருமானுடைய திருவடிகளை அன்புடன் எப்பொழுதும் நினைக்கவேண்டுமென்று தம் நெஞ்சுக்கு உபதேசித்தார்.

தழல் எடுத்த போராழியேந்தினான் :—அனல் வீசுகிற போர் செய்யவல்ல சக்ரத்தாழ்வானைக் கையிலே தரித்தவன் என்றபடி. மஹாபலியை பெருமான், மாவலி! மூவடி தாவென்று யாசிக்கவே, மஹாபலியும் அப்பெருமானுடைய ரூபத்திலும், தேஜஸ்ஸிலும், பேச்சிலும் மோஹித்துக் கொடுத்தேனென்றுசொல்லி ஜலபாத்ரத்தை எடுத்து தாரைவார்த்துத் தானஞ்செய்யும்பொழுது அவனது குருவான சுக்ராசிரியன் மாவலியைப் பார்த்து இவன் உண்மையில் யாசிக்கவந்தவனல்ல. உன் ஐச்வர்யத்தை யபஹரிக்கவந்தவன். ஆதலால் நீ தானம் செய்யாதே என்று மறுக்கவும், அதைக் கேளாமலே மாவலி தானம் செய்வேனென்றுசொல்ல சுக்ராசிரியன் அப்பாத்ரத்தின் ஜலத்வாரத்திலே தான் புகுந்துகொண்டு ஜலம் விழமுடியாதபடி தடுக்க, வாமநனும் தன் கையிலணிந்த பவித்ரத்தால் அத்துவாரத்தைக் குத்தி ஜலத்தை விழும்படி செய்தபொழுது அப் பவித்ரம் த்வாரத்தில் புகுந்திருந்த சுக்ரனது கண்ணைக் குத்திக் கிளரியது என்பது யாவருமறிந்த வரலாறேயாகும். அப்பொழுது பெருமானுடைய திருக்கையிலே தரித்திருந்த திருவாழிதான் பவித்ரவடிவாய் நின்று ஜலத்வாரத்தில் சென்று சுக்கிரன் கண்ணைக் கிளறியது என்று திருவுள்ளம்பற்றி திரிவிக்ரமாவதாரத்திலும் தழலெடுத்த போராழியேந்தினனென்பது பொருந்தியதே.

கண்கள் கோபத்தால் சுழல்வதுபோல் பயத்தினால் சுழல்வதுமியல்பாதலால் மாற்றார் நமுசி முதலான விரோதிகள் கண் சுழன்று அழலெடுத்த சிந்தையராயஞ்சும்படி எம்பெருமான் வாய்மடித்தானென்றும் சொல்லலாம்.

உகந்து ஓர் :—மாரீசன் ஸ்ரீராமனை விரோதபாவனையுடன் நிரந்தரம் த்யானம் செய்ததுபோலின்றி அநுகூலபாவனையுடன் (அன்புடன்) த்யானம் செய்வாய் என்றபடி.

இங்கு மூன்றாமடியில் சேவடியை என்றும் பாடமுண்டு.

உகந்துன்னை வாங்கி யொளிநிறங்கொள் கொங்கை
அகங்குளிர வுண்ணென்றா ளாவி — உகந்து
முலையுண்பாய் போலே முனிந்துண்டாய், நீயும்
அலைபண்பா லானமையா லன்று. (8)

உகந்து	பூதனை உன்னிடம் மிகுந்த அன்புள்ளவள்போல் நடித்து
உன்னை வாங்கி	உன்னை எடுத்துக் கொண்டு
ஒளி நிறம் கொள் கொங்கை	(பால் விஞ்சியிருப்பதால்) காந்தியையுடைய அழகுபொருந்திய தனதுமுலையை
அகம் குளிர	உன் மனம் ஸந்தோஷிக்குமளவும்
உண் என்றாள்	சாப்பிடு என்றாள்
ஆனமையால்	அங்ஙனம் சொன்னபடியால்
அன்று	அந்த ஸமயத்தில்
நீயும்	கிருஷ்ணனான நீயும்
அலைபண்பால்	அலைவீசுகிற குணத்தால் (மிகுந்த வாத்ஸல்ய குணத்தால்)
உகந்து	உண்மையில் ஸந்தோஷத்துடன்
முலை உண்பாய் போலே	முலையுண்பவன்போலவேபாவனைசெய்து
முனிந்து	உள்ளே கோபத்துடன்
ஆவி	அவளுடைய உயிரை
உண்டாய்	அமுதுசெய்தாய்.

கீழ்ப்பாட்டில் உகந்தோர் என்று உபதேசித்தார். உள்ளபடி அன்புடன் அவ்வீச்வரனை ஆச்ரயிக்கவேண்டுமென்றார். அப்படிக்கில்லாமல் கபடமானவன்புடன் வந்தால் பூதனை பட்டபாடு படுவாரென்கிறார் இப்பாட்டில்.

உகந்துன்னை.— தேவகியின் ஸஹோதரனான கம்ஸன் தன்னைக் கொல்வதற்கென்று தேவகியின் வயிற்றில் பிறந்த கண்ணன் ஒருத்திமகனாய் ஒளிந்து வளர்கின்றானென்றதையுணர்ந்து அக்கண்ணனென்கிற குழந்தையைக் கொல்வதற்காக அனுப்பியவர்களில் ஒருத்தியாகிய பூதனையென்பாளொரு ராக்ஷஸி ஓர் அழகிய பெண்வடிவத்துடன் திருவாய்ப்பாடிக்கு வந்து உறங்கிக்கொண்டிருந்த கண்ணனென்கிற குழந்தையை வாரியெடுத்துக்கொண்டு மிகுந்த பரிவுள்ளவள்போல் நடித்து யசோதை கண்ணனுக்குப் பால்கொடுப்பதுபோல் உகப்புடன் உன் உள்ளம் குளிருமளவும் முலையுண்பாய் என்று சொல்லி நஞ்சு கலந்த முலையைக் கொடுத்தாள். கண்ணனும்

அதை அறிந்து யசோதையிடம் தான் ஸ்தன்யபானம் செய்யும்பொழுது தனக்குள்ள ஆசையைப்போல் அவளிடமும் ஆசையை நடித்து உண்மையில் ஆவலுள்ளவன்போல் உகப்புத்தோன்ற, உள்ளே கோபங்கொண்டு அவள் முலையை யுண்பதுபோல முலையின் வழியே அவளுயிரையும் உண்டு அவள் பெருங்கூச்சலிட்டு கதறிக் கட்டுக்குலைந்து மாண்டுவிழும்படிசெய்த கண்ணனது சரித்திரத்திலே கால்தாழ்கிறார். இந்த வரலாற்றில் நாம் அறிந்துகொள்ளவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. எம்பெருமான் உண்மையில் நட்பு இல்லாவிடினும் மித்ரபாவனையுடன் வருவாரையும் நாம் விடுகிறதில்லை என்று அருளிச்செய்திருக்கச் செய்தேயும் இங்கு மித்ரபாவனை செய்துவந்த பூதனையைக் கொன்றது கூடுமோவென்று சிந்தித்து, பெருமான் உலகங்களுக்கெல்லாம் உயிரளிக்கவேண்டி ஒருத்தியினுயிரை மாய்த்தது என்பதுதான். ‘‘ஓருயிரேயோ உலகங்கட்கெல்லாம்’’ உலகுக்கே யோருயிருமானாய்’’ என்பதற்கிணங்க உலகங்களுக்கெல்லாம் உயிரெனச் சொல்லப்படுகிற தன்னை பூதனையிடமிருந்து காப்பாற்றிக்கொண்டால் உலகங்களைக் காப்பாற்றியதாகும் என்று கருதி பூதனையை முடித்தான். ஆதலால் ஸர்வேச்வரன் தன் பிரதிஜ்ஞையையும் மாற்றி உலகங்களைக் காப்பாற்றுமியல்புள்ளவன் என்கிற அவனது மஹாகுணத்திலே ஈடுபடுகை மனிசர்க்கு கடமையாகும்.

அன்றது கண்டஞ்சாத வாய்ச்சி யுனக்கிரங்கி
நின்று முலைதந்த விந்நீர்மைக்கு—அன்று
வரன் முறையால் நீ யளந்த மாகடல் சூழ் ஞாலம்
பெரு முறையா லெய்துமோ பேர்த்து. (9)

அன்று	(பேய்ச்சி முலைகொடுப்பதற்கென்று வந்த) அந்த ஸமயத்தில்	அஞ்சாத	பயப்படாமலிருந்த
அது	அப்பூதனை செத்துக் கிடந்ததை	ஆய்ச்சி	யசோதைப்பிராட்டி
கண்டு	நேரில் பார்த்திருந்தும்	நின்று	தரித்துநின்று
		உனக்கு இரங்கி	உன்னிடத்தில் ஆசைகொண்டு
		முலைதந்த	ஸ்தன்யத்தைக்கொடுத்த

இ நீர்மைக்கு	இப்பெருங் குணத்திற்கு	மா கடல் சூழ் ஞாலம்	பெரியகடலால் சூழப்பட்ட இப்பூமியானது
வான் முறைபால்	உயர்ந்ததான உறவினால் (ஸ்வ ஸ்வாமி பாவமாகிற ஸம்பந்தத்தால்)	பேர்த்து	ஆராய்ந்து பார்க்குங் காலத்தில்
நீ அளந்த	நீ த்ரிவிக்ரமனாய் அளந்த	பெரு முறையால் எய்துமோ ?	இது பெரிது இது சிறியது என்கிற முறையில் எதிர்க்குமோ ?

எம்பெருமானிடம் பொய்யன்பு பூண்டவர்கள் பூதனையின் நிலைமையைப் பெறுவார்கள் என்றார். இப்பாட்டில், மெய்யானவன்பு பூண்ட யசோதைப் பிராட்டியைப்போல் யாவரும் ஸ்வாமியினிடம் பரிவுகொண்டிருக்கவேண்டுமென்பதை பூதனையின் விருத்தாந்தத்தாலே காட்டுகிறார்.

அன்றது கண்டு:—பூதனையென்பாளொரு பேய்ச்சி கண்ணனுக்கு முலைகொடுத்து கண்ணனும் அம்முலை வழியே அவளுயிரையும் உண்ணவே அவள் மலைபோல் ஒரு ராக்கதிவடிவாய்ச் சாய்ந்து கிடந்தாள். அதைக் கண்டதும் யசோதை இது என்ன ஆபத்து. இது என்ன பயங்கரமான ஸம்பவம் என்று பயப்பட்டு ஓடவேண்டியது உசிதமாயிருக்க அப்பொழுது கண்ணனிடத்தில் மிகவும் இரக்கங்கொண்டு அவனுக்கு முலைகொடுத்தாள் என்பது மிகவும் வியப்பைத்தருகிறது. அப்பொழுது முலைகொடுத்ததன் பயனாகப் பூதனை உயிர்துறந்தாளென்பதைத் தெரிந்துகொண்டே தன் உயிரில் ஆசையின்றி கண்ணன் என்ன பயமடைந்தானோ என்றஞ்சி அவனைத் தேற்றுவதற்காக முலைகொடுத்தாளென்றால் அவளுக்குக் கண்ணபிரானிடமிருந்த காதலை என் என்று சொல்வது. தன் உயிரையும் விரும்பாதபடியான ஒரு பெரிய காதலை அவள் செயல் காட்டுகிறதென்று நினைத்து அந்த யசோதையின் அன்பிற்கு அவள் த்ரிவிக்ரமனாகி அளந்த இப்பூமியே விலைமதிப்பில் ஸமமாகாது என்கிறார். அதாவது ஸர்வேச்வரன் தனக்கு இப் பிரபஞ்சமெல்லாம் சேஷபூதம் என்பதை யாவரும் அறியும்படி "காண்மின்களுலகீரென்று கண்முகப்பேநிமிர்ந்த" என்றபடி) அளந்த வியாபாரமும் யசோதை பரிவுக்கு ஒப்பாகாது. அவனால் அளக்கப்பட்டவுலகமும்

அவள் பரிவுக்கு ஒப்பாகாது என்றபடி. ஈச்வரன் ஒரு பிரயோஜனத்தையும் கணிசியாமல் உலகிற்கும் தனக்குமுள்ள ஸ்வஸ்வாமிபாவமாகிற ஸம்பந்தத்தை நினைத்தே தன் திருவடியை எல்லார் தலையிலும் வைத்தாரென்கிற நீர்மை என்கிற குணம் யசோதையின் அன்பு என்பதைக்காட்டிலும் தாழ்ந்ததே. அவனளந்த ஞாலத்தை ஒரு தட்டிலும் யசோதையின் அன்பை ஒரு தட்டிலும் வைத்து நிறுத்தாலும் யசோதையின் அன்பே கனத்துநிற்குமென்றும்சொல்லி அவளது அன்பைக் கொண்டாடுகிறார். இத்தால் யசோதையைப்போல் யாவரும் அப்பெருமானிடம் பரிவுகொள்ளவேணுமென்றதாயிற்று. பொய்கையாழ்வார் அருளிய "என்றொருவர் மெய்யென்பர்" என்கிற பாசுரத்திலும் "பேய்ச்சி பாலுண்ட பெருமானைப் பேர்ந்தெடுத்து" என்கிற பேயாழ்வார் பாசுரத்திலும் இவ்வநுபவத்தைக் காணலாம்.

வரன்முறையால்:—"சிறந்தோர் முறையால்" அதாவது ஒரு பிரயோஜனத்தைக் கருதாமல் தனக்கு முலகிற்குமுள்ள ஸம்பந்தத்தையே பெரிதாகவெண்ணி அளந்தாயென்றுபொருள்.

பெருமுறையால் எய்துமோ பேர்த்து:— இது உயர்ந்ததா? அது உயர்ந்ததா? என்று பிரித்து ஆலோசிக்கும்வகை. அப்படி ஆலோசித்தால் நீ அளந்த ஞாலம் யசோதையின் குணத்திற்கு எதிர்த்துநிற்காது என்பதாம். "பேர்த்து எய்துமோ." தனியே நின்று எதிர்க்குமோ என்று கொள்ளலாம்.

பேர்த்தனை மாசகடம் பிள்ளையாய், மண்ணிரந்து
காத்தனை பல்லுயிரும் காவலனே—ஏத்திய
நாவுடையேன் பூவுடையேன் நின்னுள்ளி நின்றமை
காவடியேன் பட்டகடை. (10) [யால்

காவலனே	(உலகங்களை) ரக்ஷிப்பவனே!	பேர்த்தனை	உதைத்துத் தள்ளினாய்
பிள்ளையாய்	நீ கண்ணன் என்னும குழந்தையாகி	மண் இரந்து	மஹாபலியிடம் பூமியை யாசித்து
மா சகடம்	பெரிய வண்டியை	பல் உயிரும்	ஸகலமான ஆத்மாக்களையும்

காத்தனை	(திருவடியால் தடவி) ரக்ஷித்தாய்	பூ உடையேன்	உன்னைப் பூஜிப்பதற்காகப் புஷ்பங்களையுடையவனானேன்
நின் உள்ளி நின்றமையால்	இப்படிப்பட்ட உன்னையே ரக்ஷகன் என்று நினைத்திருக்கிறபடியால்		ஆதலால்
		அடியேன் பட்ட	தாஸனான நான் பெற்ற
ஏத்திய நா உடையேன்	எப்பொழுதும் துதி செய்கிற நாக்கையுடையவனானேன்	கடை	தாழ்மையிலிருந்து
		கா	என்னை ரக்ஷித்தருளவேணும்

இப்படிக்கீழே யசோதையைப்போல் பெருமானிடம் ப்ரீதியுள்ளவர்களாகவேண்டுமென்று சொன்னபின் இப்பாட்டில் நான் யசோதையைப்போலிருக்கமுடியாதபோதிலும் ஏதோ சிறிது பக்தியுடனிருப்பேன். என்னை நீ திருத்திப் பணிகொள்ளவேணுமென்று பெருமானை வேண்டுகிறார்.

போர்த்தனை:—யசோதை க்ருஷ்ணனான குழந்தையை தன் இல்லத்தில் ஒரு வண்டியின்கீழ் தொட்டிலில் கண்வளரச் செய்துவிட்டு நீராடப்போயிருக்குங்கால் கம்ஸனால் ஏவப்பட்டுவந்த அஸுரனொருவன் அவ்வண்டியில் ஆவேசித்து கண்ணனைக் கொல்ல நினைக்கவே, அதை அறிந்த கண்ணன் பாலுக்கு அழுவதுபோல் காலை உதைத்துக்கொண்டு அழுவதாகப் பாவனைசெய்து காலால் அவ்வண்டியை உதைக்க, வண்டியும் அதில் ஆவேசித்திருந்த அஸுரனும் முறிந்துவிழுந்தன என்கிற வரலாற்றையும், ஒருவருக்குந் தீங்கை விளைவிக்காமல் மண்ணிரந்து உலகத்தார் தலைகளில் தானாகவே திருவடியை வைத்தருளினனென்கிற த்ரிவிக்ரமவிருத்தாந்தத்தையும் நினைத்துருகி, காவலனே! தன் பேறாகவுலகத்தைக் காப்பவனே என்று அப் பெருமானைவிளித்து உன்னையே நான் சரணமாகப் பற்றியிருப்பதால் உன் நாமங்களையே நாவினால் சொல்லிக்கொண்டிருக்கிறேன் ; ஏதோ சக்த்யநுகுணமாக உன்னை ஆராதிப்பதற்கென்று புஷ்பங்களை வைத்துக்கொண்டிருக்கிறேன். என்னை ரக்ஷித்தருளவேணும் ; நான் பற்றியிருந்த சப்தாதி விஷயங்களிலுள்ள ருசியையும் அநாதியாகவந்த தேவதாந்தர ஸம்பந்தத்தையும் மற்றுமுள்ள உபாயாந்தரங்களில் அலைவது முதலிய விரோதிகளையும் அறுத்துத்தந்து என்னைக்காப்பாற்றியருளவேணும் ; நீயே ரக்ஷக

னென்று நான் நினைத்திருப்பதால் என்னை மற்றவிஷயங்களில் அலையாதபடி காக்கவேணுமென்று பிரார்த்திக்கிறார்.

கடைநின் றமரர் கழல்தொழுது, நாளும்
இடைநின்ற வின்பத்த ராவர்—புடைநின்ற
நீரோதமேனி நெடுமாலே! நின்னடியை
யாரோத வல்லா ரவர். (11)

(ஸம்ஸாரிகளை [illegible])

கடை நின்று	இதரதேவதைகளுடைய வீட்டுவாசல்களில் நின்றுகொண்டு	புடை நின்ற	நாலு பக்கங்களிலும் சூழ்ந்துகொண்டிருக்கிற
நாளும்	தினந்தோறும்	நீர் ஓதம்	ஜலத்தையுடைய ஸமுத்திரம்போன்ற
அமரர் கழல் தொழுது	அத்தேவர்களுடைய காலைப் பிடித்துத் தொழுது	மேனி	திருமேனியையுடைய
		நெடுமாலே	ஆச்ரிதவத்ஸலனே!
இடை நின்ற	பரமபதத்திற்கும் இப்பூமிக்கும் நடுவேயுள்ள	நின் அடியை	உன் திருவடிகளை
		ஓதவல்லார் அவர் ஆர்	பேசித்துதிக்கிறவர்கள் யார் இருக்கிறார்? ஒருவருமில்லை.
இன்பத்தர் ஆவர்	ஸ்வர்க்காதி லோகங்களை அனுபவிக்கிறவர்களாகவாவர்கள்		

தாம் ஸ்ரீமந்நாராயணனுடைய திருநாமங்களைச் சொல்லிக்கொண்டும் புஷ்பங்களை எடுத்துக்கொண்டு திருவாராதனம் செய்தும் பகவதேகபரராயிருப்பதைக்கீழே பேசினார். உலகிலுள்ள ஸம்ஸாரிகளும் தன்னைப்போலிராது தேவதாந்தரங்களைப் பஜித்து துன்பக்கடலுள் துவள்கின்றார்களே என்று வருந்துகிறாரிங்கே.

கடை நின்று:—உலகிலுள்ள ஸம்ஸாரிகளனைவரும் ஸ்ரீய:பதியைத் தொழுதேத்தித் துன்பங்களைத்தொலைத்து பரமபதமாகிற தேசத்திலேசென்று மீளாத பேரின்பத்துடன் வாழ்ந்திருக்கவேண்டியதுபோக, சில தாழ்ந்த தேவதைகளைத் தொழுது அந்தவத்து பலம் தேஷாம் தத்பவத்யல்பமேதஸாம் என்றபடி அவர்களால் கொடுக்கப்பட்ட உண்மையில் ஸுகமின்றி ஸுகம்போல் தோன்றுகிற சில

போகங்களை அனுபவித்துத் திரிகிறார்களே; பரமபதத்திற்கும், இந் நிலத்திற்கும் நடுவேயுள்ள ஸ்வர்க்காதி லோகங்களில் ஸுகத்தை யனுபவித்து மீளவும் கீழே இறங்கி மீண்டும் தேவதாந்தர பஜனம் செய்து மறுபடியும் ஸுகத்தையடைந்து இப்படி மத்யலோகங்களி லேயே ஸஞ்சரித்துக்கொண்டிருக்கிறார்களே; இது என்ன அநியாயம்; கடல்போல் சிரமஹரமான திருமேனியையுடையவனை அறிந்துகொண்டு தொழுகிறவர்கள் யாருமில்லையே; என்று வருந்துகிறார்.

கடை நின்று:—வீட்டின் வாசல்களில் நின்றுகொண்டு எனப் பொருள். இதர தேவதைகளின் வீட்டுவாசல்களிலெல்லாம் நின்று கொண்டு அவர்களை ஆராதித்து என்றபடி.

கடை நின்ற + அமரர், எனப் பதம்பிரித்துத் தாழ்ந்தவர்களான தேவர்களைத் தொழுது என்றும் சொல்லலாம்.

இடை நின்ற இன்பத்தராவர் என்றது பரமபதாநுபவத்தைக் காட்டிலும் கீழேயுள்ள மத்யமஸுகாநுபவம் என்பதாம். ஸ்வர்க் காதிலோகங்களி னநுபவத்தையும் இன்பம் என்று சொல்வது ஸம்ஸாரிகளுடைய நினைவின்படி; தன் நினைவின்படி அதுவும் துன்பமேயாம். "புடைநின்ற நீரோதமேனி" நாலுபக்கங்களில் சூழ்ந்து வியாபித்த ஜலத்தையுடைய கடல்போன்ற திருமேனியையுடையவன் என்பதால், எல்லோரும் உன் திருமேனியைக் கண்டவுடனேயே கால்தாழவேண்டியிருக்கப் பிறர் வாசலில் புகுந்து நிற்பது யாது காரணம்பற்றியோ தெரியவில்லை; என்கிற ஆழ்வாருடைய இரக்கம் காணப்படுகிறது.

அவரிவ ரென்றில்லை யரவணையான் பாதம்
எவர்வணங்கி யேத்தாதா ரெண்ணில்—பலரும்
செழுங்கதிரோ னொண்மலரோன் கண்ணுதலோனன்
றொழுந் தகையார் நாளும் தொடர்ந்து. (12) [றே

எம்பெருமானைத் தொழுவதில்

அவர் — அந்த தேவர்கள்
இவர் — இவ்வுலகிலுள்ள மநுஷ்யர்கள்

என்று இல்லை	என்கிற வ்யத்யாஸம் இல்லை	கதிரோன்	கிரணங்களை உடைய ஸூர்யனும்
அரவுஅணையான் பாதம்	அனந்தன்மேல் பள்ளிகொண்டவனுடைய திருவடியை	ஒண் மலரோன்	ஒளிநிறைந்த நாவிக்கமலத்திலுதித்த பிரமனும்
வணங்கி	ஸேவித்து	கண்ணுதலோன்	நெற்றியில் கண்படைத்த ருத்ரனும்
ஏத்தாதார் எவர்	துதிசெய்யாதவர் யார் இருக்கிறார்	நாளும்	எப்பொழுதும்
எண்ணில்	ஆலோசித்துப் பார்த்தால்	தொடர்ந்து	ஸ்ரிய: பதியிருக்குமிடம் தேடிச்சென்று
பவரும்	எங்கும் பரவின	தொழும்	ஸேவிக்கும்
செழும்	அழகான	தகையார் அன்றே	இயல்பினர்களன்றோ?

கீழ்ப்பாட்டில் ஸம்ஸாரிகளனைவரும் தேவதாந்தரபஜனஞ் செய்து வருந்துகிறார்களே ; என்று ஆழ்வார் துக்கமடைந்தார், உடனே சிலர் ஆழ்வாரை நோக்கி, பிரமன் ருத்ரன் இந்திரன் ஸூரியன் முதலியவர்கள் உயர்ந்தவர்களான தேவர்களன்றோ? தாழ்ந்தவர்களான நாம் உயர்ந்த தேவர்களைத் தொழுதால் என்ன கேடு விளைந்துவிடும் என்று வினவ, அதற்கு விடையளிக்கிறாரிப்பாட்டில்.

அவரிவர்:— பிரமன் ருத்ரன் முதலிய தேவர்கள் உயர்ந்தவர்களாயினும் மனிதர்கள் தாழ்ந்தவர்களாயினும் ஸர்வேச்வரனை நாராயணனை அடிபணிந்து பிழைக்கவேண்டுமென்பதில் தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் சிறிதும் பேதமில்லை. தாஸ பூதாஸ் ஸ்வதஸ் ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந: என்று நாமும் தேவர்களும் அவ்வீசனடியார்களே. மனிதர் தேவர் என்ற வ்யத்யாஸம் இவ்விஷயத்தில் இல்லை. ஞானம் சக்தி ஐச்வர்யம் முதலியவைகளால் நம்மில் உயர்ந்தவர்களாயிருந்தால் இருக்கட்டும். மற்றொரு பரதேவதையை ஆச்ரயிக்குமிடத்தில் மனிதர் என்றோ தேவரென்றோ பேதமில்லை. உலகில் ஸர்வேச்வரனை வணங்கி ஏத்தாதவர்கள் யார் இருக்கிறார். ஆலோசித்துப்பார்த்தால் எங்கும் பரவிய அழகான கிரணங்களையுடைய ஸூரியனும் அயோநிஜனான பிரமனும் நெற்றியில் கண்படைத்த ருத்ரனும் நாள்தோறும் ஸ்ரிய: பதியானவன் இருக்குமிடத்தைத் தேடிச்சென்று தொழுவதையே தொழிலாகக்

கொண்டிருக்கிறார்கள். ஆதலால் ஸம்ஸாரிகள் நாடிச்செல்லும் தேவர்களும் எவரைத் தேடித் துதிக்கிறார்களோ? அத்தெய்வத்தையே தொழுது பிறவித்துயரைத்தொலையுங்கோள் என்றார். கீழ்ப்பாட்டில் "நின்னடியை யாரோதவல்லாரவர்" என்று எம்பெருமானைப் பேசித் துதிப்பார் ஒருவருமில்லையே என்று சொல்லி இப்பாட்டில் "எவர் வணங்கி ஏத்தாதார்" என்று அவனை வணங்கித் துதிக்காதவர்களே கிடையாது என்று சொல்வது பொருந்துமோவென்னில், கீழ்ப்பாட்டில் இப்புவியில் ஒருவருமில்லையே என்று வருந்தினார். இப்பாட்டில் "எவர் வணங்கி ஏத்தாதார்" என்று எம்பெருமானை யாவரும் அடிபணியும்படி கடமைப்பட்டவர்கள்; அவனைத் தொழும் கடமையில்லாதவர்கள் யார்தான் இருக்கிறார்கள்; தேவர்களாகிலும் சரி, மனிதர்களாகிலும் சரி, அவனைத்தொழுதே தீரவேண்டும். அவ்வண்ணம் சூரியன் முதலிய தேவர்கள் அவனை வணங்கி வழிபடுகிறார்கள் என்றார். கீழ்ப்பாட்டில் கடமைப்பட்டவர்களாகிய மனிதர்கள் தங்கள் கடமையைச் செய்யவில்லையே என்று வருந்தினாரெனப் பொருள்கொண்டு தெளிவது திறமையாகும்.

தொடரெடுத்த மால்யானை சூழ்கயம் புக் கஞ்சி
படரெடுத்த பைங்கமலம் கொண்டு—அன் றிடரடுக்க
ஆழியான் பாதம் பணிந்தன்றே, வானவர் கோன்
பாழிதா னெய்திற்றுப் பண்டு. (31)

தொடர் எடுத்த	கால் சங்கிலியை அறுத்துக்கையிலே யெடுத்துச் செல்ல வல்லதான	கொண்டு	திருமாலைப் பூஜிப்பதற்குவென்று கையில் கொண்டு
மால் யானை	பெரிய யானை	அன்று	அக்காலத்தில்
சூழ் கயம் புக்கு	மிகவும் விசாலமான பொய்கையிலே இறங்கி	இடர் அடுக்க	முதலையால் துன்பம் ஏற்படவே
		அஞ்சி	பயப்பட்டு
படர் எடுத்த பை கமலம்	மலர்ந்தும் உயர்ந்தும் அழகாயுமிருக்கிற தாமரைப்பூவை	ஆழியான் பாதம்	விரோதிகளை யழிக்கவல்ல திருவாழியையுடையவனுடைய பாதங்களை

பணிந்து அன்றே	வணங்கியல்லவா
தான்	அந்த யானை
வானவர் கோன் பாழி	நித்யஸூரி நாதனுடைய வீடான வைகுண்டத்தை
பண்டு	முன்னாள்
எய்திற்று	அடைந்தது.

கீழ்ப்பாட்டில் ருத்ரன் ஸூரியன் முதலியவர்களும் ஸ்ரீமந் நாராயணனை நாளும் தொழுதேத்துகிறார்கள் என்று சொல்லவே சிலர் தேவர்களுக்குத்தான் அவனை ஆராதிப்பதற்கு அதிகாரமுண்டு. அறிவினால் குறைவுள்ள நமக்கு அவனை வணங்கி வழிபடுவதற்கு அதிகாரமில்லையே யென்று ஸந்தேஹப்படவே, இப்பாட்டில் யாவருக்கும் அவனைத் தொழுவதில் அதிகாரமுண்டென்று கஜேந்திர வ்ருத்தாந்தத்தால் காட்டுகிறார்.

தொடரேடுத்த:—இந்த்ரத்யும்னன் என்பானொரு அரசன் அகஸ்தியமுனிவருடைய சாபத்தால் யானையாய்ப் பிறந்து, பூர்வஜன்ம வாஸனையின்படி தினந்தோறும் ஆயிரம் தாமரைப் புஷ்பங்களால் ஸர்வேச்வரனைப் பூஜித்துவர, ஒருநாள் ஒரு பொய்கையில் புஷ்பங்களைப் பறிப்பதற்கென்றிறங்கவே, தேவலருடைய சாபத்தால் ஹூஹூ என்கிற கந்தர்வன் முதலையின் வடிவங்கொண்டு அப்பொய்கையில் வஸித்துவந்து, அன்று அந்த யானையின் காலைப்பிடித்திழுக்கவும், அதனால் நோவுபட்டுக் கரையேறமாட்டாத யானையும் பரதேவதையை ஆதிமூலமே! என்றழைக்க, பரம்பொருளான ஸ்ரீய: பதியும் விரைந்துவந்து திருவாழியால் அம்முதலையைத் துணித்து யானையை மீட்டுக் கடைசியாகப் பரமபதத்தையும் அளித்தான் என்கிற வரலாறு யாவருமுணர்ந்ததே. இப்படிப் பொய்கையில் இறங்கிய கஜேந்திரன் நன்றாய் மலர்ந்திருந்த புஷ்பங்களைப் பறித்து நின்று முதலை வாயிலகப்பட்டு நலிவுபடவே, சக்ராயுததாரியான பெருமானைப் பணிந்தல்லவா பரமபதநாதனுடைய பதியை அடைந்தது. ஆதலால் ஒரு விலங்கான யானை அவனை ஆச்ரயித்து முக்தியை யடைந்ததென்றால் மனிதர்களுக்கு அவனை ஆச்ரயிக்க அதிகாரமில்லையா? ஆகவே தேவன் மனிதன் மிருகம் முதலிய பேதமின்றி எல்லாவற்றிற்கும் எம்பெருமானை ஏத்திப் பணிந்து பிழைக்க அதிகாரமுண்டென்பது நன்கு காட்டப்பட்டது.

தொடரெடுத்த மால்யானை:— கால்சங்கிலியை அறுத்துக் கையிலே தூக்கிக்கொண்டு கண்டவிடமெல்லாம் திரிவது யானைகளின் ஸ்வபாவமானபடியால் கஜேந்திரனுக்கு இங்கு இவ்விசேஷணமிடப்பட்டது. இத்தால் இப்படி மதங்கொண்டு முரட்டுத்தனமாய்த் திரியும் மிருகமொன்று பகவானைப் பணிந்து பரமபதமெய்திற்றென்றால் சிறந்த விவேகம் படைத்த மனிதர்கள் அவனைத் தொழுது ஏன் முக்திபெறலாகாது? என்கிற கவலை ஆழ்வாருக்குளதென்பது தெரிவிக்கப்படுகிறது.

பண்டிப் பெரும்பதியை யாக்கி, பழி பாவம்
கொண்டிங்கு வாழ்வாரைக் கூறாதே—எண்டிசையும்
பேர்த்தகர நான்குடையான் பேரோதிப் பேதைகாள்
தீர்த்தகர ராமின் திரிந்து. (14)

பேதைகாள்	புத்தியில்லாதவர்களே!
பண்டியை	வயிற்றை
பெரு பதி ஆக்கி	கண்டதையெல்லாம் புசித்து பெரிய ஊர்போல் பெரிதாகச்செய்து
பழி பாவம் கொண்டு	பிறரால் ஏறிடப்படுகிற பாவங்களையும் தான் வேணுமென்றே நினைத்துச்செய்கிற பாவங்களையும் சேர்த்துக்கொண்டு
இங்கு	இப்புவியில்
வாழ்வாரை	பெருவாழ்வு வாழ்கிறதாக நினைக்கிற பாவிகளை
கூறாதே	பேசாமல்
எண்திசையும் பேர்த்த	(உலகளந்த காலத்தில்) எட்டுதிக்குகளும் இடியும்படி, எட்டி நீண்ட
கரம் நான்கு உடையான்	நான்கு திருக்கைகளையுடைய திரிவிக்ரமனுடைய
பேர் ஓதி	திருநாமங்களைச் சொல்லிக்கொண்டு
திரிந்து	அவன் உகந்த நிலங்களிலே ஸஞ்சரித்துக்கொண்டு
தீர்த்தகரர் ஆமின்	உலகத்தைச் சுத்தி செய்கிற ஸ்ரீவைஷ்ணவராக ஆகுங்கோள்;

கஜேந்திராழ்வானுடைய வரலாற்றைக் காட்டி ஸர்வேச்வரன் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்கிற பேதமின்றி யாவராலும் ஆச்ரயிக்கத் தகுந்தவன் என்று சொன்னபின் அவ்வீச்வரனையே பாடித்

தூஷியுங்கோள். மற்ற ஸம்ஸாரிகளைக் கவிபாடித் திரியவேண்டா மென்று உபதேசஞ் செய்கிறாரிதில்.

பண்டி:— பகவானை நினையாத பாவிகள் இவ்வுலக வாழ்க்கையையே பெரிதாக நினைத்துக் கண்ணில் தென்பட்ட பதார்த்தங்களையெல்லாம் சாப்பிட்டுப் பாழும் வயிற்றைப் பதின்மடங்கு பெரியதாய்ச்செய்து, தான் தெரியாமலே செய்யும் பாவங்களையும் வேணுமென்றே நினைத்துச் செய்யும் பாவங்களையும் மூட்டை மூட்டையாகச் சுமந்துகொண்டு இவ்வுலகவாழ்க்கையையே பெருங்கலியாணமென்று நினைத்துத் திரிகிறார்கள். அப்பேதைகளை ஸ்தோத்ரம் செய்து அவர்கள் கொடுக்கும் காசுகளைக்கொண்டு வயிறுவளர்க்கும் தொழிலை விட்டுவிடுங்கோள். வாமனனாய் வந்து மாவலிபக்கல் மண்ணிரந்து எட்டுத் திசைகளையும் இடிக்கும்படி நீண்டு வளர்ந்த நான்கு கைகளையுடைய த்ரிவிக்ரமனாய் வளர்ந்த பெருமானுடைய திருநாமங்களை பிதற்றிக்கொண்டு திவ்யதேசங்கள் தோறும் சென்று பெருமானை ஸேவித்து உங்களுடைய ஸ்பர்சத்தால் உலகத்தை பரிசுத்தமாகச் செய்யுங்கோள் என்று ஸம்ஸாரிகளைப் பார்த்துபதேசித்தார்.

பண்டி—வயிறு. பெரும்பதி—பெரியவூர். பெரும்பதியையென்றவிடத்திலுள்ள இரண்டாம் வேற்றுமை யுருபைத் தனியே பிரித்து பண்டிஎன்பதோடுகூட்டிப்பொருள்கூறினால் வயிற்றைஓர்ஊர்போல் பெரிதாகும்படி செய்து என்ற பொருள் கிடைக்கும். பண்டியை பெரும்பதியாக்கி என்றந்வயம். பழி—பிறரால் நம்மிடம் சொல்லப்படும் குற்றங்கள். நமக்குத் தெரியாமலேயே நாம் செய்த பாவங்கள் என்பது கருத்து. பாவம்—நாம் வேணுமென்றே நினைத்துச் செய்த பாவங்கள். இவ்வுலக வாழ்க்கையையே பெரிதாகவெண்ணியிருப்பவர்கள் கேவலம் வயிற்றை நியமமின்றிக் கண்ட வஸ்துக்களைக்கொண்டு நிரப்பித் தெரிந்தும் தெரியாமலும் பாவங்களையே செய்து திரியும் இயல்புள்ளவர்களாதலால் இங்ஙனம் சொன்னபடி. அந்த அறிவிலிகளைப் போற்றித் திரிகிறவர்கள் அவர்களைக் காட்டிலுமறிவிலிகளாதலால் பேதைகாள் என விளித்தார். "எண்டிசையும் + நான்குடையோன்" திரிவிக்ரமனாய் வளர்ந்தபோது எம்பெரு

மானது திருக்கைகள் எட்டுத் திசைகளையும் ஸ்பர்சிக்கும்படி விம்ம வளர்ந்தன என்பதாம்.

தீர்த்தகராமின்:— ஸர்வேச்வரனுடைய திருநாமங்களைச் சொல்லிக்கொண்டு திவ்யதேசங்களில் நித்யவாஸம் செய்யும் பெருமானை ஸேவிப்பவர்கள் இவ்வுலகைப் பரிசுத்தமாக்குகிறார்கள் என்றபடி. நாதனை நரசிங்கனை நவின்றேத்துவார்களுழக்கிய பாததூளி படுதலால் இவ்வுலகம் பாக்கியம் செய்ததே என்று பெரியாழ்வாரும் ஆதியந்த மனந்தமற்புதமான வானவர் தம்பிரான், பாதமா மலர் சூடும் பத்தியிலாத பாவிகளுய்ந்திட, தீதில் நன்னெறிகாட்டி யெங்கும் திரிந்து அரங்கனெம் மானுக்கே, காதல்செய் தொண்டர்க்கு என்று குலசேகராழ்வாரும் அருளியபடி திவ்யதேசங்கள் தோறும் சென்று திருமாலை யேத்தித் திரிபவர்கள் பிறரையும் தன்னைப்போல் ஆக்கிவிடுகிறார்கள் என்பது பற்றி தீர்த்தகரர் ஆமின் என்றார்.

பண்டு இப்பெரும்பதியை ஆக்கி என்று பதம் பிரித்தால் அநாதிகாலமாக (முக்திபெற வழிதேடாமல்) இந்த ஸம்ஸாரத்தை யே வளர்த்துக்கொண்டு வருபவர்களென்று பொருள்.

திரிந்தது வெஞ்சமத்துத் தேர்கடவி, அன்று
பிரிந்தது சீதையை மான்பின்போய்—புரிந்ததுவும்
கண்பள்ளி கொள்ள வழகியதே, நாகத்தின்
தண்பள்ளி கொள்வான் றனக்கு. (15)

வெம் சமத்து	க்ரூரமான பாரதப் போரில்	சீதையைப் பிரிந்தது	பிராட்டியைப் பிரிந்ததுவும்
தேர்கடவி	(அர்ஜுநனுடைய) ரதத்தை ஓட்டிக் கொண்டு	கண் பள்ளி கொள்ள	(காட்டில்) வெறுந் தரையில் படுத்துக் கொள்ள
திரிந்தது	ஸாரதியாய் அலைந்ததுவும்	புரிந்ததுவும்	விரும்பியதும்
அன்று	இராமாவதார ஸமயத்தில்	நாகத்தின் தண் பள்ளி கொள்வான் தனக்கு	ஆதிசேஷனென்கிற சீதளமான படுக்கையில் பள்ளிகொள்ளும் பிரானுக்கு
மான் பின் போய்	மாரீசனென்கிற மானைத் துரத்திச்சென்று	அழகியதே	தகுதியல்லவோ ?

கீழில் த்ரிவிக்ரமாவதாரம் நினைக்கப்படவே மற்றவவதாரங்களும் நினைவிற்கு வந்து அவ்வவதார சேஷ்டிதங்களில் கால் தாழ்ந்து அவற்றைப் பேசுகிறாரிதில். அல்லது தான் உபதேசித்ததைச் செவியில் வாங்காமலேயே தங்கள் கார்யங்களிலேயே கண்ணோக்கங் கொண்ட ஸம்ஸாரிகளைப் பார்த்து வருந்திய வாழ்வார், இவர்களுக்காகப் பரம புருஷன் நாட்டில் பிறந்து பாடுபட்டுப் பெருந்துன்பங்களடைந்திருக்க, இவர்கள் இப்படித் திரிகிறார்களே என்று நினைந்து அவ்வீசன் செய்த அரும்பெருஞ்செயல்களில் ஆழ்ந்து கிடக்கிறார் என்பது இப்பாட்டில் பேசப்படுகிறது.

திரிந்தது:— ஸ்ரிய: பதியான நாராயணன் நாற்றம் குளிர்த்தி மார்த்தவம் இவைகளுக்குப் பிறந்தகமான திருவனந்தாழ்வானாகிற திருப்பள்ளியில் தன் பரத்வத்திற்கேற்பப் பள்ளிகொண்டு பரமானந்த பரிதனாயிருக்கவேண்டியது ப்ராப்தமாயிருக்க, அவ்வனந்தனையும் விட்டு இப்பூமியில் கண்ணனாய்ப் பிறந்து பாரத ஸமரத்தில் அர்ஜுனனுக்கு ஸாரதியாயமர்ந்து வெய்யிலிலும் காய்ந்து மழையிலும் நனைந்து எதிரிகளெய்தவம்புகள் உடம்பில் தைக்க அர்ஜுனன் ஏவின விடங்களிலெல்லாம் ரதத்தை ஓட்டிக்கொண்டு திரிந்தானே;

ஸ்ரீ ராமனாய்ப் பிறந்து பாராளும் படர்ச்செல்வம் பரதநம்பிக்கருளி ஆராவன் பிளையவனோடு அருங்கானமடைந்து, மாயமான் பின்சென்று ஸீதையைப் பிரிந்து வருந்திப் புலம்பித் தவித்து நின்றானே;

மேலும் ஸ்ரீராமனானபடியில் திருவயோத்தியில் உயர்ந்த மாளிகையில் ஸமஸ்தோபசாரங்களுடன் மெல்லணை மேல் துயின்று அப்போகங்களைத் துறந்து வளநகரம் துறந்து, கானகம் விரும்பி கல்லணைமேல் கண்துயின்றானே; கைகேயியின் பொருட்டு ராஜ்யத்தைப் பரதனுக்குக் கொடுத்ததும், கானகத்தில் வெறுந்தரையில் படுத்துக்கொள்வதில் ஆசையினால் தானோ என்று தோன்றுகிறதே. இப்படி அவன் தன் பரத்வத்தை நினையாமல் தன்னை யழிய மாறி இவ்வுலகம் வந்து இவ்வலைச்சல்களைச் செய்து பட்டபாட்டை இந்த ஸம்ஸாரிகள் அறியவில்லையே; இது என்ன அநியாயம்; அவனது நீர்மையை இப்பாவிகள் அறியவில்லையே; என வருந்துகிறார்.

அழகியதே:— கீழ்ச்சொல்லிய செயல்களெல்லாம் அனந்தன் மேல் கிடக்கும் புண்ணியனுக்குப் பொருத்தமுள்ளவையா? அவனுக்கு இவைகள் அழகைக் கொடுக்கின்றனவா? என்று பொருள். இவைகள் அவனுக்குப் பொருந்தாத செயல்களாயினும் ஆச்ரிதார்த்தமாகச் செய்யப்பட்டனவென்று தேறி அவனது சீல குணத்தை அநுஸந்திப்பது கடமையாகும். அழகியவே என்று பாடமாகில் ஜகத் ரக்ஷண தீக்ஷிதனான அவ்வீசனுக்கு இவைகள் அழகானவைதான் பொருத்தமுள்ளவைதான் என்று பொருள் கொள்க.

தனக்கடிமை பட்டது தானறியானேலும்
மனத்தடைய வைப்பதாம் மாலை—வனத்திடரை
ஏரியாம் வண்ண மியற்றுமிது வல்லால்
மாரியார் பெய்கிற்பார் மற்று. (16)

தனக்கு	ஜீவாத்மாவாகிற தனக்கு	வனம் திடரை	காடெழுந்திருக்கும் மேட்டுபூமியை
அடிமை	தாஸ்யமானது	ஏரி ஆம் வண்ணம்	ஒரு தடாகமாக வாகும்படியாக
பட்டது	பொருந்தியிருக்கிறது என்பதை	இயற்றும் இது அல்லால்	குழியாக வெட்டுகிற இந்தக் கார்யத்தைத் தவிர
தான் அறியான் எனும்	தான் அறிந்துகொள்ளமுடியாதவனாயிருந்தபோதிலும்	மற்று	மேலும்
மாலை	ஸர்வேச்வரனை	மாரி	மழையை
மனத்து	மனஸ்ஸிலே	பெய்கிற்பார்	பெய்யும்படி செய்பவர்
அடைய	பொருந்தியிருக்கும்படி	யார்	எவர் இருக்கிறார்? மழைபெய்வது ஈச்வரனுடைய அருளாலேயாகும்.
வைப்பது	வைத்துக்கொள்வது		
ஆம்	உசிதமான கார்யமாகும்		

கீழ்ப்பாட்டில் புருஷோத்தமன் நாட்டையளித்துய்யச் செய்யும்பொருட்டு நாட்டில் பிறந்து அலைந்து திரிந்து பட்டபாட்டை யருளிச்செய்தார். இப்படி அவன் நம்மைத் திருத்திப் பணி

கொள்வானனபின்பு தாம் செய்யவேண்டியதைப் பேசுகிறார் பாட்டில்.

தனக்கடிமை:—ஒரு சேதனன இக்கொடிய ஸம்ஸாரத்தை விட்டுக் கரையேறி பரமபதமென்கிற லோகத்தையடையவேணு மென்று நினைத்தானேயாகில் அவன் அசேதனமான கல், மண், ஸ்தம்பம் முதலிய பதார்த்தங்களைப்போல் வெறுமனே திரிந்தானே யாகில் விரும்பிய பரமபுருஷார்த்தம் கிடைக்காது. சேதநனுகை யாலே ஏதோ ஒரு உபாயத்தைச் செய்தே தீரவேண்டும். அப்ப டிச் செய்யப்படுமுபாயமும் நாம் பெறுகிற புருஷார்த்தத்திற்குச் சரியான விலையாகாது. ஒரு அரசனுக்கு எலுமிச்சம்பழத்தைக் காணிக்கையாகக் கொடுத்து ஒரு கிராமத்தைப் பெறுவதுபோல் உபாயமும் வ்யாஜமாத்ரமாகவே நிற்கும். ஈச்வரனும் ஸர்வமுக்தி ப்ரஸங்கம் வைஷம்யம் நைர்க்ருண்யம் முதலிய தோஷங்களுக் கஞ்சி இவ்வியாஜத்தை யபேக்ஷித்தே மோக்ஷத்தைத் தருகிறானென். ஸர்வஜ்ஞோபி ஹி விச்வேசோ ஸதா காருணிகோபி ஸந் | ஸம்ஸாரதந்த்ரவாஹித்வாத் ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே || என்ப தையும் காண்க. அவாப்த ஸமஸ்தகாமனானவன் இந்த அல்பவ்யா பாரத்திற்காக விலைமதிப்பில்லாததும் புநராவ்ருத்தியில்லாததுமான பேரின்பமான பரமபதத்தைக் கொடுப்பதும் அவனுடைய பரமதயா கார்யமாகவே தேறும். ஆனதுபற்றி இச்சேதனன் செய்யவேண்டி யது என்னவென்றால் அதை இப்பாட்டின் முன்னடிகளால் பேசு கிறார். ஸ்வத்வ மாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்திதம் என்னும்படி ஜீவன் பரமாத்மாவுக்கு அடிமைப்பட்டது என்று ஸ்வரூபஜ்ஞானத்தை பெற்றவனாயிருக்கிற மனுஷ்யனும் அந்த ஸர்வேச்வரனை மனத்திலே நினைப்பது அவனுடைய கார்ய மாகும். நமக்கு ஸ்வரூபஞானம் தெளிவாகப் பிறக்கவில்லையே என்று வெறுமனே இராமல் யத்யதாசரதி ச்ரேஷ்டோ தத் ததேவே தரோ ஜன:—என்கிறபடி உயர்ந்தவர்களான பெரியோர்கள் திரு மாலை நெஞ்சில்கொண்டு துதிப்பதால் நாமும் அவனைக்கொள்வோ மென்று மஹநீயர்களுடைய அநுஷ்டானத்தைப் பார்த்து தம் நெஞ்சில் அவனைக் கொள்வது உசிதமாகும் என்று பகவத்விஷயத் தில் ஆசையை வேண்டுவது தான் சேதநனுடைய கார்யமென்றார்.

ஆனால் ஸ்வரூபஜ்ஞானம் பூர்ணமாய் இல்லாமலே அவனை நெஞ்சில் நினைப்பதால் மாத்திரம் நமது மனோரதம் தலைகூடுமோவென்று சிலர் வினவ, அதற்குப் பின்னடிகளால் பதிலளிக்கிறார். எப்பொழுதும் நாம் செய்யும் உபாயங்களுடைய பூர்த்தியினாலேயே பலம் வந்துவிடுமென்று ப்ரமிக்கவேண்டாம். அது ஒரு வ்யாஜமாத்ரமேயாகும். ஒரு உதாஹரணம் காட்டுவோம். ஒரு காடெழுந்து கிடக்கிற மேட்டுத்திடர் நிலத்தை ஏராளமான பணச்செலவு செய்து பள்ளமாக வெட்டி நான்கு பக்கங்களிலும் உயர்ந்த கற்களால் படிக்கட்டுகளும் கட்டி ஒரு பெரிய ஏரியாகச் செய்கிறான். உடனே அதில் ஜலம் உண்டாவதற்கு மழையையும் அவன் பெய்யும்படி செய்கிறானா? அது ஸர்வேச்வரனுடைய ஸங்கல்பத்தாலன்றோ ஆகவேண்டும். மழைபெய்தால் மேட்டு நிலத்தில் ஜலம் தங்கமுடியாதே யென்று நினைத்து நாம் பள்ளமாகச் செய்துவைத்தால் மழை பெய்யுங்கால் ஜலம் நிறையுமே என்றல்லவோ ஏரியாகச் செய்கிறான். ஆதலால் பலம் கிடைப்பது அவனருளாலேயேயாகும் செயலாதலால் நாம் பரிபூர்ணமாகப் பரிகாரங்களைப் பெற்றிருந்தாலும் "உனதருளே பார்ப்பனடியேனே" என்றிருக்கவேண்டியதாயிருப்பதால் பகவத் விஷயத்தில் நாம் ருசிவைத்தால் அத்தைப் பெரிதாக நினைத்து ததாமி புத்தியோகம் தம் யேந மாமுபயாந்தி தே என்கிறபடி அவன் பலபர்யவஸாயியாகச் செய்கிறானென்று சொல்லி, பெருமானிடம் ருசியை வைக்கவேண்டியது சேதனனுடைய கார்யமென்றார்.

ஆழ்வார்கள் உபாயபூர்த்தியைப் பரிபூர்ணமாகப் பெற்றிருந்தாலும் அவ்வுபாயங்களை யெல்லாம் அவன் கொடுக்கும் புருஷார்த்தத்திற்குத் தகுதியான விலையாகாது; இது ஒரு வியாஜமே என்று நினைத்துத்தான் என்நன்றி செய்தேன்நான்என் நெஞ்சில் திகழ்வதுவே என்று நினைக்கும்படியாயிருக்கிறது. கர்மயோகஞானயோகாதிகளால் மனத்தை நிர்மலமாகச்செய்த பெரியோர்களும் விளைத்துவைத்தேனினிப் போகவொட்டேன் என்னும்படி அவ்வீச்வரன் வந்து புகுந்தால் நிலையாக அவனை நிறுத்தவேண்டி கர்மயோகம் ஞானம் முதலியவைகளைச் செய்கிறார்களே யல்லது தங்களுடைய யோகத்தால் ஈச்வரனைக் கொணர்ந்து வைக்கிறார்களில்லை. ஆதலால் அபே

க்ஷித புருஷார்த்தம் கிடைப்பது அவனருளாலேயாகுமாதலால் நாம் ஸ்வரூபஞானத்தைப் பெறுவிடினும் அவனை மனத்தில் வைப்பதாகிற நிலையை ஸம்பாதிக்கவேண்டும் என்று உபதேசித்தபடி.

இப்பாட்டிற்கு இன்னும் பலபடியாகப் பொருள் உண்டாயினும் விரிவுக்கஞ்சி இங்கு எழுதப்படவில்லை. பெரியோர்களைக் கேட்டுத்தெளிக.

மற்றா ரியலாவார் வானவர்கோன் மாமலரோன்
சுற்றும் வணங்கும் தொழிலானை—ஒற்றைப்
பிறையிருந்த செஞ்சடையான் பின்சென்று, மாலைக்
குறை யிரந்து தான் முடித்தான் கொண்டு. (17)

வானவர் கோன்	தேவராஜனான இந்திரனும்
மாமலரோன்	உயர்ந்த தாமரைமலரில் பிறந்த பிரமனும்
சுற்றும்	நாலுபக்கங்களிலும் சூழ்ந்துகொண்டு
வணங்கும்	ஸேவிப்பதற்கேற்ற
தொழிலானை	திவ்யசேஷ்டிதங்களையுடைய
மாலை	ஸ்ரிய: பதியான தேவனை
ஒற்றை பிறை இருந்த செம் சடையான்	ஒரு கலையையுடைத்தான சந்திரன் வாஸம் செய்கிற சிவந்த ஜடையையுடைய ருத்ரன்
பின்சென்று	அநுசரித்து
இரந்து	கெஞ்சிக் கேட்டுக்கொண்டு
குறை	தன்னுடைய குறையை
தான்முடித்து கொண்டான்	தான் தீர்த்துக்கொண்டான்
	இப்படியான பின்பு
இயல் ஆவார்	நாம் ஆச்ரயிக்கும்படியான யோக்யதையுள்ளவர்கள்
மற்று ஆர்	வேறு யார் இருக்கிறார்கள்?

இப்பாட்டில் திருமாலைத் தவிர்த்து வேறு நம்மையுய்யக் கொள்ளவல்ல தெய்வம் இங்கு யாதொன்றுமில்லை என்பது சொல்லப்படுகிறது.

மற்றாரியலாவார்:—அஷ்டவஸுக்கள். த்வாதசாதித்யர்கள் அச்விநீ தேவதைகள் ஏகாதசருத்ரர்கள் ஆகிய முப்பத்துமுக்கோடி

தேவர்களுக்கும் நாதனான இந்திரனும் புருஷோத்தமனுடைய நாபியிலுள்ள கமலத்தில் பிறந்த நான்முகக்கடவுளும் எம்பெருமானுக்கெதிரே செல்லப்பயந்துகொண்டு நான்கு பக்கங்களிலும் நின்றுகொண்டு வணங்கித்துதிக்கிறார்கள். தக்ஷமுனிவருடைய சாபத்தின்பயனாக க்ஷயமடைந்த சந்திரன் தன்னைச் சரணமடையவே அவனை தன்சடையிலே வைத்துக்காக்கும் லோகப்ரதானனான ருத்ரன், இந்திரன் பிரமன் இவர்களைப்போல் அப்பெருமானுடைய சுற்றுப்பக்கத்திலும் நிற்பதற்கும் திறமையில்லாமல் அப்பெருமானது கண்ணில் தென்பட்டால் நமக்கு என்னவிளையுமோ வென்றஞ்சி அவன் பின்னே சென்றுகொண்டு தனது குறைகளை அவன் திருச்செவிகளில் விழும்படி மெள்ளச்சொல்லி யாசித்து தன்னுடைய ப்ரஹ்மஹத்யாதிதோஷங்களாகிற குறைகளைத் தீர்த்துக்கொண்டான். அறிவிலிகளால் போற்றப்படுகிற சில்லரைத்தெய்வங்களான இந்திரன் பிரமன் ருத்ரன் முதலியவர்களும் அப்பெருமானிடம் நேர்கொடு நேர் செல்லவஞ்சிப் பக்கங்களில் நின்று யாசித்து தன் மனோபீஷ்டங்களைப் பெறுகிறார்கள் என்றால் நாம் வணங்கி வழிபடவேண்டும் தெய்வம் அத்திருமாலல்லது வேறில்லையென்பது நன்கு விளங்கும்.

"செஞ்சடையான் பின்சென்று மாலைக்கொண்டு இரந்துகுறை முடித்தான்" என்று அந்வயம் கொண்டு ருத்ரன்பின்னே சென்று திருமாலை மனத்திலே வைத்துக்கொண்டு யாசித்து தன் குறைகளை முடித்துக்கொண்டான் என்று பொருளுரைப்பதும் தகும்.

கொண்ட துலகம் குறளுருவாய்க் கோளரியாய்
ஒண்டிறலோன் மார்வத் துகிர்வைத்தது—உண்டதுவும்
தான் கடந்த வேழுலகே தாமரைக்கண் மாலொரு நாள்
வான் கடந்தான் செய்த வழக்கு. (18)

குறள் உரு ஆய்	வாமன வடிவத்துடனாகி
உலகம் கொண்டது	உலகங்களை ஸ்வாதீனங்களாகச் செய்துகொண்டதும்
கோள் அரி ஆய்	மிகுந்தபலமுள்ள நரசிங்கமாகி
ஒண் திறலோன்	விலக்ஷணமான பலத்தையுடைய ஹிரண்யனுடைய
மார்வத்து	மார்பில்
உகிர்வைத்தது	நகங்களைவைத்துக் கிழித்ததுவும்

ஒருநாள்	ஒரு காலவிசேஷத்தில்	வான்கடந்தான்	வானிலும் பெரிய பெருமையுள்ளவனும்
தான் கடந்த ஏழ் உலகு ஏ	தான் அளந்த ஸப்த லோகங்களையும்	தாமரைகண்	தாமரைபோன்ற கண்களையுடையவனுமான
உண்டதுவும்	அமுது செய்ததுமான	மால்	எம்பெருமான்
(இப்பெரும் செயல்கள்)		செய்தவழக்கு	செய்த நியாயமான கார்யங்களாம்.

திருமாலைத்தவிர வேறு தெய்வத்தை நாம் ஆச்ரயிக்க விரகில்லை என்று பேசி அவன் செய்த ஜகத்ரக்ஷண ப்ரகாரத்தை அநுஸந்திக்கிறரிதில்.

கொண்டதுலகம்:—ஆகாசத்தை அளந்தாலும் அளக்கலாம் ஸர்வேச்வரனையோ அல்லது அவனது பெருமையையோ அளவிட முடியாது. அப்படி வானிலும் பெரிய பெருமை வாய்ந்த நித்ய ஸூரிநாதன் ஜனங்கள் குள்ளனென்று பரிஹாஸம் செய்வதற்கிடமாக வாமநவடிவங்கொண்டு மாவலியிடமிருந்து உலகங்களைப் பெற்றுக் கொண்டு இந்திரனது துயரத்தைப்போக்கினன். மூவுலகங்களும் இரணியனது கொடும் செயல்களால் வருந்தியபோது வடிவில் ஒரு விதமாகவும் முகத்தில் ஒருவிதமாகவும் கண்டாரஞ்சும்படியான நரங் கலந்த சிங்கமாய்த்தோன்றி இரணியனது மார்வத்தை நகத்தாலே கிழித்துப் பொகட்டு மூவுலகங்களுக்கும் அபயமளித்தான். மற்றொருகால் பிரளயங்கொள்ளாதபடி இப்பிரபஞ்சங்களையெல்லாம் தான் திருவயிற்றிலே வைத்துக்கொண்டு காப்பாற்றினன். இவையனைத்தும் நீதியான கார்யங்களேயாகும். அரசன் பிரஜைகளை ரக்ஷிப்பது நியாயமானதுபோல் ஸர்வ ஜகந்நாதன் ஜகத்ரக்ஷணார்த்தமாகச் செய்த வ்யாபாரங்கள் அவனுடைய ரக்ஷகத்வத்திற்குப் பொருந்தியவே என்கிறர். குள்ளனுய்ப் பிறப்பதும், வடிவில் ஒன்றும் முகத்தில் ஒன்றுமான பிறவியும் திரிவிக்ரமனுய் வளர்ந்தபோது தன் காலில் துகைப்பட்டுக்கிடந்ததை சாப்பிடுவதும் சிஷ்டர் பரிஹஸிக்க இடமாயிருப்பினும் லோகரக்ஷணார்த்தமாகச் செய்தபடியால் நியாயமான செயல்களே யாகுமென்கிறர்.

வான்கடந்தான் செய்தவழக்கு என்பதற்கு எதிர் மறைப் பொருள் கொண்டு இவைகள் நியாயமல்லவென்றும் பொருள் வரையலாம். சிறிய வடிவைக்காட்டி பெரியவடிவால் அளப்பதும் ஒருவரும் பார்த்தறியாத புதியதோர்வடிவாய்ப் பிறப்பதும் தன்கால்பட்ட வஸ்துவைப் புசிப்பதும் நியாயமற்ற செயலாகும் என்பதாம். இப்படிப் பேசுவதும் அவனிடமுள்ள பக்தியின் பெருக்காலே என்று கொள்க.

“வான்கடந்தான்”. ஸ்வர்க்கத்தை அளந்தவனென்றுதல் வானிலும் பெரிய புகழ்வாய்ந்தவனென்றுதல், “ஒருநாள் வான்கடந்தான்” என்றந்வயித்து ஒருநாள் நித்யஸூரிகளுக்கருகே நிற்பவன் என்றுதல் (அவதாரங்கள் செய்து இப்பிரகிருதியில் நிற்கும் காலத்தைவிட பரமபதத்தில் நித்யஸூரிகளிடம் நிற்பது குறைவு என்று கொண்டு அவ்வளவு ஸௌலப்ய குணத்தைப் பெற்றவன்) பொருள் கொள்ளலாம். ஆகவே இப்பாட்டால் அவனே ஸர்வ ஸமாச்ரயணீயனென்று ஸ்தாபிக்கப்பட்டது.

வழக்கன்று கண்டாய் வலிசகடம் செற்றாய்
வழக்கென்று நீ மதிக்க வேண்டா—குழக்கன்று
தீவிளவின் காய்க்கெறிந்த தீமை திருமாலே
பார் விளங்கச் செய்தாய் பழி. (19)

திருமாலே!	ஸ்ரீய: பதியே! நீ	குழ கன்று	அழகான கன்றுக்குட்டியை
வலிசகடம்	வலிமையுள்ள சகடத்தை	தீ விளவின் காய்க்கு எறிந்த	கொடிய விளாங்கனியை உதிர்ப்பதற்கென்று வீசிப்போகட்ட
செற்றாய்	முறித்தாய்		
வழக்கு அன்று கண்டாய்	இது உனக்கு நியாயமான செயலாகாது காண்;	தீமை	தீங்கான செயலை
வழக்கு என்று நீ மதிக்கவேண்டா	இது நியாயமான செயலென்று நீ நினைக்கவேண்டாம்	பார் விளங்க	இப்பூமியில் பிரகாசிக்கும்படியான
		பழிசெய்தாய்	தப்பாகச் செய்தாய்

அவன் செய்த ரக்ஷணவ்யாபாரமெல்லாம் பழியாய் விளைந்ததென்கிறார் இதில்.

வழக்கன்று:—திருமாலே! நீ கண்ணனாய்ப் பிறந்து அஸுராவிஷ்டமான வண்டியின் கீழே தொட்டிலில் உறங்கும்போது, உன்மேல் விழுந்து கொல்லவேணுமென்று அவ்வஸுரன் நினைக்க, நீ அவ்வலிய சகடத்தை உன்னுடைய பஞ்சியன்ன மெல்லடியால் பாய்ந்து உதைத்தாய். இது உனக்குத் தகுதியல்ல. அவ்வமயம் உன் திருவடிகளுக்கு என்ன நோவு நேர்ந்ததோ என்று ஆச்ரிதர்கள் அஞ்சுகிறார்கள். என்று பகவானை விளித்துச்சொல்லவே அவனும் அது செய்தாய்விட்டது; அதைப்பற்றிச் சொல்வீயென்? என்று சொல்லவே, அதற்குப் பதிலுரைக்கிறார் இரண்டாமடியில். செய்துவிட்டபோதிலும் நீ அதை நியாயமென்று நினைக்கவேண்டாம் அது பழியேயாகும் என்றார். இங்ஙனம் உன் மேல் விழுந்துன்னைக் கொல்ல நினைத்து விளாங்கனி வடிவமாய் நின்றவனை உன்னை முட்டிக்கொல்ல நினைத்துவந்த வத்ஸாஸுரனுடைய காலைப் பிடித்துத் தூக்கி எறிந்து அடித்து இருவரையும் கொன்றாயே; உன்னுடைய ஸுகுமாரமான திருக்கைகளால் அவ்வஸுரனது கடினமான காலை எப்படிப் பிடித்தாய்; இதுவும் ஆச்ரிதர்கள் அஞ்சவேண்டிய செயலாயிருக்கிறது. இச்செயல்கள் உனது திருமேனிக்குத் தகுதியானவையா? நீ வேணுமென்று நினைத்துச் செய்தபோதிலும் பார்விளங்கத் தீமை செய்தாய், பழிசெய்தாய் என்றே பேசினர்.

திருமாலே என்பதால் நீயும் பிராட்டியுமாக ஸகித்திருப்பது நியாயமேயன்றி இப்படி ஜகத்ரக்ஷணத்திலீடுபட்டதன் பயனாக வுனக்கே அவ்வஸுரர்களால் என்ன விளையுமோ வென்று ஆச்ரிதர்கள் பயப்படும்படியாகவா காரியம் செய்வது; என்று வருந்தியது ஸூசிதமாகும்.

பழிபாவம் கையகற்றிப் பல்காலும் நின்னை
வழிவாழ்வார் வாழ்வராம் மாதோ—வழுவின்றி
நாரணன்றன் நாமங்கள் நன்குணர்ந்து நன்கேத்தும்
காரணங்கள் தாமுடையார் தாம். (20)

பழி	அபகீர்த்திகளையும்	கை அகற்றி	விலக்கி				
பாவம்	பாவங்களையும்	பல்காலும்	ஸர்வகாலங்களிலும்				

நின்னை	உன்னையே
வழி வாழ்வார் தாம்	வழிப்பட்டு அனுபவிப்பவர்களும்
நாரணன் தன்	நாராயணனுனவு னது
நாமங்கள்	பெயர்களை
நன்கு உணர்ந்து	நன்றாய் தெரிந்து கொண்டு
வழுவு இன்றி	ஓய்வின்றி (எப்(ழுத்
நன்கு ஏத்தும்	நன்றாய் துதிப்ப கே
காரணங்கள் உடையார் தாம்	ஸாதனங்களை அடைந்த அதி களும்
வாழ்வராம்	பேரின்பத்துட வாழப்பெறுவார்
மாதோ அசைச்சொல்	

கீழ்ப்பாட்டில் க்ருஷ்ணனுடைய ஸர்வஜகத்ரக்ஷகத்வத்
பேசினார். இப்பொழுது அவனை ஆச்ரயிப்பவர்கள் தான் ஆத்ம
பத்தை யடைகிறார்கள் என்கிறார்.

பழிபாவம்:— பழி—தானறியாமல் செய்துவைத்துப் பிற
சொல்லப்படுங்கால் தெரியப்படும் பாவம். பாவம் தான் வே
மென்றே தெரிந்து செய்யும் பாவம்.

ஸர்வஜகத் காரணவஸ்துவைத் தியானம் செய்யவே நெரு
விட்ட பஞ்சுபோல் பாவங்கள் நசிக்கின்றனவென்கிற உபநிஷ
தத்தின்படி உபாஸனம் செய்து தான் தெரியாமலும் தெரிந்
செய்துவைத்திருக்கும் பாவங்களையெல்லாம் விலக்கிக்கொள
ஆப்ரயாணாத் என்ற ப்ரஹ்மஸூத்திரத்தின் படிபல்நாலும் தமேவ
வித்வானம்ருத இஹ பவதி நாந்ய: பந்தா அயநாய வித்யதே என
வேதத்திலே சொல்லப்பட்ட உபாஸனமாகிற வழியிலே நின்
கொண்டு, ஸாஸாகம் கர்த்து மவ்யயம் என்றபடி ஸாதகத்தை
லேயே ஸாகமாயிருக்குமதிகாரிகளான பக்தியோகநிஷ்டர்கள் இ
தியில் பரமபதத்தை யடைந்து வானோர் வாழ்ச்சியைப்பெற்று ம
கிறார்கள் என்று முன்னடிகளில் உபாஸகர்களின் பெருமையை
பேசினார்.

வழுவின்றி:— அகிலஹேயப்ரத்யனீகனான நாராயணனுடை
நாமங்களை நாவால் நவின்றேத்தும்படிக்கீடான ஈச்வரனுடை
கடாக்ஷம் பாகவதஸம்பாஷணம் யத்ருச்சாஸாக்ருதம் முதல

காரணங்களைப் பரிபூர்ணமாகப்பெற்ற வதிகாரிகளும் பரமபதமெய்திப் பெருமகிழ்ச்சியடைகிறார்கள் என்றார்.

இத்தால் சரணாகதிக்குத்தாகாலத்தில் ஒரு பிழையும் புகாதபடிக்கும், பலரூபமாக நத்வயவசனத: க்ஷேமகரணம் என்றபடி அவனுடைய திருநாமங்களடங்கிய த்வயம் முதலிய மந்த்ரங்களை சொல்லும்படிக்கும் ஸாதனமான காரணங்களையுடையவர்களான ப்ரபந்நர்கள் வாழ்வார்கள் என்று ப்ரபந்நாதிகாரிகளின் பெருமை பேசப்பட்டது.

வழுவின்றி:— நாரணனுக்கு விசேஷணம். குற்றமற்றவன் எனப்பொருள். அல்லது காரணங்கள் தாமுடையார் என்பதற்கு விசேஷணம். ஓய்வில்லாமல் எப்பொழுதும் (அல்லது குற்றங்களொன்றும் செய்யாதபடி) பகவந்நாமங்களைச் சொல்பவர்கள் என்று பெயர்.

காரணங்கள்:— என்றவிடத்தில் தாரணங்கள் என்றும் பாடமுண்டு. ப்ரபத்தியே மோக்ஷஸாதனம் என்கிற தைர்யங்கொண்டவர்கள்; அல்லது ப்ரபத்தியாகிற உஜ்ஜீவந உபாயத்தையுடையவர்களெனப் பொருள்.

தாமுளரே தம்முள்ள முள்ளுளதே, தாமரையின்
பூவுளதே யேத்தும் பொழுதுண்டே—வாமன்
திருமருவு தாள் மருவு சென்னியரே, செவ்வே
அருநரகம் சேர்வ தரிது. (21)

தாம் உளரே	பெருமானைப் பணிவதற்கேற்ற கர்த்தாவான சேதனர்களும் முன்னமேயே இருக்கின்றார்களே;	தாமரையின் பூ உளதே	(அவனைப் பூஜிப்பதற்கேற்ற) தாமரைப் புஷ்பங்கள் (தடாகங்களில்) இருக்கின்றனவே;
தம் உள்ளம் உள் உளதே	பெருமானை நினைப்பதற்குக் கருவியான மனமும் தம்முள்ளேயே இருக்கின்றதே;	ஏத்தும் பொழுது உண்டே	ஸ்தோத்ரம் செய்வதற்கு காலமும் நிறையவிருக்கின்றதே

வாமன்	சீலகுண பூர்ணனை வாமனனுடைய		(இப்படியிருக்க)
திருமருவு தாள்	அழகுபொருந்திய திருவடிகளை	செவ்வே	நேராக
மருவு	சேருவதற்கேயான	அருநரகம்	க்ரூரமானநர
சென்னியரே	தலையையுடையவர்களாயிருக்கிறார்களே;	சேர்வது	அடைவது
		அரிது	கிடைக்காத ரியபடத்த

கீழில் அவ்வீச்வரனை ஆச்ரயிப்பவர்களை வாழ்கிறார்க
ளார். அவனை ஆச்ரயிக்கவேண்டிய ஸாதனங்கள் ஒன்றும்
மில்லையே; எப்படி நாம் அவனை அடைவது என்று சிலர்
அதற்குப் பதிலளிக்கிறார் இதில்.

தாளரே:— அவனை ஆராதிக்கும் கர்த்தாவான இவ
இனிமேல் ஸ்ருஷ்டிக்கப்படப்போகிறானோ? ஏற்கனவேயே
டிக்கப்பட்டுத் திரிகிறானே; ஆதலால் ஆச்ரயிக்குமவனான
ஸித்தமாயிருக்கிறான். அவனை நினைப்பதற்குக் கருவியான உ
எனப்படும் மனமும் இனிமேல் உண்டாக்கப்படவேணுமா
லது மனத்தை ஊர் ஊராய்ச்சென்று தேடிப்பிடித்துக் கொ
வேண்டுமா? மனம் ஏற்கனவே உண்டாக்கப்பட்டு நம்முடம்
ளேயே இருக்கிறது. அவனைப் பூஜிப்பதற்குப் புஷ்பங்களா
யாது? குளங்கள்தோறும் தாமரைப் புஷ்பங்கள் ஸுலபமாய்
கின்றன. உயரமான மரங்களிலேறிப் பறிக்கவேண்டிய கஷ்
கிடையாது. முழங்காலளவு ஜலத்தில் நின்றால் அகப்படும் பு
கள் எண்ணற்றன. இவைகளைத் தூவிருந்தும் போதில்லையே
னைப்பூஜிப்பதற்கென்று வருந்தவேண்டுமா? நித்யமாகக் கால
முடிவின்றி நடக்கும்படியும் அவன் ஸங்கல்பித்திருக்கிறான்.
வம் அவனது அழகு மிகுந்த திருவடிகளை அணியாகக் கொள்
குத் தலையும் முன்னமே அமைக்கப்பட்டிருக்கிறது. அவன்
வடிகளை தலையில் வைத்துக்கொண்டால் என்பேரில் இத்திருவடி
வைக்காதே யென்று தலைதடுக்கவில்லை. நமக்கு உட்பட்டதா
யிருக்கிறது. இப்படி ஒன்றும் குறைவில்லாதபடி ஸாதனங்
யடைந்திருக்குங்கால் ஒருவருக்கும் நரகத்தை நோக்ச் சென்
வது எனக்கு அரிது என்றே தோன்றுகிறது. நரகத்தையவ

நேரானவழிகிடையாது. நரகத்திற்குச் செல்வது அபூர்வமென்கிறார். நன்றாய் ஆலோசித்தால் பூர்வமேவ க்ருதாப்ரஹ்மந் ஹஸ்தபாதாதி ஸம்யுதா | விசித்ராதேஹஸம்பத்தி ரீச்வராய நிவேதிதும் என்றபடி அவனை ஆராதிப்பதற்கென்றே இவ்வுடம்பு படைக்கப்பட்டிருக்கிறது. என்று உணரலாம். இங்ஙனமிருக்க மனிதர்கள் எப்படி நரகத்தையடைய முடியும் என்று ஆழ்வார் ஆச்சரியமடைகிறார். பொய்கையாழ்வார் அருளிய நாவாயிலுண்டே என்கிற பாசுரத்திலும் இவ்வர்த்தத்தைக் காணலாம்.

அவனை ஆச்ரயிப்பதற்கான ஸாதனங்களை தேடிப்போய் ஸம்பாதிக்காதவண்ணம் நம்மிடம் முன்னமேயே ஸர்வேச்வரனால் படைக்கப்பட்டிருப்பதால் அவைகளைக்கொண்டு அவனை வணங்கி வழிபட்டு க்ஷேமத்தை யடையலாமென்று உபதேசித்தபடி. கீழ்ச்சொல்லிய பரிகரங்களைக்கொண்டும் சேதனர்கள் நரகத்தைச் செல்கிறார்களே என்று ஆழ்வாரது வருத்தமும் இங்கு தெரியவருகிறது.

"செவ்வே" என்பதால் ஜனங்கள் வேணுமென்றே கோணலான வழியில் நடந்து கெட்டுப்போகிறார்கள் என்பது தோன்றும்.

அரிய தெளிதாகு மாற்றலால் மாற்றி
பெருக முயல்வாரைப் பெற்றால்—கரியதோர்
வெண் கோட்டு மால்யானை வென்று முடித்தன்றே
தண் கோட்டு மாமலரால் தாழ்ந்து. (22)

ஆற்றலால்	அவனது சக்தியால்	அரியது	கிடைக்காத பொருள்களெல்லாம்
மாற்றி	தன் முயற்சிகளையெல்லாம் விலக்கி	எளிது ஆகும்	லகுவாய்க் கிடைக்கும்
பெருக முயல்வாரை	தம் விஷயத்தில் மிகவும் முயற்சிசெய்யும் ஸர்வேச்வரனாகிற மஹாபுருஷனை	கரியது	கருநிறமுள்ளதாயும்
		வெண்கோடு	வெளுப்பு நிறமுள்ள தந்தங்களையுடையதும்
பெற்றால்	உபாயமாகக் கிடைக்கப்பெற்றால்		

ஓர்	லோகவிலக்ஷணமுமான	தாழ்ந்து அன்றே	எம்பெருமா வடிகளை வ யல்லவா
மால்யானை	பெரிய யானை		
தண்	குளிர்ந்த	வென்றி முடித்து	ஜயத்தை ய தன் இஷ் நிறைவேற்றி. ண்டது.
கோடு	ஜலக்கரையில்		
மாமலரால்	உயர்ந்த புஷ்பங்களால்		

கீழே எம்பெருமானை ஆராதிப்பதற்குத் தகுந்த ஸாதன முன்னமே படைக்கப்பட்டிருக்கின்றனவென்று சொல்லி ட்டில் தன்னிடமுள்ள ஸாதனங்களையும்கூட நினைக்காமல் யே உபாயமாகக் கருதினால் உய்வதற்கு வழியுண்டென்கிறார்.

அரிய தெளிதாகும்:— உலகத்தில் ஒருவருக்கும் கிடை பொருள் பகவத் ப்ராப்தியும் அதற்குபாயமான பகவத் பஜ மாகிய விரண்டுதான். இவ்விரண்டும்தான் நம்மால் ஸம்பாதி படவேண்டியவைகள். இவைகள்தான் அடைய முடியாத இவைகளும் எம்பெருமானையே உபாயமாகக் கருதினால் ந ஸுலபமாய்விடும். நாம், அவ்வீச்வரன் ஸர்வசக்தனென்றும் ன் நினைத்தால் நம்மை வானத்தணியமரர் ஆக்குவிக்குமென் சன்மசன்மாந் தரங்காத்து அடியார்களைக் கொண்டுபோய், தன் பெறுத்தித் தன்தாளிணைக்கீழ் கொள்ளுமப்பன் என்றபடி நாம் ஜீவிக்கவேண்டி அவன் படாதன பாடுபடுகிறானென்றும் நினை நம்முடைய முயற்சியால் நாம் கரையேறுவோமென்கிற நினை மாற்றி நம் ப்ரயத்னத்தைவிட்டு அவனை உபாயம் எ கொண்டால், அவன் அரியபெரும் பொருள்களையெல்லாம் நமக் கொடுக்கிறான். நமக்கு பகவத் பஜனமும் பகவல்லாபமும் கூடுமென்றபடி. இதற்கு ஒரு உதாஹரணம் காட்டுகிறார் பின் களால்.

உலகிலுள்ள யானைகளைப்போலிராது பகவத் விஷயத்தில் யுள்ள கஜேந்திராழ்வான் முதலையின் வாயிலகப்பட்டு, தன்னுடை பலத்தால் கரையேற முயன்றும் பயன்படாமல் ஆதிமூலமே என்றவனையழைத்து அவனும் மடுக்கரையிலே எருந்தருள, நன்று மலர்ந்து அழகான தாமரைப்பூவால் அர்ச்சனைசெய்து அவன

திருவடிகளையே உபாயமாகக் கொண்டல்லவா தன் வினையை தீர்த்துக்கொண்டது. கருத்த நிறமும் வெளுத்த பற்களையுமுடைய அவ் யானையும் தன் சக்தியால் அம்முதலையோடு சண்டை செய்யுமளவும் அவ்வீசன் எழுந்தருளவில்லை. இங்ஙனம் துர்யோதனன் சபை நடுவே த்ரௌபதியைப் பரிபவம் செய்யவே, த்ரௌபதி தனக்குப் பலமாக நினைத்தவையெல்லாம் பயன் படாது போகவும் த்வாரகாவாஸியான கண்ணனைச் சரணமாகக் கருதியன்றோ தன்னை ரக்ஷித்துக்கொண்டாள். ஆதலால் நம்முடைய பிரயத்னத்தை விட்டு அவனையே உபாயமாகக்கொண்டால் கூடாத பொருளெல்லாம் கூடுமென்றபடி.

ஆற்றலால் மாற்றி:—ஸர்வேச்வரன் ஸர்வசக்தனுதலால் நம் முயற்சியை மாற்றி என்று பொருள்.

பெருக முயல்வார்:—"கழியாத கருவினையில் படிந்த நம்மைக் காலமிது வென்றொருகால் காவல் செய்து, பழியாத நல்வினையில் படிந்தார் தாளில் பணிவித்துப் பாசங்களடைய நீக்கி,சுழியாத செவ்வழியில் துணைவரோடே தொலையாத பேரின்பந்தலை மேலேற்றி, அழியாதவருளாழிப்பெருமாள் செய்யு மந்தமிலா வுதவியெல்லாமளிப்பாரரோ." என்ற நம் தேசிகன் அருளிச் செயலின்படி நம் விஷயத்தில் பெரும்பாடுபடுகிற மஹாபுருஷனை ஸ்ரீய: பதியைப் பெற்றால் அரிய தெளிதாகும் என்கிறார்.

தண் கோட்டு:—குளிர்ந்ததான மடுவின்கரையில் எனப் பொருள். மாமலரால் தாழ்ந்து:—உயர்ந்ததோர் தாமரை மலரை துதிக்கையில் கொண்டு வணங்கி என்பது. தண் கோட்டு என்ற விடத்தில் தண் தோட்டு என்றும் பாடமுண்டு. மலருக்கு விசேஷணமாகும் சீதளமான இதழ்களையுடைய தாமரை மலர் எனப் பொருள்.

தாழ்ந்து வரங்கொண்டு தக்க வகைகளால்
வாழ்ந்து கழிவாரை வாழ்விக்கும்—தாழ்ந்த
விளங்கனிக்குக் கன்றெறிந்து வேற்றுருவாய், ஞாலம்
அளந்தடிக்கீழ்க் கொண்ட வவன். (23)

தாழ்ந்த	பழங்களின் கனத்தால் வணங்கியிருந்த	அவன்	அந்த பரமபுரு
விளா	விளாமரத்தின்	தாழ்ந்து	தன்னை வணங்
கனிக்கு	பழத்தை உதிர்ப்பதற்கென்று	வரம் கொண்டு	தன் அருளைப் றுக்கொ
கன்று எறிந்து	வத்ஸாஸுரனை வீசியெறிந்து	தக்க வகைகளால்	தங்களுக்குத்த ப்ரகாரங்க
வேறு உரு ஆய்	வேறான வாமன வடிவத்துடனாகி	வாழ்ந்து	இஷ்டத்தைப் பெ
ஞாலம் அளந்து	பூமியை அளந்து	கழிவாரை	மேன்மேலும் கத்தை அதிகம செய்துகொள்ள விரும்புமதிகா
அடி கீழ்	தன் திருவடியின் கீழ்		
கொண்ட	ஸ்வீகரித்த	வாழ்விக்கும்	உஜ்ஜீவிக்கும்ப செய்வ

தன்னையே சரணமடைபவர்களுக்குப் பிரதிபந்தகங்களை போக்கி இஷ்டங்களையும் கொடுத்தருள்பவன் ஸர்வேச்வரன்; எ ருர் இப்பாட்டில்.

தாழ்ந்து:—ஸ்ரீய: பதியான புருஷோத்தமனுடைய அ ஹத்தை யடைந்து சாஸ்திரங்களில் சொல்லியபடி அவனை ஸே பது, அவன் திருநாமங்களைச் சொல்லுவது, புஷ்பங்களால் அ சனை செய்வது, முதலிய ப்ரகாரங்களால் அத்திருமாலையே வண வழிபட்டு, இவ்வண்ணமே போது போக்குகிறவர்களை ஸர்வே வரன் ஸர்வப்ராகாரத்தாலும் ரக்ஷித்து உஜ்ஜீவிக்கும்படி செய்வ அவ்வாச்ரிதனுக்கு விரோதிகள் யாராவதுண்டாகில் அவர்களும் ணனிடம் அகப்பட்ட வத்ஸாஸுரன் கபித்தாஸுரன் முதலிய கள் பட்டபாடு படுவார்கள்.

வேற்றுருவாய் மலர்மகள் கேள்வனான தன் திவ்யமங் விக்ரஹத்தைவிட்டு உலகில் யாசகத்திற்குச் செல்லும் பிரா மணனைப்போல் ப்ரஹ்மசாரி வேடம்பூண்டான் என்பது இத்தால் பரமபுருஷன் தன்னையழிய மாறியும் காக்குமியல்பின என்பது சொல்லப்படுகிறது. வேற்றுருவாய் சிறிய வடிவைக்காட

யாசித்துப் பிறகு பெரிய வடிவைக்கொண்டு அளந்தானெனப் பொருள் சொல்லுவதுமுண்டு.

அவன் கண்டாய் நன்னெஞ்சே யாரருளும் கேடும்
அவன் கண்டாயைம்புலனாய் நின்றான்—அவன் கண்டாய்
காற்றுத் தீ நீர்வான் கருவரை மண் காரோதச்
சீற்றத் தீயாவானும் சென்று. (24)

நல் நெஞ்சே	(எனது) நல்ல மனமே!
ஆர் அருளும்	பரிபூர்ணமான கிருபையினால் அடையத்தகும் புருஷார்த்தமான மோக்ஷமும்
கேடும்	ஸம்ஸாரமும்
அவன் கண்டாய்	அந்த ஸர்வேச்வரனேயாவன்
ஐம்புலன் ஆய் நின்றான்	ஐந்து இந்த்ரியங்களாக நிற்கிறவனும்
அவன் கண்டாய்	அத்திருமாலேயாவன்
காற்று	வாயுவும்
தீ	நெருப்பும்
நீர்	ஜலமும்
வான்	ஆகாசமும்
கருவரை	பெரியமலைகளும்
மண்	பூமியும்
கார் ஓதம் சீற்றம் தீ ஆவானும்	கறுத்த ஸமுத்திரத்தைக் கோபித்துக் கொண்டு விழுங்க வல்ல படபாக்நியும் (ஆக இவையனைத்துக்கும் நிர்வாஹகன்)
அவன் கண்டாய்	அந்த பரமபுருஷனேயாவன்
ஆதலால்	
சென்று	அவனைக்கிட்டி ஆச்ரயிப்பாயாக.

கீழே ஆச்ரிதர்களை ரக்ஷித்தருள்பவன் திருமால் என்றார். இப் பாட்டில் அதை நன்றாய் விவரித்துக் காட்டுகிறார்.

அவன் கண்டாய்:—போக மோக்ஷங்களை அநுபவிப்பதற்குத் திறமையின்றி அசேதனமான கல் மண் முதலிய பொருள்களைப் போல் அறிவழிந்து கிடக்கும் ஜீவன்களுக்கு ஞானத்திற்கு ஸாதனமான இந்திரியங்களோடு கூடிய பஞ்சபூதமயமான சரீரத்தைக் கொடுத்து போகங்களை அநுபவிக்கும்படி உபகரிப்பவனும் அந்த பரமபுருஷனே. இப்பிரபஞ்சத்தை விழுங்கும் திறமையுள்ள ஸமுத்

திரத்தின் ஜலத்தை எப்பொழுதும் குடித்துக்கொண்டிருக்கும் பாக்நி எனப்படும் தீயும் அவ்வெம்பெருமானேயாவன். அத படபாக்நிஸ்வரூபமாயிருந்துகொண்டு ஸமுத்திர ஜலத்தை சா டுக்கொண்டு பூமியை கடல் விழுங்காத வண்ணம் காக்கிருன் பொருள். இப்படிக் காப்பதுமன்றி பரமபுருஷார்த்தமான மே மும் அவன் கையதேயாகும். அவன் காலைக் கட்டிக்கொ லது இந்த ஸம்ஸார பந்தத்தை அறுக்கமுடியாது. அவனது கிருபையாலே அடையப்படும் மோக்ஷத்திற்கும் நிர்வாஹ அவனேயாகும் என்று அவன் செய்யும் உபகாரங்களைப் பே

சென்ற திலங்கைமேல் செவ்வே தன் சீற்றத்தால்
கொன்ற திராவணனைக் கூறுங்கால்— நின்றதுவும்
வேயோங்கு தண்சாரல் வேங்கடமே, விண்ணவர்
வாயோங்கு தொல் புகழான் வந்து. (

விண்ணவர் தம்	நித்யஸூரிகளுடைய	தன் சீற்றத் தால்	தனது கோப
வாய் ஓங்கு	முகங்களில் ஓங்கி நிற்கிற (வாயினுல் துதிக்கப்படுகிற)	கொன்றது	கொலைசெய்த
தொல் புகழான்	பழமையான கீர்த்தியையுடைய பெருமான்	இராவணனை	இராவணன் எ ற அரக்க
வந்து	(இந்நிலத்தில்) அவதரித்து	கூறும் கால்	பேசப்புகுந்தா
செவ்வே	நேராக	நின்றதுவும்	நின்றுகொண்ட ப்பது
சென்றது	நடந்தது	வேய் ஓங்கு	மூங்கில்கள் உ து வளர்ந்திருக்
இலங்கை மேல்	இலங்கா நகரத்தைக்குறித்து.	தண் சாரல்	குளிர்ந்ததான கங்களையுடை
		வேங்கடமே	திருவேங்கடமலையா

உலகங்களை உத்பத்தி செய்துவிடுவது மாத்திரமே தானும் நடுவே வந்து பெரும் காரியம் செய்து ரக்ஷிக்கிறு ன்பது இதில் சொல்லப்படுகிறது.

சென்றது:— எம்பெருமான் தன் ஸங்கல்ப மாத்திரத்தாலேயே விரோதிகளை வெல்லும் திறமை வாய்ந்தவனாயிருக்கப் பூமியின்கண் பல அவதாரங்கள் செய்து துன்பப்படுவதெல்லாம் தன்னையே உபாயமாகக்கொண்ட ஸாதுக்களுக்காகவே. பரமபதத்திலிருந்தே இராவணன் முதலிய அரக்கர்களை முடித்துவிடலாம். தன்னை ஆராதிக்கிற முனிவர்களுக்குத் தன் திருமேனியைக்காட்டி அவர்களுகக்கும்படிக்கன்றோ அவன் அவதாரம் செய்வது; ஆதலால் அவன் தன் உடம்பைக்கொண்டு பாடுபட்டுக் காரியம் செய்தாலன்றித் திருப்தி பெறாமல் பல ரூபங்களை எடுத்துக்கொண்டு பூமியில் வந்து ஸாதுக்களெல்லாரும் கூசி நடுங்கும்படி காரியங்கள் செய்கிறான். இப்படிச் செய்தாலன்றி ரக்ஷணை ஸ்வபாவனான புருஷோத்தமன் ஸமாதானம் பெறுவதில்லை என்று அவனைக் கொண்டாடுகிறார்.

எம்பெருமான் இராமனாய்ப்பிறந்து இலங்கையை நோக்கிச் சென்றான். மிகுந்த சினத்தை ஏற்றுக்கொண்டு இராவணனைக் கொன்றான். இராவணனைக் கொல்வதற்காக அவதாரம் செய்ய வேணுமோ? ஸ்ரீ வைகுண்டத்திலிருந்தபடி செய்ய வல்லவனன்றோ? அவதாரம் செய்தாலும் திருஅயோத்தியிலிருந்தபடியே அவனை முடிக்கலாகாதோ? ஸர்வேச்வரனாயிருந்தாவைத்து சக்ரவர்த்தி குலத்திலும் பிறந்துகால்நடையாகக் கானகத்தில் லங்கையை நோக்கி நடந்து செல்லவேணுமோ? லங்கையை அடைந்தும் ஸங்கல்பத்தாலே அவனை அழிக்கவல்லனாயிருக்கக் கோபத்தை ஏற்றுக்கொண்டு போர்புரிந்துதான் அவனைக் கொல்லவேணுமோ? ஆதலில் அவன் இங்ஙனம் செய்தருளியது பரம பாகவதர்களான ரிஷிகளுக்குத் தன் திருமேனியைக் காட்டி உய்வித்து அவர்களிடம் உள்ளவன்பினால் தன் திருமேனியின் மென்மையையும் மறந்து பாடுபட்டான் என்கிற மஹாகுணத்தைக் காட்டுகிறதென்று ஆழ்வார் பரவசமாகிறார்.

இப்படி அவதாரம் செய்ததுமன்றி அக்காலத்தில் ஸேவிக்கப்பெறாத பின்னானோர்களான நாமும் வணங்கும்படி திருவேங்கடமலையில் கோயில் கொண்டிருக்கிறான். அர்ச்சகபராதீன அகிலாத்ம

ஸ்திதி: என்றபடி அர்ச்சையாய் நிற்கிற நீர்மையையும் ஆருள
குங்கால் ஜகத்ரக்ஷண ப்ரகாரம் மற்றொருவனிடம் காணமுடி
படியாயிருக்கிறது என்கிறார். விபவ அர்ச்சாதி ரூபமாய் நி
உலகைக் காப்பாற்றுவது இப்பாட்டில் பேசப்பட்டது.

“விண்ணவர்தம் வாயோங்கு தொல்புகழான்” நித்யஸ
ளால் வாயார வாழ்த்தப்பட்டவன் எனப்பொருள், திருமலை
விண்ணோர் வெற்பு என்று மற்றையவர்களும் போற்றியிருப்
கிணங்க திருமலை யெம்பெருமானை எப்பொழுதும் நித்யஸூ
துதிக்கிறார்கள் எனக்கொள்ளலாம். அல்லது கீழே இராவண
ப்ரஸ்துதமானபடியால் இராவணவதத்திற்குப் பிறகு ப்ரஹ்
தேவர்கள் இராகவனைத் துதி செய்தார்கள் என்பதைப் பே
என்றும் கொள்ளலாம்.

வந்தித் தவனை வழிநின்ற வைம்பூதம்
ஐந்து மகத்தடக்கி யார்வமாய்— உந்திப்
படியமரர் வேலையான் பண்டமரர்க்கீந்த
படியமரர் வாழும் பதி. (

வழி	நல்ல மார்க்கத்திலே	அமரர் வேலையான்	தேவர்களுக்கா... பாற்கடலில் ப... கொண்ட பெ...
நின்ற	இடையூறாக நின்ற		
ஐம்பூதம்	ப்ருதிவீ முதலிய பஞ்சபூதங்களையும்		
ஐந்தும்	ஐந்துபுலன்களையும்	பண்டு	முன்பு
அகத்து	சரீரத்திற்குள்ளேயே	அமரர்க்கு	நித்யஸூரிகளு...
அடக்கி	அடக்கிவைத்து	ஈந்த	கொடுத்தது
ஆர்வம் ஆய்	பக்தியுடையவராய்க் கொண்டு	படி	இப்பூமியிலுள்ள...
அவனை	அப்பெருமானை	அமரர்வாழும்	தேவர்களோடொ... த்த ஸ்ரீவைஷ்ணவ... ர்கள் வாஸம் ...
வந்தித்து	சேவித்து		
உந்தி	முன்னமேயே வந்து		
படி	ஆச்ரயிக்கும்படி	பதி	திருமலை என்... திருப்பதிய...

முதலாழ்வார்களுக்கு திவ்யதேசங்கள் பலவற்றுள் திருமலையிலேயே விசேஷமான அபிநிவேசம் மிகுந்து நிற்குமென்று பாசுரங்களாலேயே தெரியவரும். ஆகலில் கீழ்ப்பாட்டில் திருவேங்கடம் நினைக்கப்படவே அத்திருப்பதியை இப்பாட்டிலும் அநுபவிக்கிறார்.

வந்தித்து:— பிரமன் இந்திரன் முதலிய தேவர்கள், பகவானை ஆராதிப்பதற்குத்தடையான சிற்றின்பங்களில் ஆழ்ந்துகிடக்கும் புலன்களைந்தையும், அங்ஙனமே பகவனை அநுபவிப்பதற்கு இடையுறாகவிருக்கும் பஞ்சபூதங்களையும் அறிவு, விரக்தி அப்யாஸம் முதலியவைகளால் அடக்கி, மிகுந்த பக்தியுடன் நான் முன்னே நான் முன்னே என்று ஓடிவந்து வணங்கி வழிபடுகிறார்கள் திருப்பாற்கடலில் கண்வளர்ந்த பரமபுருஷனை. இப்படி இந்திரிய ஜயம்செய்த தேவர்களால் வணங்கப்பட்ட திருப்பாற்கடல் நாதன் அநாதியான தேவர்களான நித்யஸூரிகளுக்கு, பூமியிலுள்ள தேவர்களெனப்படும் ஸ்ரீவைஷ்ணவர்கள் வணங்கி வாழும் திருமலையை பரிசாகக் கொடுத்தான் என்றநுபவித்தார். பூமியிலுள்ள தேவர்களானஸ்ரீவைஷ்ணவர்கள் உகந்து வாஸம் செய்யும் பதியான திருமலையை ஸர்வேச்வரன் நித்யஸூரிகளுக்குக் கொடுத்தாரென்பதற்குப் பொருள்யாதெனில், நித்யஸூரிகளும் மண்ணுலகம் வந்து திருவேங்கடத்தெம்பெருமானைக் கண்டுகளித்துக் கைங்கர்யம் செய்கிறார்களெனக் கொள்க.

இப்பூமியிலுள்ளவர்களுக்குப் பரத்வம் பரவிநிற்கும் பரமபதநாதனைக் கேட்டறிவதைத் தவிரப்பார்ப்பது எப்படி அரிதோ; அப்படியே பரமபதத்தில் வாழும் நித்ய ஸூரிகளும் நீர்மை நிறைந்திருக்கும் பகவத் விக்ரஹத்தைக் கேட்டறிவதைத்தவிர பார்த்தறியார்களாதலால் நீர்மைக்கு எல்லை நிலமாக திர்யக் ஜாதிகளும் அநுபவிக்கும்படி நிற்கும் திருமலையெம்பெருமானை ஸேவித்து நிற்கிறார்களென்பது திரண்டபொருள்.

பதியமைந்து நாடிப் பருத்தெழுந்த சிந்தை
மதி புரிந்து வான்முகடு நோக்கி — கதிமிகுத்தங்
கோல் தேடியோடும் கொழுந்ததே போன்றதே
மால் தேடி யோடும் மனம். (27)

பதி	திருமலையில்	நோக்கி	பார்த்து
அமைந்து	பொருந்தியிருந்து	மால் தேடி ஓடும்	பரமபதநாத தேடிச்செல்
நாடி	பரமபுருஷனை ஆசைப்பட்டு	மனம்	மனமானது
பருத்து	அவ்வீச்வரனை வ்யாபித்து	கதி மிகுத்து	மிகுந்த நடை கூடியதாய்க்
எழுந்த	கிளம்பியிருக்கிற	அம் கோல்	அழகுள்ள கே
சிந்தை	மனோபீஷ்டத்தையுடையதாயும்	தேடி ஓடும்	தேடிப்போகி
மதி உரிஞ்சி	சந்திரனை ஸ்பர்சித்து	கொழுந்துஅது போன்றதே	கொடிபோல
வான் முகடு	ஆகாசத்தின் உச்சியை (அண்டபித்தியை		

கீழ்ப்பாட்டில் திருமலை யெம்பெருமானைப் பேசினெ
உடனே அப்பெருமானுடன் கலந்து பரிமாறவேணுமென்று நி
தார். அர்ச்சாவதாரமாகையாலே அது கிடைக்கப் பெறுமல்
வெம்பெருமானுக்கும் மூலகந்தமான பரமபதநாதனுடனேயே
ஸர்வப்ரகாரத்தாலும் கலந்து பரிமாறவேணுமென்று அவர் ப
பாரித்தது. அப்பொழுது தன்மனம் இருந்தவிதத்தை இப்
டில் சொல்லுகிறார்.

பதியமைந்து:— என் மனமானது திருமலையில் பொ
யிருந்து அவ்வெம்பெருமானை அநுபவித்தபின் அவனிடம் த
நினைத்தபடியெல்லாம் பரிமாற்றங்களையடைய வேண்டி அது கி
க்கப்பெறுமல் அதற்குமேல் ஆசை அதிகமாகி ஆகாசத்தை நே
ச்சென்று சந்திரமண்டலத்தைத் தழுவிப்போய் அண்டபித்தி
யும் கடந்து சென்று பரமபதத்தில் வாழும் பரந்தாமனை நாடிச்
று பரிமாறப் பாரிக்கிறது. இப்படி என்மனம் மேல்மேலும்
ர்ந்து பரந்துசெல்கிற சிந்தையுடன் பரவிச் செல்கிறது. பூமி
முளைத்த கொடியானது தனது கொள் கொம்பைப் பிடித்
கொண்டு தனது மார்க்கத்தையே நோக்கி மேலே செல்வதுபே
என் மனமும் மேல்நோக்கிச் செல்கிறது என்கிறார். தன் ம

மேலே செல்வதற்கு, ஒருகொடியை உதாஹரணமாகச் சொன்னார். இதனால் எல்லாரும் பரமபுருஷனை மேல்மேலும் அநுபவிக்க ஆசைப்படவேண்டுமென்பது உபதேசிக்கப்பட்டது.

மனத்துள்ளான் வேங்கடத்தான் மாகடலான், மற்றும்
நினைப்பரிய நீளரங்கத்துள்ளான் — எனைப்பலரும்
தேவாதி தேவனெனப் படுவான், முன்னொருநாள்
மாவாய்ப் பிளந்த மகன். (28)

எனை பலரும்	எவ்வகைப் பெருமையுள்ள பெரியோர் பலராலும்	மற்றும்	அதற்குமேலே
தேவாதி தேவன்	தேவர்களுக்கும் முழுமுதல் கடவுள்	நினைப்பு அரிய	நினைவிற்கு மகப்படாதபெருமையுள்ள
எனப் படுவான்	என்று சொல்லப் படுகிறவனும்	நீள் அரங் கத்துஉள் ளான்	விசாலமான ஸ்ரீரங்கத்தில் வாஸம் செய்பவனும்
மாகடலான்	க்ஷீர ஸமுத்ரத்தில் பள்ளிகொண்டவனும்	வேங்கடத் தான்	திருவேங்கடத்தில் நித்யவாஸம் செய்பவனுமான ஸர்வேச்வரன்
முன் ஒரு நாள்	முன்பு த்வாபர யுகத்தில்	மனத்து உள்ளான்	என்னுடைய நெஞ்சில் வாஸம் செய்கிறான்.
மாவாய் பிளந்தமகன்	குதிரைவடிவமாய் வந்த கேசியின் வாயைப் பிளந்த மைந்தனும்		

கீழே பரமபதநாதனை அநுபவிக்கத் தன்மனம் பாரிக்கிறதென்றார். இவர் அப்படி ஆசைப்படவே அவ்வெம்பெருமானும் ஆழ்வாருடைய மனத்திலே வந்து புகுந்தார். அப்படித் தன் பக்கலில் ஆசைகொண்ட பெருமானைப் புகழ்ந்துபேசுகிறாரிதில்.

மனத்துள்ளான்:— தேவர்களுக்கெல்லாம் முழுமுதல் தேவனெனப்படும் பரமபதநாதன் தேவர்களுடைய குறைகளைக் கேட்டுத்தீர்க்கவேண்டி அவர்களுக்கே திருப்பாற்கடலில் சாய்ந்தருளினான். அவனே பின்பொருகால் கிருஷ்ணனாய்ப் பிறந்து கேசிமுதலிய அஸுரர்களைக் கொன்று ஜகத்ரக்ஷணம் செய்தான். அவ்வீச்

வான் அவ்வவதாரத்தாலும் திருப்தி பெறுமல் பின்னுேர் உ
கும்படியாக திருவரங்கத்திலே நித்யவாஸம் செய்கிறுன். அ
வரங்கத்தின் பெருமையை ஆராயப்புக்கால் தேவர்கள் முதலாக
வருக்கும் அறிவிற்கெட்டாதபடியிருக்கும். அப்படிப் பெ
வாய்ந்த திருவரங்கத்தில் வஸிக்கிறுன். மற்றும் திருவேங்க
ன்னும் திருமலையிலும் வாஸம் செய்கிறுன். இப்படிப் பரமபே
மான நிலங்களில் இருந்துவைத்தும் நான் அவனை அனுப
ஆசைப்படவே என் மனத்திலே இப்பொழுது வந்து வஸிக்கி
இது என்ன ஆச்சரியம்! அவனை நான் ஆசைப்படவே அ
என்னைவேண்டி வருகிறுன் என்று அவனது ஆச்ரிதவ்யாமே
ஹத்தைப் புகழ்ந்து பேசினுர். ஔதந்வதே மஹதி ஸத்மநி
மானே ச்லாக்யேச திவ்ய ஸதநே தமஸ: பரஸ்மின் | அந்த:
பரமிதம் ஸூக்ஷ்மம் ஜாதம் கரீச கத மாதர
பதம் தே என்ற தேசிகன் திவ்யஸூக்தியும் இங்கு அனுஸ
கத்தகும்.

மகனுகக் கொண்டெடுத்தாள் மாண்பாய கொங்கை
அகனுர வுண்பனென் றுண்டு — மகனைத்தாய்
தேறுத வண்ணம் திருத்திஞய், தென்னிலங்கை
நீருக வெய் தழித்தாய் நீ.

நீ	ஸர்வேச்வரனுகிய நீ	மாண்பு ஆய	அழகான
தென் இலங்கை	அழகான லங்கா நகரத்தை	கொங்கை	முலையை
நீறு ஆக	சாம்பலாகும்படி	அகன் ஆர	வயிறு நிறையுட வன
எய்து அழித்தாய்	அம்புகளாலடித்து நாசம் செய்தாய்	உண்பன் என்று	சாப்பிடுவேனென் செ
மகன் ஆக கொண்டு	உன்னை பிள்ளையென்று ஸ்நேகம் வைத்து	உண்டு	சாப்பிட்டு
எடுத்தாள்	எடுத்துக்கொண்ட பூதனையினுடைய	மகனை	புத்ரனுனவனை
		தாய்	தாயாகிய யசோதைப் பிர
		தேறுத வண்ணம்	நம்பமுடியாதப
		திருத்திஞய்	சிக்ஷித்தாய்.

மாவாய் பிளந்தமகன்:— என்று கீழ்ப்பாட்டில் கிருஷ்ணாவதாரத்தை நினைக்கவே அவ்வவதாரத்தைவிட மனமில்லாமல் இப்பாட்டிலும் மீண்டும் அதைப் பேசுகிறார்.

மகனாக:— இராவணனது நகரமான லங்கையை பாணங்களால் அடித்துச் சாம்பலாகச் செய்த பெருமானே! நீ கண்ணனுகிற குழந்தையாயிருக்கும்பொழுது பூதனை யென்பாளொருபேய் தாய் குழந்தையை எடுப்பதுபோல் மிக்கபரிவுடன் உன்னை எடுத்துக்கொண்டு பாலுக்கு பதிலாக விஷத்தைக் கலந்துவைத்தழகாயிருந்த முலையைக் கொடுக்கவே நீயும் ஆவலுடன் என் வயிறுநிறையும் வரையில் சாப்பிடுவேனென்று சொல்லி முலைவழியே அவளுயிரையுண்டாய். அது முதல் யசோதைப்பிராட்டிக்கு உன்னிடம் நம்பிக்கையில்லை. அதுவரையில் உன்னைக் குழந்தையாகவே நினைத்தாள். பேய்ச்சி முலையுண்டபின்னை இப்பிள்ளையைப் பேசுவதஞ்சுவனே என்றபடி அவளும் நாம் முலை கொடுத்தால் நம்மையும் என் செய்வனோ என்றஞ்சினாள். இராமாவதாரத்திலோ இப்படி குழந்தைப் பருவத்திலேயே காரியம் செய்ததில்லை. வயதான பின்பல்லவோ ஆயுதங்களை யெடுத்து யுத்தம்செய்து விரோதிகளை வென்றாய். கிருஷ்ணாவதாரத்தில் குழந்தையாயிருக்கும்பொழுது அரும் பெரும் செயல்களைச் செய்து ஆச்ரிதர்கள் அஞ்சும்படிசெய்கிறாயே; இது என்ன லீலை என்று கண்ணனது சரித்திரத்தில் கால்தாழ்ந்தார்.

நீயன்றுலகளந்தாய் நீண்ட திருமாலே
நீ யன்றுலகிடந்தாய் என்பரால் — நீயன்று
காரோத முன்கடைந்து பின்னடைத்தாய் மாகடலை
பேரோத மேனிப் பிரான். (30)

பேர் ஓதம் மேனி	பெரிய கடல்போன்ற திருமேனியையுடையவனும்	நீண்ட திருமாலே	த்ரிவிக்ரமாவதாரம் செய்தச்ரிய; பதியே!
பிரான்	பரமோபகாரகனுமாயிருக்கிற	நீ	தேவரீர்
		அன்று	அக்காலத்தில்

உலகு அளந்தாய்	உலகங்களை அளந்தீர்	கார் ஓதம்	கறுத்த கடலை
அன்று	ஹிரண்யாக்ஷன் பூமியை ஒளித்துவைத்தகாலத்தில்	முன் கடைந்து	முன்னின்று
நீ	தேவரீர்	பின்	இராமாவதார
உலகு இடந்தாய்	பூமியை உயரே தூக்கிவந்தீர்	மா கடலை	பெரிய ஸமுத்
அன்று	தேவர்கள் துர்வாஸமுனிவரது சாபத்தால் ஐச்வர்யத்தை யிழந்தகாலத்தில்	அடைத்தாய்	அணைகட்டி
நீ	தேவரீர்	என்பர்	என்று பெரி கள் சொல்லு
		ஆல்	ஆச்சரியம்.

திருமாலது திவ்ய சேஷ்டிதங்கள் சிலவற்றைப்பேசி மகி யடைகிறாரிதில்.

நீயன்று:—கடல்போன்ற நிறத்துடன்கூடின திருமேனி யுடைய பரமோபகாரகனான பெருமானே! நீ, மூவுலகங்களை மஹாபலிச்சக்ரவர்த்தி தன்னது என்று அபிமானித்தகால த்ரிவிக்ரமனாகி உலகங்களை திருவடியால் அளந்துகொண்டாய்; ஒருகால் ஹிரண்யாக்ஷனால் அபஹரிக்கப்பட்ட பூமியை வராஹமாகி மீட்டுவந்தாய்; மற்றொருகால் தேவர்களுக்காகத் ப்பாற்கடலை மந்தரமலையால் கடைந்தாய்; பின்பொருநாள் இ னாகவந்து கடலை அணைகட்டி அடைத்தாய்; என்று அறிவில் மி முனிவர்கள் சொல்லுகிறார்கள். எனக்கு அவைகளை நினைக்குகி பெருமகிழ்ச்சி பிறக்கிறது என்று தான் உகந்ததைப்பேசினார்.

பேரோதமேனி என்ற விசேஷணத்தால் எம்பெருமா கடலைக் கடையும் பொழுது ஒரு கடலை மற்றொருகடல் கரைய நின்றுகொண்டு கடைந்ததுபோலிருந்தது; என்கிற பொ தோன்றும்.

காரோதம் கடைந்த கதைச்சுருக்கம்.

முன்னொருநாள் ஒரு வித்யாதரப்பெண் விஷ்ணுலோ சென்று லக்ஷ்மீ தேவியை வீணையென்னும் வாத்யத்து

காநத்தால் புகழ்ந்துபாடி, அத்தேவியால் அளிக்கப்பட்ட புஷ்ப மாலையை எடுத்துக்கொண்டு பிரஹ்மலோகம் வழியாகத் திரும்பி வருகிற வளவிலே துர்வாஸ முனிவரைப் பார்த்து அவரை வணங்கி அந்த மாலையை அவருக்குக் கொடுத்தாள். அம்முனிவரும் அம்மாலை திருமகளால் தரிக்கப்பட்டது என்பதை உணர்ந்து பெருமகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டு தேவலோகம் வந்துசேருங் கால் அங்கு தேவேந்திரன் ஐராவதம் என்கிற யானைமீதேறிக் கொண்டு ஊர்வலம் வந்துகொண்டிருக்க அவனிடமுள்ள வன்பினால் அம்மாலையை அவனுக்குக் கொடுத்தார். இந்திரனும் அதனைத் தன் மாவெட்டியால் வாங்கி ஐராவதத்தின் கழுத்திலே போட அவ்யானையும் அதைத் துதிக்கையால் பிடித்திழுத்துக் கீழே போட்டுக் காலால் துகைத்தெறிந்தது. அதைக்கண்ட துர்வாஸ முனி மிகுந்த கோபங்கொண்டு உன்னுடைய ஐச்வர்யங்களெல்லாம் ஸமுத்திரத்தில் மறையக்கடவன வென்று இந்திரனை நோக்கிச் சாப மளித்தார். உடனே இந்திரன் ஐச்வர்யங்களை இழந்தான். இதனை யறிந்து அஸுரர்கள் அவனது லோகத்தை ஆக்ரமித்து இந்திரனையும் போரில் வென்று தாங்களே ஆட்சிபுரிந்துவந்தார்கள்.

உடனே இந்திரன் மற்ற தேவர்களையும் கூட்டிக்கொண்டு திருமாலைச் சரணமடைந்தான். பகவானும், அஸுரர்களும் நீங்களும் சேர்ந்து மந்தரத்தை மத்தாக நாட்டி வாஸுகியென்னும் கயிறால் இக்கடலைக் கடையுங்கோள்; மீண்டும் ஐச்வர்யத்தைப் பெறலாமென்று நியமித்தார். கடலில் மந்தரமலையை நாட்டி வாசுகியை வன்கயிறாகச் சுற்றி அஸுரர்கள் தலைப்பக்கத்திலும் தேவர்கள் வால்புறத்திலுமாகக் கடையவாரம்பித்த வளவில் மந்தரமலை கடலில் அழுந்திப்போயிற்று. உடனே பகவான் ஆமை வடிவமெடுத்து முதுகில் அம்மலையை ஏந்திக்கொண்டு நின்று மீண்டும் கடையும்படி ஏவினார். அவர்களும் கடையவாரம்பித்து அதற்கு வேண்டிய பலமில்லாதவர்களாய்ச் சோர்ந்துபோனார்கள். உடனே திருமகள் நாதன் தான் ஒரு திருமேனியை எடுத்துக்கொண்டு தலைப்புறத்திலும் மற்றொரு திருமேனியை எடுத்துக்கொண்டு வால்புறத்திலும் நின்றுகொண்டு வாசுகியென்னும் கயிறைப்பிடித்

திழுத்து கடைந்தான். பிறகு கடலிலிருந்து கிளம்பிய பெ
களாலும் அம்ருதத்தாலும் அமரர்களை உய்வித்தான் என்பது

கடலையடைத்த கதைச்சுருக்கம்.

ஸ்ரீராமன் ஸீதையைப்பிரிந்து ஸுக்ரீவனுடைய உதவி
ஸீதையிருக்குமிடத்தை அறிந்து கடல்கரையிலிருக்குமளவில்
ஷணாழ்வான் சரணமடையவும் அவனுக்கபயமளித்து, ஸமுத்
தைத் தாண்டி இலங்கையைச்சேருவதற்கு உபாயத்தைக் சிந்
மளவில் ஸ்ரீவிபீஷணன் சொன்னவுபாயத்தையே கொண்டு ஸ்ரீ
னும் கடற்கரையில் தர்ப்பசயனத்தில் மூன்றுநாள் ஆஹாரம்
ப்ராயோபவேசமாய்க் கிடக்க, அதற்கு ப்ரஸன்னமாகாத ஸமுத்திர
மீது கோபங்கொண்ட பெருமாளும் கடலை வற்றச்செய்
கென்று ஆக்னேயாஸ்த்திரத்தை எடுத்தவளவில் ஸமுத்ர ராஜ
ஓடிவந்து தன்மேல் அணைகட்ட ஸம்மதித்து நளன் கையால்
தில் கற்களைவைத்தால் அவை மிதக்குமென்று நளனது தகப்ப
வரத்தைத் தெரிவித்து நளனை அணைகட்டும்படி சொல்லி
மறைந்தான். உடனே ஸ்ரீராகவனும் குரங்குகளால் கொண்டு
பட்ட மலைகளாலும் கற்களாலும் நளனைக்கொண்டு கடலில்
கட்டி அடைத்து அதன்வழியே யிலங்கை சென்று இராவண
வென்று ஸீதையைப்பெற்றான் என்பது.

பிரானென்று நாளும் பெரும்புலரி என்றும்
குரா நற் செழும் போது கொண்டு — வராகத்
தணியுருவன் பாதம் பணியுமவர் கண்டீர்
மணியுருவங் காண்பார் மகிழ்ந்து. (

பிரான் என்றும்	பரமோபகாரகனை ஸ்வாமியே என்றும்	குராநல் செழும் போது கொண்டு	குரா என்கிற … டு மரத்தினுை நல்லதான பெரி தொரு புஷ்பத் எடுத்துக் கொ
நாளும்	வினைகப்போகிற காலத்திலும்		
பெரும் புலரி என்றும்	அழகான நல்லபோது விடிவு உண்டாயிற்றே என்றும். ஆதரவுடன்	வராகத்து அணி உருவன்	பன்றியோ … அழகான திரு… யையுடைய … மானை

பாதம் பணியும் அவர் கண்டீர்	திருவடிகளை வணங்குகிறவர்களன்றோ	மகிழ்ந்து	பெருத்த ஸந்தோஷத்துடன்
மணி உருவம்	நீலரத்னம் போன்ற அவனுடைய திருமேனியை	காண்பார்	கண்களால் காணப் பெறுவார்கள்.

பகவானைப் பலவகைப்பட்ட புஷ்பங்களைத் தூவிப் பணிந்து தொழுபவர்கள் தான், அவனது திவ்யமங்கள விக்ரஹத்தைக் காணப்பெற்று மீளாத பேரின்பத்தையடைவார்களென்கிறார்.

பிரானென்று:—ஸர்வேச்வரன் பரமோபகாரகன். நம் விஷயத்தில் எவ்வளவோ பாடுபட்டு நம்மைத் திருத்தியருளினான். எதிர் சூழல் புக்கு எனைத்தோர் பிறப்புமெனக்கே வந்தருள் செய்தான். என்னைத்தீமனம் கெடுத்தான். மருவித்தொழும் மனத்தைத் தந்தான். என்று பலவாறாகவவன் செய்த உபகாரங்களை நினைத்து உனக்கோர் கைம்மாறு நானொன்றிலேன் என்று அநுஸந்தித்தும், "எத்தனை பகலும் பழுது போயொழிந்தன நாள்கள்" என்றபடி வீணாகப் போக்கின பல்காலங்கள் போலின்றி இன்றையதினம் நல்லபோதாய் விடிந்ததே. "பகல் கண்டேன்" என்று சொல்லும்படியான தசைவந்ததேயென்று, பகவானையாராதிக்கும்படி நேர்ந்த காலத்தையும் கொண்டாடிக்கொண்டும், நல்லதோர் சுரா என்னும் மரத்தின் உயர்ந்த புஷ்பத்தை எடுத்து வாராஹ நயினாருடைய திருவடிகளில் ஸமர்ப்பித்து ஸேவிப்பவர்கள், பரமபதத்தில் வாழும் பெருமானுடைய அப்ராக்ருத திருமேனியைக்கண்டு ஸேவித்து அந்தமில்பேரின்பத்தில் அமர்வார்கள். அவர்களைத்தவிர மற்றையோர்களுக்கு அம்மோக்ஷானந்தம் கிடைப்பதரிது என்றார்.

சுரா நற் செழும் போது:—சுரா என்று ஒரு காட்டுமரத்திற்கிற்குப்பெயர். பகவான் ஸுலபமாய் ஆராதிக்கத் தகுந்தவனாகையால் எதாகிலும் ஒரு காட்டுமரத்தின் புஷ்பத்தால் அர்ச்சித்தாலும் அவன் ப்ரீதனாகிறான் என்பதுபற்றிச் சுராவென்றது.

அல்லது சுரா என்று வாஸனைக்குப்பெயர் நல் சுரா—நல்ல வாஸனையுள்ள புஷ்பங்களால் என்றும் பொருள் கூறலாம்.

மகிழ்ந்தது சிந்தை திருமாலே! மற்றும்
மகிழ்ந்ததுன் பாதமே போற்றி—மகிழ்ந்த
தழலாழி சங்க மவை பாடியாடும்
தொழிலாகம் சூழ்ந்து துணிந்து.

திருமாலே	லக்ஷ்மீபதியே !	சங்கம்	ஸ்ரீபாஞ்சஜன்
	என்மனம்		
துணிந்து	உன்னுடைய த்யானத்திலீடுபட்டு	அவை	அவ்விரண்டை
மகிழ்ந்தது	ஸந்தோஷத்தையடைந்தது	பாடி	கானம் செய்
மற்றும்	மற்றொரு வாகிந்திரியமும்	மகிழ்ந்தது	ஸந்தோஷத் டை
உன்	உன்னுடைய	ஆகம்	சரீரம்
பாதமே	திருவடிகளையே	ஆடும் தொழில்	நர்த்தனம் செ வ்யாபார
போற்றி	ஸ்தோத்ரம்செய்து	சூழ்ந்து	இறங்கி
அழல்	நெருப்பைவீசுகிற		
ஆழி		மகிழ்ந்தது	மகிழ்ச்சியை

ஆழ்வார் தாம் கரணத்ரயத்தாலும் பெருமானிடம் பொரு பணி செய்தமையைப் பேசுகிறார்.

மகிழ்ந்தது:— திருமாலே:— மன ஏவ மநுஷ்யாணாம் கார பந்த மோக்ஷயோ: என்று ஸம்ஸாரமோக்ஷங்களுக்குக் காரண மனம் பகவானுடைய த்யானம் தான் மோக்ஷஸாதனமென்று ந்து மற்றவைகளை உதறித்தள்ளிவிட்டு, உன்னுடைய த்யான லேயே நிலையாய் நின்று அதனாலேயே ஸந்தோஷத்தையடைகி அதை அனுஸரித்த வாகிந்திரியமும் உனது திருவடிகளையே செய்து, நீ தரித்திருக்கும் தேஜோநிதியான திருவாழியை பாஞ்ச ஜன்யத்தையும் பாடித்துதித்து அதனாலேயே பெருமகி சியை அடைந்திருக்கிறது. சரீரமும் அம்மகிழ்ச்சியுடன் 'அண னவாடு மெனங்கம்' என்னும்படி ஸம்பிரமநர்த்தனம் செய்கி

இப்படி மனோவாக்காயங்கள் மூன்றும் எம்பெருமானுடைய குணாநுபவத்தாலேயே நித்யத்ருப்தங்களானபடியால் நானும் மணியுருவம் காண்பது திண்ணம் என்று அநுஸந்தித்தார்.

துணிந்தது சிந்தை துழாயலங்கல், அங்க
மணிந்தவன் பேருள்ளத்துப் பல்கால்—பணிந்ததுவும்
வேய்பிறங்கு சாரல் விறல் வேங்கடவனையே
வாய்திறங்கள் சொல்லும் வகை. (33)

சிந்தை	மனமானது	வேய் பிறங்கு சாரல்	மூங்கில்கள் நிறைந்த அடிவாரங்களையுடைய
துழாய் அலங்கல்	திருத்துழாய் மாலையை	விறல்	பெருமையுள்ள
அணிந்தவன்	திருமேனியில் தரித்துக்கொண்டவனுடைய	வேங்கடவனையே	திருவேங்கடத்தைக் கோயிலாகக்கொண்ட பெருமானையே.
பேர்	திருநாமங்களை	வாய்	வாயும்
உள்ளத்து	த்யானிப்பதற்கு	திறங்கள்	அவ்வீசனது ஸ்வரூப ஸ்வபாவங்களை
துணிந்தது	நிச்சயம் செய்துகொண்டது	சொல்லும் வகை	சொல்லுகிற விஷயத்தில்
அங்கம்	இவ்வுடலும்	துணிந்தது	தீர்மானம் செய்தது
பல்கால்	எப்பொழுதும்		
பணிந்ததுவும்	வணங்கினதுவும்		

மனம் வாய் சரீரம் மூன்றும் பகவத் விஷயத்தில் ஆழ்ந்து மகிழ்ந்தனவென்று இப்பாசுரத்தில் பேசுகிறார். மகிழ்ந்தது மாத்திரமல்ல. வேறொரு பொருளைச் சிறிதும் சிந்தியாது அப்பெருமானிடமே அவகாஹித்ததெனப் பேசுகிறார் இதில்.

துணிந்தது:—என் மனமானது திருத்துழாய் மாலையைத்தரித்திருக்கும் திருமேனியையுடைய பெருமானை எப்பொழுதும் த்யானம் செய்வது என்கிற கார்யத்தில் த்ருடமான நிச்சயத்தைக் கொண்டது. எனது உடம்பு மூங்கில்கள் நிறைந்துள்ள தாழ்வரையுடன்கூடின வேங்கடவெற்பினில்வாழும் பெருமானையே வணங்கி

வழிபடுகின்றது. எனதுவாயும் அவனுடைய மேன்மை, கல்ய குணங்கள், ஸ்வபாவம் இவைகளைப் பேசுவதையே தொழில் கொண்டிருக்கிறது. ஆகவே கரணங்கள் மூன்றும் எம்பெருப திறத்திலீடுபட்டு மகிழ்ச்சியடைந்ததுமன்றி மற்றொரு விஷ திலே செல்லாமல் எம்பெருமானிடமே அற்றுத்தீர்ந்தனவெ சொல்லித் தன்னை க்ருதார்த்தராக நினைத்துக்கொண்டார்.

வகையா லவனி யிரந்தளந்தாய் பாதம்
புகையால் நறு மலரால் முன்னே—மிகவாய்ந்த
அன்பாக்கி யேத்தி யடிமைப் பட்டே னுனக்கு
என்பாக்கியத்தா லினி. (

வகையால்	அழகு பேச்சு முதலிய ப்ரகாரங்களால்	மிக வாய்ந்த	அதிகமாகவுமை
முன்னே	முன்னொருகால்	அன்பு ஆக்கி	ப்ரீதியுள்ளவனாக் கொ
அவனி	பூமியை	ஏத்தி	துதிசெய்து
இரந்து	யாசித்து	இனி	இன்றுமுதல்
அளந்தாய்	உலகங்களை அளந்துகொண்டாய்	என் பாக்கியத்தால்	என் பக்கல் நீ கடாக்ஷமாகி ணயத்
பாதம்	உனது திருவடிகளை		
புகையால்	தூபத்தினாலும்	உனக்கு	தேவரீருக்கு
நறு மலரால்	வாஸனையுள்ள புஷ்பங்களாலும்	அடிமைப்பட்டேன்	தாஸனாக ஆனே

கீழே பேசியபடி தனது கரணங்கள் பகவானிடம் சென் பணி செய்வதற்கும் காரணம் அவன் செய்தருளிய கடாக்ஷம் னென்கிறார் இதில்.

வகையால்:—வடிவழகு பேச்சு செயல் முதலியவகைகள மாவலியின் மனத்தைக் கவர்ந்து மூவடி மண்ணிரந்து அள கொண்டாய். உனது திருவடிகளைப் புஷ்பங்களைக் கொண்டும் து தீபங்களைக்கொண்டும் பரபக்தி பரஞான பரமபக்தி என்கிற நி ளிலே நின்றுகொண்டு ஆராதித்து உனக்கே அடிமையானே இன்று முதல் மேலுள்ள காலமெல்லாம் இங்ஙனம் உனக்கடி

யாகவே இருப்பதில் ஈடுபட்டேன். இதுவும் எனது பாக்ய விசேஷத்தாலேயே கிடைத்தது. நான் பெற்ற பேறுதான் புருஷார்த்தம். என்று தான் தன்னைப் புகழ்ந்துகொண்டார்.

வகையால்:—மாவலியையும் தேவர்களைத் துன்புறுத்தினன் என்ற காரணத்தால் கொன்றொழிக்கவேண்டியிருக்க, அவனிடம் குடிகொண்டிருந்த ஔதார்யம் என்ற மஹாகுணத்தினால் இரங்கி, அவன் நினைத்தபடியே மூவுலகங்களும் அவனுடையதாகவே நாமும் நினைத்து யாசித்து மாவலியையும் அடக்கி தேவர்களுக்குத் தலைவனான இந்திரனுக்கும் அவனுடைய வுலகத்தைச் சேர்ப்பித்து நம் கார்யத்தையும் செய்துகொள்வோமென்று நினைத்த சூழ்ச்சியால் என்றும் பொருள் சொல்லலாம். த்ரிவிக்ரமனாகி எல்லார் தலையிலும் தன் திருவடியை வைத்துய்யச் செய்ததுபோல் தன்பேரிலும் அவன் செய்த விசேஷ கடாக்ஷம் தான் தாம்பெற்ற புருஷார்த்தத்திற்குக் காரணமென்பது முதலடியால் தோன்றும்.

என் பாக்கியத்தால்:—இங்கு என் பாக்கியமென்பது எம்பெருமான் தன் திறத்தில் பிறக்கும் தருவாயில் செய்த ப்ரதம கடாக்ஷம் முதலான வுபகாரங்களேயாகும். ஸுக்ருதமென்பது பெருமானுடைய அநுக்ரஹஸங்கல்பத்தைத் தவிர வேறொன்றில்லையாதலால் இங்கும் பாக்யம் என்றால் எம்பெருமான் தன் திறத்தில் செய்த கடாக்ஷம் முதலிய மோக்ஷபலவான புருஷார்த்தங்களுக்குக் காரணமான உபகாரங்கள் எனப் பொருள்படும். ஆகவே தன்னிடமுள்ள ஆநுகூல்ய ஹேதுக்களையெல்லாம் வ்யாஜமாத்ரமாகவே கருதி அவனருளையே ப்ரதானஹேதுவாகக்கொண்டு, தான் பெற்ற ஆநுகூல்யஹேதுக்களையும் புருஷார்த்தத்தையும் எம்பெருமானது கடாக்ஷத்தாலேயே கிடைத்ததெனப்பேசினாரென்பது இரண்டாம்பொருள்.

இனிதென்பர் காம மதனிலு மாற்ற
வினிதென்பர் தண்ணீரு மெந்தாய்—இனிதென்று
காமநீர் வேளாது நின்பெருமை வேட்பரேல்
சேமநீ ராகும் சிறிது. (35)

எந்தாய்	எனது ஸ்வாமியே	இனிது என்று	போக்யமெ
காமம்	சப்தம் ரூபம் முதலிய விஷயங்களை	வேளாது	ஆசைப்படா
இனிது என்பர்	போக்யங்களென்று சொல்லுகிறார்கள்	நின் பெருமை	உன்னுடை
அதனிலும்	அதைக்காட்டிலும்	சிறிது	கொஞ்சம்
தண்ணீர்	ஜலம்	வேட்பார் அல்	ஆசைப்படுவ
ஆற்ற	மிகவும்	சேமம் நீராகும்	(அது) நமக் மத்தைக்கெ ம் தன்மையு
இனிது என்பர்	போக்யமென்பார்கள் (சிலர்)		
காமம்	அவ்விஷயங்களையும்		
நீர்	ஜலத்தையும்		

"மிகவாய்ந்த வன்பாக்கியேத்தி யடிமைப்பட்டேனு என் பாக்கியத்தாலினி" என்று தாம் பெற்ற பாக்யத்தா பெருமானுக்கு அடிமைப்பட்டதாகப் பேசினார். பகவத் வி தில் அவகாஹியாமல் சப்தாதி விஷயங்களையே இனிதென் ஸாரிகள் நினைக்கிறார்களே; என்று வருந்துகிறாரிதில்.

இனிதென்பர்:—உலகில் சிலர் நல்ல கானத்தைக் கே அழகுள்ள வஸ்துவைப் பார்ப்பது, உயர்ந்த பெண்களைத் தொ முதலியவைகளையே இனிதென்றிருந்து அவைகளிலேயே ம கிடந்துழல்கிறார்கள். மற்றும் சிலர் சப்தாதி விஷயங்களை தாகக்கருதாவிடினும் தண்ணீரையே இனிதென்கிறார்கள். த ரென்பது சோற்றுக்கு முபலக்ஷணம். அறுசுவை வாய்ந்த சிலை உண்டு தண்ணீரைக்குடித்துக்கொண்டு வயிறுவாடாமல் தள்ளுவதுதான் மேலான புருஷார்த்தமென்றிருக்கிறார்கள்.

தாஹமடைந்தவன் அக்நிஜ்வாலையை அருந்தி தாஹ மடக்க நினைப்பதுபோலவும், வெயிலில் அடிபட்டவன் பெரிய பின் படத்தினுடைய நிழலில் ஒதுங்கி களைப்பாற நினைப்பது வும், கீழ்ச்சொன்ன சப்தாதி விஷயங்கள் ஆத்மநாசத்தை விக்குமென்றுணர்ந்து அவைகளில் கண்வைக்காமல் "உண் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்"

றும், வாஸுதேவஸ் ஸர்வமிதி ஸ மஹாத்மா என்றும் சொல் லுகிறபடி பகவத் குணங்களையே தாரகபோஷக போக்யங்களாகக் கொள்ள நினைத்தால் அது க்ஷேமத்தை விளைவிக்கும்.

மற்றவைகளை விரும்புவது ஆத்மநாசத்திற்குக் காரணமாகும். பகவத் விஷயத்தை ஆசைப்படுவதென்பது நமக்கு க்ஷேமத்தைக் கொடுக்கும் தன்மையுள்ளது. அதை விட்டு ஸம்ஸாரிகள் விஷயாந் தரங்களை விரும்புவது யாது காரணம் பற்றியோ; என்று வருத்த முற்றுப்பேசினர்.

“சிறிது” என்பதால் எம்பெருமானிடம் வாஸ்தவமான ப்ரியம் இல்லாமல் பொய்யாகப் ப்ரீதிபாவனை செய்தாலும் மித்ர பாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந என்றபடி அவன் நம்மைக் கைவிடாது காத்தருள்வன் என்பது விளங்கும்

சிறியார் பெருமை சிறிதின்க ணெய்தும்
அறியாருந் தாமறியா ராவர்—அறியாமை
மண்கொண்டுமண் ணுண்டுமண் ணுமிழ்ந்தமாயனென்
றெண் கொண்டென் னெஞ்சே யிரு. (36)

சிறியார்	க்ஷுத்ரர்களால் (நினைக்கப்படுகிற)	அறியாமை	ஒருவருக்கும் தெரியாதபடி
பெருமை	மேன்மையானது	மண்கொண்டு	பூமியை யாசித்துப் பெற்றுக் கொண்டு
சிறிதின் கண்	கீழ்மையில்		
எய்தும்	சேர்த்துவிடும்	மண் உண்டு	ஒருகால் பிரபஞ்சத்தை அமுதுசெய்து
அறியாரும்	இது செய்யத்தகுந்தது; இது செய்யத் தகாதது என்பதை அறியாதவர்களும்	மண் உமிழ்ந்த	ஒருகால் பிரபஞ்சத்தை வெளியே உமிழ்ந்த
தாம்	தாங்கள்	மாயன் என்று	ஆச்சரியகரமான செயலுடையவனென்று
அறியார் ஆவர்	புத்தியில்லாதவர்களே யாவர்		
என் நெஞ்சே	எனது மனமே	எண் கொண்டு இரு	நினைத்துக்கொண்டிருப்பாயாக.

ஸம்ஸாரிகளுடைய செயல்களை நினைந்து வருந்திய வாட் தமது நெஞ்சை நோக்கி, அவர்கள் எக்கேடுகெட்டால் நமக்கெ நீ திருமாலையே சிந்தித்திருவென்று உபதேசிக்கிறார்.

சிறியார்:—சிறிதும் பெருமையில்லாத தாழ்ந்தவர்கள் தா மிகவும் பெரியோர்களாகத் தாங்களே நினைத்துக்கொண் அவர்களால் நினைக்கப்படும் பெருமை அவர்களைத் தாழ்ந்தவர் களாகவே செய்துவிடும். கொஞ்சமாவது பெருமையிருந்து தங் மேன்மையுள்ளவர்களாக நினைத்து கர்வப்பட்டாலும் ஒருவ ஒப்புக்கொள்ளலாம். சிறிதும் குணமின்றி வீணாகவஹங்கார வார்கள் சீக்கிரத்தில் தங்களைத் தாழ்ந்தவர்களென்றே ஸ்தாபித் கொள்வார்கள். இம்மாதிரி சிறிதும் அறிவில்லாத மூடர்கள் களை ரொம்பவும் அறிவாளர்களாக நினைத்துக்கொண்டாலும் அ களும் க்ருத்யாக்ருத்ய விவேகமில்லாத மூடர்களாகவே யிருப் களேயல்லது ஆரோபிக்கப்பட்ட ஞானத்தால் உண்மையில் வான்களாகக் கருதப்படமாட்டார்கள். இப்படித் தங்களை நி கிற சிறியாரும் அறியாருமே இவ்வுலகில் பெரும்பான்மையே கள். ஆதலால் நெஞ்சமே! நீ அவர்களைப்போல் அஹங்காரப்ப மல், ஒருவரும் திருமகள் கேள்வன் என்று அறியாதபடி வாமன வந்து மண்ணளந்தவனும், பின்பொருகால் ப்ரளயபத்தில் இவ் கங்களையெல்லாம் தம் திருவயிற்றிலேவைத்துய்யக் கொண்டவனு பிறகு அவ்வுலகங்களையே வெளிநாடுகாணவுமிழ்ந்தவனுமான பெ மானையே நினைத்துக்கொண்டிரு; அதுதான் நமக்கு க்ஷேமத்தை கொடுக்கும் என்று உபதேசம் செய்தார்.

பிரமன் முதலிய மற்ற தேவர்களான சிறியாரை நாம் பெ தெய்வங்களாகக் கருதினால் அது நம்முடைய தாழ்மையைக் காட்டி நம்மைச் சிறியாராகச் செய்துவிடும் என்றும் முதலடிக் பொருள் கூறுவதுண்டு.

இருந்தண் கமலத்திருமலரி னுள்ளே,
திருந்து திசைமுகனைத் தந்தாய்—பொருந்தியநின்
பாதங்க ளேத்திப் பணியாவேல், பல்பிறப்பும்
ஏதங்க ளெல்லா மெமக்கு. (37

இரும்	விசாலமாயும்
தண்	குளிர்ந்துமிருக்கிற
கமலத்து	தாமரையின்
இரு	மலர்ந்ததான
மலரின்	புஷ்பத்தின்
உள்ளே	நடுவில்
திருந்த	ஸாமர்த்தியமுள்ள
திசை முகனை	பிரமதேவனை
தந்தாய்	ஸ்ருஷ்டிசெய்தவனே
பொருந்திய	ஒன்றோடொன்று சேர்ந்திருக்கிற
நின் பாதங்கள்	உனது திருவடிகளை
ஏத்தி	துதி செய்து
பணியாவேல்	வணங்காவிடில்
எமக்கு	எங்களுக்கு
பல் பிறப்பும் எல்லாம்	பலவகைப்பட்ட பிறவிகளெல்லாம்
ஏதங்கள்	துக்கங்களாகவே முடியும்.

இருந்தண்:—ஸர்வேச்வரனைப் பணியாவிடில் பிறவிகள்தோறும் துயரங்களே விளையுமென்கிறாரிதில். வாஸம் செய்வதற்குப் பாங்காகவிசாலமாயும் சீதளமாயுமிருக்கிற தாமரைப்பூவில் பிரமனைப் படைத்தவனே! நீ பலமுறைப் பிரஜைகளைப் படைப்பது இப்பிறவியிலில்லாவிடினும் ஏதாவதொரு பிறவியில் நம்மையறிந்து பணிந்து பிரஜைகள் முக்தியை அடையலாம் என்று நினைத்தல்லவா? அப்படி உன் நினைவின்படி உன்னைப்பணியாது புறம்பே செல்கிறவர்கள் தங்கள் பிறவி முழுவதிலும் துக்கங்களையே அநுபவிப்பார்கள். உன்னை வணங்காதவர்களுக்கு முக்திபெற வழியில்லையாதலால் பிறவிகள் உண்டாவது நிச்சயம். அப்பிறவிகளனைத்தும் துக்கமயமாகவேயிருக்கும். உன்னையே துணையாகக்கொண்டவெங்களுக்கு உன்னை ஸேவிக்காமலிருந்தால் உலகிலுள்ளவர்களெல்லாராலும் அநுபவிக்கப்படும் துக்கங்களெல்லாம் உண்டாகும். ஆதலால் உன்னை வணங்கி வழிபடுவதே யாத்ரையாயிருக்கும்படி எனக்கருள்புரிவாய் என்கிறார்.

திருந்த திசைமுகனை — ஸ்ருஷ்டி செய்வதில் திறமையுள்ளவன். பெருமான் தனக்கு ஒரு முறை ஸ்ருஷ்டியின் ப்ரகாரங்களை உபதேசம் செய்துவிட்டால் அதை மறந்து மறுபடியும் பெருமானிடம் சென்று கேட்டுத் தெளிந்துகொள்வது என்கிற தன்மையில்லாதவன். முதலில் உபதேசித்ததை மறவாது ஸர்வகாலத்திலும் அத்தொழிலை நடத்துகிறவன் என்றபடி.

எமக்கென் றிருநிதிய மேமாந் திராதே
தமக்கென்றும் சார்வ மறிந்து—நமக்கென்றும்
மாதவனே யென்னும் மனம் படைத்து,மற்றவன்
ஓதுவதே நாவினா லோத்து. (

இருநிதியம்	தனக்கும் பிறருக்கும் உரிமையுள்ள பொருளை	மாதவனே	ச்ரிய: பதிதான் அடையவேண்
எமக்கு என்று	நமக்கே வேணுமென்று கருதி	என்னும்	என்கிற
		மனம்	மனத்தை
ஏமாந்து இராதே	மோஹமடைந்திருக்காதே	படைத்து	அடைந்து
		மற்று	அதற்குமேல்
தமக்கு	தங்களுக்கு	அவன்	அந்த லக்ஷ்மீட னுடை
என்றும்	எக்காலத்திலும்		
சார்வம்	காப்பாற்றுகிறது.	பேர்	திருநாமங்களை
அறிந்து	இன்னதென்று தெரிந்துகொண்டு	நாவினால்	நாக்கினால்
		ஓதுவதே	சொல்லுவதுதா
நமக்கு	தங்களுக்கு		
என்றும்	எப்பொழுதும்	ஓத்து	அத்யயனம் செ வேண்டிய வே

செல்வத்தையே பெரிதாக நினைத்திருக்கும் பாமரர்க குறித்திப்பாசுரமருளிச்செய்கிறார்.

எமக்கு:—நமக்கு எக்காலத்திலும் செல்வம்தான் காப்ப றும் பொருள். எந்த விபத்துகளிலிருந்தும் நம்மை விடுவிக் பொருள் செல்வம் ஒன்றுதான் என்று நினைத்து செல்வத்தைக் விடாது சேமித்துவைக்குமியல்புள்ளவர்களே! நீங்கள் நினைப் சரியன்று. செல்வம் என்பது ஒருவனுக்கே உரித்தானத இன்று நம்மிடமிருக்கும்பொழுதே அதைப் பலர் பலவழியா கைக்கொள்ள நினைப்பார்கள். நாளைக்கு மற்றொருவனிடம் சென் விடும். ஆகவே இன்று நமக்கும் நாளை மற்றொருவனுக்கும் உ தான பொருளை இன்றைக்கு நம்மிடமிருப்பதுபற்றி நம்முடை தானென்று நினைத்து ஏமாந்து போகாதீர்கள் நமக்கு எக்கால லும் காப்பாற்றுகிறவன் யார் என்று சிந்தித்துப்பாருங்கோ

அப்படிப்பார்த்தால் மாதவன் ஒருவன்தான் எக்காலத்திலும் நம்மைக் காப்பவனென்றறியலாம். அதன்பின் அவனது திருநாமங்களையே சொல்லித்திரியுங்கோள். வேதங்களை அத்யயனம் செய்வதுபோல் அவன் நாமங்களை நாவினால் சொல்லுவதுதான் நமக்குக் கடமை. அவன் பேர்களைப் பேசுவதுதான் வேதமென்பது; என்று உபதேசம் செய்தருளினார்.

ஓத்தின் பொருள் முடிவு மித்தனையே, உத்தமன் பேர்
ஏத்தும் திறமறிமினேழைகாள்—ஓத்ததனை
வல்லீரேல் நன்றதனை மாட்டீரேல், மாதவன்பேர்
சொல்லுவதே ஓத்தின் சுருக்கு. (39)

ஏழைகாள்	திருமால் என்கிற செல்வத்தை இழந்தவர்களே!	சொல்லுவதே	பேசுவது தான்
ஓத்து	அத்யயனம் செய்ய	ஓத்தின்	வேதங்களுடைய
வல்லீர் எல்	சக்தியுள்ளவர்களாயிருந்தீர்களேயானால்	சுருக்கு	ஸாரம்
நன்று	அது மிகவும் நல்லது	ஓத்தின் பொருள் முடிவும் இத்தனையே	வேதத்தில் தீர்மானம் இவ்வளவு தான்
அதனை மாட்டீர் எல்	அது செய்வதற்கு சக்தியில்லாதவர்களானால்	உத்தமன்	புருஷோத்தமனுடைய
மாதவன் பேர்	திருமாலின் திருநாமங்களை	பேர்	திருநாமங்களால்
		ஏத்தும் திறம்	ஸ்தோத்ரம் செய்யும் வகையை
		அறியின்	அறிந்து கொள்ளுங்கள்.

செல்வத்தையே பெரிதாக நினைத்திருக்குமவர்களைக்குறித்து; மாதவன்தான் நமக்கு எக்காலத்திலும் ரக்ஷகன்; அவனுடைய திருநாமங்களை உச்சரிப்பதுதான் நாம் ஓதவேண்டிய வேதங்களாகும்; என்று உபதேசித்தார். வேதத்தில் அக்னி இந்திரன் வருணன் முதலிய தேவர்களையும் பேசியிருக்கச்செய்தே மாதவன் பேர் ஓதுவதே ஓத்தாகுமோ? என்று சிலர் வினவ அதற்கு விடையளிக்கிறாரிதில்.

ஓத்தின்:— வேதங்களை அத்யயனம்செய்து செவ்வ சொல்லுவதற்குத் திறமைபெற்றிருந்தால் மிகவும் நன்று. உ களில் இந்திரன் முதலிய தேவர்களையும் சொல்லியிருப்பினும், அ கள் நமக்கு ஆச்ரயணீயர்களல்ல. இந்திரன் முதலிய சப்தங்க அந்தந்த தேவர்களுக்கு அந்தர்யாமியான ஸ்ரீமந் நாராயணனை சொல்லுகின்றன. இந்திரன் முதலியதேவர்கள் ஸ்ரீய:பதி விபூதியாகவே வேதத்தில் கருதப்படுகிறார்கள். ஆனதுபற்றி "ப்ராஹ்மணர்களால் வேதத்தில் எவ்வளவு அக்ஷரங்கள் ஓத கின்றனவோ அவ்வளவு விஷ்ணுவின் திருநாமங்கள் ஓதப்பட் வாம்." என்றும் ப்ரமாணங்கள் சொல்லுகின்றன. ஆத வேதங்களை குருமுகமாக அத்யயனம்செய்து அந்த வேதங் களாலேயே எம்பெருமானைத் துதி செய்யுங்கோள். வேத அத்யயனம்செய்யச் சக்தியற்றவர்களாயிருந்தால் கேசவன் யணன் கோவிந்தன் என்கிற பெருமானுடைய நாமங்களை சொல்லித் துதியுங்கோள். வேதங்களை ஓதுவதால் யாது ப விளையுமோ அப்பயன் நாமங்களைச் சொல்லுவதாலும் விளை மேலும் இக் கலியுகத்தில் பகவந்நாம ஸங்கீர்த்தனமே மற்ற யு ளில் செய்யப்படும் உபாஸனம் முதலியவைகளால் கிடைக்கப்ப புருஷார்த்தத்தைக் கொடுக்குமென்று பெரியோர்களால் சொல் பட்டுள்ளது. நமக்கு வேதமோதுவதற்குத் திறமையில்லை யென்று நீங்கள் வருந்தவேண்டாம். வேதைச்ச ஸர்வைரஹமே வேத்ய: என்று வேதங்களால் அறியப்படும் பரம புருஷன் மாதவன் கோவிந்தன் முதலிய நாமங்களாலும் சொல்லப்படுகிற ஆகையால் வேதங்களால் பெருமானைத் துதிசெய்யுங்கோள். லது அவனுக்கு வாசகமான கேசவன் முதலிய பெயர்களைச் செ லியாவது, துதிசெய்யுங்கோள். எப்படியாது புருஷோத்தமனுடை பேர்களைச் சொல்லும் வகையை அறிந்துகொள்ளுங்கோள். தான் நாம் உய்வதற்கு உபாயமென்றருளிச் செய்தார்.

ஏழைகாள்:— நீதியினை பவளத்தூணை, தனம் மதீயம் பாத பங்கஜம் என்றும் தனமாகச் சொல்லப்பட்ட பெரும இழந்ததுபற்றி ஏழைகாள் என்று ஸம்ஸாரிகளை விளித்தார்.

சுருக்காக வாங்கிச் சுலாவி நின்று, ஐயார்
நெருக்கா முன் நீர்நினைமின் கண்டீர்—திருப்பொலிந்த
ஆகத்தான் பாத மறிந்து மறியாத
போகத்தா லில்லை பொருள். (40)

ஐயார்	கபமானது (கோழை)	பாதம்	திருவடிகளை
சுலாவி நின்று	உடம்பு முழுவதும் வியாபித்து	நினைமின் கண்டீர்	நினையுங்கோள்.
சுருக்காக வாங்கி	கழுத்தில் சுருக்கிட்டதுபோல் இழுத்துக்கொண்டு	அறிந்தும்	அவனை நினைப்பது தான் உஜ்ஜீவநோபாயம் என்று தெரிந்துகொண்டும்
நெருக்கா முன்	தொண்டையை அடைப்பதற்கு முன்னமேயே	அறியாத	விடப்போகாத
நீர்	நீங்கள்	போகத்தால்	விஷய ஸுகாநுபவத்தால்
திருபொலிந்த ஆகத்தான்	லக்ஷ்மீதேவி ப்ரகாசித்துக் கொண்டிருக்கிற திருவுடம்பையுடைய விஷ்ணுவினுடைய	பொருள் இல்லை	பிரயோஜனமில்லை.

சிற்றின்பங்களையே ஆழ்ந்து நின்றநுபவிக்கும் அதிகாரிகளைக் குறித்து உபதேசிக்கிறாரிதில்.

சுருக்காக:— விஷயஸுகங்களையே அநுபவித்துக்கொண்டு பாம புருஷார்த்தத்தை மறந்திருக்கும் பாவிகாள்! உமக்கொன்று சொல்லுகிறேன் கேண்மின்; நீங்கள் திருவாழ்மார்பனுடைய திருவடிகளையே நினைத்திருங்கோள். எங்களுக்கு இப்பொழுது என்ன அவசரம். கடைசியானகாலத்தில் பார்த்துக்கொள்கிறோம் என்று பதில் சொல்லவேண்டாம். மனிதனுடைய ஆயுளை நிச்சயம் செய்ய முடியாது. இப்பொழுதே மரணம் உண்டாகலாம். கபமானது சடக்கென உடம்பு முழுவதும் வியாபித்து கழுத்தில் சுருக்குப் போட்டதுபோல் தொண்டையை அடைத்து ஒரு விஷயத்தையும் நினைக்கவும் பேசவும் முடியாமல் செய்துவிடும். அப்பொழுது

நீங்கள் எப்படிப் பெருமானைப் பேசுவீர்கள். அக்கபம் தொண்டையை அடைக்குங்காலம் எப்பொழுது நேருமென்று நீங்கள் அறிவீர்களா? இப்பொழுதே நோலாம். ஆதலால் தொண்டை அடைப்பதற்கு முன்னே இன்று முதல் திருமாலை த்யானம் செய்யுங்கோள். திருமாலின் திருவடிகள் தான் நமக்கு ப்ராப்யம் என்று தெரிந்துகொண்டும் சிற்றின்பங்கள் விடப்போவதில்லையென்று சொல்வது தகாது. புலன்படிந்துண்ணும் போகம் பெருக்கி என்றபடி சிற்றின்பங்களில் இந்திரியங்கள் ஆழ்ந்து கிடக்குமே யல்லது விடப்போகாதவைதான். சிற்றின்பங்களை விட்டிருந்தும் பிரியாதவைகள் தான். ஸத்ருசம், சேஷ்டதே ஸ்வஸ்ய ப்ரக்ருதேர் ஞானவாநபி | ப்ரக்ருதிம் யாந்தி பூதாநி நிக்ரஹ: கிம் கரிஷ்யதி | அறிவுள்ளவன்கூட தன் ப்ரக்ருதிக்குத் தக்கபடி நடக்கிறான். ப்ராணிகள் ப்ரக்ருதியின்படி நடக்கின்றன. சாஸ்த்ர ஞானத்தால் செய்யப்படும் அடக்குதல் பயன்படாது” என்ற கீதாசார்யன் வார்த்தையும் உண்மையே. ஆயினும் நம்மால் விடப்போகாத சிற்றின்பத்தால் யாதொரு பயனுமில்லாததால் ஆத்மாவின் மோக்ஷ ஸுகத்தை வேண்டி அவைகளை விடவேண்டியதாதலால் அவைகளை த்யாகஞ்செய்ய முயற்சிக்கவேண்டும். அதுவும் அவன் அருளாலேயே ஆவதாகும். ஆதலால் கபம் வ்யாபிப்பதற்கு முன் திருமாலை நினைப்போமாக; என்று உபதேசித்தாராயிற்று.

அறிந்து மறியாத போகத்தால்:— சிற்றின்பங்கள் பொல்லாதவை என்று அறிந்தும் விடமுடியாதவைகள். எம்பெருமானே நமக்கு ப்ராப்யம் என்று அறிந்தும் விடமுடியாத போகங்கள் என்பதாகவுமாம், ஐ—கபம், ஆர் விருத்தி, இழிவு சிறப்பு.

பொருளா லமருலகம் புக்கியலாகாது
அருளா லறமருளு மன்றே—அருளாலே
மாமறையோர்க் கீந்த மணிவண்ணன் பாதமே
நீ மறவேல் நெஞ்சே நினை. (

பொருளால்	புருஷார்த்தம் என்கிற புத்தியால்	அருளாலே	கிருபையினால்
அமருலகம்	தேவலோகத்தில்	ஈந்த	(மோக்ஷத்தை) கொடுத்த
புக்கு இயல் ஆகாது	பிரவேசிக்க முயல்வது தகாது	மணிவண்ணன்	நீல ரத்னம் போல் நிறமுள்ள பெருமானுடைய
அறம்	தர்மஸாத்யமான தேவலோகத்தை	பாதம் ஏ	திருவடிகளையே
அருளால்	தயையினால்	செந்நெஞ்சே	ஏ மனமே !
அருளும் அன்றே	(ஸர்வேச்வரன்) கொடுக்கிறானன்றோ	நீ	நீ
		நினை	நினைத்துக்கொண்டிரு
மா மறையோர்க்கு	உயர்ந்தவர்களான வைதிகர்களுக்கு	மறவேல்	ஒருபொழுதும் மறவாதே

கீழ்ப்பாட்டில் காம புருஷார்த்தத்தில் மண்டி உழல்கின்றவர்களுக்கு உபதேசம் செய்தார்.

இப்பாட்டில் தேவலோகம் சென்று வாஸித்திருக்க வேணுமென்று நினைத்து அதற்காகப் பணம் ஸம்பாதித்துக்கொண்டு போது போக்குமவர்களைக் குறித்துப் பேசவேண்டித் தன் நெஞ்சுக்கு உபதேசிக்கிறதுபோல் பேசுகிறார்.

பொருள்:— தேவலோகமும் ஒரு புருஷார்த்தம் என்று நினைத்து அதை அடைய விரும்புவது தகாது. ஆத்மாவுக்கு அது மிகவும் சேராதது. பரமாத்மாவின் உலகத்திற்கும் இதற்கும் நெடுவாசி உண்டு. அவைகளும் பரமபதத்திலிருந்து பார்த்தால் நரகமாக வே தோன்றும். ஏதே வை நிரயாஸ்தாத ஸ்தாநஸ்ய பரமாத்மந: என்பதையும் காண்க. ஸத்பஸ்த்யஜந்தி ஸஹஸ்ரத்வமி பக்தபாவா: வைதாமஹேந்த்ரே பதேஷ்வபி பாவபந்தம் | தஸ்மைஸ்வதேஜ ஸாகலேஞ்சரே ஜ்யேஷ்ட ஸாயகா ராக்ருஷ்ண ககக்ருக்ஷ்லயாபி பந்த: என்று தேசிகன் வார்த்தை; உறு பகவானிடம் அன்பு பூண்டவர்கள் பிரமன் முதலியவர்களின் உலகங்களிலும் ஆசையை வைக்கமாட்டார்கள். ஸ்வர்க்க உலகில் வாஸமாக இப்படி அலைந்துகொண்டிருக்கவேணுமென்று விரும்புகிற யாருக்குத்தான் சிறையில் பயன் சக்தியால் கட்டுப்பட்டிருப்பது ருசிக்கும்.

ஆதலால் ஸ்வர்க்கத்தை விரும்பி அதன்பொருட்டு யாகங்களை செய்து ஸ்வர்க்கத்தில் நுழைவது பரமாத்மாநுபவத்திற்கு இட்டு பிறந்த ஜீவனுக்குத் தகாதது.

ஸ்வர்க்கலோகத்தில் உங்களுக்கு விருப்பமிருந்தாலும் அதற்குப் பணத்தைத்தேடி யாகம் முதலியவைகளைச் செய்யவேண்டிய அவச்யமில்லையே; ஸ்வர்க்கத்தையும் பெருமான் தனது கிருபையினாலேயே நமக்குக் கொடுப்பன். நாம் ஸர்வேச்வரனையே வணங்கி வழிபட்டால் நமக்கு ஸ்வர்க்கத்திலுள்ள விருப்பத்தை அவன் அறிந்து நமக்கு ஸ்வர்க்கத்தையும் கொடுத்துப் பிறகு முறையே மோக்ஷத்தையும் தந்தருள்வன். ஆதலால் முன்பு உயர்ந்த முனிவர்களுக்கு மோக்ஷத்தைக் கொடுத்த நீலநிறத்தனனான நாராயணனுடைய திருவடிகளையே மறவாது நினைத்திருக்கவேணுமென்று உபதேசிக்கிறார். இப்பாட்டில் ஆழ்வார் தமது நெஞ்சையே விளித்து உரைத்தபோதிலும் ஸ்வர்க்கத்தை விரும்புகிறவர்களைக் குறித்தே பேசுகிறார் எனக்கொள்க. அவர்களைக் கண்களை விழித்துப்பார்க்கவும் மனங் கொள்ளாமல் தம் நெஞ்சுக்குச் சொன்னதுபோல் பேசினார் என்று அறிக.

பொருளால்:— என்பதற்கு புருஷார்த்தமென்கிற புத்தியை பொருளைவிட்டு தனம் என்கிற பொருளும் சொல்லலாம். தேவலோகத்திற்குச் செல்லவேண்டி. பணத்தை எதற்காகத் தேடிச்செல்கிறீர்கள். பணமுமின்றி யாகம் முதலிய சிரமங்களான வேள்வியுமின்றியே பெருமானது தயையினாலேயே அடையலாகும், என்று பொருள் கூறுவதுமுண்டு.

ஆழ்வார்கள் எம்பெருமானை ஆச்ரயித்து ஸ்வர்க்கத்தைத் தேடுவதையும் கனவிலும் நினைப்பவர்களல்லாதலால் இங்கு அமருலகம் என்பதற்கு ஸ்ரீவைகுண்டம் என்கிற அர்த்தம் சொல்லி பொருளால் என்பதற்கும் பணம் என்று பொருள்கொண்டு பணத்தால் மோக்ஷத்தையடைய முடியாது. ஈச்வரனது திருவருளாலாகக் கூடியது என்றும் உபதேசித்ததாகவும் அறிக.

அமருலகம்—அமரருலகம் என்பதின் விகாரம்; அறம்—தர்மம்- தர்மத்தால் அடையப்படும் உலகம் என்பது இலக்கணையால் கொண்டபொருள்.

மாமறையோர்க்கு—தண்டகாரண்யவாஸிகளான ரிஷிகளுக்கும் சுகர் வாமதேவர் முதலியவர்களுக்கும், (மோக்ஷத்தைத் தந்தவன்) (மாமறையோர்க்கு) என்று பாடமாகில் மார்க்கண்டேயனுக்கு முக்தியளித்தவன் எனக்கொள்க. திருமால் முக்தியைத் தருபவன் என்று நம்பிக்கை உண்டாவதற்காக மாமறையோர்க்கீந்த என்ற விசேஷணம். முன்பு பலருக்கு முக்தியளித்தவனொன்றால் நமக்கும் கொடுத்தருள்வன் என்று நம்பலாம். ஸகல புருஷார்த்தங்களையும் திருமால் ஒருவனே கொடுக்கவல்லன் என்பதும் தோன்றும்.

நினைப்பன் திருமாலை நீண்டதோள் காண
நினைப்பார் பிறப்பொன்றும் நேரார்—மனைப்பால்
பிறந்தார் பிறந்தெய்தும் பேரின்ப மெல்லாம்
துறந்தார் தொழுதாரத் தோள். (42)

நீண்டதோள்	அப்பெருமானது நீண்ட திருத்தோள்களை	தொழுதார் தோள்	அப்பெருமானுடைய திருத்தோள்களை ஆச்ரயித்தவர்கள்
காண	காண்பதற்கென்று		
திருமாலை	லக்ஷ்மீபதியை	மனைப்பால்	ஓரிடத்தில்
நினைப்பன்	சிந்தித்துக்கொண்டிருக்கிறேன்	பிறந்தார்	பிறவியை அடைந்தவர்கள்
நினைப்பார்	அவனை த்யானிப்பவர்கள்	பிறந்து எய்தும்	அங்கே ஜனித்து அனுபவிக்கிற
பிறப்பு ஒன்றும்	ஒருவிதமான ஜன்மத்தையும்	பேரின்பம் எல்லாம்	பெரிய ஸுகங்களெல்லா வற்றையும்
நேரார்	அடையமாட்டார்கள்.	துறந்தார்	விட்டுவிட்டவர்களாக ஆவார்கள்.

ஸம்ஸாரபோகங்களைத் துறந்தவர்களே பிறவித்துயரைத் தொலைத்துப் பேரின்படைவார்களென்கிறாரிதில்.

நினைப்பன்:— திருமகள் நாதனையே நினைத்துக்கொண்டி(கிறேன். அதுவும் ஒரு பிரயோஜநத்தைக் கருதியல்ல. பிராட யோடணைந்துப் பரமபோக்யமான திருத்தோள்களைக் காணவே, மென்றே. வேறு ஒரு பொருளை ஆசைப்பட்டவனல்லேன். அ னது திருத்தோள்களைக் காண்பதேதான் பிரயோஜனம். இப் எம்பெருமானை நினைப்பவர்கள் மறுபடியும் யாதொரு பிறவியை அடையமாட்டார்கள். ஸம்ஸாரத்திற்கு ஆளாகார்கள். மேலு அப்பெருமானது திருத்தோள்களை ஸேவித்தவர்கள் இப்புவி ஒருயர்ந்தவிடத்தில் பிறந்து அநுபவிக்கப்படும் உயர்ந்த ஸ களையெல்லாம் கண்கொடுத்துப் பாராதபடி துறந்தவராவார்க பெருமானது தோள்களை ஸேவித்துவிட்டால் பிறகு ஸம்ஸாரி அடைகிற எவ்வகைப்பட்ட பேரின்பமனைத்தையும் துறக்கே நேரும். ஆதலால் யானும் திருத்தோள்களைக் காண்பதற்கென் திருமாலை நினைக்கிறேன் என்றாராயிற்று. எம்பெருமானது தே களை ஸேவித்தால்தான் சிற்றின்பத்தைத் துறப்பார்கள். சிற் பத்தைத் துறந்தால்தான் அவன் தோள்களைக் காணலாம் என் இருவகையாகவும் பின்னடிகளுக்குப் பொருள் கூறலாம். சிற் பத்தை பேரின்பமென வரைந்தது பரிஹாஸத்திற்காக. ஸம்ஸா ரின் நினைவிலேயாகவுமாம்.

தோளிரண்டெட்டேழும் மூன்றும் முடியனைத்தும்
தாளிரண்டும் வீழச் சரந்துரந்தான்— தாளிரண்டும்
ஆர் தொழுவார் பாதமவை தொழுவதன்றே, என்
சீர் கெழுதோள் செய்யும் சிறப்பு. (4

இரண்டு எட்டு ஏழும் மூன்றும்	இரண்டு எட்டு ஏழுமூன்று இவை களை கூட்டுதலால் ஏற்படும் எண்ணுள்ள இருபது என்னிக் கையுள்ள	தாள் இரண்டும்	இரண்டு கால்களை யு
தோள்	கைகளையும்	வீழ	கீழே விழும்படி
முடி அனைத்தும்	எல்லாத் தலைகளையும்	சரம் துரந்தான்	பாணங்களைவிட்ட ஸ்ரீராம பிரா னை
		தாள் இரண்டும்	இரண்டு திருவ
		ஆர்	

தொழுவார்	ஸேவிக்கிறார்களோ	என்	என்னுடைய
பாதம் அவை	அவர்களுடைய திருவடிகளை	சீர் கெழு	அழகு நிறைந்த
		தோள்	கைகள்
தொழுவது அன்றே	வணங்குவ தல்லவா	செய்யும்	எனக்குச் செய்கிற
		சிறப்பு	மஹோபகாரம்.

கீழே எம்பெருமானது தோள்களை ஸேவிப்பதற்கென்று அவனைச் சிந்தித்திருப்பேனென்றார். இப்பொழுது கீழே சொன்னபடி எனக்கொரு நிர்ப்பந்தமில்லை. அவன் திருவடிகளை யார் தொழுகிறார்களோ; அவர்களை ஸேவிப்பதுதான் எனக்குப் பரமபுருஷார்த்தம் என்கிறாரிதில்.

தோளிரண்டு:— இரண்டு எட்டு ஏழு மூன்று இவைகளைக் கூட்டினால் வருந்தொகை இருபது. இருபது கைகளும் தலைகள் பத்தும், இரண்டு கால்களும் கீழே விழும்படி சரம் தொடுத்து ராவணனைக்கொன்ற ஸ்ரீராமபிரானுடைய இரண்டு திருவடிகளையும் யார் தொழுகிறார்களோ அவர்களுடைய திருவடிகளைத் தொழுவதுதான் எனக்கு வேண்டுவது. எனது கைகள் அப்பரனடியார்களின் அடிகளைக் கூப்பி வணங்கினால் அதுவே எனக்குக் கைகள் செய்த பரமோபகாரமென்று நினைப்பேன். உலகில் மற்றவர்கள் தங்களுக்கு த்ரவ்யம் ஸம்பாதித்தல் பிறரை ஹிம்ஸித்தல் முதலிய காரியங்களையே கைகள் செய்யுமுபகாரங்களாகக் கருதுவார்கள். நான் அப்படியல்ல. ஸ்ரீராமபக்தர்களைத் தொழுவதுதான் எனக்குக் கைகள் செய்யுமுபகாரம். பாகவதர்களைத் தொழுவதுதான் கைபடைத்ததற்குப் பயன் என்றபடி.

தோளிரண்டு:— தன்னைச் சரணமடைந்தவர்களுக்கு விரோதி என்பதால், தான் ஸ்ருஷ்டித்தான் என்பதையும் பாராமலிராவணனைக் கொலைசெய்தானென்பது. இருபது கைகள் என்று சுருங்கச்சொல்வது கிடக்க இரண்டு எட்டு என்று கூட்டியுரைத்தல் கோரமான வதையான சித்ரவதை செய்தானென்பதைக் காட்டுவதற்கென்றறிக. அல்லது வலிமையுள்ள விரோதிபகப்பட்டு விட்டானென்று உடனே ஒரு சரத்தால் அவனை மாய்விக்காமல் முதலில்

இரண்டு கைகள் பிறகு எட்டுக்கைகள் என்று வெட்டித்தள்
போதுபோக்கிக் கொன்ருன் என்றுகொண்டு ஆயாஸமின்றி
ருக்களை வதைப்பவன் என்று காட்டுவதற்காகவுமாம்.

ஆர் தொழுவார் பாதமவை:— ஜாதி குலாசாரங்களால் எ
கைப்பட்டவராயினும் ஸ்ரீராமனுடைய திருவடிகளைத் தொழுப
யிருந்தால் அவர்களே நமக்கு ஸ்வாமி என்பதும் தோன்றும்.

சிறந்தார்க் கெழுதுணையாம் செங்கண்மால் நாமம்
மறந்தாரை மானிடமா வையேன்—அறந்தாங்கும்
மாதவனே என்னும் மனம்படைத்து, மற்றவன் பே
ஓதுவதே நாவினு லுள்ளு. (4

சிறந்தார்க்கு	உயர்ந்தவர்களான ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு	அறம் தாங்கும்	தர்மங்களை வ தாங்கிக்கொண்டிரு
எழு துணையாம்	மேலான ஸஹாயமாயிருக்கிற	மாதவனே	திருமாலே (பரா
		என்னும்	என்கிற
செம் கண் மால்	சிவந்த கண்களையுடைய ஆச்ரித வ்யாமோஹமுள்ள பெருமானுடைய	மனம்	மனத்தை
		படைத்து	அடைந்து
		மற்று	மேலும்
நாமம்	திருநாமங்களை	அவன் பேர்	அவனது பெயர்க
மறந்தாரை	நினையாதவர்களை	நாவினுல்	நாக்கினுல்
மானிடமா	மனிதர்களாக	ஓதுவது	சொல்லுவதற்கு
வையேன்	நினைக்கமாட்டேன்	உள்ளு	நினைப்பாயாக.

கீழில் பரனடியார்களைப் பணிந்து நிற்பேனென்ருர். பரம
ஷனை மறந்திருப்பவர்களை வெறுக்கிருரிதில்.

சிறந்தார்க்கு:— சிறந்தவர்களான ஸ்ரீவைஷ்ணவர்களுக்
உற்ற துணையாயிருப்பன பெருமானுடைய திருநாமங்கள். ஸர்வே
ச்வரனுடைய திருநாமங்களைச் சொல்லுகிறவர்களை அவ்வீச்வர
ப்ராக்ருத போகங்களில் ருசியைத் தடுத்துச் சாமதசையில் த
நினைவையும் கொடுத்து அர்ச்சிராதி மார்க்கத்தில் தானே துணை

கவுமிருந்து தன்னுலகைச் சேர்ப்பிக்கிறானென்பது பற்றி ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஏற்றதுணையாவன பகவந்நாமங்கள். வாத்ஸல்யத்தால் சிவந்த திருக்கண்களையுடைய பெருமானுடைய திருநாமங்களை எவர் மறந்திருக்கிறார்களோ; அவர்களை மனிதர்களாகவே நான் கருதமாட்டேனென்கிறார். திருமங்கையாழ்வாரும் ஆன்விடையேழன்றடர்தார்க்காளானாரல்லாதார் மானிடவரல்லரென் றென்மனத்தே வைத்தேனே என்று ஏழு ரிஷபங்களை வென்ற கண்ணனுக் கடிமையல்லாதவர்களை மனிதர்களல்லரென்று என் மனத்தில் வைத்தேனென்றார். குந்துமணியை மாணிக்கமென்று எண்ணியிருப்பதுபோல் சிலர் மனிதரென்று ப்ரமித்திருக்கலாம் ரத்னபரீக்ஷை தெரிந்தவன் உள்ளபடியே யறியுமாப்போலே நாங்கள் அவ்வீசனது திருநாமங்களை மறந்திருப்பவர்களை மனிதர்களல்லரென்றே நினைக்கிறோமென்றார்.

நாம் செய்யவேண்டுவதை உணர்த்துகிறார் பின்னடிகளில். ஒவ்வொருயுகங்களிலும் அவதாரம் செய்து தர்மத்தை நன்றாய் ஸ்தாபித்துக்கொண்டிருக்கிற மாதவன் தான் பரன் என்கிற நிச்சயம் கொண்டு அவனுடைய பெயர்களைச் சொல்லுவதுதான் நமது கடமை. ஆதலால் அவனது பேர்களை சொல்லுவதுதான் நமக்கு உய்வதோருபாயம் என்று நினைப்பாய்; என்று தமது நெஞ்சுக்குத் தெரிவிப்பதுபோல் நமக்குத் தெளிவித்தார்.

உளதென் றிருமாவா றுண்டில்லை யென்று
தளர்தலத னருகும் சாரார்— அளவரிய
வேதத்தான் வேங்கடத்தான் விண்ணோர் முடிதோயும்
பாதத்தான் பாதம் பயின்று. (45)

அளவு அரிய	அளவிடமுடியாத	விண்ணோர்	நித்ய ஸூரிகளுடைய
வேதத்தான்	வேதங்களால் பிரதிபாதிக்கப் பட்டவனும்	முடிதோயும்	கிரீடங்கள் உறைந்திருக்கும்
வேங்கடத்தான்	திருவேங்கடத்தில் கோயில் கொண்டவனும்	பாதத்தான்	திருவடிகளையுடைய விஷ்ணுவினுடைய
		பாதம்	திருப்பாதங்களை

பயின்று	ஆச்ரயித்து	இல்லை என்று	இப்பொழுது லையெ
உளதென்று	நமக்கு பணம் இருக்கிறதென்று	தளர்தல்	துக்கப்படுகிறது
இருமாவார்	கர்வமடைய மாட்டார்கள்	அதன் அருகும்	என்கிற தன்மை ஸமீபத்தில்
உண்டு	ஏற்கனவே பணம் இருந்தது	சாரார்	நெருங்கமாட்ட

பங்கயக் கண்ணனைப் பயிலுமவர்கள் பணத்தின் லாபால
களில் கண்வைக்கமாட்டார்களென்கிறார்.

உளதென்று:—அநந்தா வை வேதா: என்று அளவிடமுடி
தவைகளான வேதங்களிலே பரனென்று ஓதப்பட்டவனும் ட
னோர்கள் காணும்படி திருவேங்கடத்தில் வந்து கோயில் கொ
வனும், நித்யஸூரிகள் தங்கள் முடியிலே தரித்த கிரீடங்கள் கீ
பிறளும்படி வணங்கும் பாதங்களையுடையவனுமான ஸ்வாமிய
திருவடிகளை அடைந்து அத்திருவடிகளையே தாரக போஷகபே
யங்களாகக் கொண்டவர்கள் தங்களுக்குச் செல்வமிருக்கிறதென
கர்வமடையமாட்டார்கள். இருந்த பணம் நஷ்டமானாலும் வரு
மாட்டார்கள். அவர்கள் ஈச்வரன் ஒருவனே அழிவில்லாதவ
அவன் ஒருவனே நம்மை எக்காலத்திலும் காப்பாற்றும் த
என்று எண்ணுகிறவர்களாதலால் அழியும் தன்மையுள்ள பல
"நின்னையே தான் வேண்டி நீள் செல்வம் வேண்டாதான் தன்
யே தான் வேண்டும் செல்வம்" என்கிறபடி தங்களைத் தா
வந்து கிட்டினாலும் அதனால் கர்வமடையமாட்டார்கள். தர்
னன்றோ புதிதாகப் பணம் கிடைத்தால் மாதா பிதாக்களையும் கு
வையும் அவமதித்துப் பலபடியாகப் பாய்ந்து குதிப்பான்.

நித்ய தரித்ரனாயிருப்பவனுக்குப் பணமில்லையென்கிற வரு
மதிகமாய் உண்டாகாது. ஒருகால் மிகுந்த பணத்துடனிரு
பிறகு அதை யிழந்தவன் படும் துயரம் அளவற்றது. அங்ஙன
மாதவன் பாதம் பயின்றவர் இழந்த பணத்திற்கும் சோகியார்க
சிலர் செல்வத்தைப் பறிகொடுத்தால் முதலில் வருந்திப் பிறகு தே
றலடைவார்கள். அப்படிக்குமின்றி தளர்ச்சியின் அருகேயே நெ

வார்கள். ந ப்ரஹ்ருஷ்யேத் ப்ரியம் ப்ராப்ய நோத்விஜேத் ப்ராப்ய சாப்ரியம் | ஸ்திரபுத்தி ரஸம்மூடோ ப்ரஹ்மவித் ப்ரஹ்மணி ஸ்தித: || ஸமலோஷ்டாச்மகாஞ்சன: || விரும்பிய பொருளைப் பெறுங்கால் ஸந்தோஷமடையான். விருப்பமற்றதைப் பெறுங் கால் துயரப்படான். ஸ்திரபுத்தியுள்ள மயக்கமற்ற பிரமஞானி பிரமத்தில் நிலையாய் நிற்கிறான். (ஓட்டையும் கல்லையும் பொன்னை யும் ஒன்றாகவே காண்கிறான்). என்ற கீதாசார்யன் வார்த்தை யின்படியிலே நிற்கிறான். ஆகவே பரமனடிபணிந்த பாகவர்கள் இன் பந்தரு பெருவீடு வந்தெய்திலென்? எண்ணிறந்த துன்பந்தரு நிர யம் பல சூழிலென்? என்று நினைத்து பகவதநுபவத்திலே இழிந்து உகந்து நிற்பார்களென்றபடி.

பயின்ற தரங்கம் திருக்கோட்டி பன்னாள்
பயின்றதுவும் வேங்கடமே பன்னாள்—பயின்ற
தணிதிகழும் சோலை யணி நீர்மலையே
மணிதிகழும் வண்டடக் கை மால். (46)

மணிதிகழும்	நீலரத்னம் போன்ற திருமேனியையும்	பயின்றதுவும்	உகந்து வஸித்ததுவும்
வண்தடக்கை	தானத்திறல் நீண்ட கைகளையுமுடைய	வேங்கடமே	திருமலையே
மால்	ஸர்வேச்வரன்	பன்னாள்	வெகுகாலம்
பயின்றது	விரும்பிவஸித்தது	பயின்றது	மகிழ்ந்துறைந்த விடம்
அரங்கம்	ஸ்ரீ ரங்கமும்	அணிதிகழும்	அழகு விளங்கும்
திருக்கோட்டி	திருக்கோட்டியூரும்.	சோலை	சோலைகளையுடைய
பன்னாள்	பலகாலம்	அணி	அலங்காரமான
		நீர்மலை ஏ	திரு நீர்மலை என்கிற திருப்பதியே.

இப்படித் தன்னடியார்களைத் தன் குணங்களில் உகக்கும்படி செய்தும் மற்ற சில்லறைப் பொருள்களில் கண்ணோட்டமுண்டாகாதவண்ணம் செய்கிறவனுமான ஸர்வேச்வரனை நினைந்துருகி, அவன் அனைத்துலகும் உய்யும் வண்ணம் அணுகிவஸிக்கும் திருப்பதிகளைப் பேசிக் க்ருதக்ருத்யராகிறாரிப்பாட்டில்.

பயின்றது:— நித்ய ஸூரிகளால் நிறைந்த கலங்காப் பெருநகரிருக்கச் செய்தேயும் சிறிதும் வெறுப்பின்றி உகப்புடன் திருவரங்கம், திருக்கோட்டியூர், திருவேங்கடம், இப்புவிக்கு ஆபரணம் போன்ற சோலைகள் நிறைந்த திருநீர்மலை முதலிய பல திவ்யதேசங்களில் பல நாட்களாய் வாஸம் செய்கிறான் காண். அவ்வர்ச்சாவதாரங்களிலும் அவனது திருமேனி மரகதமணிபோல் விளங்குகிறது. திருக்கைகளும் கொடுத்துக் கொடுத்து நீண்டுகிடக்கின்றன. அத்திருக்கைகளிலே குணபூர்த்தியைப் பாரீர்; என்று பலபடியாலும் அவன் அருளி உகக்கும் திருப்பதிகளைப் பேசித் தன்யராகத் தம்மை நினைக்கிறார்.

அணிதிகழும் சோலை. திருமாலிருஞ்சோலை என்று பிரித்துச் சொல்லலாகவுமாம்.

மாலை யரியுருவன் பாதமல ரணிந்து
காலை தொழுதெழுமின் கைகோலி—ஞாலம்
அளந் திடந் துண்டுமிழ்ந்த வண்ணலை மற்றல்லால்
உளங் கிடந்த வாற்றா லுணர்ந்து (47

ஞாலம்	பூமியை	ஆற்றால்	பூஜிக்கவேண்டும் ப்ரகாரத்தால்
அளந்து	திருவடியால் அளந்தும்	உணர்ந்து	நன்றாய் தெரிந்து கொண்டு
இடந்து	பாதாளலோகத்திலிருந்து உயரே தூக்கியும்	அரி உருவன்	நரசிங்கமாய்த் தோன்றினவப்பெருமானது
உண்டு	சாப்பிட்டும்		
உமிழ்ந்த	வெளிப்படுத்தினவனுமான	பாதமலர்	திருவடித் தாமரைகளில்
அண்ணலை	ஸ்வாமியை	மாலை	புஷ்பமாலையை
அல்லால்	நான் சொன்னதை தவிர்த்து	அணிந்து	ஸமர்ப்பித்து
		காலை	விடியற்காலையில்
மற்று	வேறான	கைகோலி	கைகளைக் கூப்பிக் கொண்டு
உளம் கிடந்த	உங்கள் மனத்திலிருக்கிற	தொழுது	வணங்கி
		எழுமின்	உஜ்ஜீவியுங்கோள்.

ஸர்வேச்வரன் வாத்ஸல்யத்தால் பல திவ்ய தேசங்களில் உகந்து வாஸம் செய்கிறானென்றபின் எல்லோரும் அவனை ஆச்ரயியுங்கோளென்கிறார்.

மாலை:— எம்பெருமான் நாமெல்லாரும் நன்மையையடையும் பொருட்டுப் பரமஸௌலப்யனாய் பற்பல திவ்யதேசங்களில் எழுந்தருளியிருக்கிறான். அவனிடம் சென்று, ஹிரண்யாக்ஷனால் அபஹரிக்கப்பட்ட பூமியைத் தூக்கி எடுத்துவந்தவனே! மஹாபலியிடம் மாணியாய்ச் சென்றிரந்து பூமியை அளந்தவனே! ப்ரளயத்திலிருந்தும் இப்பிரபஞ்சத்தை மீட்டு தன் வயிற்றில் வைத்துக் காத்தவனே! பிறகு வெளிநாடு காண உமிழ்ந்தவனே; என்று பலவாறாக அவன் செய்த உபகாரங்களையெல்லாம் பேசித் துதியுங்கோள். இப்படி அவன் செய்த பொதுவான உபகாரங்களைத் தவிர தனித்தனியே உங்களுக்கு அவன் செய்தருளிய உபகாரங்கள் பல விருக்கும். உங்களுக்குச் சொந்தமான பல குடும்ப ஸம்ருத்திகளும் ஸர்வேச்வரனால் கொடுக்கப்பட்டனவாதலால் அவைகளையும் சொல்லித்துதியுங்கோள். இப்படி நான் உபதேசித்ததைத்தவிர்த்து உங்கள் மனத்திலிருக்கும் சில உபகாரங்களையும் குணங்களையும் சொல்லித்துதித்து அவன் திருவடிகளில் புஷ்பமாலைகளை ஸமர்ப்பித்து கைகளைக் கூப்பிக்கொண்டு ஸேவித்து ஆத்மலாபத்தை யடையுங்கோள்; என்று ஸம்ஸாரிகளனைவர்க்குமுபதேசித்தார்.

அரியுருவன்:— திவ்ய தேசங்களில் பெரும்பாலும் ஸ்ரீ ராம க்ருஷ்ண ந்ருஸிம்ஹ வராஹாதிகளான விபவாவதாரத் திருமேனியுடனேயே பெருமான் ஸாந்நித்யம் செய்வதால், அவற்றுள் ஒரு திருமேனியைக் காட்டுகிறார் அரியுருவன் என்று. ந்ருஸிம்ஹன் என்பது ஆங்காங்கு காணப்படும் திவ்யமூர்த்திகளனைத்துக்குமுபலக்ஷணம்.

காலை:— ஸத்வோத்தரமான காலமானதால் விடியற்காலையில் ஸேவியுங்கோள் என்றபடி.

உணர்ந்தாய் மறைநான்கு மோதினாய் நீதி
மணந்தாய் மலர்மகள் தோள்மாலே—மணந்தாய்போ
வேயிருஞ்சாரல் வியலிருஞாலம் சூழ்
மாயிருஞ் சோலை மலை. (48

மாலே	ஸர்வேச்வரனே! நீ	வியல் இரு	ஆச்சரியகரமயும் சாலமாயுமிருக்கிற
மறைநான்கும்	நான்கு வேதங்களையும்	ஞாலம் சூழ்	பூமியிலுள்ளவர்களால் சூழப்பட்டதும்
உணர்ந்தாய்	அறிந்தாய்		
நீதி	ஸ்மிருதிகளையும்		
ஓதினாய்	ப்ருவ்ருத்திப்பித்தாய்	மா—இரும் சோலை	உயர்ந்தும் பரவி மிருக்கிற சோலை களால் சூழப்பட்ட துமா
மலர் மகள் தோள்	லக்ஷ்மீ தேவியினுடைய திருத்தோள்களை	மலை	திருவேங்கட மலையிலே
மணந்தாய்	ஆலிங்கனம் செய்து கொண்டாய்	போய்	சென்று
		மணந்தாய்	சேர்ந்தாய்.
வேய் இரும் சாரல்	மூங்கில்களால் நிறைந்த பார்ச்வங்களையுடையதாயும்		

எம்பெருமானைத் துதிசெய்யும் பிரகாரத்தை நமக்குக் கற்பி கிறார்போலுகிப்பாட்டால்.

உணர்ந்தாய்:— கல்பங்கள்தோறும் வேதங்களை மறவா படி ஞாபகத்தில் வைத்துக்கொண்டு பிரமனுக்கு உபதேசம் செய் வனே! நான்கு புருஷார்த்தங்களுக்கும் ஸாதனமான வேதங்களை கொடுத்தருளினவனே! மன்வாதி ஸ்ம்ருதிகளையும் ப்ரவ்ருத்திப் பி தருளினவனே! பிரஜைகளெல்லாம் உன்னை ஆச்ரயிப்பதற்குறு பான புருஷகாரபூதையான பிராட்டியை மணந்தவனே! பெரிய பிராட்டியாருடைய திருத்தோள்களை ஸம்ச்லேஷிப்பதால் ஆச்ரித களுடைய அபராதங்களை மறந்திருப்பவனே! இத்தனை யுபகாரங்கள் செய்ததுமன்றி இம்மண்ணோர்கள் கண்களால் கண்டனுபவிக்கலா படி மூங்கில்கள் நிறைந்துள்ள வடிவாரங்களையுடையதாம் ஆச்சரிய படிப்படி பூமியிலுள்ளவர்களால் பிரதக்ஷிணம் செய்யப்பட்டு வணங்

கப்படுகிறதுமான திருமலையைச் சேர்ந்துவந்து வாஸம் செய்கிறவனே! என்று அவன் செய்த உபகாரங்களை விண்ணப்பம்செய்து தொழுதெழுமின் என்று உபதேசம் செய்தனர்.

உணர்ந்தாய்:— வேதங்கள் ஈச்வரனைப்போல் நித்யமானவை. மற்றவஸ்துக்களைப்போல் அழியக்கூடியவையல்ல. முந்தின கல்பத்தின்படி முன் ஆநு பூர்வியுடனேயே அறிந்துவைத்து மறுகல்பத்தின் ஆதியில் அப்படியே பிரமனுக்குபதேசிக்கிறானென்பதன்றி அவன் வேதங்களை ஸ்ருஷ்டிக்கிறானல்லனென்பது பற்றி உணர்ந்தாய் என்றது.

மாயிரும் சோலை மலை:— மிகவும் உயர்ந்த விருக்ஷங்களையுடையதும் மிகவும் விசாலமாயுள்ள சோலைகளுடன் கூடினதுமான திருவேங்கடமலை என்றபடி. அல்லது உயர்ந்த பரம்பின சோலைகளுடன் கூடின திருமாலிருஞ்சோலை மலையைச் சொல்லிற்றாகவுமாம்.

வியலிருஞாலம்சூழ்:— நாள்தோறும் தென்னாடும் வடநாடுமிரண்டுபோய்த் திருமலையை வலம்வந்து தொழுவதைக் கண்டால் பெருவியப்பைத் தருகிறது என்றதாம்.

மலையேழும் மாநிலங்களேழு மதிர
குலை சூழ் குரை கடல்களேழும்—முலைசூழ்ந்த
நஞ்சுரத்துப் பெண்ணை நவின்றுண்ட நாவனென்று
அஞ்சாதென் னெஞ்சே யழை. (49)

என்நெஞ்சே	எனது மனமே!		
மலை ஏழும்	ஏழு பர்வதங்களும்	நஞ்சு	
மாநிலங்கள் ஏழும்	பூமியிலடங்கிய ஸப்தத்வீபங்களும்	உரத்து	மிகுந்த பலமுள்ள
		பெண்ணை	பூதனையை
குலைசூழ்	சுற்றிலும்கரையால் சூழப்பட்டதாயும்		மழலையாகப் பேசிக்கொண்டு
குரை	சப்தம் செய்துகொண்டுமிருக்கிற	உண்ட	முடித்த
		நாவன் என்று	நாக்கையுடையவனென்று
கடல்கள் ஏழும்	ஏழு ஸமுத்திரங்களுட		பயப்படாமல்
அதிர	நடுங்கி ஆடும்படி		கூப்பிடுவாயாக.
முலை	கொங்கைகளில்		

இப்படித்திருமலை யெம்பெருமானை யாச்ரயித்தபின் அவன் திருநாமங்களைச் சொல்லியழைக்க வேணுமென்கிறார்.

மலையேழும்:— நெஞ்சே! அவன் இங்ஙனம் நாட்டிற்குச் செய்த வுபகாரங்களை யனுஸந்தித்த பின்பும் நாம் வெறுமனே வீற்றிருப்பது தகுமோ; அவன் பேர்களை ஏழுலகும் கேட்கும் படி சொல்லி அவனை அழைக்கவேண்டாமோ! பூதனையின் நஞ்சு தீண்டிய முலையை உண்டு அவளுயிரை மாய்த்த கண்ணனே என்று ஏழுகுலபர்வதங்களும் ஏழுத்வீபங்களும் ஏழு கடல்களும் அதி ரும்படி உயர்ந்த குரலில் சொல்லி அவனைக் கூப்பிடுவாயாக. நட மிடம் பிரதிபந்தக வர்க்கங்கள் பல கிடக்கின்றனவே; என்ன செய்வது: என்று நீ பயப்படவேண்டாம். அவைகள் பூதனையைப் போல் மாய்ந்துவிடும். அந்த தேவாதிதேவனை நம்முழத்தைவாயால் எங்ஙனம் சொல்வது என்று நீ அஞ்சவேண்டாம், அவன் தனது திருநாமங்களைச் சொல்லுவதற்கென்றேதான் வாகிந்திரியத்தைப் படைத்திருக்கிறான். நாடுநகரமும் நன்கறிய நமோ நாராயணாயவென்று பாடுமனமுடைப் பத்தருள்ளீர் வந்து பல்லாண்டு கூறுமினே. என்றது போல் உலகங்களெல்லாம் அதிரும்படியாக உச்சஸ்வரத்துடன் கூவியழையுங்கோளென்கிறார்.

நவின்றுண்ட நாவன்:— குழந்தைகள் முலையுண்ணும் பொழுது ஸந்தோஷத்தால் மதலைச் சொற்களைச் சொல்வதுபோல் கண்ணனும் மதலைச்சொற்களைச் சொல்லிக்கொண்டே பூதனையின் முலையுண்டானென்க.

மலையேழும்:— இமயம், மந்தரம், கைலை, வடவிந்தம், நிடதம் ஹேமகூடம், நீலகிரி என்பவை.

மாநிலங்களேழும்:— நாவலந்தீவம், அரலித் தீவம், குசையின் தீவம், க்ரவுஞ்சத் தீவம், சால்மலித் தீவம், தெங்கின் தீவம் புஷ்கரத் தீவம்.

கடல்களேழும்:— உப்பு, கரும்பு, மது, நெய், பால், சுத்தஜலம் என்று கடல்களேழுவகையாகும்.

அழைப்பன் திருமாலை யாங்கவர்கள் சொன்ன
பிழைப்பில் பெரும்பெயரே பேசி—இழைப்பரிய
வாயவனே யாதவனே யென்றவனை யார்முகப்பும்
மாயவனே யென்று மதித்து (50)

இழைப்பு அரிய ஆயவனே	நினைக்கமுடியாதபடி பெண்களைப் படுத்தும் இடையனே
யாதவனே என்றும்	யதுகுலத்தில் பிறந்தவனே யென்றும்
மாயவனே என்றும்	ஆச்சரியமான லீலைகளைச் செய்பவனே யென்றும்
மதித்து	அவனை நினைத்துக் கொண்டாடி
ஆங்கு	அந்த திருவாய்ப்பாடியில்
அவர்கள்	அந்த கோபஸ்த்ரீகள்
சொன்ன	சொல்லிய
பிழைப்பு இல்	கேட்டு ஜீவிக்கமுடியாத(மனத்தை உருக்குகிற)
பெரும் பெயரே	பெருமையுள்ள திருநாமங்களையே
பேசி	சொல்லி
திருமாலை அவனை	ச்ரிய: பதியான அந்த தேவனை
யார் முகப்பும்	எல்லார் முன்னிலையிலும்
அழைப்பன்	கூப்பிடுவேன்.

கீழ்ப்பாசுரத்தின்படியே தான் வெட்கத்தை விட்டு எல்லார் முன்னிலையிலும் அவன் பெயரைச் சொல்லி யழைக்கிறேனென்கிறார்.

அழைப்பன் :— பரமபத நாதனாயிருந்து வைத்துத் திருவாய்ப்பாடியில் வந்து இடைப்பெண்களை நினைக்கவரிதானபடி துன்பப்படுத்தினவன்; அதுவுமன்றிக்கே ஆச்சரியகரமான பற்பல விளையாடல்களைச் செய்தவன்; என்று பலபடிகளாலும் அவனே பரனென்று ஆங்கே இடைப்பெண்கள் சொல்லியழைத்த பெயர்களையே நானும் சொல்லியழைக்கிறேன். என் முன்னிலையில் யார் இருந்தாலும் நான் லஜ்ஜைப்படமாட்டேன். அத்தா அரியே என்றன்னை யழைக்கப் பித்தாவென்று பேசுவாரே என்கிற கவலையுமெனக்கில்லை ஆதலால் யாவர் முன்னிலையிலும் அஞ்சாது அவனை யழைப்பேன்.

ஆங்கவர்கள்:— கீழ்ப்பாட்டில் பூதனையின் வரலாறு ப்ரஸ்து மானதால் இங்கு ஆங்கு என்பதற்கு திருவாய்ப்பாடி என் பொருள்கொண்டு இடைப்பெண்கள் என்று வரையலாயிற்று பிழைப்பில் பெரும்பெயரே பேசி, த்ருடியுகாயதே த்வாமபச் தாம், ஊழியில் பெரிதால் நாழிகையென்னும் என்றும் சொ லும்படி ஒரு நொடிப்பொழுது பிரிந்தாலும் அலற்றப் பண்ணு மியல்பினனுடைய திருநாமங்கள், அல்லது ஸௌசீல்ய ஸௌல யாதி குணங்களைச் சொல்லுகிறபடியால் வல்வினையேனை யீர்கின் குணங்கள் என்றபடி காதில் கேட்டவாறே மனத்தை உருக செய்யும் திருநாமங்கள் என்னவுமாம்.

பெரும் பெயர்களாவன:— கோவிந்தன், கோபாலன், வெண் ணெயைத் திருடினவன், குடமாடி, தாமோதரன், மத்தாலடிபட் டன் என்பன போன்றனவாம். பரத்வமனுடைய நீர்மையை காட்டுகிறபடியால் அவைகள் பெரும் பெயராயின.

மதிக்கண்டாய் நெஞ்சே மணிவண்ணன் பாதம்
மதிக்கண்டாய் மற்றவன் பேர்தன்னை —மதிக்கண்டாய்
பேராழிநின்று பெயர்ந்து கடல் கடைந்த
நீராழி வண்ணன் நிறம். (51

நெஞ்சே	மனமே !
மணி வண்ணன் பாதம்	மரகத மணிபோன்ற நிறங்கொண்ட பெருமான் திருவடிகளை
மதிக்கண்டாய்	நினைக்கக்கடவாய்.
மற்று	மேலும்
அவன் பேர் தன்னை	அவனது திருநாமங்களை
மதிக்கண்டாய்	நினைக்கக்கடவாய்
பேர் ஆழி நின்று	பெரியஸமுத்திரத்திலிருந்து
பெயர்ந்து	எழுந்திருந்து
கடல் கடைந்த	கடலை மதனம் செய்
நீர் ஆழி வண்ணன்	ஜலம் நிறைந்துள்ள கடல் போன்ற தி மேனி ... வனது
நிறம்	திருமேனியின்நிறத்தை
மதிக்கண்டாய்	சிந்திக்கக் கடவாய்.

இடைச்சிமார்கள் சொல்லியழைத்த திருநாமங்களாலேயே நானும் அவ்விசனை யார்முகப்பும் கூவியழைப்பேனென்றார். இதில் இங்ஙனமே தனக்கு யாத்திரை நடக்கவேணுமென்று விரும்பி தன் நெஞ்சுக்குத் தெரிவிக்கிறார்.

மதிக்கண்டாய்:— உலகில் மனிதர்கள் முதலில் யாதொன்றை மனத்திலுல் நினைக்கிறார்களோ அதைத்தான் வாயால் பேசுகிறார்கள். அதைத்தான் நடத்தையிலும் அனுஸரிக்கிறார்கள். ஆகலால் முதலில் நெஞ்சைத்தான் திருத்தவேண்டும். ஆனது பற்றி நெஞ்சைக்குறித்துப் பேசுகிறாராயிற்று.

நெஞ்சே! நீ மரகத மணிபோல் தாபங்களைப்போக்கும் கண்ணுக்கினிய கருமுகில் வண்ணனுடைய திருவடிகளையே எப்பொழுதும் நினைத்துக்கொண்டிரு; மேலும் அவனுடைய நாமங்களாயிரத்தையும் நாவால் நவின்றேத்தும்படி அவைகளையே சிந்தித்துக் கொண்டிரு; பாற்கடலில் பள்ளிகொண்டிருந்து தேவர்களுக்காக எழுந்திருந்து அக்கடலையே தானே நின்று கடைந்து, அக்கடல் போன்ற நிறமுள்ள பெருமான் திருவடிகளைத் தலைக்கணியாகக் கொள்வதற்காக அத்திருமேனி நிறத்தையே அனுஸந்தித்திரு என்று உணர்த்தினர்.

தனது ஸுகத்தையும் பேணாது பிரயோஜனாந்தரபரர்களான தேவர்களுக்கும் திருமேனி நோவ வேலைசெய்து கார்யங்களைத் தலைக்கட்டிவைக்கிறானென்றும், த்யானம் செய்வதற்கு ஸுலபமான அழகான வுடம்புள்ளவன் என்பதும் பின்னடிகளுக்குத் திரண்டபொருள்.

பெயர்ந்து:— திருப்பாற் கடல் நாதனுடைய திருமேனியழகை கிடந்ததோர் கிடக்கை கண்டும் எங்ஙனம் மறந்து வாழ்கேன் என்றபடி யநுபவிக்கப்பெறாது எழுந்திருந்து வந்து எங்களுக்குக் காரியம் செய்துகொடுக்கவேணுமென்று வேண்டவும் உடனே எழுந்திருந்து காரியம் செய்தானென்ற மஹாகுணம் வெளிப்படுத்தியதாகும்.

நிறங்கரியன் செய்ய நெடுமலராள் மார்வன்
அறம்பெரியனா ரதறிவார்—மறம் புரிந்த
வாளரக்கன் போல்வானை வானவர் கோன் தானத்து
நீளிருக்கைக் குய்த்தான் நெறி. (52)

நிறம் கரியன்	கருத்த நிறமுள்ளவனும்
செய்யநெடுமலராள் மார்வன்	சிவந்தும் பெரியதாயுமிருக்கிற தாமரையில் வாஸம் செய்கிற லக்ஷ்மியை மார்விலே தரித்தவனும்
அறம் பெரியன்	தர்மத்தால் சிறந்தவனும்
மறம்புரிந்த	கொடிய கார்யங்களைச் செய்துகொண்டிருக்கிற
வாள் அரக்க போல வானை	வாள் என்கி த்தையுடைய ராவணனைப்போன்ற மஹாபலியை
வானவர்கோன் தானத்து	இந்திரனுடைய ஸ்தானத்தில்
நீள் இருக்கைக்கு	வெகுகாலம் வஸிப்பதற்காக
உய்த்தான்	'ல் வைத்
அது நெறி	அந்த தயையின் மார்க்கத்தை
ஆர் அறிவார்	யார் தெரிந்துகொள்ள வல்லர்

தம் நெஞ்சுக்கு உபதேசித்தபின் அருளின் பெருமையைப் பேசுகிறார் இதில்.

நிறம்:— ஆச்ரிதர்களுடைய தாபங்களைப் போக்குமதான கருத்தநிறமுள்ள திருமேனியை யுடையவனும், ஆச்ரிதர்கள் அஞ்சாமல் அணுகும் வண்ணம் பெரியபிராட்டியாரைத் திருமார்விலே தரித்திருப்பவனும், அந்தப் பெரிய பிராட்டியாரின் போகமயக்குகளால் ஆந்ருசம்ஸ்யம் என்கிற மஹாகுணத்தைக் கைக்கொண்டவனுமான ஸர்வேச்வரனுடைய ஔதார்யத்தை யார் அறிவார். அவனது அருள்புரியும் ப்ரகாரத்தை ஒருவராலும் அறிய முடியாது என்றபடி. இந்த மஹாகுணத்தை நாமறிந்து அவனை அடையும்படிக்கு ஒரு உதாஹரணம் காட்டுகிறார் பின்னடிகளால். தனது வலிமையால் இந்திரனையும் வென்று மூன்றுலோகங்களை

யும் ஆக்ரமித்துக்கொண்டு அரசு புரியும் மஹாபலியை க்ரூரமான செயல்களையே செய்துவந்த ராவணனைப் போல் வதைக்கவேண்டியிருக்க, அப்படிச்செய்யாமல் அவனிடம் மூவடி மண்ணிரந்து உலகங்களையளந்து அம்மஹாபலிக்குத் தன் திருவடியையும் கொடுத்து, இப்பொழுது நடக்கும் வைவஸ்வதமன்வந்தரத்திற்குப் பிறகு ஸாவர்ணிமன்வந்தரத்தில் இந்திர பதத்தையும் கொடுப்பதாகப் பிரதிஜ்ஞை செய்து அதற்காகப் பாதாளலோகத்தில் அவனை ஸகல பந்துக்களுடனும் ஒருவிதமான கஷ்டமுமின்றி ஸுகமாக அமர்த்தியிருக்கிறான். இப்படி ரிபூணாமபிவத்ஸல என்றபடி சத்ருக்களிடமும் வாத்ஸல்யத்துடன் அருள்புரியும் தன்மை மற்றொருவரிடம் காணமுடியுமோ? ஆதலால் அவனது குணத்தையறிந்து யாவரும் ஆச்ரயிக்கவேணுமென்பது அறிவிக்கப்படுகிறது.

ஏஷமேப்ராபித: ஸ்தானம் துஷ்ப்ராபமமரைரபி । ஸாவர்ணேரந்தரஸ்யாயம் பவிதேந்த்ரோ மதாச்ரய: ॥ தாவத்ஸுதல மத்யாஸ்தாம் விச்வகர்ம விநிர்மிதம் । தநாதயோ வ்யாதயச்ச க்லமஸ்தந்த்ரா: பராபவ: । நோபஸர்கா நிவஸதாம் ஸம்பவந்தி மமேக்ஷயா ॥ இந்த்ரஸேன மஹாராஜ யாஹிபோ பத்ரமஸ்துதே । ஸுதலம் ஸ்வர்க்கிபி: ப்ரார்த்யம் ஜ்ஞாதிபி: பரிவாரித: ॥ இம்மாவலி தேவர்களாலும் அடையமுடியாத பரமபதத்தை (இறுதியில்) அடைவிக்கப் போகிறான். (அதற்குள் வரப்போகும்) ஸாவர்ணி மந்வந்திரத்தில் இவன் இந்திரனுயிருக்கப்போகிறான், அதுவரையிலும் விச்வகர்மாவால் உண்டுபண்ணப்பட்ட ஸுதலலோகத்தில் வாஸம்செய்யட்டும்.

என்னுடைய கடாக்ஷத்தால் அங்கே வஸிப்பவர்களுக்கு தநமில்லாமையும் வியாதிகளும் உடம்புக்கு ஓய்வும் சத்ருக்களின் ஆக்ரமிப்பும் சத்ருக்களால் அவமதிப்பும் நாசமும் இவைமுதலான துக்கங்களெல்லாம் உண்டாகாது. ஓ இந்திரஸேனனென்னும் மாவலியே! விண்ணவர்களாலும் வேண்டப்படும் ஸுதல லோகத்திற்கு உனது பந்துக்களுடன் செல்வாயாக; உனக்கு மங்களமுண்டாகக்கடவது என்று அவன் அநுக்ரஹம் செய்ததை இங்கு நினைக்கவேண்டும்.

மிகவும் கொடியவர்களாயிருப்பவரிடமும் கரைந்த மனமுடை வனுயிருக்கும் தன்மையென்ற ஆந்ருசம்ஸ்ய குணம் இப்பாட்டி பேசப்பட்டதாகும்.

நெறியார் குழல்கற்றை முன்னின்று பின்தாழ்ந்து
அறியா திளங்கிரியென் றெண்ணி—பிரியாது
பூங்கொடிகள் வைகும் பொருபுனல் குன்றென்னும்
வேங்கடமே யாம் விரும்பும் வெற்பு. (5

நெறியார்	திருமலை யேறும் மார்க்கத்தி லிருப்ப வர்களுடைய	பிரியாது	அவ்விடத்தை விடாம
முன்னின்று	முன் பக்கத்திலிருந்து	பூங்கொடிகள்	புஷ்பக் கொடிக
பின் தாழ்ந்து	பின்னே தாழ்த்து தொங்குகிற	வைகும்	வாஸம் செய்யும்
குழல்கற்றை	தலைமயிர் முடியை	பொருபுனல் குன்று என்னும்	அலையெறிகிற ஜலத்தையுடைய மலையென்று பிரவஹித்தமா
அறியாது	இன்னதென்று தெரிந்துகொள்ளாமல்	வேங்கடமே	திருவேங்கட மலை தா
இளம் கிரிஎன்று எண்ணி	சிறியமலை என்று நினைத்து	யாம் விரும்பும்	நாம் ஆசைப்படுகி
		வெற்பு	மலையாகும்.

ஸ்ரீய: பதியினுடைய அருள்புரியும் தன்மையை அறிந்தேனு யின பின்பு நான் ஆசைப்படும் பொருள் திருமலை ஒன்றுதானென் கிறாரிதில்.

நெறியார்:— எம்பெருமான் திறத்தில் சிறந்த பக்தி பூண்ட வர்கள் அவனுறையுமிடமான திருமலையில் ஏதாகிலுமொரு வறிவில் லாப் பொருளாகவிருப்பதும் நமக்குப் போக்யமெனக் கருதித் திரு மலைக்கெழுந்தருளி மலையினுச்சிக்கிச் செல்லும் மார்க்கங்களிலே நின்று பெருமானைத் தியானம் செய்கிறார்கள். முன்பொருகால் வால்மீகி என்னும் முனிவர் தன்னுடம்பையும் மறந்து தவஞ்செய் யுங்கால் அவர் உடம்பு முழுவதும் புற்றுமண் மூடிக்கொண்டதென் றும், அங்ஙனம் த்யானம் செய்யப்படும் விஷயத்திலுண்டான

ஈடுபாட்டால் அவருக்கு வால்மீகி என்னும் பெயர் விளங்கிற்றென்னும் நாம் கேட்டிருப்பதுபோல் திருமலையின் வழியில் நின்று அவ்வெம்பெருமானைத் தியானம் செய்துகொண்டிருக்குமவர்கள் சிறிதும் மூச்சுவிடாமலும் சரீரத்தை அசைக்காமலும் அசேதனம்போல் நின்று உடம்பையும் மறந்து அப்பரம்பொருளை அநுபவிக்கிறார்கள். அப்போது அங்கேயருகில் வளர்ந்திருக்கும் புஷ்பக்கொடிகள் அவர்களை அசையாமலிருக்கிறகாரணம் பற்றி பக்தர்களென்றறியாமல், அவர்கள் தலையில் முன்னேவளர்ந்து பின்னே தொங்குகிற குழல்களையும் பார்த்தறியாமல் இதுவும் அசையாமல் நிற்பதொரு சிறுமலை என்றெண்ணி அவர்கள் மீதுபடர்ந்து வளர்ந்து கிடக்கின்றன. இப்படி தன்னுடம்பில் புஷ்பக்கொடிகள் படர்ந்து வளர்வதையும் அறியாமல் பகவத்விஷயத்தில் ஈடுபட்ட பாகவதோத்தமர்கள் பலர் வாஸம் செய்யும் திருவேங்கடமலைதான் அநந்யப்ரயோஜனர்களான நம்போன்றவர்கள் விரும்பும் மலை. அத்திருமலையொன்றே நம் வினைகளைப் போக்கும். அம்மலையில் வாஸம் செய்யும் பெருமானைக் கூட நான் விரும்பவில்லை. அத்திருமலையாழ்வாரையே நான் விரும்புகிறேன் என்றார்.

பொருபுனல் குன்று:— "அருவிசோரும் வேங்கடம்" என்றபடி பலவருவிகள் நிறைந்திருப்பதால் குளிர்ந்தும் தாபஹரமுமாயிருக்கிற திருமலை என்றபடி. புஷ்பக்கொடிகள் வளர்வதற்குத்தக்க ஜலஸம்ருத்தியுள்ள திருமலை என்பது.

வெற்பென் றிருஞ்சோலை வேங்கடமென் றிவ்விரண்டும்
நிற்பென்று நீமதிக்கும் நீர்மைபோல்— நிற்பென்
றுளங்கோயி லுள்ளம் வைத்துள்ளினேன், வெள்ளத்
திளங்கோயில் கைவிடேலென்று. (54)

வெற்பு என்ற	தெற்குத் திருமலை என்கிற
இரும் சோலை	திருமாலிருஞ்சோலையென்ன
வேங்கடம்	வடக்குத்திருமலையான திருவேங்கடமென்ன
என்ற இவ்விரண்டும்	ஆகிய இத்திருப்பதிகளிரண்டும்
நிற்பு என்று	நாம் வாஸம் செய்யுமிடமென்று

நீ மதிக்கும் நீர்மைபோல்	நீ திருவுள்ளமுகந்து கொண்டாடும் தன்மையை உடைத்தாயிருப்பதுபோல்	உள்ளம் வைத்து	மனத்தில் நினைத்து
		வெள்ளத்து இளம் கோயில்	திருப்பாற்கடலென்னும் பாலாலயத்தை
உளம் கோயில்	எனது நெஞ்சமாகிய கோயிலும்	கைவிடேல்	கைவிடக் கூடாதென்று
நிற்பு என்று	நீ அன்புடன் வசிக்குமிடமென்று	என்று உள்ளினேன்	பிரார்த்திக்கிறேன்.

ஆழ்வார் வேங்கடமே யாம் விரும்பும் வெற்பு: என்று திருமலையை விரும்பவே அத்திருமலையெம்பெருமானும் அத்திருமலையை விட்டுவிட்டு ஆழ்வாருடைய நெஞ்சிலே வஸிக்கவேணுமென்று ஆசைப்படவே அதையறிந்த ஆழ்வார் அப்பெருமானிடம் விண்ணப்பம் செய்கிறார்.

வெற்பு:— ஸ்ரீய: பதியான நாராயணனுடைய அவதாரங்களான விபவ அர்ச்சாதி மூர்த்திகளெல்லாவற்றிற்கும் வெள்ளத்துவில் துயிலமர்ந்த வித்து எனப்படும் திருப்பாற்கடல் நாதனே மூலகந்தமெனப் பெரியோர்கள் கொள்கை. அப்பெருமான் திருப்பாற்கடல், திருவேங்கடம் திருமாலிருஞ்சோலை முதலிய திருப்பதிகளில் வாஸம் செய்வதின் கருத்து, தாம் பெருங்கோயிலாகக்கருதும் தன்னடியார்களின் நெஞ்சில் புகுந்து வாஸம் செய்யவேண்டுமென்பதுதான். தன்னையே விரும்பியிருக்கும் மெய்யடியார்கள் எப்பொழுது அகப்படுகிறார்களோ அப்போது இவர்களது நெஞ்சிலே புகவேண்டுமென்று நினைத்துத் திருவரங்கம் முதலான திருப்பதிகளில் வாஸம் செய்கிறான். அப்படிப்பட்டமெய்யடியார்கள் கண்ணில் தென்பட்டதும் தான் உகந்திருக்கும் பதியைவிட்டு அவர்கள் ஹ்ருதயத்திலே தாவிப்புகுந்து வஸிக்கு மியல்பினன் அப்பெருமான். ஆகலால் இப்பூதத்தாழ்வாரும் எம்பெருமான் திருப்பதிகளை விட்டுத் தம்நெஞ்சில் வஸிக்கவாசைப்படவே நீ என்னெஞ்சை விரும்பிப்போந்தாலும் அத்திருப்பதிகளைக் கைவிடாதே; அவைகளில் இவ்வளவு நாள் உகந்து வாஸம் செய்ததாலன்றோ இன்று என் நெஞ்சில் வருவதற்குப் பிரஸக்தி ஏற்பட்டது. அத்தகைய

க்ருதஜ்ஞனை அடியேன் பால் இருந்தாலன்றோ நான் பிழைப்பேன். ஆகையால் அடியேனுடைய நெஞ்சிலே கோயில் கொண்டது போல் அத்திருப்பதிகளிலும் நீ அன்புடன் அமர்ந்திருக்க வேணுமென்று பிரார்த்தித்தார். இங்கு ஒரு சமத்காரமான வர்ணனையொன்று கவனிக்கத்தக்கது. அதாவது இக்காலத்திலும் கோயில்களில் அர்ச்சாமூர்த்திகளுக்கு ஜீர்ணோத்தாரம் செய்வதற்குப் பிரஸக்தியேற்பட்டால் பாலாலயப் பிரதிஷ்டை செய்வது (ஒரு சிறிய மூர்த்தியை நிர்மாணம் செய்து அதைப்பிரதிஷ்டை செய்வது) வழக்கம். பழைய பிம்பம் ஜீர்ணோத்தாரம் செய்யப்படும் வரையில் அப்பெருமான் பாலாலயத்தில் எழுந்தருளியிருப்பன். பிறகு பிரதிஷ்டாகாலத்தில் ஜீர்ணோத்தாரம் செய்யப்பட்ட பழைய பிம்பத்தில் (ஆவாஹனத்தால்) பாலாலயத்தை விட்டு எழுந்தருளி ஸாந்நித்யம் செய்தருளுகிறானென்பதும் நாம் கண்டிருக்கும் விஷயமேயாம். ஆகவே எம்பெருமான் பாலாலயத்தில் எழுந்தருளியிருப்பது பெருங்கோயிலில் வஸிப்பதற்காகவேதான். பெருங்கோயில் கிடைத்தபின்பு பாலாலயத்தில் வாஸம் செய்யப் பிரஸக்தியில்லை அதுபோல் ஆழ்வார்களின் ஹ்ருதயங்களாகிற பெருங்கோயில்களில் வாஸம் செய்வதற்கென்று திருப்பாற்கடல் திருவேங்கடம் முதலிய திருப்பதிகளில் எம்பெருமான் உகந்தருளினானென்பது பற்றி அத்திருப்பதிகளை பாலாலயமெனக்கொண்டு, என் நெஞ்சென்னும் பெருங்கோயில் உனக்குக்கிடைத்து விட்டபடியால் நீ பாலாலயத்தை விட்டுவிடுவது போல் அத்திருப்பதிகளையும் விடப்பிரஸக்தியுண்டாதலால் நீ அவைகளைக் கைவிடாதே என்று பிரார்த்திக்கபடி.

வடமொழி. பாலாலயம்-தென்மொழி-இளங்கோயில்.

கோயில் கொண்டானதனோடு மென்னெஞ்சகம் என்றும் பனிக்கடலில் பள்ளிகோளைப் பழகவிட்டு ஓடிவந்து என் மனக்கடலில் வாழவல்ல மாயமணாளனென்றும் வந்தநாள் வந்தென்னெஞ்சிடங்கொண்டான், வந்தாயென் மனத்தே வந்து நீ புகுந்த பின்னை எந்தாய் போயறியாய் என்றும் அனுஸந்தித்தமைக்கிணங்க மற்றவாழ்வார்களது நெஞ்சிலமர்ந்தது போல் இப்பூதத்தாருடைய ஹ்ருதயத்திலும் அப்பெருமான் ஆதரவுடன் அமர்ந்தானென்பது

இப்பாட்டின் கருத்து. ஸர்வேச்வரன் திருப்பாற்கடல் திருவே ங்கடம் திருமாலிருஞ்சோலை முதலிய திவ்யதேசங்களில் மகிழ்ச் யுடன் கோயில் கொண்டதுபோல் ஆழ்வார் நெஞ்சிலும் பெ மகிழ்ச்சியுடன் கோயில் கொண்டானென்பது திரண்ட பொருள்.

என்று மறந்தறியே னேழ்பிறப்பு மெப்பொழுதும்
நின்று நினைப்பொழியா நீர்மையால்— வென்றி
அடலாழி கொண்ட வறிவனே, இன்பக்
கடலாழி நீயருளிக் காண். (55

வென்றி	ஜயத்தைத்தருவதாய்	நின்றுநினைப்பு ஒழியா நீர்மையால்	உன்பால் ஸ்திரமா நிற்கிற நினைவு மா மலிருந்ததினால்
அடல்	கூர் நிறைந்த		
ஆழி	திருச்சக்கரத்தை		
கொண்ட	கையிலே தரித்த	என்றும் மறந்து அறியேன்	ஒரு பொழுதும் உ னை மறந்திருந்தே அல்லேன்
அறிவனே	ஸர்வஜ்ஞனான ஸ்வாமியே		
நீ	இங்ஙனம் பெருமை வாய்ந்த நீ	இன்பம்கடல் ஆழி	அளவில்லாத ஆ க் கடலையும்
ஏழ் பிறப்பும்	எல்லாப் பிறவிகளிலும்	அருளிக்காண்	அடியேனுக்கு) அருள் செய்யவேணும்.
எப்பொழுதும்	எல்லாக்காலத்திலும்		

உன்னை நினைப்பதேவரிதான விப்பிரகிருதியில் உன் நினைவுடன் வாழும்படி செய்ததுபோல் உன்னுடைய ப்ராப்தியளவும் உபகாரம் செய்தருளவேணும் என்று பெருமானை ப்ரார்த்திக்கிறாரிப்பாட்டில்.

என்றும்:— நெருப்புச் சட்டியில் தாமரைமுளைப்பது போல் இப்புவியில் ஈச்வரனைப்பற்றிய நினைவு பிறப்பது மிகவும் அரிது. அவ்வளவு கொடுமையான இந்நிலத்தில் உன்னருளால் உனது நினைவு கிடைக்கப்பெற்றேன். அதிலும் நான் பிறந்தபிறவிகளெல்லாவற்றிலும் உன்நினைவு பெற்றேன். அதிலும் ஜாகரணம் ஸ்வப்நம் ஸுஷுப்தி முதலிய வெல்லா வவஸ்தைகளிலும் உன்னைமறவாதபடி உனது நினைவுடனே யிருக்கிறேன். இப்படி உன்னை நினைத்திருக்கு மியல்பினனாக வென்னைச் செய்து முடித்தாய், இதற்குமே

லுமுள்ள ஹிதங்களையும் நீ செய்தருளவேண்டும். ஆனந்தஸாகரமென்கிற உனது ப்ராப்தியாகிற முக்தியையும் எனக்குத் தந்தருளவேணும். ஏஷ ஹ்யேவாநந்தயாதி என்று ஸ்ரீமந்நாராயணனே பரமபதத்தைக் கொடுத்துத் தன்னோடொக்கவருள் செய்வனென்றசாஸ்திரப்படி. எனக்குப் பரமபதமாகிற லோகத்தில் இன்பக்கடலையும் அளிக்கவேணுமென்றார்.

நின்று நினைப்பொழியா நீர்மையால்:—உனது கிருபையினால் உன்னுடைய நினைவு மாறாதபடி நான் இருக்கப் பெற்றதன்மையால் என்றுபொருள். எல்லாப் பிறவிகளிலும் எல்லாவவஸ்தைகளிலும் நான் க்ஷேமத்தையடையவேணுமென்று நீ என்னைமறவாமல் நினைத்திருக்கிறபடியால் என்று சிலர் பொருள்வரைவர்.

வென்றி அடலாழி கொண்டவறிவனே:— ஜயசீலமான திருவாழியேந்தின ஸர்வஜ்ஞனே! இத்தால் எம்பெருமான் ஸர்வசக்தனென்றும் ஸர்வஜ்ஞனென்றும் சொல்லப்பட்டதாகும். ஆதலால் எனக்கு மோக்ஷத்தைக் கொடுப்பது உனக்கு எளிதான செயலேயல்லது இயலாதசெயலல்ல என்றும் தெரிவித்தாராயிற்று.

இன்பக்கடலாழி:— இன்பக்கடல் என்பதே போதுமாயிருக்க, கடலாழி என்று சேர்த்துப்பேசியது மோக்ஷானந்தத்தின் அளவற்றமை தோற்றுவதற்காக.

காணக் கழி காதல் கைமிக்குக் காட்டினால்
நாணப் படுமென்றால் நாணுமே—பேணிக்
கருமாலைப் பொன்மேனி காட்டாமுன் காட்டும்
திருமாலை நங்கள் திரு. (56)

திருமாலை	லக்ஷ்மீபதியை	காதல்	ஆசையானது
காண	ஸேவிக்கவேணும் என்கிற	கைமிக்கு காட்டினால்	நாளுக்குநாள் மேன் மேலும் அதிகமானால்
கழி	மிகுந்த		

நாணப்படும் என்றால்	நாம் அடக்கத்துட னிருக்க வேணுமெ ன்று நினைத்தமாத் திரத்தால்	பொன்மேனி காட்டாமுன்	அவனுடைய அழ திருவுடம்பு (நம காட்டிக்கொடுப ற்கு முன்
நாணுமே	அடங்கியிருக்க முடியுமோ?	எங்கள் திரு	நாம் உபாயமாக் கொண்ட பெ பிராட்டிய
கருமாலை	கருப்புநிறமுள்ள ஸர்வேச்வரனை	மேனி காட்டும்	ஆசைப்பட்டு காட்டிக்கொடுப

கீழ்ப்பாட்டில் ஆழ்வார் எனக்கு மோக்ஷானந்தத்தைக்கொடுக்கவேணுமென்று பிரார்த்தித்தார். அதைக்கேட்டிருந்த சிலர் ஆழ்வாரைக்குறித்து நீர் ஸர்வசக்தனான பெருமானுக்குச் சேஷபூதரா ருக்க அவனை இங்ஙனம் நிர்ப்பந்தித்துக் கேட்பது சரியோ? அவ தானேக் கொடுக்கும் போது கொடுக்கிறான் என்று அடங்கியிருக் வேண்டாமோ என்று வினவினர். அதற்கு ஆழ்வார் பதிலளிக் றாரிப்பாட்டால்.

காணக்கழிகாதல்:— நான் எனக்கு வசமாயிருந்தாலன்றோ நான் அடங்கியிருப்பேன். அவ்வீச்வரனைக்காணவேணுமென் எல்லைகடந்தகாதல் என்னையும் மறக்கும்படி விஞ்சியிருக்கிறது அப்பெருமானைக் கண்டாலல்லது கழியாத காதல் கனத்திருக்குங் கால் நான் அடங்கியிருக்கவேணுமென்று நினைத்தமாத்திரத்தால் அடங்கி யிருக்கமுடியுமோ?

எம்பெருமான் திறத்தில் ஆசையில்லாதவர்களன்றோ நாணியிருப்பார்கள். ஆசை கிளர்ந்திருக்கிற நான் எப்படி அவனைநிர்ப்பந்திக்காமலிருக்க முடியும் என்றார். உடனே அவ்விடையைக் கேட்டவர்களும், நீர் நிர்ப்பந்தித்தாலும் அவன் தானாய் உமக்குத் தன் திருமேனியைக் காட்டும்பொழுது தானே நீர் காணவேண்டும்; நீர் நிர்பந்திப்பதற்குப் பயன் என்னவென்றும் கேட்டார்கள். அதற்குப் பதிலளிக்கிறார் பின்னடிகளால். அந்த நீலமேக ச்யாமளனான திருமாலை அவன் திருமேனி காட்டிக்கொடுக்க

வேண்டாம். அதற்கு முன்னே எனது தாயாகியும் எனக்குப் புருஷகாரமாயும் உபாயமாயும் உபேயமாயும் நிற்கிற பெரியபிராட்டியார் அப்பெருமானை எனக்குக் காட்டிக்கொடுப்பள். அவள் என்னிடம் மிகுந்த வாத்ஸல்யமுள்ளவள். என்னுடைய பிழைகளை மறந்து அவ்விசனையும் என்னுடைய குற்றங்களை மறக்கும்படி செய்கிறவியல்பினள். அப்பிராட்டியே எனது காதலைக் கண்ணுற்று என்னைக் குளிரநோக்கி எனக்குத் தன் திருமாலையும் காட்டிக்கொடுப்பள். ஆதலால் பெருமான் சற்றுத் தாமதிக்காலும் பிராட்டியே எனது விருப்பத்தைத் தலைக்கட்டி வைப்பள் என்று பிராட்டியின் மஹா குணத்தைத் தெரிவித்தார்.

காணக் கழி காதல்:— காணவேணுமென்ற அதிகமான காதல். ஸ்ரீய:பதியைக் கண்டே கழியக் கடவதான காதல்; (பார்த்தாலல்லது தீராக்காதல்) எனவுஞ் சொல்லலாம்.

திருமங்கை நின்றருளுந் தெய்வம் நா வாழ்த்தும்
கருமங் கடைப் பிடிமின் கண்டீர்—உரிமையால்
ஏத்தினேம் பாத மிருந்தடக்கை யெந்தை பேர்
நாற்றிசையுங் கேட்டீரே நாம். (57)

திருமங்கை	லக்ஷ்மீதேவியானவள்	இருந்தடக்கை எந்தை	மிகவும் நீண்ட திருக்கைகளையுடைய நம் ஸ்வாமியினுடைய
நின்று அருளும் தெய்வம்	நின்று வாழப்பெற்ற தெய்வமான பெருமானை	பாதம்	திருவடிகளை
நா வாழ்த்தும் கருமம்	நாவினால் துதிசெய்வதாகிற காரியத்தை	பேர்	பெயர்களைக் கொண்டு
கடைப்பிடிமின் கண்டீர்	உறுதியாகப் பிடித்துக்கொள்ளுங்கோள்;	உரிமையால்	நமக்குள்ள ப்ராப்தியால்
நாம்	நாமும்	ஏத்தினேம்	புகழுமவர்களானேம்.
		நால் திசையும்	நான்கு திசைகளிலுமுள்ளவர்களே;
		கேட்டீரே	இதனைக் கேட்டீர்களா?

கீழ்ப் பாட்டில் அருளிச்செய்தபடி பெரியபிராட்டியாருடைய மஹா குணத்தை அநுஸந்தித்தபின்பும் வெறுமனே போதுபோக்கலாமோ? அவனது திருநாமங்களையே பேசுங்கள்; என்று பரோபதேசம் செய்கிறாரிதில்.

திரு மங்கை:— திருவில்லாத் தேவரைத் தேறேல்மின் தேவ என்றபடி லக்ஷ்மீதேவியின் ஸம்பந்தமில்லாத தேவதைத்தொழுவது ஸ்வரூபத்துக்குச் சேராதபடியால் திருமங்கை அகலகில்லேனென்று உறையும் திருமேனியையுடைய தெய்வத்தை நாவினால் ஸ்தோத்ரம் செய்வதென்கிற காரியத்தை எல்லோரும் கைக்கொள்ளுங்கோள் அதுதான் நமக்கு உஜ்ஜீவன ஹேதுவாதலால் அதையே விடாதே பிடியுங்கோளென்றார்.

தான் சாஸ்த்ரார்த்தங்களை நன்குணர்ந்து மற்றவர்களையும் சாஸ்திரப்படி நடக்கச் செய்து தானும் சாஸ்திரப்படி நடப்பவன் தான் ஆசாரியனெனச் சொல்லப்படுவனாதலால் தான் பிறருக்கு உபதேசம் செய்வதுபோல் தானும் நடந்துகொள்கிறேனென்பதை பின்னடிகளால் காட்டுகிறார்.

நான்கு புருஷார்த்தங்களையும் கொடுத்துக் கொடுத்து நீண்டிருக்கும் திருக்கைகளையுடைய நம்முடைய ஸ்வாமியின் திருவடிகளை அவன் திருநாமங்களைச் சொல்லித் துதிக்கிறோம். அவன் ஸ்வாமி நாம் தாஸர்கள் என்கிற ஸம்பந்தத்தை உணர்ந்து நமக்கு உள்ள முறையால் அவன் பேர்களைப் பேசுகிறோம். நான்கு திசைகளிலும் உள்ளவர்களெல்லாரும் இதனைக் கேட்டீர்களா? நீங்களனைவரும் இங்ஙனமே அவன் திருநாமங்களையேத்தித் திரியுங்கோள். நாற்றிசையிலுள்ளோர் அனைவர்க்கும் நாரணனே ஸ்வாமியாவன் என்று உபதேசித்தனர்.

நாம் பெற்ற நன்மையும் நாமங்கை நன்னெஞ்சத்து
ஓம்பி யிருந்தெம்மை யோதுவித்து—வேம்பின்
பொருள் நீர்மை யாயினும் பொன்னாழி பாடென்று
அருள் நீர்மை தந்த வருள். (58)

வேம்பு பொருளின் நீர்மை ஆயினும்	ஸர்வேச்வரனைப் பாடுவது வேம்பு என்கிறபொருளின் தன்மைபோல் கைப்பதாயிருந்தாலும்	இன்பு இருந்து	அன்புடனிருந்து
		எம்மை	நம்மை
		ஓதுவித்து	பகவத் குணத்தைப் பாடச்செய்து
பொன் ஆழி	அழகானசக்ரத்தை த்தரித்த பெருமானை	நாம் பெற்ற நன்மையும்	அதனால் நாமடைந்த லாபக்குறமும்
பாடு என்று	கானம் செய்யக் கடவாய் என்று	அருள் நீர்மை	பரமக்ருபாளுவான பரம புருஷன்
நாமங்கை	ஸரஸ்வதி தேவியானவள்	தந்த அருள்	அருள் செய்ததையினால் கிடைத்ததேயாம்.
நல் நெஞ்சத்து	நம்முடைய நல்ல நெஞ்சிலே		

கீழ்ப்பாட்டில் "ஏத்தினேன் பாதம் இருந்தடக்கை எந்தை பேர்" என்று பேசினார். இப்பேறு உமக்கு எங்ஙனம் கிடைத்தது என்று சிலர்வினவ, அவர்களுக்கு "அதற்கு அவனதின்னருளே காரணம்" என்று பதிலளிக்கிறார்.

நாம்:— அறிவில் சிறந்த பாகவதோத்தமர்கள் "இன்பப்பாவினை பச்சைத் தேனை பைம்பொன்னை அமரர் சென்னிப்பூவினை" என்றும் "கனியை கரும்பினின் சாற்றை கட்டியை தேனை அமுதை" என்றும் சொல்லுகிறபடி புருஷோத்தமனைப் பரமபோக்யமாகக் கொண்டநுபவித்தாலும் அறிவிலியான எனக்கு வேம்புபோல் கைப்பதாயிருக்குமியல்பினனவன் அப்பெருமான். அப்படியிருந்த போதிலும் ஸ்ப்ருஹணீயமான திருவாழியைக் கையிலேந்தின வென்னை நீ பாடக் கடவை; என்று பரமக்ருபையுடன் ஸங்கல்பித்த படியால், அதற்கிணங்க ஸரஸ்வதி தேவி என்னுள்ளத்திலே உகப்புடன் வந்தமர்ந்து என்னை இங்ஙனம் பாசுரங்களால் பாடும்படி செய்கிறாள். ஆதலால் இப்படிப் பாசுரங்களால் அவனைத் துதி செய்வதென்கிற நாம் பெற்ற நன்மையும் அவனது திருவருளால் கிடைத்ததேயாகும் என்றார்.

நாமங்கை — நாவில் அமரும்பெண், ஸரஸ்வதி.

அருள் புரிந்த சிந்தை யடியார் மேல் வைத்து
பொருள் தெரிந்து காண்குற்ற வப்போது-இருள்திரிந்
நோக்கினேன் நோக்கி நினைந்தேன தொண்கமலம்
ஓக்கினே னென்னையுமங் கோர்ந்து. (5

அருள் புரிந்த சிந்தை	கிருபையோடு கூடின திருவுள்ளத்தை	நோக்கி	அப்படிப்பார்த்த பி
அடியார் மேல் வைத்து	ஸாத்விகர்களான எங்கள்மேல் வைத்து	ஒண் கமலம் அது	அழகிய தாமரையெனச் சொல்லப்படு அவன் திருவடிக
பொருள் தெரிந்து	பொருளில்லாத எங்களை ஒரு பொருளாகக் கருதி	நினைந்தேன்	ப்ராப்யமாகக் கரு னே
காண்குற்ற அப்போது	அவன் கடாக்ஷம்செய்தருளின காலத்திலே	ஓர்ந்து	அவ்வடிகளைத் தவ மற்றோர் புகலில் யெனத்தீர்ந்து
இருள் திரிந்து	அஜ்ஞானம் விலகப் பெற்று	என்னையும்	ஜீவனையும்
		அங்கு	அத்திருவடிகளில்
நோக்கினேன்	ஆத்மஸ்வரூபத்தை ஆராய்ந்து பார்த்தேன்	ஒக்கினேன்	ஸமர்ப்பித்தேன்.

அருள் புரிந்த:— பகவத் கடாக்ஷத்தால் அஜ்ஞானம் நீங்கி ஆத்மஜ்ஞானம் பிறந்து அவன் திருவடிகளில் ஆத்மஸமர்ப்பணம் செய்தேனென்கிறார். ஸர்வேச்வரன் அடியார்களான வெங்கள் மேல் இவர்கள் ஸாத்விகர்களாய்க்கொண்டு மோக்ஷமென்கிற புருஷார்த்தத்தையே சிந்திக்கிறவர்களாகக் கடவர்கள் என்று கிருபையுடன் கூடின திருவுள்ளத்தை வைத்துப் பொருளல்லாத வெங்களைப் பொருட்படுத்தி தம் கண்மலரை நம்மேல் ஒருங்கே பிறழவைத்தார். அங்ஙனம் கடாக்ஷித்ததின் பயனாக வென்னுடைய ஆத்மாவைப்பற்றிய அஜ்ஞானமென்னும் இருள் எல்லாம் விலகிவிட்டன. உடனே ஆத்மாவைப் பற்றி ஆலோசித்துப் பார்த்ததில் நாயம் தேவோ ந மர்த்யோவா ந திர்யக் ஸ்தாவரோபிவா ஜ்ஞாநாநந்த மயஸ் த்வாத்மா சேஷோஹி பரமாத்மந: || என்று பரமாத்மாவுக்கு எக்காலத்திலும் இவ்வாத்மா அடிமை

யேயன்றி வேறில்லை என்று உணர்ந்தேன். அத்துடன் இவ்வாத்மா இதுவரையில் ஸ்வாபாவிகமான ஆனந்தத்திற்கு விருத்தமான ஆபாஸமான ஸுகங்களில் மண்டியிருப்பதும் அஜ்ஞானத்தாலே வந்ததெனத்தீர்ந்து அவ்வீச்வரனுடைய திருவடிகள்தான் நமக்குப் ப்ராப்யங்கள் என்றும் தெரிந்துகொண்டேன். உடனே இவ்வளவு காலமாய் இவ்வாத்ம வஸ்துவை நம்மதென்று நினைத்து வருந்தி ஜித கௌஸ்துப சௌர்யஸ்ய ஸம்ராஜஸ் ஸர்வ பாப்ம நாம் | சிஷ்டம் ஹ்யாத்மாபஹாரஸ்ய நிஷ்க்ருதிஸ் ஸ்வஸமர்ப்பணம் | பெருமான் திருமார்பிலே தரித்திருக்கும் கௌஸ்துப மணியைத் திருடுவதென்கிற பாபத்தையும்வென்று எல்லாவிதமான பாபங்களுக்கும் அரசனுய் விளங்கும் ஆத்மாபஹாரம் என்கிறகொடிய பாபத்திற்கு அவனிடம் இவ்வாத்ம வஸ்துவை ஸமர்ப்பணம் செய்வதுதான் ப்ராயச்சித்தமெனத் தெளிந்து என்னையும் அவனது திருவடிகளில் ஸமர்ப்பித்தேன். இப்படி ஆத்ம ஸமர்ப்பணமளவான நாம் பெற்ற நன்மைகளெல்லாம் அவ்வீசனது கடாக்ஷத்தாலே கிடைத்தனவென்று பேசி அவனது வாத்ஸல்ய குணத்தைக் கொண்டாடினர்.

பொருள் தெரிந்து:—எனக்கு அர்த்தபஞ்சக ஞானம் பிறக்கும்படி காண்டுற்றவப்போது என்று பொருள் மொழிவாருமுண்டு "இருள் இரிந்து" என்றவிடத்தில் இருள் திரிந்து என்றும் பாடம் உண்டு.

ஒண் கமலம்:— "தாவிவையங்கொண்ட தடந்தாமரைகட்கே" என்பதுபோல் முற்றுவமை. கமலம்போன்ற திருவடிகள் எனப் பொருள்.

ஒருருவ னல்லை யொளியுருவம் நின்னுருவம்
ஈருருவ னென்ப ரிருநிலத்தோர்—ஒருருவம்
ஆதியாம் வண்ண மறிந்தாரவர் கண்டீர்
நீதியால் மண்காப்பார் நின்று. (60)

ஓர் உருவன் அல்லை	புருஷோத்தமனே! நீ பரத்வமே வடிவாகவிருக்கிறவனில்லை	ஓர் உருவன் என்பர்	பரத்வமென்னும் பெரிய வடிவை உடையவனுக்ச் சொ கிறார்கள்
நின் உருவம்	உன்னுடைய வடிவம்	ஓர் உருவம்	பக்த பராதீனமா வடிவமே
ஒளி உருவம்	பக்தர்களுக்குப்பராதீனமாய்க்கொண்டு பிரகாசித்து நிற்கும் ஸ்வரூபம்.	ஆதி ஆம் வண்ணம்	யாவரும் பிழைப்ப தற்கு ஹேதுவாயிரு க்கு மென்பதை
(இப்படியிருக்குமுன்னே)		அறிந்தார் அவர் கண்டீர்	தெரிந்துகொண்டவர்களன்றோ
இருநிலத்தோர்	இப்பரந்த பூமியிலுள்ளவர்கள்	நீதியால்	நியாயப்படி
		நின்று	ஸ்திரமாய் நின்று கொண்டு
		மண் காப்பார்	உலகத்தை காக்க வல்லவர்களாவார்.

கீழ்ப்பாட்டில் திருமால் என்னையும் ஒரு பொருட்படுத்தி கடாக்ஷித்தருளினான் என்று பேசினார். ஆதலால் ஈச்வரன் பரம ஸுலபனென்றே யாவரும் நினைக்கவேண்டுமென்கிறார் இதில்.

ஓருருவன் அல்லை:— ஸர்வேச்வரனை விளித்துப் பேசுகிறார். திருமாலே! நீ நித்யோ நித்யாநாம் என்கிற வேதத்தின்படி பல்லாயிரக் கணக்கான ஆத்மாக்களுக்கு விரும்பப்பட்ட பொருள்களைக் கொடுத்துக்கொண்டு பரத்வமே வடிவாகத் தோற்றும் விலக்ஷணமான ஒரு வடிவத்தை மாத்திரமுடையவனன்று. இருள் சூழ்ந்த இடத்தில் பிரகாசிக்கும் தீபம்போல் இப்பிரக்ருதியில்வந்து தோன்றி விளங்கும் ஆச்ரித பாதந்த்ரமான வடிவத்தை உடையவனென்றே நான் தீர்மானிக்கிறேன். ஆனால் உலகத்தாரனைவரும் உனது கடாக்ஷம் பெறாத காரணத்தால் அறிவிலிகளாய்க்கொண்டு உன்னை பரத்வமே வடிவாகக் கொண்டவன், ஸ்வதந்த்ரன், விலக்ஷணன் என்று சொல்லுகிறார்கள். எனது கொள்கையோவென்றால் பரத்வமே வடிவான உன் ஸ்வரூபம் ஆச்ரிதர்கள் உஜ்ஜீவிப்பதற்கு அருகில்லாதபடி இருப்பதால் இவ்விருள் தருமா ஞாலத்துள் வந்து ஆச்ரித பாதந்த்ரமாய் பரமஸுலபமான வடிவத்தனாய் நிற்பவன் என்றே

பேசுவதுதான் நியாயமென்று புலப்படுகிறது. இந்த ஆச்ரித பாரதந்த்ரமான திருமேனிதான் அடியார்கள் உஜ்ஜீவிப்பதற்கு ஆதிகாரணமென்று அறிந்தவர்கள் தான் இவ்வுலகத்தில் ஈச்வரனே ஒருவன் சேஷி, மற்றவர்கள் சேஷபூதர்கள் என்கிற முறைப்படி நடந்துகொண்டு தீர்த்தகாரராகத் திரிந்து உலகத்தாருக்கு ஈச்வர தத்வத்தை உணர்த்தி உலகைக் காப்பாற்றுவார்கள் என்று; விபவ அர்ச்சாதிரூபங்களே நமக்கு உஜ்ஜீவன ஹேதுவாயிருப்பதால் பரத்வம் கொண்ட திருமேனி இல்லையென்றே பேசினார் போலும்.

இப்பாட்டிற்கு வேறுவகையாகவும் பொருள் விரிப்பதுண்டு. உனக்கு ஒரு திருமேனிதான் என்று சொல்ல முடியாது. மத்ஸ்ய கூர்மாதிகளாக நீ நினைத்த உருவத்துடனெல்லாம் நிற்கிறாய்; ஆனால் நீ எந்த வடிவத்தை எடுத்துக்கொண்டாலும் அவைகளெல்லாம் அழுக்குடம்புகளல்ல. அப்ராக்ருதங்களான திருமேனிகள் தான். ஆதலால் உலகத்தார் உன்னை பரத்வமும் ஸௌலப்யமும் ததும்பும்படியான இருவகையான வடிவம் கொண்டவனாகவே சொல்லுகிறார்கள். அவற்றுள் ஸௌலப்யம் நிறைந்த ஆச்ரித பாரதந்த்ரமான திருமேனிதான் உஜ்ஜீவன ஹேது என்று தெளியவேண்டும். அப்படித் தெளிந்தவர்கள்தான் உலகத்திற்கு நல்லறிவைப் புகட்டிக் காப்பாற்றுகிறார்கள் என்பதாம்.

நின்றதோர் பாதம் நிலம்புதைப்ப, நீண்டதோள்
சென்றளந்த தென்பர் திசையெல்லாம்—அன்று
கருமாணியா யிரந்த கள்வனே, உன்னைப்
பிரமாணித்தார் பெற்ற பேறு (61)

அன்று	முன்னொருநாள்	நின்றது ஓர் பாதம்	பூமியை அளக்க வென்று நின்ற ஒரு திருவடி
கருமாணி ஆய்	கரியகோலக் குறளுருவாய்	நிலம் புதைப்ப	பூமியை ஆக்ரமித்துக் கொள்ள (அதன்பிறகு)
இரந்த கள்வனே	மாவலியிடம் மூவடி மண்ணை யாசித்த க்ருத்ரிமஸ்வபாவனே!		

நீண்டதோள்	நீண்டு வளர்ந்த திருத்தோள்	(இப்படிச் செய்த செயலானது)	
திசை எல்லாம் சென்று	எல்லாத் திக்குகளிலும் சென்று	உன்னை பிரமாணித்தார் பெற்ற பேறு	உன்னை நம்பினவர்களனைவரும் பெற்ற புருஷார்த்தமாகு
அளந்தது என்பர்	உயரேயுள்ள லோகங்களை அளந்தது என்று சொல்லுகிறார்கள்		

நின்றது:— எம்பெருமானுடைய ஆச்ரித பாரதந்த்ரி குணத்தைப் பேசுகிறார். இந்திரனுடைய லோகங்களை ஆக்ரமித்துக் கொண்டு உனது விபூதியைத் தன்னுடையதாக நினைத்திருந் மாவலியிடம் கரியகோலக் குறளுருவாய்ச் சென்று மண்ணிரந்தாய அப்போது பூமியை அளப்பதாக நின்றுகொண்டிருந்த உனது தி வடி மிகப்பெரிதாய் வளர்ந்து இப்பூமியை ஆக்ரமித்துக்கொண்டது மாவலி உதகதானம் செய்தவுடன் உன் திருக்கைகள் கிடைக்காத கிடைத்ததுபோல் நினைத்துப் பெருமகிழ்ச்சியுடன் வளர்ந்து திசை யெல்லாம் தாவியளந்தன. இப்படித் தன்னை யழியமாறிச் செய் உனதுசெயலை சிலர் இந்திரனுக்காகச் செய்த காரியமென்று சொ லுகிறார்கள். இந்திரன் ஒருவனுக்கு மாத்திரம் செய்யப்பட்டதல்ல உன்னை ஆச்ரயித்து உன்னையே நம்பி இருப்பவர்களனைவருக்குமா கச் செய்த செயல்தான். மாவலியிடம் உன் ஸ்வரூபத்தையும் அழி துக் கொண்டு நீ செய்த காரியத்தைப் பார்த்து உன்னையே நம்பி யிருக்கும் உன்னடியார்கள் எல்லோரும் இந்திரன் காரியத்தைத் தலைக்கட்டி வைத்ததுபோல் நம்முடைய விருப்பத்தையும் தன் ஸ்வரூபத்தையும் குலைத்துக் கொண்டாவது தலைக்கட்டிவைப்பன் என்று தெளிந்து கவலையற்று மார்பில் கை வைத்து உறங்குகிறார்கள்; என்று எம்பெருமானை விளித்துப் பேசினார். இதனால் ஈச்வரன் ஆச்ரித பரதந்த்ரனாயிருந்துகொண்டு எவ்வகைப் பட்ட தாழ்ந்த தொழிலையும் செய்து ஆச்ரிதர்களைக் காத்தருள்வன் என்கிற மஹா குணம் அறியவேண்டியதாகும்.

பேறொன்று முன்னறியேன் பெற்றறியேன் பேதை
மாறென்று சொல்லி வணங்கினேன்—ஏறின் [மையால்
பெருத்தெருத்தங் கோடொசியப் பெண்ணசையின்
எருத்திறுத்த நல்லாயரேறு. (62) [பின் போய்

பெண் நசையின் பின் போய்	நப்பின்னைப் பிராட்டியிடம் உண்டான காதலுக்கட்பட்டு	மாறு என்று சொல்லி	நம் வினைகளுக்கு விரோதியென்று நினைத்து
ஏறின்	விருஷபங்களுடைய	வணங்கினேன்	தண்டனிட்டேன்.
பெருத்த எருத்தம்	பெரிய முசுப்புகளும்	முன்	இதற்கு முன்
கோடு	கொம்புகளும்	பேறு ஒன்றும் அறியேன்	இப்படி ஒருபுருஷார்த்தத்தையும் அறிந்தேனல்லேன்
ஒசிய	ஒடியும்படியாக	பேதைமையால்	அப்படித் தெரிந்து கொள்ளாததினால்
எருத்து இறுத்த	அவ்விருஷபங்களின் கழுத்தைமுறித்த	பெற்று அறியேன்	அதை யடையாதிழந்திருந்தேன்.
நல் ஆயர் ஏறு	விருஷபம்போன்ற நல்லவனான கிருஷ்ணன்		

பேறொன்று:— இவ்வளவு காலமாய் ஆச்ரித பாதந்த்ரனை ஸேவிக்கும் பேற்றை இழந்திருந்தேனே; என்று வருந்துகிறார். நப்பின்னை பிராட்டியை மணந்துகொள்வதற்கு விரோதிகளாயிருந்த ஏழு விருஷபங்களுடைய கொண்டைகளையும் கொம்புகளையும் முறித்து அவைகளை நாசம் செய்ததுபோல் அவன் என்னைப் பெறுவதற்கு விரோதியாயிருக்கும் என் பாவங்களையெல்லாம் அழிப்பான் என்று இப்போது தான் தோன்றி அவனை வணங்கினேன். இவ்வளவு காலமாய் நம் வினைகளைப் போக்கி நம்மைக் காக்கும் பெருமானை வணங்குவது என்று ஒரு புருஷார்த்தம் இருப்பதாகவே எனக்குத் தெரியாது. தெரியாததுமட்டுமல்ல. அதை நான் கிடைக்கப்பெறவுமில்லை. அதற்குக் காரணம் என்னுடைய அறிவின்மைதான். எனது அஜ்ஞானத்தால் தான் நான் இதுவரையில் இப்பேற்றை இழந்திருந்தேன். இன்று அப்பெருமான் நம் வினைகளுக்கெல்லாம் விரோதி என்று தீர்ந்து அவனை வணங்கினேன் என்றபடி.

"பெண் நசையின் பின் போய்" நப்பின்னைப் பிராட்டியிடமு காதலின் பின்னே சென்று. காதலுக்கு அகப்பட்டு என்றபடி

நல் ஆயர் ஏறு - நம்மிடம் வாத்ஸல்யமுள்ளவன்.

விரோதிகளைப் போக்கவல்ல ஸாமர்த்யமுள்ளவன். என்ப

ஏறேழும் வென்றடர்த்த வெந்தை, எரியுருவத்
தேறேறி பட்டவிடு சாபம்—பாறேறி
யுண்டதலை வாய் நிறையக் கோட்டங்கை யொண்
கண்ட பொருள் சொல்லிற் கதை. (63) [குரு

ஏறு ஏழும்	வ்ருஷபங்களேழையும்	பாறு ஏறி உண்ட	கழுகுகள் ஏறி உ கார்ந்துகொண்டு சாப்பிடுவதற்குரி
வென்று	ஜயித்து	தலை வாய் நிறைய	மண்டையோட்டு வாய் நிரம்பும்படி
அடர்த்த	முடித்த	கோடு	குவிந்த
எந்தை	என் ஸ்வாமியான கண்ணன்	அங்கை	அழகான கையால் (கிறிக்கொடுத்த)
எரி உருவத்து ஏறு ஏறிபட்ட	தீ போன்ற நிறங்கொண்டவனும் வ்ருஷபத்தை வாஹனமாகக் கொண்டவனுமான ருத்ரன் அடைந்த	ஒண் குருதி	அழகான ரக்த
விடு சாபம்	எல்லாராலும் கைவிடப்பட்ட சாபத்தை (நீக்குவதற்காக)	கண்ட பொருள்	அக்கபாலம் உடை தகன்று நீங்கக்க ட
		சொல்லில்	சொல்லப்புகுந்தா
		கதை	ஒரு பெரிய க யாக முடியு

கண்ணபிரான் நம் வினைகளைப்போக்கிக் காத்தருள்வன் என் சற்கு ஒரு த்ருஷ்டாந்தம் காட்டுகிறார்.

ஏறேழும்:— முன்னொருகால் பரமசிவன் பிரமனுடைய தலை ஒன்றைக் கிள்ளி எடுத்துவிடவே பிரமனுடைய சாபத்தால் அ தலை அவனது கையைவிடாமல் பிடித்துக்கொள்ள, தேவர்களை வ டமும் போய் இது எங்ஙனம் கையைவிட்டு விலகுமென்று கேட் வே, அவர்கள் இந்தக் கபாலத்தில் பிக்ஷை எடுத்துக்கொண்(

வாரும்; என்றைக்கு இக் கபாலம் நிறையுமோ அன்றைக்கு உமது சாபம் தீர்ந்து கபாலம் உடைந்து விலகும்; என்று சொல்லவும் அந்த ருத்ரன் அங்ஙனமே செய்துகொண்டு வருங்கால் ஒருநாள் ஸ்ரீமந்நாராயணனிடம் போய் பிக்ஷை கேட்க, அவர் தனது கை நகத்தால் தன் மார்வைக்கிறி ரக்தத்தை அக்கபாலத்தில் நிறப்பவே அதுவும் நிறைந்து உடைந்துபோயிற்று. ருத்ரனும் சாபத்திலிருந்தும் விடுபட்டான் என்கிற வரலாறு இங்கு நினைக்கப்படவேண்டும்.

ஏழு வ்ருஷபங்களைக்கொன்ற பரமபுருஷன் சிவந்த நிறமுள்ள ருத்ரனுடைய சாபத்தையும் விலக்கினனென்றால் நம் வினைகள் நாம் அவனை ஆச்ரயித்தால் நாசமடையும் என்பதில் ஐயமில்லை என்றபடி.

ஏறு ஏழும் வென்று:— ருத்ரன் ஒரு தலையைக் கிள்ளி சாபத்தை ஏற்றுக்கொண்டான். ஏழு தலைகளைக்கொன்றும் ஒரு குறையையும் அடையாதவன் இவன்; என்கிற ஒரு சமத்காரம் இங்கு தோன்றுகிறது.

எரியுருவத்து:— தீ போன்ற நிறங்கொண்டவன். ஏறு ஏறி - வ்ருஷபவாஹனன்.

விடு சாபம்:— எவரை வேண்டிக்கொண்டாலும் இந்த சாபத்தை என்னால் நீக்க முடியாது என்று சொல்லுவதுபற்றி எல்லாராலும் தீர்க்க முடியாதென்று கைவிடப்பட்ட சாபம் என்றதாம். அல்லது (பிரமன்) விடுத்த - கொடுத்த சாபம் என்பதாகவுமாம்.

பாறு ஏறி;— மாம்ஸமும் ரத்தமும் கசிந்து நிற்கும் மண்டையோட்டைக் கழுகும் பருந்தும் உண்பது இயல்பாதலால், இங்கு ருத்ரன் பருந்தும் கழுகும் பறக்கின்ற மண்டையோட்டில் பிக்ஷை வாங்கியுண்டானென்க. பாறு - பிணந்தின்னும் பறவை.

கதையும் பெரும் பொருளுங் கண்ணா, நின்பேரே
இதய மிருந்தவையே யேத்தில்—கதையின்
திரு மொழியாய் நின்ற திருமாலே ! உன்னைப்
பரு மொழியால் காணப் பணி. (64)

கண்ணே	கிருஷ்ணனே
கதையும்	இதிஹாஸ புராணங்களும்
பெரு பொருளும்	அவைகளின் உயர்ந்த அர்த்தங்களும்
இதயம்	அவற்றின் உள் தாத்பர்யமும்
இருந்தனவே	உள்ளபடியே
ஏத்தில்	தெரிந்து துதிசெய்தால்
நின்பேரே	(அவைகளெல்லாம் உனது பெயர்களேயாகும்)
கதையின்	இதிஹாஸ புராணங்களின்
திருமொழியாய் நின்ற	அக்ஷரங்களின் வடிவமாக நின்ற
திருமாலே!	ஸ்ரீய: பதியே
உன்னை	உன்னை
பருமொழியால்	(நிறைந்த சப்தங்களாலே துதிசெய்து)
காண	ஸேவிக்கும்படி
பணி	அருள்செய்வாய்.

இவ்வுலகத்தில் இதிஹாஸ புராணங்களைக்கொண்டு உன்னைத் துதி செய்வதுபோல் நித்ய விபூதியிலும் உன்னைப் பணிந்தேத்தும் படி அருள்புரிய வேணுமென்று பிரார்த்திக்கிறார்.

கதையும்:— கிருஷ்ணனே! இதிஹாஸ புராணங்களெல்லாம் உன்னையே துதி செய்கின்றன. ஸ்ரீமத்ராமாயணம் ஸ்ரீ பாரதம் முதலிய இதிஹாஸங்களையும் ஸ்ரீ விஷ்ணுபுராணம் முதலிய புராணங்களையும் உட்கருத்தின்றி வாசித்தாலும், அவைகளின் உட்கருத்தை ஆராய்ந்து பார்த்தாலும், தாத்பர்யார்த்தங்களை ஆலோசித்துப் பார்த்தாலும் அவைகளெல்லாம் உனது திருநாமங்களாகவே பர்யவஸிக்கின்றன. உனது திருநாமங்கள் உன்னையே பிரதிபாதிப்பது போல் அவைகளும் உன்னையே தான் பரம் பொருளாகச் சொல்லுகின்றன. இதிஹாஸ புராணங்களென்றும் கிரந்தங்களின் வடிவாக நிற்பவனும் நீயேயாதலால் அவைகளும் உன்னையே பேசுகின்றனவென்பதில் ஐயமில்லை. ஆதலால் நானும் இவ்வுலகில் இதிஹாஸ புராணங்களால் உன்னை உள்ளபடியறிந்து சொல்மாலை ஏத்தி தொழுது நிற்கிறேன். ஆனால் இவ்வளவாலே யே நான் திருப்தியடையவில்லை. நித்ய விபூதியில் ஸூரிகளை வரும் உன்னை ஸேவித்துக்கொண்டு ஆநந்த பரிதர்களாய் அவ்வா நந்தம் உள்ளடங்காமல் உயர்ந்த சொற்களால் உன்னைத் துதிப்

பதுபோல் நானும் உன்னை அங்கு ஏத்தி செய்யும்படி அருள்புரிய வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

முதலடியில் கதையின் என்ற பாடமும் மூன்றாமடியில் கதையும் என்ற பாடமும் வழங்குவதன்றி. கதையும் என்பதற்கு பிரதிபாதிக்கப்படும் என்று பொருள்.

திருமொழியாய் நின்ற:— இதிஹாஸ புராணங்களின் அக்ஷரங்களாக நிற்பவனும் திருமால் என்றபடி.

பரு மொழி:— பருத்தமொழி உள்ளே ஆனந்தம் அடங்காமல் வாய்விட்டுப் பேசும் ஹாவு ஹாவு, அஹமந்நம் அஹமந்நம் முதலிய சப்தங்கள்.

கதையும்:— கதை என்பது இங்கு பகவத் கதைகளைக்குறிப்பதாகக் கொள்க.

பணிந்தேன் திருமேனி பைங்கமலம் கையால்
அணிந்தேனுன் சேவடிமே லன்பாய்—துணிந்தேன்
புரிந்தேத்தி யுன்னைப் புகலிடம் பார்த்து, ஆங்கே
இருந்தேத்தி வாழுமிது. (65)

ஸ்ரீய: பதியே!		ஏத்தி	ஸ்தோத்ரம் செய்து
திருமேனி	உன் திருவுடம்பை	புகல் இடம் பார்த்து	(உபகாரங்கள் முடித்தபிறகு) நீ பிரவேசிக்குமிடமான பரமபதத்தைப் பார்த்து
பணிந்தேன்	வணங்கினேன்	ஆங்கே	அவ்விடத்திலே
உன் சே அடி மேல்	உன் சிவந்த திருவடிகளின் மேல்	இருந்து	ஸ்திரமாய் நின்று
பை கமலம்	அழகான தாமரை மலர்களை	ஏத்தி	துதித்து
அன்பு ஆய்	பக்தியுடையவனாய்க்கொண்டு	வாழும் இது	வாழ்வதாகிற இப்புருஷார்த்தமே நமக்கு உரியதென்று
கையால்	என்கையால்	துணிந்தேன்	நிர்ணயம்செய்தேன்.
அணிந்தேன்	சாத்தினேன்.		
உன்னை	உன்னை		
புரிந்து	ஆசைப்பட்டு		

பணிந்தேன்:— இதுவரையில் தான்பெற்ற புருஷார்த்தத்தையும் இனித் தான் பெறவேண்டியதாய் நிச்சயித்திருக்கும் புருஷார்த்தத்தையும் அப்பெருமானிடம் விண்ணப்பம் செய்துகொள்கிறார். திருமாலே! உன் திருவுடம்பைக் கண்டுகொண்டேன் உனக்குச் சேஷபூதனாகையினாலுன்னை வணங்கியும் நின்றேன் மேலும் உன்னைப் பிரிந்தால் உயிர் விடும்படியான ப்ரேமத்துடனு நின்றுகொண்டு அழகான தாமரைப் புஷ்பங்களை எடுத்து உன் திருவடிகளிலே ஸமர்ப்பித்தேன். இதுவே யாத்திரையாக என் வாநாட்களெல்லாம் கழிந்தன. ஆயினும் யான் வேண்டுவதொன்றுண்டு. இவ்வுலகம் இருள் தருமா ஞாலமாதலால் விண்ணுளா பெருமாற்கடிமை செய்வாரையும் புறம்பேசிற்கும்படி செய்விக்கும் திறமைவாய்ந்தது) ஆதலால் பாம்போடொரு கூரையிலேயிருப்போல் அஞ்சுகின்றேன். உனக்குப் புகலிடமான பரமபதத்திருந்து உனக்கடிமை செய்யும் வாழ்வுதான் நாம் அடையவேண்டிய பேறு என்று துணிந்தேன். உனது போக விபூதியில் நித்முக்தர்களோடு கூடவிருந்துகொண்டு அந்தமில் பேரின்பத்தி ஆழ்ந்து உனக்குப் பணிவிடைசெய்வதுதான் யானுன்னை வேண் விரும்பிய விஷயம். எனக்கு நீ இதை அருள்புரிய வேண்டு என்று பிரார்த்திக்கார்.

புகலிடம்:— எம்பெருமான் பற்பல அவதாரங்களைச் செய்தும் கடைசியில் புகுவது பரமபதத்திலாதலால் புகலிடம் என்பது பமபதத்தைச் சொல்லுகிறது. அவதாரங்களுக்குப் பிறகு பெருமா புகுமிடம் என்று பொருள் கொள்க. "புகலிடம்', கடைசியா யாவரும் செல்லவேண்டிய இடமானது பற்றிப் புகலிடமெனவுமாம்.

இது கண்டாய் நன்னெஞ்சே யிப்பிறவி யாவது
இது கண்டா யெல்லாம் நாமுற்றது—இது கண்டாய
நாரணன் பேரோதி நரகத்தருகணையா
காரணமும் வல்லையேல் காண். (56

நல்நெஞ்சே	என் நல்லமனமே!
இப்பிறவி ஆவது	இந்த ஸம்ஸாரத்தின் கொடுமையான தன்மை
இது கண்டாய்	இப்படிப்பட்டது காண்.
நாம் உற்றது எல்லாம்	நாம் (இவ்வளவுகாலம்) அநுபவித்த தெல்லாம்
இதுகண்டாய்	(துக்கங்களான) இப்படிப்பட்டவை காண்.
நாரணன்	நாராயணனுடைய
பேர் ஓதி	பெயர்களைச் சொல்லிக்கொண்டு
நரகத்து அருகு	நரகத்தின் ஸமீபத்திலும்
அணையா	சேராமலிருப்பதற்கு
காரணமும்	ஹேதுவும்
இது கண்டாய்	இந்த ஸம்ஸாரத்தின் தோஷங்கள்தான்.
வல்லையேல்	நீ அறிந்துகொள்ள சக்தியுள்ளவனாகில்
காண்	அறிந்துகொள்.

நாம் பகவானை அடைவதற்கும் பிரதிபந்தகங்களை விலக்கிக் கொள்வதற்கும் இந்த ஸம்ஸாரத்திலுள்ள தோஷங்களைத் தெரிந்து கொள்வது தான் பிரதான ஹேதுவாகும் என்று சொல்லி தம் நெஞ்சுக்கு ஸம்ஸாரத்தின் கொடுமையை அறிவிக்கிறார்.

இது கண்டாய்:— எனது நல்ல மனமே! இந்த ஸம்ஸாரத்தின் தன்மையை நீ கண்டிருக்கிறாயே; பிறப்பதும் இறப்பதுமான ஸம்ஸாரத்தின் நிலைமையை ஒருவர் உணர்த்த வேண்டுமோ? அது கிடக்கட்டும். பிறந்தது முதல் இதுவரையில் நாம் அநுபவித்தப் பதையெல்லாம் நினைத்துப் பார். கொஞ்சமேனும் சுகத்தைக் கண்டிருக்கிறாயோ? தாபத்ரயத்தால் பலவகைப்பட்ட துயரங்களைத் தானே அடைந்திருக்கிறோம். இதற்குக் காரணமும் இந்த ஸம்ஸாரம்தான். இதையும் இன்னொருவர் சொல்லிக்கொடுக்கவேண்டியதில்லை. நீயே நேரில் பார்த்திருக்கிறாய்; ஆகலால் நரகப்ராயமான இந்நிலத்தில் மறுபடியும் வந்து சேராதபடி நாராயணனுடைய திருநாமங்களை ஓதுவதற்கும் இந்த ஸம்ஸாரத்திலுள்ள தோஷங்களை நினைப்பதுதான் முக்கியமான காரணம். “வாங்குநீர் மலருலகில் நிற்பனவும் திரிபனவும், ஆங்குயிர்கள் பிறப்பிறப்புப் பிணிமூப்பால் தகர்ப்புண்ணும் ஈங்கிதன்மேல் வெந்நரகம் இவையென்ன உலகியற்கை” என்றபடி இப்பிரகிருதியின் தோஷங்களை அநுஸந்தித்தால் நாம் உடனே இதை விலக்கக் கருதி பகவந்நாமங்களை

அநுஸந்தித்து வல்லதொரு உபாயத்தை அநுஷ்டித்து அப்பரமபு
ஷனைப் பெறலாம்.

வல்லையேல் காண்,— இந்த ஸம்ஸாரத்தின் தோஷங்களை நாம் நேரில் கண்டிருப்பதால் வேறொருவர் சொல்லிக்கொடுக் வேண்டியதில்லை. ஆனால் நாம் இந்த தோஷங்களைப் பார்ப்பதுதா மிகவும் அரிதான காரியமாகும். நம் கண்களை நாம் செய்த பாப கள் தோஷதர்சனம் செய்ய முடியாதபடி மறைக்கின்றன. அதனா தான் ப்ரத்யக்ஷமாயிருக்கும் இப்ப்ரக்ருதிதோஷங்களை ஒருவரு காண்கிறதில்லை. ஆதலால் நீ பகவந்நாமங்களை உச்சரித்துக்கொண் அப்பாபங்களுக்கு அகப்படாது இந்த ஸம்ஸாரத்தின் கொடுமை களைக் கண்டுகொள். உடனே ப்ராப்யருசி உண்டாகி மேலுஞ் உபாய பூர்த்தியும் பிறந்து பகவத் ப்ராப்தி கைகூடுமென்றபடி.

கண்டேன் திருமேனி யான் கனவில், ஆங்கவன் கை
கண்டேன் கனலுஞ் சுடராழி—கண்டேன்
உறுநோய் வினையிரண்டு மோட்டுவித்து, பின்னும்
மறுநோய் செறுவான் வலி. (67

யான்	நான்	நோய்	பெரிய துக்கங்களு க்கு ஹேதுக்களா
திருமேனி	(அவ்வீசனது) திருவுடம்பை	வினை இரண்டும்	புண்யபாபங்களிரண்டையு
கனவில்	ஸ்வப்னம்போன்ற அநுபவத்தில்	ஓட்டுவித்து	துறத்திவிட்டு
கண்டேன்	காணப்பெற்றேன்	பின்னும்	மேலும்
ஆங்கு	அவ்வமயம்	மறு	மறுபடியும் திரும்ப க்கடவதாக
அவன் கை	அவனுடைய திருஹஸ்தத்தில்	நோய்	வானாருசிகளாகி வியாதிகளையு
கனலும்	அனலையுமிழ்கிற	செறுவான்	தொலைப்பவனான ஸ்வாமியினுடைய
சுடர்	தேஜோமயமான	வலி	மிடுக்கையும்
ஆழி	திருச்சக்ரத்தை	கண்டேன்	ஸாக்ஷாத்கரித்தேன்
கண்டேன்	ஸேவித்தேன்.		
உறு	ஆத்மாவில் சேர்ந்து கிடக்கும்		

இவ்வாழ்வார் தம் நெஞ்சுக்கு இந்நிலத்தின் தோஷங்களை அறிந்துகொள் என்று உபதேசித்ததைக் கண்டுகொண்டிருந்த ஸர்வேச்வரன் பரத்வாதி குணங்களும் ஆச்ரயணோபயுக்தமான ஸௌலப்ய ஸௌசீல்யாதி குணங்களும் நிறைந்துள்ள தம் அவதாரங்களான அர்ச்சாமூர்த்திகள் வஸிந்திருக்கும் இந்நிலத்தையும் இவர் நிந்திப்பது நம்முடைய அநுபவத்தைப் பெறாத காரணத்தாலே தான்; என்று கருதி இவருக்குத் தன் திவ்யமங்கள விக்ரஹஸேவையைக்கொடுத்தார். உடனே அவ்வெம்பெருமானை ஸாக்ஷாத்கரித்து அதனாலுண்டான ஆனந்தம் உள்ளடங்காமல் இப்பாசுரத்தை அருளிச்செய்கிறார்.

கண்டேன்:— ப்ரத்யக்ஷ ஸமாநாகாரமான மாநஸாநுபவத்தில் ஸ்ரீமந்நாராயணனுடைய திருமேனியைக் காணப்பெற்றேன். அவ்வநுபவத்திலேயே எரியுமிழ்ந்து நிற்கும் தேஜோமயமான திருவாழியைக் கையிலே தரிப்பதையும் ஸேவித்துக் கொண்டேன். (திருவாழி முதலான பஞ்சாயுதங்களையும் அணிந்துகொண்ட பரமபோக்யனை பெருமாளையும் ஸேவிக்கப் பெற்றேன். என்றபடி) பகவத்ப்ராப்திக்கு ப்ரதிபந்தகங்களான புண்யபாபங்களிரண்டும் என்னைவிட்டு விலகிப்போயின. எம்பெருமானை நேரில் கண்ட பின்பும் புண்யபாபங்கள் என் அருகேயும் அணுகமுடியுமோ? இப்படி வினைகளிரண்டும் நிச்சேஷமாக நம்மைவிட்டுக் கழிந்தாலும் வேரைவிட்டு மரத்தை மாத்திரம் வெட்டத் தன்னாலே அந்த மரம் மறுபடியும் தளிர்கொண்டு முளைப்பதுபோல், அநாதியாக நாம் பண்ணிப்போந்த விபரீதாநுபவத்தாலே ஏற்பட்ட வாஸனையும் விஷயருசியும் நம்மை விடாது மறைந்திருந்து ஒரு காலத்தில் நம்மை நலிந்து மீண்டும் இந்த ஸம்ஸாரத்தைக் கொடுக்கும்படியான புண்யபாபங்களைச் செய்யும்படி செய்விக்கும். அத்தகைய வாஸனாருசிகளையும் வேரோடு களைவதாக வந்த எம்பெருமானுடைய திருக்கையும் ஸேவிக்கப் பெற்றேனென்று அவனைக் காணப்பெற்றுப் பிறந்த நிரவதிக ப்ரீதியாலே பேசுகிறார்.

எம்பெருமான் தன் முன்னே நின்று தன் திருமேனியைக் காண்பித்தவளவில் வாஸனாருசிகளோடு தம் வினையனைத்தும் மாய்ந்தன என்று பேசுகிறாரென்பது திரண்ட பொருள்.

வலி மிக்க வாளெயிற்று வாளவுணர் மாள
வலி மிக்க வாள்வரை மத்தாக—வலி மிக்க
வாணாகஞ் சுற்றி மறுகக்கடல் கடைந்தான்
கோணாகங் கொம்பொசித்தகோ. (68)

கோணாகம்	மிகுந்த பலமுள்ள குவலயாபீடமென்ற யானையின்		மாண்டுபோவதற்காக
கொம்பு	தந்தங்களை	வலிமிக்க	மிகுந்த சக்தியையுடையதும்
ஒசித்த	முறித்தவனான	வாள்	ஒளிவீசுகிறதுமான
கோ	ஸ்வாமியான கிருஷ்ணன்	வரை	மந்தரமலையை
			மத்தாக(ச்செய்து)
வலிமிக்க	அதிக பலமுடையவர்களாய	வலிமிக்க	மிகப்பலமுள்ள
வாள் எயிறு	வாள் (ரம்பம்) போன்ற பற்களையுடையவர்களும்	வாணாகம	பிரகாசத்தையுடைய வாஸுகி என்னும் ஸர்ப்பத்தை
			கயிறாகச் சுற்றி
வாள் அவுணர்	வாளாயுதத்தை உடையவர்களுமான அஸுரர்கள்	மறுக	குழம்பும்படி
		கடல் கடைந்தான்	ஸமுத்ரத்தைக்கடைந்தான் காண்.

வாஸனையோடு புண்யபாபங்களைப் போக்கி மோக்ஷத்தைத் தரும் பெருமானையே சிலர் சில்லறைப் பிரயோஜனங்களுக்காகப் பற்றுகிறார்களே! என வருந்துகிறார்.

வலிமிக்க:— துர்வாஸ முனிவரது சாபத்தால் செல்வத்தை இழந்த தேவேந்திரன் தேவர்களுடன் சென்று திருமாலைச் சரணம் புகவே, அவருடைய நியமனத்தால் மந்தரமலையை மத்தாகச் செய்து வாஸுகியைக் கடைகயிறாகக்கொண்டு திருப்பாற்கடலை அசுரர்கள் ஒரு புறமும் தேவர்கள் ஒரு புறமுமாய் நின்று கடையவும், அம்மலை கடலினுள் அழுந்தவே ஸர்வேச்வரன் ஆமை வடிவமாகி அம்மலையைத் தாங்கி நின்று மீண்டும் இரண்டு உருவங்களை எடுத்துக்கொண்டு தேவகோஷ்டியிலும் அஸுரகோஷ்டியிலும் நின்று கடல் கடைந்தான். பிறகு அப்பெருமானே அக்கடலினின்றும்

தந்வந்தரி என்கிற ரூபத்துடன் அம்ருதகலச ஹஸ்தராய்த் தோன்றவும் அஸுரர்கள் அப்பெருமானிடமிருந்து அம்ருத பூர்ணமான கலசத்தைப் பலாத்காரமாகப் பிடுங்கிக் கொள்ளவே அவ்வெம்பெருமானும் உலகங்களையெல்லாம் மோஹிக்கச் செய்யுமொரு பெண் வடிவத்தை எடுத்துக்கொண்டு அஸுரர்களை மயக்கி ஏமாற்றி தேவர்களுக்கே அம்ருதத்தைக் கொடுத்தருளினன் என்கிற வரலாற்றை இப்பாட்டில் ஸங்க்ரஹித்தார்.

இங்ஙனம் கடல் கடைந்து அமுதங்கொண்டு அமரர்களைக் காத்தருளினவன் தான் கிருஷ்ணனாய்த் தோன்றித் தன்னைக் கொல்வதற்கென்று கம்சனுடைய அரண்மனை வாசலில் நின்ற குவலயாபீடம் என்கிற யானையைக் கொன்றொழித்தான் என்றபடி.

மறுகக்கடல் கடைந்தான்:— கடலின் கீழ் மண் கொண்டு மேலே ஏறியும்படி கடைந்தானென்பது.

கோவாகி மாநிலங்காத்து நங்கண் முகப்பே
மாவேகிச் செல்கின்ற மன்னவரும்—பூமேவும்
செங்கமல நாபியான் சேவடிக்கே யேழ்பிறப்பும்
தண்கமல மேய்ந்தார் தமர். (69)

கோ ஆகி	ஸார்வ பௌமனான அரசனாகி	செம் கமலப் பூ மேவும்	சிவந்த தாமரைப் புஷ்பம் பொருந்தியிருக்கிற
மாநிலம் காத்து	இப் பெரிய பூமண்டலம் முழுவதையும் காப்பாற்றிக்கொண்டு	நாபியான்	திருநாபியையுடைய பெருமானுடைய
நம் கண் முகப்பே	நமது கண்களுக்கெதிரே	சே அடிக்கே	செவ்விய திருவடிகளிலே
மா ஏகி	குதிரையின்மேல் ஏறிக்கொண்டு	ஏழ் பிறப்பும்	பல பிறவிகளிலும்
செல்கின்ற	போய்க்கொண்டிருக்கிற	தண் கமலம்	குளிர்ந்த தாமரை மலர்களை
மன்னவரும்	ராஜாக்களும்	ஏய்ந்தார்	ஸமர்ப்பித்தவர்களான
		தமர்	பக்தர்களேயாவர்.

கீழ்ப்பாட்டில் தேவர்களது செல்வமும் திருமாலின் திருவருளால் வந்ததெனக் கூறினார். இப்பாட்டில் இப்புவியில் அரசர்களாய்க் காணப்படுகிறவர்களுடைய செல்வமும் அவனதின்னருளால் அடையப்பட்டதெனப் பேசுகிறார்.

கோவாகி:— பற்பல சிற்றரசர்களைக் காற்கடைகொண்டு சக்ரவர்த்தி எனப் பெயர்கொண்ட அரசர்கள் குதிரையின் மேல் ஏறிக்கொண்டு செல்வச் செருக்குடன் ஊர்வலம் வருவதை நாம் கண்டிருக்கிறோம். அவர்களெல்லாரும் பத்மநாபனுடைய பதங்களில் பல பிறவிகளில் புஷ்பங்களால் பூஜை செய்தே அப்பதவியைப் பெற்றிருக்கிறார்கள். அனேக ஜன்மங்களில் திருமாலைத் தொழுததால் இப்பொழுது ராஜாதி ராஜர்களாய் விளங்குகிறார்கள் என்கிறபடி.

“தண்கமலம் ஏய்ந்தார் தமர்” குளிர்ந்த தாமரை மலர்களை ஸமர்ப்பித்தவர்களான தொண்டர்களெனப்பொருள். குளிர்ந்த தாமரை மலர்களை ஸமர்ப்பித்தவர்களுடைய தொண்டர்களெனப்பொருள் கூறி பரனடியார்களுக்குப் பல் பிறவிகளில் ஆட்செய்ததன் பயனாக இப்பொழுது அரசர்களாய் ஆட்சிபுரிகிறார்கள் என்றும் தாத்பர்யம் கொள்க.

தமருள்ளம் தஞ்சை தலையரங்கம் தண்கால்
தமருள்ளுந் தண்பொருப்பு வேலை—தமருள்ளும்
மாமல்லை கோவல் மதிள் குடந்தை யென்பரே
ஏவல்ல வெந்தைக் கிடம். (70)

தமர் உள்ளம்	பக்தர்களுடைய நெஞ்சம்	தமர் உள்ளும்	பக்தர்கள் உபாஸிக்கிற
தஞ்சை	தஞ்சைமாமணிக் கோயில்	தண்பொருப்பு	குளிர்ந்தமலையான திருவேங்கடம்
தலை அரங்கம்	(திருப்பதிகளுள்) சிறந்த திருவரங்கம்	வேலை	திருப்பாற்கடல்
தண்கால்	திருத்தண்கால்	தமர் உள்ளும்	பக்தர்கள் நினைக்கும்

மா மல்லை	திருக்கடன்மல்லை	வ வல்ல எந்தைக்கு	விரோதிகளை முடிக்க வல்லவனான என் ஸ்வாமிக்கு
கோவல்	திருக்கோவலூர்		
மதிள் குடந்தை	மதிள்களால் சூழப்பட்ட திருக்குடந்தை இவைகளனைத்தும்	இடம் என்பர்	வாஸம் செய்யுமிடமென்பார்கள்.

நாம் ஆராதனம் செய்து பிழைக்கவேண்டி அவன் ஸாந்நித்யம் பண்ணுமிடங்களைப் பேசுகிறார்.

தமருள்ளம்:— விரோதி நிரஸந சீலனான பெருமான் முற்பட உகந்துறையுமிடம் பாகவதர்களுடைய ஹ்ருதயம். ஹ்ருதயத்திலே அமர்ந்து காமக்ரோதாதி விரோதிகளை ஹிம்ஸித்துக்கொண்டு ஆத்ம குணங்களை அபிவிருத்தி செய்கிறான் என்றபடி.

இங்ஙனம் தஞ்சை மாமணிக் கோயில் திருப்பதிகளுள் சிறந்த திருவரங்கம் திருத்தண்கால் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸர்வஸ்வமான திருவேங்கடம் திருப்பாற்கடல் அடியார்கள் அன்புடன் ஆச்ரயிக்கும் திருக்கடல் மல்லை திருக்கோவலூர் மதிள்களுடன் கூடின திருக்குடந்தை என்கிற திருப்பதிகளில் மிக்க ஆதரம் செய்து தனக்கு நல்லடியார்களை உகப்பிக்கிறார் என்று பொருள்.

இங்கு அநுஸந்திக்கப்பட்ட திருப்பதிகள் மற்றுமுள்ள திருப்பதிகளுக்கும் உபலக்ஷணங்கள். இங்கு பல திருப்பதிகளைப் பேசியிருந்தபோதிலும் இவருக்குத் திருக்குடந்தையில்தான் அபிநிவேசம் விஞ்சியிருக்குமென்பதை திருக்குடந்தையென்னும் திருப்பதிக்கும் விசேஷமான மதிள் என்கிற பதம் காட்டுகிறது. மதிள் குடந்தை:— சுற்றிலும் ரக்ஷணார்த்தமாக மதிள்களமைக்கப் பெற்ற திருக்குடந்தை எனப்பொருள். இத்தால் திருக்குடந்தை எம்பெருமானிடம் இவருக்குள்ள பரிவு காட்டப்படுகிறது. உள்ளே உறையும் பெருமானுடைய பெருமைகளெல்லாம் திருமதிள்களிலே தோற்றுகிறது என்பதாம்.

ஆச்ரிதர்கள், நம் பெருமானுக்கு விரோதிகளால் என்ன கேடு விளையுமோவென்று அஞ்சாதபடி மதிள்கள் கட்டப்பட்டு எதிரிகள்

உள்ளே ப்ரவேசிக்க முடியாத திருக்குடந்தை என்பது. ஒருவன் ஒரு பொருளைப் பிரிந்தகாலத்திலும் சேர்ந்தகாலத்திலும் அப்பொருளில் பரிவு காட்டுவதுதான் அவனது அபிநிவேசத்தின் காரியம். ஆதலால் மதில்களால் சூழப்பட்ட திருக்குடந்தை; என்பதால் தான் சரணமடைந்த பெருமானுடைய திருமேனியிலே பரிவு காட்டப்பட்டதாகிறது. அந்த ஸர்வேச்வரனை அவனடியார்கள் ஆஸுர ப்ரக்ருதிகளுக்குப் பயப்பட்டு நடுங்காதபடி தன்விருப்பப்படியெல்லாம் அநுபவிக்கிறார்கள் என்பது தோன்றும். அப்பெருமானும் திருக்குடந்தையில் ஸ்வச்சந்தமாய் ஸஞ்சாரம் செய்து தன்னடியார்களை உகப்பிக்கிறானென்பதுவும் விளங்குகிறது. இங்ஙனம் நம்மாழ்வாரும் ஸ்ரீ ஆராவமுதாழ்வாரை அநுபவித்து அவனது ஸௌந்தர்யம் போக்யதை முதலிய கல்யாண குணங்களில் ஈடுபட்டு அப்பெருமானிடமுள்ள ஆதராதிசயத்தால் அவனுக்கு விரோதிகளால் ஏதாகிலும் தீங்கு வருமோ என்று கலங்கி பிறகு அவனது திவ்ய நகரத்தின் திருமதில்களை ஸேவித்து, "விரோதிகள் புகவொண்ணாத தேசத்திலன்றோ அவன் வாஸம் செய்கிறா"னென்று தேறி அப்பெருமானிடமுள்ள தனது பரிவை கண்ணார் மதிள் சூழ் குடந்தைக் கிடந்தாய் என்று பாசுரத்தில் வெளிப்படுத்தினார், ஆனதுபற்றி இவ்வாழ்வாருக்குத் திருக்குடந்தையெம்பெருமானிடம் பரிவு விஞ்சியிருக்குமென்பது மதிள் குடந்தை என்றதால் தெரிய வருகிறது.

இங்கு மூன்றாமடியில் தமருள்ளும் என்ற பதத்தை மதிள் குடந்தை என்பதோடு அந்வயித்து பக்தர்கள் த்யானிக்கும் திருக்குடந்தை என்று பொருள் வரைவதும் பொருந்தும். பல சாஸ்த்ரங்களைக் கற்றுணர்ந்து பரதேவதா நிர்ணயம் செய்த திருமழிசைப்பிரான் ஆராவமுதாழ்வானிடம் அடங்காக் காதல்கொண்டு அப்பெருமானையே த்யானித்துக்கொண்டு திருக்குடந்தையிலேயே 5000-ஸம்வத்ஸரம் யோகம் செய்துகொண்டிருந்தார் என்கிற வரலாற்றை இவ்வாழ்வார் தமருள்ளும் என்ற பதங்களால் ஸூசிப்பிக்கிறார்போலும். ஆதலால் 'தமருள்ளும் குடந்தை' என்ற யோஜனை மிகப் பொருந்தியதே.

தமர் என்கிற பொதுவான பதத்திற்கு திருமழிசைப் பிரானை ன்று விசேஷித்துப் பொருள் விளக்குக.

இடங்கை வலம்புரி நின்றார்ப்ப, எரி கான்
றடங்கா ரொடுங்குவித்த தாழி—விடங்காலும்
தீவா யரவணைமேல் தோன்றல் திசையளப்பான்
பூவா ரடி நிமிர்த்த போது. (71)

விடம் காலும்	விஷத்தை யுமிழ் கிறவனும்	பூ ஆர் அடி	புஷ்பம்போல் ஸுகுமாரமான திருவடியை
தீ வாய்	பய ஜனகமான வாயையுடையவனுமான	நிமிர்த்த போது	உயரே தூக்கின போது
அரவு அணைமேல்	திருவனந்தனென்கிற படுக்கையின் மேல் (சயனித்திருக்கும்)	இடங்கை	இடது கையில்
		வலம்புரி	ஸ்ரீ பாஞ்சஜன்யாழ்வான்
		நின்று	இருந்து
தோன்றல்	ஸர்வஸ்வாமியானவன்	ஆர்ப்ப	சப்திக்க
		ஆழி	திருச்சக்கரம்
திசை அளப்பான்	திசைகளுடன் கூடின பூமியை அளப்பதற்கென்று	எரி	நெருப்பை
		கான்று	உமிழ்ந்துகொண்டு
		அடங்கார்	சத்ருக்களை
		ஒடுங்குவித்தது	மாளச்செய்தது.

எம்பெருமான் திருத்தில் திவ்யஸூரிகள் பரிவுகாட்டும் ப்ரகாரத்தைப் பேசுகிறார் இதில். பகைவர்கள் பக்கத்திலணுகாதபடி விஷத்தை யுமிழ்ந்துகொண்டு பரமஸுகுமாரமான ஸ்பர்சமுடைய திருவனந்தாழ்வானென்னும் திருப்பள்ளி மெத்தையில் அமர்ந்திருக்கவேண்டிய ஸர்வேச்வரன் மாணிக்குறளுருவாய் மாவலியிடம் வந்து மூவடிமண்ணிரந்ததும் அவனும் கொடுத்தேனென்று சொல்ல பெருமானும் உலகங்களெல்லாவற்றையுமளப்பதற்கென்று யத்னம் செய்யவே, அந்த மாவலியின் மகனான நமுசியென்பானொருவன் அதற்குத் தடைசெய்யவும் உடனே எம்பெருமான் அவனையும் வென்று தன் ஸங்கல்பப்படியே உலகங்களனைத்தையுமளந்தான்.

அதுசமயம் அந்த நமுசி முதலியவர்களால் தன் ஸ்வாமிக்கு என்ன கேடு விளையுமோ வென்றஞ்சின திருச்சக்கரத்தாழ்வான் அவர்கள் நடுங்கி ஓடும்படி அனலையுமிழ்ந்தான். இடது கையிலமர்ந்திருந்த ஸ்ரீபாஞ்சஜன்யாழ்வான் அப்பகைவர்கள் நடுங்கும்படி பெருமுழக்கம் செய்தான். அறிவில் சிறந்த நித்யஸூரிகளுக்கும் இப்படி ஒரு பரபரப்பு உண்டாகிறதென்றால் அவர்களது பரிவை நாம் இவ்வளவென்று அளவிட்டுச் சொல்லமுடியாதபடியாகும்.

விடங்காலும்:— திருவனந்தாழ்வான் நித்யஸூரிகளின் ஸாமகான கோஷத்தைக்கேட்டு அதுவும் பகைவர்களின் ஆரவாரமென்று கருதி விஷத்தையும் தீயையும் உமிழ்ந்தானென்றும் சொல்லலாம்போலும். இப்படி அஸ்தான பயசங்கைக்குக் காரணமும் அவர்களின் பரிவுதான்.

பூவாரடி:— புஷ்பம் போன்ற ஸுகுமாரமான திருவடியால் காடுமேடுகளையும் கடந்தளக்க நேர்ந்ததே; என்று ஆழ்வார் கலங்கமுற்றாரென்கிறது காணத்தக்கதாகும்.

போதறிந்து வானரங்கள் பூஞ்சுனைபுக்கு--ஆங்கலர்ந்த
போதரிந்து கொண்டேத்தும் போது, உள்ளம்-போது
மணிவேங்கடவன் மலரடிக்கே செல்ல
அணி வேங்கடவன் பே ராய்ந்து. (72)

வானரங்கள்	குரங்குகள்	போது	அங்ஙனம் துதிசெய்யப்போ;
போது	விடியற்காலத்தை	அணிவேங்கடவன்	அழகியதிருமலை மேயபெருமானுடைய
அறிந்து	தெரிந்துகொண்டு	பேர் ஆய்ந்து	நாமங்களை நவின்றுகொண்டு
பூ சுனை புக்கு	பூக்கள்நிறைந்தஜலாசயங்கிளில் மூழ்கி	வேங்கடவன் மலர் அடிக்கே செல்ல	வேங்கடநாதனுடைய திருவடித்தாமரையைக் கிட்டுவதற்கு
ஆங்கு	அவ்விடத்தில்	போதும்	புஷ்பங்களை
அலர்ந்த	மலர்ந்திருக்கும்	அணி	ஸமர்ப்பிப்பாய்.
போது	மலர்களை		
அரிந்துகொண்டு	பறித்துக்கொண்டு		
ஏத்தும்	துதிபண்ணுகின்றன;		
உள்ளம்	நெஞ்சமே!		

திருமலையில் திர்யக்ஜாதிகளும் திருமாலை வணங்கி வழிபடுகின்றன; என்று வியப்படைகிறாரிதில்.

போதறிந்து:— ப்ராஹ்மணர்கள் விடியற்காலையிலே எழுந்து ஸ்நானம் செய்வதுபோலத் திருமலையில் குரங்குகளெல்லாம் உஷ:காலத்தைத் தெரிந்துகொண்டு உடனே எழுந்திருந்து புஷ்பங்கள் நிறைந்துள்ள சுனைகளில் சென்று ஸ்நாநஞ் செய்து அங்குள்ள புஷ்பங்களைப் பறித்துக்கொண்டுவந்து அத்திருமலையெம்பெருமானுடைய திருவடிகளிலே ஸமர்ப்பித்துத் தங்கள் ஜாதிப்பேச்சுகளால் ஸ்தோத்ரம் செய்கின்றன. ஆதலால் நீயும் இப்பொழுதே அவனைத்துதி செய்யப்புறப்படு; அவனது திருநாமங்களைச் சொல்லிக்கொண்டு அவன் திருவடிகளில் புஷ்பங்களைக்கொண்டு ஸமர்ப்பிப்பாயாக.

உள்ளம் போது:— மனத்தில் ப்ரவ்ருத்தியுண்டான பிறகுதான் வாக்கால் துதியும் உடலால் பணியும் செய்யமுடியுமாதலால் முற்பட உள்ளத்தை ஏவினார். உள்ளத்தைக் குறித்து "பணிவேங்கடவன் மலரடிக்கே செல்ல போதாம் அணி" என்று நியமித்தது அஹிம்ஸை இந்திரியநிக்ரஹம் தயை பொறுமை ஞானம் தவம் த்யானம் ஸத்யம் என்கிறஎட்டு வகையான புஷ்பங்களாலே அர்ச்சிக்கவேணுமெனக் கருத்திற்கொண்டதாகவுமாம்.

ஆய்ந்துரைப்ப னாயிரம்பே ராதிநடு வந்திவாய்
வாய்ந்த மலர் தூவி வைகலும்—ஏய்ந்த
பிறைக்கோட்டுச் செங்கண் கரிவிடுத்த பெம்மான்
இறைக்காட் படத்துணிந்த யான். (73)

பிறை ஏய்ந்த கோடு	சந்த்ர கலையை யொத்த கொம்புகளையுடையதும்	விடுத்த	முதலை வாயினின்றும் விடுவித்த
செம் கண்	சிவந்த கண்களையுடையதுமான	பெம்மான்	ஸர்வேச்வரனை (அவன்)
கரி	யானையை	இறைக்கு	ஸ்வாமிக்கு
		ஆட்பட துணிந்த	அடிமை செய்கையில் அத்யவஸாயம் கொண்ட
		யான்	அடியேன்

ஆதி நடு அந்தி வாய் வைகலும்	முதல் மத்யம்- கடைசியாகிய காலத்ரயத்திலும்	தூவி	ஸமர்ப்பித்து
வாய்த்த மலர்	கிடைத்த புஷ்பங்களை	ஆயிரம் பேர்	ஆயிரம் திருநாமங்களையும்
		ஆய்ந்து	ஆராய்ந்து
		உரைப்பன்	சொல்லாநிற்பன்.

கீழே திர்யக் ஜாதிகளும் திருமாலை வணங்கித் துதிக்கின்றன; என்று பேசினார். இதில் தனது பொழுதுபோக்கும் விதத்தைச் சொல்லுகிறார்.

ஆய்ந்து:— பகவதாராதனார்த்தமாகப் புஷ்பங்களைப் பறிக்க வேண்டிப் பொய்கையிலிறங்கிய கஜேந்திரனை முதலை பிடித்திழுக்கவும் அதற்கஞ்சின கஜேந்திரனும் ஆதிமூலமே! என்று பரம புருஷனை யழைக்கவும், அப்பெருமானும் அரைகுலையத் தலைகுலைய ஓடிவந்து அம் மடுக்கரையிலே நின்று அம்முதலையைத் துணித்து கஜேந்திரனைக் காத்தருளினனென்கிற வரலாற்றை அறிந்துகொண்ட பின்பும் நாம் நாட்களை வீணாகக்கழிப்பது சரியோ? ஆதலால் காலை நடுப்பகல் மாலை என்கிற மூன்று நேரங்களிலும் கையிலகப்பட்ட புஷ்பங்களை எடுத்து அவன் திருவடிகளிலே ஸமர்ப்பித்து, அவனது திருநாமங்களையும் வாய்விட்டுச் சொல்லிக்கொண்டே யிருப்பேன். இதுவே நமக்கு யாத்திரை காணுமென்றார்.

ஆய்ந்து உரைப்பன்:— அவன் திருநாமங்களின் அர்த்தங்களை ஆராய்ந்துபார்த்துக்கொண்டு அதனால் உண்டாகிற ஸந்தோஷத்துடனேயே அப்பெயர்களையும் சொல்லிக்கொண்டிருப்பேனென்றபடி.

ஆதி நடு அந்திவாய்:— மூன்று காலங்களைச் சொன்னபோதிலும் எல்லாக் காலத்திலும் என்றே பொருள்கொள்ளவேணும். அவை உபலக்ஷணங்களே யன்றி வேறில்லை.

வாய்ந்த மலர்தூவி:— "கள்ளார் துழாயும்" "புரிவதுவும் புகைபூவே" என்றுமுள்ள மற்றவர்கள் பாசுரப்படி எம்பெருமானை கையிலகப்பட்ட புஷ்பங்களெல்லாவற்றாலும் பூஜிக்கலாமென்றபடி அவனுக்காகாத புஷ்பங்களே கிடையாவென்பதாம்.

ஏய்ந்தபிறைக்கோட்டு:— யானையின் பற்களுக்கு சந்திரகலையை உவமையாகக் கூறுவது கவிகளின் மரபு.

செங்கண்:— முதலையிடம் கொண்ட கோபத்தால் யானையின் கண்கள் சிவந்திருந்தனவென்றபடி. இங்கு மூன்றாமடிக்கு குவலயாபீடமென்ற யானையைக்கொன்ற கண்ணனெனப் பொருள் கூறுவதுமுண்டு. செங்கண்:— என்பதும் க்ருஷ்ணனிடமுள்ள கோபத்தால் சிவந்த கண்களையுடைய யானையென்பது பற்றிப் பொருந்தும். விடுத்த என்பதற்கு வதைத்த என்ற பொருளும் சொல்லலாம்.

கீழ்ப்பாட்டில், குரங்குகள் திருமலைநாதனை ஸேவித்து நிற்கின்றன; என்று பேசியபடியால் திர்யக்ஜாதியின் பக்தி நினைவிற்கு வரவே கஜேந்த்ர வ்ருத்தாந்தம் நினைவிற்கு வரப் பிரஸக்தியுண்டாதலால் கஜேந்திரனை முதலை வாயினின்று விடுவித்தவனென்றே பொருள் வரைவது சிறந்ததாகும்.

யானே தவஞ்செய்தே னேழ்பிறப்பு மெப்பொழுதும்
யானே தவமுடையே னெம்பெருமான்—யானே
இருந்தமிழ் நன்மாலை யிணையடிக்கே சொன்னேன்
பெருந்தமிழ னல்லேன் பெரிது. (74)

எம்பெருமான்	எமக்கு ஸ்வாமியே	இரு தமிழ் நல் மாலை	உயர்ந்த தமிழாலாகிய நல்ல (சொல்) மாலையை
ஏழ் பிறப்பும்	எல்லா ஜன்மங்களிலும்	இணை அடிக்கே	உன்னுடைய திருவடிகளிரண்டிலும்
எப்பொழுதும்	எல்லாக் காலத்திலும்	சொன்னேன்	சொல்லப்பெற்றவனாய்
தவம் செய்தேன்	தவம் பண்ணினவன்	பெருந்தமிழன்	பெரிய தமிழ்ப்பண்டிதனும்
யானே	நானே.	பெரிது நல்லேன்	ரொம்பவும் நல்லவனாயிருப்பவனும்
தவம் உடையேன்	தவத்தின் பலனை அடைந்தவனும்	யானே	நானே.
யானே	நானே.		

ஆழ்வார் தாம் மற்ற ஸம்ஸாரிகளைப்போலிராது பகவத் விஷயத்தில் மண்டியிருப்பதை நினைத்து "எனக்கெவ்வுலகம் நிகரே' எனக்கார்நிகர் நானிலத்தே" என்னும் கணக்கிலே தன்னைப் புகழ்ந்து கொள்கிறார். இதுவும் ஸாத்விக அஹங்காரமாதலால் ஹேயமாகாது.

யானே:— நான் ஸர்வகாலத்திலும் எம்பெருமானையே நினைத்துக்கொண்டு இனிய தமிழ்ப் பாசுரங்களால் அவனது திருவடிகளை ஸ்தோத்ரம் செய்துகொண்டு பெரிய தமிழ்க்கவியாயும் பாபங்களைச் செய்யாது நல்லவனாயும் இருந்துவருகிறேன். இப்படி பகவானைப் பாடுவதாகிற நல்ல கைங்கரியத்தை நான் கைக்கொண்டிருப்பதால் முன்னம் பல்பிறவிகளிலும் தவம் செய்தவனாயிருக்கிறேன். அத்தவத்தின் பயனையும் நானே பெற்றேன். இப்பேறு மற்றொருவர்க்குக் கிடைத்ததோ? என்று பகவதநுபவமாகிற பெரிய புருஷார்த்தத்தைத் தான் அடைந்ததனால் தன்னையே க்ருதக்ருத்யராகப் பேசினார்.

உலகில் பலர் பலவிதமாகச் சரீரத்தை வருத்தி ஊணுறக்கமின்றித் தவம் செய்துவந்தபோதிலும் அவர்களை பொருட்படுத்தாமல் தன்னையே பெரும்பாக்யசாலியாகப் பேசிக்கொண்டதற்கடி; தான் அப்பெருமானைப் பாடப்பெற்ற கைங்கர்யமே எல்லாவிதமான புருஷார்த்தங்களுக்கும் மேலானதென்பதைக் கருதியே. நம்மாழ்வாரும் "குறிக்கொள் ஞானங்களாலெனையூழி செய்தவமும் கிறிக்கொண்டிப் பிறப்பே சில நாளெய்தினன்யான்" என்று மற்றையோர்கள் யுகக்கணக்காகச் செய்தடையவேண்டும் பயனை நான் சில நாளிலெய்தினேனென்கிறார்.

பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன்னின்று
இருகணிள மூங்கில் வாங்கி—அருகிருந்த
தேன் கலந்து நீட்டுந் திருவேங்கடங் கண்டீர்
வான் கலந்த வண்ணன் வரை. (75)

பெருகும்	பெருகிவழிகிற	அருகுஇருந்த	ஸமீபத்திலிருந்த
மதம்	மதஜலத்தையுடைய	தேன் கலந்து	தேனில் தோய்த்து
வேழம்	யானையானது	நீட்டும்	தன் பேடைக்குக் கொடுப்பதாக நீட்டும்
மா பிடிக்கு	தனது சிறந்த பெண் யானைக்கு	திருவேங்கடம் கண்டீர்	திருமலையல்லவோ;
முன் நின்று	முன்னே நின்று கொண்டு	வான் கலந்த வண்ணன்	மேகத்திற்கு ஸமமான நிறத்தையுடைய பெருமான் (வாஸம் செய்யும்)
இரு கண்	இரண்டு கணுக்களையுடைய	வரை	மலை
இளமூங்கில்	இளைய மூங்கில் குருத்தை		
வாங்கி	(மெள்ள) பிடுங்கி எடுத்து		

ஆழ்வார் தம்மை "பெருந்தமிழன்" என்று சொல்லிக்கொள்ளவும் அதைக் கேட்டிருந்த பெருமாள் உம்மை பெருந்தமிழன் என்று ஸ்தாபித்துக்கொள்வதற்கேடான ஒரு பாசுரம் பாடும் என்று நியமிக்க, அதற்காகப் பாடிய கவிபோலுள்ளது இப்பாட்டு. இப்பாட்டிலுள்ள வர்ணனையால் கீழேசொன்ன ஸந்தர்பம் ஊஹிக்கப் படுகிறது.

பெருகுமதவேழம்:—திருவேங்கடமலையில் மதம் பிடித்த யானை மும்மதப்புனல் சோரும்படி அங்குமிங்கும் திருந்துகொண்டிருக்கிறது. திரியுங்கால் வழியிலே தன் பேடையைப் பார்த்தது. பார்த்ததும் அதற்கு இனிய வுணவைக் கொடுக்கவேணுமென்ற மனங்கொண்டது. உடனே ஸமீபத்திலிருந்த ஒரு மூங்கில் குருத்தை துதிக்கையால் பிடுங்கி, தேன்வழிந்துகொண்டிருந்ததொரு கூட்டில் அதைத் தோய்த்தெடுத்து தன் பேடையின் வாயில் பிழிகின்றதாம். இப்படி இயற்கை யழகுவாய்ந்த திருவேங்கடம் மேகம்போன்ற வர்ணத்தையும் ஔதார்யத்தையுமுடைய நம் பெருமான் உறையுமிடமென்றபடி.

உலகிலுள்ள கவிகள் வர்ணிப்பதுபோல் இந்தத் திருமலையை வர்ணித்திருப்பதைக்கொண்டு எம்பெருமான் முன்பு தன் கவிதை

யைக் காண்பிக்கப்பாடிய பாடலிதுவென்று சொல்லப்பட் இத்தால் யானைபோன்ற ஸர்வேச்வரன் தனது பத்னியான ப டியை உகப்பித்துக்கொண்டு திருமலையில் நித்யவாஸம் செ னென்பதும் தோன்றும்.

வரைச் சந்தனக்குழம்பும் வான்கலனும் பாட்டும்
விரைப்பொலிந்த வெண் மல்லிகையும்—நிரைத்து
ஆதிக்கண் நின்ற வறிவ னடியிணையே [கொ
ஓதிப்பணிவ துறும். (

வரை சந்தன குழம்பும்	(மலய) மலையிலுண்டான சந்தனக் குழம்பும்	நிரைத்துக் கொண்டு	ஸம்பாதித்துக் ண்டு
வான்கலனும்	விலையுயர்ந்த ஆபரணங்களையும்	ஆதிக்கண் நின்ற அறிவன்	ஸ்ருஷ்டிக்கு முன்பே நின்ற (ஜக ரண பூதனான) ஸர்வஜ்ஞனுடைய
பட்டும்	நல்ல பட்டாடைகளையும்		
விரைபொலிந்த	வாஸனை மிகுந்திருக்கிற	அடி இணையே	இரண்டு திரு ளையே
வெண் மல்லிகையும்	வெளுப்பான மல்லிகை புஷ்பங்களையும்	ஓதி	துதிசெய்து
		பணிவது	ஸேவிப்பது
		உறும்	ஸ்வரூபத்திற்கு தகாகும்.

கீழ்ப்பாட்டில் சொன்னபடி நமக்கு மிகவும் ஸந்நிஹிதனாயி ரும் திருவேங்கடநாதனைத் ஆச்ரித்து வணங்குவதுதான் நாம் செ யவேண்டியசெயலென்கிறார் இதில்.

வரை.— சந்தன விருக்ஷங்கள் மலயபர்வதத்திலே த பெரும்பாலாக உண்டாவதால் சந்தனத்தை மலயஜம் என் வழங்குவதுண்டு. அதைக்கொண்டு வரைச் சந்தனக்குழம்பு எ கிறார். எம்பெருமானையும் அரசனையும் ஆசார்யனையும் அணுகும் து வெறுங்கையுடனே செல்லக்கூடாது. ஏதாகிலும் உபஹாரத் எடுத்துக்கொண்டு செல்லவேணுமென்பது சாஸ்த்ரம். அதை கருதி நல்ல சந்தனத்தையும் எம்பெருமான் திருமேனிக்குத் தகு

லயுயர்ந்த ஆபரணங்களையும் நல்ல பீதாம்பரத்தையும் நல்ல பரிமளம் வீசுகிற புஷ்பங்களையும், இவைகளில் ஏதாவதொன்றையாவது, கையிலெடுத்துக்கொண்டுபோய் பெருமான் திருவடிகளில் ஸமர்ப்பித்துப் பலவகையாலும் துதிசெய்து வணங்கிநிற்பது தான் நமக்கு ஸ்வரூபாநுரூபமான கார்யம் என்றபடி.

ஆதிகண்நின்ற:— புஷ்பங்களும் பூஜையும் முதன்மையுடையவனுக்குத்தான் தகுமாதலால் ஸ்ருஷ்டிக்கு முன்பே இருப்பவன் என்று சொல்லி ஜகத்காரணமானதுபற்றி பூஜையும் அவன் விஷயத்தில் ப்ராப்தமாயிற்றென்றபடி.

உறுங்கண்டாய் நன்னெஞ்சே யுத்தமன் நற்பாதம்
உறுங்கண்டா யொண்கமலந்தன்னால்—உறுங்கண்டாய்
ஏத்திப் பணிந்தவன்பே ரீரைஞ்ஞூ றெப்பொழுதும்
சாத்தி யுரைத்தல் தவம் (77)

நல் நெஞ்சே	(எனக்கு) நல்ல மனமே	சாத்தி	அந்தத் தாமரைப் புஷ்பங்களை ஸமர்ப்பித்து
உத்தமன்	புருஷோத்தமனுடைய	ஏத்தி	துதிசெய்து
நல் பாதம்	நன்மையுடைய திருவடிகள்	பணிந்து	தண்டனிட்டு
உறும் கண்டாய்	நாம் ஆச்ரயிக்கத் தகுதியானவைகாண்.	அவன் பேர் ஈர் ஐந்நூறு	அவனுடைய நாமங்களாயிரத்தையும்
ஒண் கமலம் தன்னால்	அழகான தாமரைப்பூவால்	எப்பொழுதும்	எல்லாக் காலத்திலும்
(அத்திருவடிகளை பூஜிப்பது)		உரைத்தல்	சொல்லுகிறதாகிற
		தவம்	தபஸ்ஸானது
உறும் கண்டாய்	நமக்கு பொருந்தியது காண்.	உறும்கண்டாய்	உரியதுகாண்.

உறுங்கண்டாய்:— எனக்கு அநுகூலமாயிருந்துகொண்டு நான் சொன்னபடி செய்கிற மனமே! உனக்கு ஒன்று சொல்லுகிறேன் கேள். தரம் பாராமல் எல்லார்க்குமொக்க வருள்புரிவதென்கிற மஹாகுணம் வாய்ந்த புருஷோத்தமனுடைய திருவடிகள்தான் நாம்

அடைய வேண்டியவை; என்பதை நிச்சயமாகக்கொள். மேலும் அத்திருவடிகளைக் கையிலகப்பட்ட நல்ல புஷ்பங்களால் அர்ச்சிப்பது தான் நாம் உடம்பால் செய்யவேண்டிய வேலையென்றும் நிச்சயித்துக்கொள். தவிரவும் நாமவனை அடைவதற்கு ஊன்வாடவுண்ணாது உயிர் காவலிட்டு உடலிற்பிரியாப்புலனைந்தும் நொந்து வாட வாடத் தவம் புரியவேணுமென்றே நினைக்காதே; அவனுக்கு அழகிய புஷ்பங்களைச் சாத்தி ஸ்தோத்ரம் செய்து பக்தி ப்ரகர்ஷத்தால் தண்டனிட்டு அவனது ஆயிரம் திருநாமங்களையும் சொல்லிக்கொண்டிருப்பதுதான் நாம் செய்யவேண்டிய தவம்; என்றும் உறுதியை அடைவாய்; என்று தம் நெஞ்சுக்கு உபதேசித்தாராயிற்று.

தவஞ்செய்து நான்முகனே பெற்றான், தரணி
நிவர்ந்தளப்ப நீட்டிய பொற்பாதம்—சிவந்த தன்
கையனைத்து மாரக் கழுவினான், கங்கைநீர்
பெய்தனைத்துப் பேர்மொழிந்து பின். (78)

நான்முகனே	பிரமனொருவனே
தவம்செய்து	தவத்தைச் செய்து
பெற்றான்	அதன் பலத்தை அடைந்தான்.
	(எனெனில்)
தரணி	பூமியை
அளப்ப	அளப்பதற்காக
நிவர்ந்து	நிமிர்ந்துநின்று
நீட்டிய	நீளும்படிசெய்த
பொன் பாதம்	அழகான திருவடியை

கங்கை நீர் பெய்து	கங்கையாகப் பெருகப்போகும் கமண்டல ஜலத்தை வார்த்து
அனைத்து பேர் மொழிந்து	அவனது திருநாமங்களெல்லாவற்றையும் சொல்லி
பின்	பிறகு
தன் சிவந்த கை அனைத்தும் ஆர	தன்னுடைய சிவப்பு நிறமுள்ள கைகளெல்லாம் தன்மயங்களாகும்படி
கழுவினான்	விளக்கினான் (அபிஷேகம்செய்தான்).

அவனுடைய பேர் ஈரைஞ்ஞூறுஉரைத்தலே தவமாகுமென்றார் கீழில். அப்படித் தவம் செய்து பயனைப்பெற்றவன் நான்முகன் ஒருவனே என்கிறார் இதில்.

தவம் செய்து:— ஸ்ரீய: பதியான புருஷோத்தமன் தேவேந்திரனுக்காகக் கார்யம் செய்யவேண்டி வாமநனாய் வந்து மாவலியிடம் மூவடி மண்ணிரந்து அங்ஙனம் பெற்றுக்கொண்டு உடனே அளக்கவேண்டி ஒரு திருவடியைப் பூமியிலே வைத்து மற்றொரு திருவடியை உடனே நீட்டுங்கால் அத்திருவடி காடுமேடுகளையெல்லாம் கடந்து ஸ்வர்கலோகத்தையும் தாழ்த்தி ஸத்யலோகத்தின் வழியாகச் செல்லவே பிரமன் வந்து வணங்கி அவன் திருநாமங்களாகிற மந்த்ரங்களை உச்சரித்துக்கொண்டு தன் கமண்டல தீர்த்தத்தால் அத்திருவடிக்குத் திருமஞ்சனம் செய்துவைத்தான். என்னே! அவன் பெற்ற பாக்யம். அவனது தவப்பயன் என்னே! என்று நான்முகனைக் கொண்டாடினபடியாம்.

கங்கைநீர் பெய்து:— பிரமன் பெருமான் திருவடியைக் கழுவியபின் கீழேவிழுந்த தீர்த்தம் கங்கையென்று பிரஸித்தமாயிருக்க, இங்கு பிரமன் கங்காதீர்த்தத்தால் கழுவினனென்பது எங்ஙனம் பொருந்துமென்றால், பிரமன் பெய்து திருவடி விளக்கின தீர்த்தமே அடுத்தக்ஷணத்தில் கங்கையாகப் போகிறது என்ற கருத்தைக் கொண்டு கங்கைநீர் பெய்து என்று சொன்னது. "கங்கை நீர்" கங்கையாகப் பரிணமிக்கப் போகும் கமண்டல தீர்த்தம் என்றே பொருள்.

பின்னின்று தாயிரப்பக்கேளான், பெரும்பணைத்தோள்
முன்னின்று தானிரப்பாள் மொய்ம்மலராள்--சொல்நின்ற
தோள்நலத்தான் நேரில்லாத் தோன்றல், அவனளந்த
நீணிலந்தா னத்தனைக்கும் நேர். (79)

தாய்	தாயான கௌஸல்யா தேவி	கேளான்	அதனைக்கேளாதவனையும்
பின் நின்று	பின்னால் நின்று கொண்டு	பெரு பணை தோள்	நீண்டும் பருத்துமிருக்கிற மூங்கில் போன்ற தோள்களையுடைய
இரப்ப	என்னை விட்டுவிட்டுப் போகலாகாது என்று கெஞ்சிக் கேட்டபோதிலும்		

மொய் மலராள் தான்	மலர்ந்த தாமரைப்பூவில் பிறந்த லக்ஷ்மீ தேவியின் அவதாரமான ஸீதையானவள்	சொல்நின்ற	தந்தையின் சொல்லிலே நின்ற
முன்நின்று	முன்னே நின்று கொண்டு	தோள்நலத்தான்	தோள்வலிமையுடையவனும்
இரப்பாள்	காட்டிற்குப் போகலாகாது என்று ப்ரார்த்தித்தவளவிலும்	நேர் இல்லா தோன்றல்	தனக்கு நிகரில்லா ஸ்வாமியான ஸ்ரீ ராமனுடைய
(அதையும் கேளாமல்)		அத்தனைக்கும்	காட்டுக்குச்சென்ற அச்செயலுக்கு
		அவன் அளந்த நீள் நிலம் தான் நேர்	அவன் இப்பெரிய வுலகத்தை அளந்ததென்கிற செயல் தான் ஒப்பாகும்,

அப்பெருமானுடைய கல்யாண குணங்களுக்கு அவன் குணங்களே ஒப்பாகுமேயன்றி வேறொருவமையிட்டுச் சொல்லவியலாது என்கிறாரிதில்.

பின்னின்று:—ஸ்ரீமந் நாராயணன் ஸ்ரீ ராமனாய் வந்து தோன்றித் தந்தையின் நியமனத்தைக்கொண்டு காடேறப்போக நிச்சயிக்குமளவில் தாயாகிய கௌஸல்யைவந்து கிட்டி நான் ஏகபுத்ரை. உன்னைவிட்டு பிரிய ஸம்மதியேன். காடுகளும் அனேக தோஷங்களுடையவை; நீ போகலாகாது; என்று மறுக்கவும் தனது தேவியாரான ஸீதையும் அக்ரதஸ்தே கமிஷ்யாமி என்று முன்னின்று, உன் ஸுகுமாரமான திருமேனியை வநத்தில் எப்படி வருந்தப் பார்த்திருப்பேன்; ஆதலால் நீ போகலாகாது; என்று தடுக்கவும் தான் அவைகளை மதியாது தமப்பன் வார்த்தையிலேயே ஸ்திரமாய் நின்று மஹரிஷிகளையும் தேவர்களையும் காக்கவேண்டுமென்பதைக் கருத்திலே கொண்டு காட்டிலே நடந்துசென்ற செயலுக்கு ஒப்பாக வெதைச் சொல்லலாமென்றால், யோக்யன் அயோக்யன் என்ற முறையைப் பாராமல் எல்லார் தலையிலும் திருவடியை வைத்துலகளந்த செயலே ஒப்பாகும். உன் பெருங்குணத்திற்கு உன் மற்றொரு பெருங்குணமே ஒப்பாகுமன்றி வேறொரு பொருள் கிடையாதென்று சொல்லித்தாயிற்று.

நீணிலந்தான்நேர்:—இராமபிரானுடைய குணம் இப்பூமிபோல் பெரியது என்று சொல்லலாமேயன்றி சொல்லிக் கலைக்கட்டப்போவதில்லை யென்றபடி.

சொல் நின்ற:— "தகப்பன் வார்த்தையில் நின்றவனை" என்பதையன்றி, ஸ்ரீமத் ராமாயணத்தில் ப்ரதிபாதிக்கப்பட்டவன் என்றும் பொருள் விரிப்பதுமுண்டு.

தோள் நலத்தான்:— தோள்பலத்தையுடையவனென்றபடி. "தோள் நலந்தான்" என்கிற பாடமும் சிலரால் வழங்கப்படும். தோளையுடையவனுடைய நலந்தானத்தனைக்கும் என்று கூட்டிப் பொருள் வரைக.

நேர்ந்தேனடிமை நினைந்தேனொண் கமலம்
ஆர்ந்தேனுன் சேவடிமே லன்பாய்—ஆர்ந்த
அடிக்கோலம் கண்டவர்க் கென்கொலோ, முன்னைப்
படிக்கோலம் கண்டபகல். (80)

அடிமை	உனக்கு பணிவிடை செய்வதில்	ஆர்ந்தேன்	த்ருப்தனானேன்
நேர்ந்தேன்	ஈடுபட்டேன்	ஆர்ந்த	பூர்ணமான
ஒண்கமலம் அது	அழகான தாமரை போன்ற அந்தத் திருவடிகளை	அடிகோலம்	திருவடிகளின் அழகை
நினைந்தேன்	சிந்தித்தேன்	கண்டவர்க்கு	ஸேவித்தவர்களுக்கு
உன் சே அடி மேல்	உனது சிவந்த திருவடிகள்மேல்	முன்னை	முன்பு
		படி கோலம் கண்டபகல்	திருவடம்பை ஸேவித்தகாலமானது
அன்பாய்	பக்தியடையவனாய்க் கொண்டு	என் கொல்	எப்படியாவதோ?

(அவன் திருமேனி ஸேவையிலும் திருவடி ஸேவை சிறந்ததென்றபடி)

நேர்ந்தேன்:— பெருங்குணத்தனான சக்ரவர்த்தித்திரு மகனுடைய திருவடிகளிலே என் அன்பை வைத்தேனென்கிறாரிதில். ஸ்ரீ ராமபிரானுக்குப் பணிவிடை செய்வதே நமக்கு ப்ராப்தம் என்று துணிந்தேன். அவனுடைய தாமரையன்ன பொன்னடிகளையே

நினைத்துக்கொண்டிருக்கிறேன். அவனது திருவடிகளில் எனது அளவுகடந்த அன்பைவைத்து அதனால் என்னைப் பரிபூர்ணனுக நினைத்திருக்கிறேனென்றார்.

உலகில் குழந்தைகளுக்குத் தங்கள் தாயின் கொங்கைகளிலே யே நோக்கிருக்குமாப்போலே சேஷபூதனிழியுந்துறையான திரு வடிகளிலேயே ஆழ்வாருக்குள்ள அபிநிவேசத்தைக்கண்ட சில பெருமானுடைய திருமேனி முழுவதும் நமக்குத்தேச்யமாயிருக் கச் செய்தே நீர் திருவடியைமட்டும் துதிப்பது சரியோ? வென்று வினவ அதற்கு விடையளிக்கிறார் பின்னடிகளில்.

அவனது திருவடி ஸேவையைப்பெற்றவர்களுக்குத் திருமே னி ஸேவையைப் பெற்ற காலம் என்னுவதோ? என்றார். அடியார் களுக்குத் திருவடிகளே உத்தேச்யமாதலால் அவனது திருமேனி யை ஸேவித்தவர்களைக் காட்டிலும் திருவடியை ஸேவித்தவர்களே சிறந்தவர்கள் என்பது இவரது கொள்கை. தவிரவும் ஸௌந்தர்யம் முதலிய குணங்களாலேற்படுகிற போக்யதையாலும் குறைவற்றி ருப்பதால் திருவடிகளை ஸேவித்த காலத்தில் திருமேனியை ஸேவித் தகாலம் தாழ்ந்ததென்றே தோன்றுகிறது என்றார். இதனால் கைங்கர்யைகரதியான சேஷபூதனுக்குத் திருவடிகளிலேயே அன் பும் ஆபிமுக்யமும் அமையவேண்டியது அவச்யமென்பது தெரி விக்கப்பட்டது.

பகல்கண்டேன் நாரணனைக் கண்டேன், கனவில்
மிகக்கண்டேன் மீண்டவனை மெய்யே—மிகக்கண்டேன்
ஊன்திகழு நேமி யொளிதிகழும் சேவடியான்
வான்திகழும் சோதி வடிவு. (81)

பகல்	பகற்காலத்தை	கனவில்	(ஸ்வப்நத்திலும்) மானஸ ஸாக்ஷாத்காரத்திலும்
கண்டேன்	ஸாக்ஷாத்கரித்தேன்		
நாரணனை	ஸ்ரீமந்நாராயணனை		
கண்டேன்	ஸாக்ஷாத்கரித்தேன்	மிக	தெளிவாக

அவனை	அப்பெருமானை	ஒளிதிகழும் சே அடியான்	தேஜஸ்விளங்குகிற சிவந்த திருவடிகளையும் உடையவனை
மீண்டு	விஷயங்களிலிருந்து திரும்பி	வான்திகழும் சோதி வடிவு	பரமபதத்தில் விளங்குகிற தேஜோமயமான அப்பெருமான் திருமேனியையும்
மெய்யே கண்டேன்	ப்ரத்யக்ஷ துல்யமாம்படி ஸேவித்தேன்	மிக கண்டேன்	விசேஷமாக ஸேவித்தேன்.
ஊன்திகழும் நேமி	திருமேனியில் ப்ரகாசிக்கிற திருவாழியையும்		

இப்பாட்டில் தான் எம்பெருமானை ஸாக்ஷாத்கரித்ததைப் பேசுகிறார்.

பகல் :—உலகில் ஒவ்வொரு நாளும் பற்பல ஜாதிகளில் பலர் பிறந்துகொண்டிருந்தாலும் ஞானிகள் அவர்களைப் பிறந்தவர்களாகக் கருதமாட்டார்கள். திருமந்திரத்தினர்த்த ஞானம் எவர்களுக்கு என்றைக்கு உண்டாயிற்றோ; அவர்களைத்தான் அன்று பிறந்தவர்களாகச் சொல்லுவார்கள். அங்ஙனமே அந்த ஞானத்தை அவர்கள் மறந்தார்களாகில் அப்பொழுது அவர்களை உயிரோடிருப்பினும் இறந்தவர்களாகவே கருதுவார்கள் உடல் பிறந்தநாளைக் கருதாது ஈச்வரஞானம் பிறந்தநாளைத்தான் பிறந்தநாளாகக் கருதுவது பெரியோர்களின் இயல்பு. அதுபோல் இப்பிரக்ருதியில் இரவும் பகலும் மாறிமாறி நடந்துக்கொண்டிருந்தாலும் அவைகளையெல்லாம் இராக்காலமாகவே ஞானிகள் கருதுவார்கள். என்று எந்ததினத்தில் ஸ்ரீய: பதியான நாராயணனைக் காண்கிறார்களோ; அந்த தினத்தைத்தான் பகல் என்பார்கள். அந்தக் கணக்கில் இவ்வாழ்வார் தான் திருமாலை ஸேவித்தநுபவித்ததுபற்றி பகல்வேளையைப் பார்த்தேன் என்றார். இவ்வளவு காலம் அவனைக் காணாதபடியால் காலமெல்லாம் காளராத்ரியாய்க் கழிந்தது. இப்பொழுது அஸ்தமியாத ஸூரியனை நாராயணனைக்கண்டபடியால் பகற்கண்டேனென்றபடி. இவ்வர்த்தம் ஸம்ஸாரிகளுக்குப் புரியாததாலால் விளங்கச் சொல்லுகிறார் நாரணனைக் கண்டேனென்று. நாராயணனைக் கண்களால் கண்டுகொண்டேன். ஆதலால் பகல் கண்டேனென்று சொன்னபடி.

ஆழ்வார் நாரணனைக் கண்டேன் கண்டேன் என்று சொல்லுவ தெல்லாம் ஸ்வப்நம்போன்ற மாநஸாநுபவத்திலே கண்டதைத்தானே சொல்லுவது; என்று சிலர் நினைக்க, அப்படியல்ல வென்கிறார் மேலடிகளால். நான் பார்த்தது ஸ்வப்நத்தில் போலன்று. நித்ய ஸூரிகள் பரமபதத்தில் எப்படிக் காண்கிறார்களோ; அப்படியே விஷயாதிகளில் ஆசையைவிட்டு நேரில் கண்களால் கண்டநுப வித்தேன். திருவாழி தொடக்கமான பஞ்சாயுதங்களையும் அவனது திருமேனியில் ஸேவித்துக்கொண்டேன். ஒளிவீசுகிற அவனது திருவடிகளையும் ஸாக்ஷாத்கரித்தேன். நித்யஸூரிகள் ஸாக்ஷாத் காரம்போன்ற ஸாக்ஷாத்காரத்தையே நானும் பெற்றேனென்றபடி

வான்திகழும் சோதி வடிவு:—மேகம்போல் விளங்கும் திரு வுடம்பையும் ஸேவித்தேனென்றும் பொருள் விரிப்பதுமுண்டு.

வடிக்கோல வாள்நெடுங்கண் மாமலராள், செவ்வி
படிக்கோலம் கண்டகலாள் பன்னாள்—அடிக்கோலி
ஞாலத்தாள் பின்னும் நலம்புரிந்த தென்கொலோ
கோலத்தா லில்லை குறை. (82)

வடிகோலம்	கோதில்லாமல் சுத்தமான அழகை யுடையவளாயும்	பின்னும்	அதை நேரில் பார்த்திருந்தும்
வாள்நெடும் கண்	ஒளிவீசுகிற நீண்ட திருக்கண்களை யுடையவளாயும்	ஞாலத்தாள்	பூமிப் பிராட்டியானவள்
மாமலராள்	உயர்ந்த தாமரை மலரில் அவதரித்தவளு மான பெரிய பிராட்டியார்	அடிகோலி	பலவிதமாய் பாரித்துக்கொண்டு
செவ்வி படி கோலம்கண்டு	சிறப்பான அப்பெருமானது திருமேனி அழகைக்கண்டு	நலம்புரிந்தது என்கொலோ	அவனையே ஆசைப் பட்டுக்கொண்டிருப்பது என்னே?
		(அதற்குக் காரணம்)	
பல் நாள் அகலாள்	எக்காலத்திலும் அவனைப்பிரியாது கூடியிருப்பள்	கோலத்தால் குறையில்லை	(எவ்வளவுபேர் அநுபவித்தாலும்) அழகி னால் குறைவின்றி இருப்பதுதான்

கீழ்ப்பாட்டில் நாரணனைக் கண்டேனென்றார். அப்பெருமான் பிராட்டிமார்களுடன் கூடினபடியே எனக்குக் காட்சிகொடுத்த தென்கிறாரிதில்.

வடிக்கோல:— பெரியபிராட்டியார் பூமிப்பிராட்டியார் இவர்களுடன்கூடின பெருமானை ஸேவிக்கப் பெற்றேனென்பதை ஒரு சமத்காரமாகப் பேசுகிறார். நான் ஸாக்ஷாத்கரித்தபெருமானைப் பெரியபிராட்டியார் அகலமாட்டேனென்று சொல்லிக்கொண்டு பிரியாமலிருக்கிறாள். அப்பிராட்டியோ சிறிதும் குறைசொல்வதற்கிடமின்றி வடிக்கட்டின அழகுவாய்ந்தவள். ஒளிவீசுகிற காதளவும் நீண்ட திருக்கண்களையுடையவள். ஸௌகுமார்யத்தின் ஏற்றம் தோற்றும்படி சிறந்த தாமரைமலரில் பிறந்தவள். இவ்வளவு பெருமைவாய்ந்த பெரியபிராட்டியார் எம்பெருமானது லோகவிலக்ஷணமான கண்டமாத்திரத்தாலே மேல்விழப்பண்ணுகிற சிறந்த திருமேனியைப்பார்த்துப் பக்கநோக்கின்றி அவனையே கண்களால் பருகிக்கொண்டு அகலகில்லேன் அகலகில்லேன் என்று புலம்பிக்கொண்டு பலகாலும் அவனைவிட்டுப் பிரியாமலிருக்கிறாள். இதனைத் தெரிந்துவைத்தும் பூமிப்பிராட்டி பலபடியாக அவனை அநுபவிக்கவேணுமென்று பாரித்துக்கொண்டு அவனையே ஆசைப்பட்டுக்கொண்டிருப்பது எதற்காக; வென்று கேட்கிறார். அழகில் சிறந்தவொருத்தி அகலாதிருக்க அவனையே மற்றொருத்தி ஆசைப்படுவதுண்டோ? என்று வினவியபடி.

பிறகு அக்கேள்விக்குத் தானே ஸமாதானமுரைக்கிறார் நான்காமடியால்.

உலகில் ஒருவனை ஒருவள் ஆசைப்பட்டிருந்தால் மற்றொருவள் அவனையே வேண்டாமலிருப்பதற்குக் காரணமுண்டு. விஷயம் அபூர்ணமானமையாலே. அவன் குறைவுள்ளவனானமையால் அவனது போக்யதை ஒருத்திக்கே போதாமையாலே மற்றொருத்திக்கு அபேக்ஷிக்கப் ப்ரஸக்தியில்லை. அங்ஙனம் ஒரு சிறு குட்டையில் ஒருவன் மூழ்க இறங்கினால் மற்றொருவன் அதில் இறங்குவதில்லை. ஒருவன் மூழ்கினதாலேயே அக்குட்டை கலங்கிச் சேறாகிவிடுமாத

லால் மற்றொருவன் அதை கண்ணெடுத்துப் பார்ப்பதுமில்லை அதுவே ஒரு பெரிய பிரவாஹமாயிருந்தால் பலர் இறங்கி மூழ் தாபத்தைத் தணித்துக்கொள்வதுண்டு. ஆதலால் விஷயத்தி பூர்ணதைதான் பலர் வேண்டுவதற்குக் காரணம். அதுபோ எம்பெருமான் பரிபூர்ணனாகையால் எவ்வளவுபேர் எவ்வளவுகால அநுபவித்தாலும அவனது திருமேனியில் அழகுக்கும் போக்ய தைக்கும் குறைவுவராது.

அவன் கோலத்தால் குறைவில்லாத பூர்ணனாகையால் பெரிய பிராட்டியார் அவனதாகத்திருப்பதுமறிந்தும் பூமிப்பிராட்டியா அவனிடம் ஆசைவிடாது பலபடியாக அனுபவிக்கவேணுமென்று பாரித்து நிற்கிறாள் என்றபடி. இத்தால் தான் பிராட்டிமார்களுடன் கூடின பரிபூர்ண ஸௌந்தர்யவானான பெருமானை ஸேவித்தேன் என்பதைக் காட்டினாராயிற்று.

வடிக்கோல :— கூர்மையுள்ளதும் அழகு பொருந்தியது மான திருக்கண் என்று கொண்டு கண்ணுக்கே விசேஷணமாகச் சொல்லலாம்.

அடிக்கோலி: விருந்துண்ணப்போகிறவன் இங்ஙனம் பக்ஷ்யங் களை உண்ணவேணும். இங்ஙனம் சித்ரான்னங்களை உண்ணவேணும் என்று பலபடியாகத் திட்டம்போட்டுக்கொண்டு போமாப்போலே, பலபடி அவனை அநுபவிக்கவேணுமென்று பாரித்துக்கொண்டு ; எனப்பொருள்.

குறையாக வெஞ்சொற்கள் கூறினேன் கூறி
மறையாங் கென வுரைத்த மாலை—இறையேனும்
ஈயுங் கொலென்றே யிருந்தே னெனைப்பகலும்
மாயன் கண்சென்ற வரம். (83)

மறை	வேதங்கள்	மாலை	ஸர்வேச்வரனை
ஆங்கு என உரைத்த	அது அதுவென்று பரோக்ஷமாகச் சொன்ன	குறை ஆக	குறையாகும்படியாக
		வெம் சொற்கள்	கொடிய சொற்க ளாலே

கூறினேன்	சொன்னேன்	வரம்	வரங்களை
கூறி	அப்படிச்சொல்லி	இறையேனும்	கொஞ்சமாவது
மாயன் கண்	ஆச்சரிய சேஷ்டித ஞான அவனிடத்தி லிருந்து	ஈயும் சொல்	கொடுப்பரோ வென்று
சென்ற	வரக்கடவதான	எனைபகலும் இருந்தேன்	ஸர்வகாலத்திலும் கா...

பிராட்டிமார்களுடன் கூடியிருக்கிற பெருமானை ஸேவித்து விட்டு, இச்சேர்த்தி யழகுக்குப் பொருத்தமாகக் கவிபாடத் தெரிய வில்லையே நமக்கு. ஏதோ கடும் சொற்களால் அவனுக்குக் குறை வுண்டாகும்படி செய்கிறேமே; என்று தன்னை நொந்துகொள்கிரு ரிதில்.

குறையாக.— வேதங்கள் எம்பெருமானுடைய குணங்களை யெல்லாம் பூர்ணமாக வர்ணித்துச்சொல்லவேணுமென்று ஆரம் பித்துக் கடைசியில் யதோ வாசோ நிவர்த்தந்தே, அப்ராப்ய மநஸா ஸஹ என்று வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாத நிலத்திலிருப்ப வன்; அவனையும் அவனது குணங்களையும் இதம் இத்தம் என்று சொல்லமுடியாது. மனத்திற்கும் எட்டாமல் அங்கே இருப்பவன்; என்று பரோக்ஷமாகப் பேசப்படும் பெருமானை என்னுடைய க்ரூர மான சொல்லால் போற்றினேன். ஆவியை அரங்கமாலைஅழுக்குடம் பேச்சில் வாயால் தூய்மையில் தொண்டனேன் நான் சொல்லி னேன் தொல்லைநாமம் என்றபடி என்னுடைய எச்சில் வாயால் சொற்களியற்றிக் கவிபாடி அவனையும் அபரிசுத்தனுக்கினேன். இப்படி அவனையும் குறைவுள்ளவனுரும்படி செய்ததுமன்றி நான் அவனிடம் பிரயோஜநாபேக்ஷை பிறந்தவனுயிருந்தேனே; இது என்ன வெட்கக்கேடு; என்கிருர் பின்னடிகளில்.

எனது வாக்குத் தூய்மையிலாமையினுலும் அவன் பெருமைக் குத் தகுந்த கவிபாடமுடியாமையினுலும் ஏதோ சில சொற்களால் நான் அவனைத் துதித்தது அம்ருதத்தில் விஷத்தை ஏற்றிட்டது போலாகும். நான் நினைத்திருப்பதோ வேறு. ஏதோ அவனுக்கு அரும்பெரும் உபகாரங்கள் செய்துவிட்டதுபோல் கருதி அவன் இதற்குப் பதிலாக அவனது கிருபையால் நமக்கு ஏதாகிலும்

அருள் புரிவானே? என்று கையை விரித்துக்கொண்டிருக்கிறேன். அவனைக் கெடுத்ததுமன்றி பிரத்யுபகாராபேக்ஷையுடனிருக்கிறேனே; என்று தன்னை வெறுத்துக்கொண்டபடி.

எம்பெருமானுடைய அநுக்ரஹம் நம்முடைய கவிக்குத்தக்க பாரிதோஷிகத்தைக் கொடுக்குமென்று சாத்திருந்தேனென்பது பின்னடிகளுக்குத் திரண்டபொருள்.

வரங் கருதித்தன்னை வணங்காத வன்மை
உரங் கருதிமூர்க்கத் தவனை—நரங்கலந்த
சிங்கமாய்க் கீண்ட திருவனடியிணையே
அங்கண்மா ஞாலத்தமுது. (84

வரம் கருதி	(ப்ரஹ்மாதிகள் கொடுத்த) வரங்களை நினைத்துக்கொண்டு	நரம்கலந்த சிங்கமாய்	ந்ருஸிம்ஹ வடிவத்தனாகி
தன்னை வணங்காத	தன்னை (ஒருவர்க்கும்) வணங்காதவனையும்	கீண்ட	பிளந்து பொகட்ட
வன்மை	வரபலத்தையும்	திருவன்	அழகியானுடைய
உரம்	உடம்பின் பலத்தையும்	அடி இணையே	சேர்ந்திருக்கிற திருவடிகளே
கருதி	நினைத்துக்கொண்டு	அம் கண் மா ஞாலத்து	அழகிய இடத்தையுடைய இப்பெரிய பூமியில்
மூர்க்கத் தவனை	மூர்க்கனாயிருக்கிற ஹிரண்யகசிபுவை	அமுது	அம்ருதமாகும்.

நீர் கவிபாடுவதால் அவனுக்குக்குறை ஏற்படுமென்றால் இனிக் கவிபாடுவதை நிறுத்திவிடுமே! என்று சிலர் கேட்க, அவனது போக்யதை என்னைத் தூண்டுகிறது. நானென்செய்வேன். விடப்போகாத போக்யதையுள்ளவன் அவ்வீசன் என்கிறார் இப்பாட்டில்

வரங்கருதி:—ஹிரண்யகசிபு தான் பிரமனிடம் பெற்றவரங்களையும் தனது புஜபலத்தையும் மனத்தின் தார்ட்யத்தையும் நினைத்துக்கொண்டு, நம்மை யார் என்செய்யலாவது. நமக்கு மேலார்! நாம் எதற்கு ஒருவனை வணங்கவேணும்? என்று அஹங்கா

மடைந்து ஈச்வரனையும் வணங்காத மன்னனாய் நின்றான். அந்த மூர்க்கனையும் திருமால் நரசிங்கமாய்த் தோன்றிப் பிளந்தெறிந்து வீரலக்ஷ்மியுடன் விளங்கினான். அவனது திருவடிகளே இப்பெரிய பூமியில் நமக்கு அம்ருதம்போல் போக்யமானது. அம்ருதத்தைக் கண்டால் யாருக்கும் உண்ணவேணும் என்று அவா பிறப்பது ஸஹஜம். அதுபோல் எனக்கும் அவனைப்பாடிக் களிக்க வேணுமென்ற பேரவா பிறக்கிறது. அதற்கு அவனது போக்யதைதான் காரணமென்றார்.

நரங்கலந்த சிங்கமாய்:— முன்புள்ளதாலொன்றாலும் சாகேன் என்று வரமிருந்தபடியால் முன்பில்லாத புதிதான நரசிங்கமாய்த் தோன்றினான் என்பது.

திருவன்:— அழகியான் தானே அரியுருவன் தானே என்றும் நாரஸிம்ம வபு: ஸ்ரீமாந் என்றும் சொல்லுகிறபடி ந்ருஸிம்ஹனையே ஞானிகள் அழகனாகப் பேசுவார்கள்.

அமுதென்றும் தேனென்று மாழியானென்றும்
அமுதன்று கொண்டுகந்தானென்றும் — அமுதன்ன
சொன் மாலை யேத்தித் தொழுதேன், சொலப்பட்ட
நன் மாலை யேத்தி நவின்று. (85)

அமுது என்றும்	அம்ருதமென்றும்	சொலப் பட்ட	சொல்லப்பட்டிருக்கிற
தேன் என்றும்	தேனென்றும்	நல் மாலை	நல்லவனான திருமாலை
ஆழியான் என்றும்	திருவாழியைக் கையிலேந்தினவன் என்றும்	ஏத்தி ஏத்தி நவின்று	எப்பொழுதும் துதி செய்துகொண்டு வாயாரச் சொல்லி
அன்று	தேவர்கள் வேண்டிக் கொண்ட அக்காலத்தில்	அமுது அன்ன	அம்ருதத்திற்கொப்பான
அமுது கொண்டு	அம்ருதத்தைக் கொடுத்து	சொல் மாலை	தமிழ்ச் சொல் மாலையால்
உகந்தான் என்றும்	ஸந்தோஷித்தவனென்றும்	தொழுதேன்	வணங்கி நின்றேன்.

பரம போக்யனை பரமபுருஷனைப் பாடுவதால் என பாட்டுகளும் அம்ருதம்போல் போக்யமாய்விட்டனவென்கிறு

அமுது:— எம்பெருமானை வேதங்களும் மற்றும் அறிவி சிறந்த ஞானிகளும், அம்ருதமென்றும் தேன் என்றும், சக் பாணி என்றும், தன்னை வேண்டாத அமரர்களுக்கு அம்ருத தைக் கொடுத்துத் தான் த்ருப்தி அடைந்தானென்றும் பலவ ருகப் புகழ்கின்றார்கள். இப்படி ஸர்வேந்திரியங்களுக்கும் போ யமாம்படி அம்ருதமான, ஸர்வேச்வரனை எனது கடுஞ் சொ களாலே ஸ்தோத்ரம் செய்து நின்றேன். அதனால் என சொற்களும் அம்ருதமாய்விட்டன. அம்ருதத்தைப் புகழ்ந் தால் சொற்களும் அம்ருதமாயின என்றபடி.

அமுது என்றும்:— எம்பெருமானுக்கு ஆழியான் என்ற போல் அமுது, தேன், என்பதும் திருநாமங்கள். ஆழ்வார்க தேனே பாலே என்றும் பச்சைத் தேனே என்றும் பெருமானை கூப்பிடுவார்கள். அவனுடைய போக்யதையை நினைத்தா போக்ய வஸ்துக்களாலேயே அவனைக் கூப்பிடச் சொல்லும்.

உகந்தான்:— அடியார்களுக்குக் காரியம் செய்துவை பதே தன் உகப்புக்காரணம். ஆதலால் தேவர்களுக்கு அம் தத்தைக் கொடுத்து த்ருப்தனானான்.

அமுதன்ன சொன்மாலை:— கீழே தனது சொற்களை வெ சொற்கள் என்று தாழ்ந்தவைகளாகக் கருதினாலும் ஸர்வேச்வ ரன் விஷயமானதுபற்றி அமுதமாகவே நினைத்தார் இப்பொழுது விஷய வைலக்ஷண்யத்தாலன்றோ சொற்களுக்கு வைலக்ஷ ண்யம்; என்றபடி,

நவின்றுரைத்த நாவலர்கள் நாண்மலர்கொண்டு [ஆங்கே
பயின்றதனால் பெற்ற பயனென் கொல்—பயின்றார்தம்
மெய்த் தவத்தால் காண்பரிய மேக மணிவண்ணனை [யான்
எத்தவத்தால் காண்பன் கொ லின்று. (86)

நவின்று உரைத்த	அவன் பெயர்களை எப்பொழுதும் சொன்ன
நாவலர்கள்	கவிகள்
நாள் மலர் கொண்டு	அப்பொழுதலர்ந்த புஷ்பங்களைக் கொண்டு
ஆங்கே	அப்பெருமானிடம்
பயின்றதனால்	ஆச்ரயித்ததனால்
பெற்ற	அடையப் பெற்ற
பயன்	புருஷார்த்தம்
என் கொல்	ஏதோ ?
பயின்றார் தம்	அப்படி ஆச்ரயித்தவர்களுடைய
மெய் தவத்தால்	உடம்பு நோவச் செய்கிற தவத்தால்
காண்பு அரிய	காணமுடியாத
மேகம் மணி வண்ணனை	மேகம்போலும் மரகத மணிபோலுமுள்ள நிறமுடைய பெருமானை
யான்	நான்
இன்று	இப்பொழுது
எத் தவத்தால்	எந்த தபஸ்ஸினால்
காண்பன் கொல்	அனுபவிக்கப் பெற்றேன்.

நம்மை ரக்ஷித்துக்கொள்ள வேண்டிய விஷயத்தில் நாம் கவலைப்படாமல் நமது ரக்ஷாபரத்தை ஸர்வேச்வரனிடத்தில் ஸமர்ப்பிக்கவேண்டும். அப்படிக்கின்றி அஹங்காரத்துடன் செய்கிற ஸாதனங்களெல்லாம் உடம்புக்குச் சிரமத்தைக் கொடுப்பனவேயல்லது பயனுள்ளவையல்லவென்கிறார் இதில்.

நவின்று:— எந்த ப்ரகாரம் ஸ்தோத்ரம் செய்யவேணும் என்று நினைக்கிறார்களோ; அந்தப்ரகாரம் ஸ்தோத்ரம் செய்வதற்கு ஈடான நாவின் வீறுபடைத்த கவிகள் அப்பெருமானது பெயர்களைச் சொல்லிக்கொண்டு அப்பொழுது மலர்ந்த புஷ்பங்களைக் கொண்டு அவனை ஆச்ரயிக்கிறார்களே; அதனால் அவர்கள் யாது பயன்பெற்றார்கள் ? தன் ப்ரயத்னத்தால் காணவேணுமென்பார்களுக்கு அவன் அகப்படாதவனாதலால் வீண் ச்ரமத்தைத் தவிர வேறு பயனில்லை. உடம்பு நோவச் செய்கிற தவத்தாலும் காணமுடியாத மேக மணிவண்ணனை நான் கண்டு அநுபவிக்கிறேனே; இது நான் செய்த எந்தத் தவத்தின் பயன் ? நான் ஒரு தவமும் செய்தேனல்லேன். ஆதலால் நம்முடைய ரக்ஷாபரம் அவனுடையது என்றிருப்பார்க்கு அவன் பரம ஸுலபன் என்று சொல்லிற்றாய்த்து.

இன்று வறிகின்றேனல்லேன், இருநிலத்தைச்
சென்றாங்களந்த திருவடியை—அன்று
கருக்கோட்டியுள் கிடந்து கை தொழுதேன் கண்டேன்
திருக்கோட்டி யெந்தை திறம். (87)

அன்று	(ஒரு உபாயத்தையுமறியாத) அக்காலத்தில்
கருகோட்டியுள் கிடந்து	கர்ப்ப ஸ்தானத்தில் இருந்து
திருக்கோட்டி எந்தை திறம்	திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருக்கும் பெருமானுடைய ஸ்வரூபகுணாதிகளை
கண்டேன்	ஸேவிக்கப் பெற்றேன்.
கைதொழுதேன்	அஞ்ஜலி செய்தும் நின்றேன்.
இருநிலத்தை	விசாலமான பூமியை
ஆங்குசென்று	ஆங்காங்கு தானே போய்
அளந்த	அளந்துகொண்ட
திருவடியை	(அவனது)பாதத்தை
இன்று ஆ அறிகின்றேன் அல்லேன்	இன்றைக்குத் தான் தெரிந்துகொண்டேனென்பதில்லை.

(கர்பவாஸம் தொடங்கியே அறிந்து கொண்டிருக்கிறேன்.)

இன்று:— ஸர்வேச்வரனுடைய கடாக்ஷத்தால் தமக்கு உண்டான பெருமையைப் பேசுகிறார். நான் எம்பெருமானைக் கண்டநுபவிக்கிறது இன்றைக்குத்தான் நேர்ந்ததா? இல்லை. நான் கர்ப்பவாஸம் செய்தகாலம் தொடங்கியே இப்பேறு படைத்தேன். அவனது கடாக்ஷத்தைப் பெற்றபடியால் கர்பத்தில் இருக்கும்பொழுதே திருக்கோட்டியூர் எம்பெருமானுடைய ஸ்வரூபரூப குண விபூத்யாதிகளை ஸாக்ஷாத்கரித்து உலகளந்தருளின அவனது திருவடிகளையே கைகூப்பி வணங்கியுநின்றேன், ஆகவே கர்ப்பவாஸ காலம் தொடங்கியே அவனை அநுபவித்துக்கொண்டு அவ்வநுபவத்தால் உண்டான ஸந்தோஷம் உள்ளடங்காமல் பாசுரங்களாலும் அவனை ஏத்திப் பிறர்க்கும் உபதேசிக்கலானேன். ஆதலால் இன்றைக்குத்தான் நான் அவனைக் கண்டேன் என்பதில்லை என்றார். ஆகவே அவ்வீச்வரனை ரக்ஷகனென்று தீர்ந்து நாம் கைவாங்கியிருந்தால் கர்ப்பவாஸம் முதல் சிறிதுநேரமும் அவனை விடாது அநுபவிக்கப் பெறலாம் என்பது அறியத்தக்கது.

இவர் குருக்கத்திப்பந்தரில் அவதரித்து அயோநிஜராய் இருக்க கருக்கோட்டியுள் கிடந்து என்றருளிச் செய்தது; குருக்கத்திப்பந்தரையே கர்ப்பஸ்தானமாகக்கொண்டன்றி வேறில்லை.

திறம்பிற் றினியறிந்தேன் தென்னரங்கத் தெந்தை
திறம்பா வழிசென்றார்க் கல்லால்—திறம்பாச்
செடிநரகை நீக்கித்தான் செல்வதன் முன், வானோர்
கடிநகர வாசற் கதவு. (88)

தென் அரங்கத்து எந்தை	அழகான ஸ்ரீரங்கத்தில் பள்ளிகொண்ட என் ஸ்வாமியினுடைய	தான் செல்வதன் முன்	தாங்கள் ஈச்வரனைக் குறித்துச் செல்வதற்கு முன்
திறம்பா வழி	பிசகாத "மாமேகம் சரணம் வ்ரஜ" என்று சொன்ன மார்க்கத்திலே	வானோர்	நித்ய ஸூரிகளுக்கு வாஸஸ்தானமான
		கடி	மதிள்களையுடைய
		நகர	ஸ்ரீ வைகுண்ட நகரத்தினுடைய
சென்றார்க்கு அல்லால்	நடந்தவர்களுக்கல்லது (மற்றவர்களுக்கு)	வாசல் கதவு	வாசல் கதவானது
		திறம்பிற்று	மூடிக்கொள்ளும்.
திறம்பா செடி நரகை நீக்கி	அறுக்க முடியாத புதர்மூடின காடுபோன்ற ஸம்ஸாரத்தை நீக்கி	இனி அறிந்தேன்	(இதை) இப்பொழுது தெரிந்து கொண்டேன்.

அழகான ஸ்ரீரங்கத்திலே நித்யவாஸம் செய்கிற ஸர்வஸ்வாமியானவன் உலகத்தாரனைவரும் உய்யவேண்டி மாமேகம் சரணம் வ்ரஜ என்று ஒரு வழி காட்டியிருக்கிறான். அவ்வழியிலே சென்றவர்களுக்குத்தான் வைகுந்தமாநகரம் புகுவது ஸுலபமாகும். அதாவது நமது ஸகல பாபங்களையும் விலக்கி அவனை அடைவிக்கும்படிக்கிடான சரணாகதி என்கிற உபாயத்தை அநுஷ்டித்தால் நாம் எளிதில் மோக்ஷத்தைப் பெறலாம். அப்படி அவன் உபதேசித்த சரணாகதிமார்க்கத்தை நாம் தழுவாதிருந்தால் அறுத்துப்போட முடியாத பெரும் புதர்போன்ற நமது ஸம்ஸார பந்தங்களையெல்லாம் நாம் அறுத்துக்கொண்டு செல்வதற்கு

முன்னமே நித்யஸூரிகளுக்குச் சொந்தமான, அரணையுடை வைகுந்த நகரத்தின் வாசற் கதவு மூடிக்கொண்டதாகுட பகவான் உபதேசித்த வழியில் செல்லாதவர்களுக்கு வைகுந் வாசற்கதவு திறக்காமல் மூடிக்கொள்ளுமென்றபடி.

திறம்பா வழி நமது பாபங்கள் ஒரு முழுக்கு இரண் முழுக்கால் போக்கக் கூடியவைகளல்ல. எவ்வித பிராயசித்த களாலும் எத்தனையுகம் அநுபவித்தாலும் விலக்கக்கூடியவை அல்ல. ஆதலால் அவன் உபதேசித்த மார்க்கம் தான் அப்பாப களைத் தொலைக்கவல்லது. ஆனதுபற்றி தப்பில்லாத (பிசகாத வழி என்றார்.

கதவிக் கதஞ்சிறந்த கஞ்சனை முன் காய்ந்து
அதவிப் போர்யானை யொசித்து—பதவியாய்ப்
பாணியால் நீரேற்றுப் பண்டொருகால் மாவலியை
மாணியாய்க் கொண்டிலையே மண். (89)

முன்	முன்னொருகால்	பண்டு ஒருகால்	மற்றும் முன்னொரு நாள்
கதம் சிறந்த	கோபம் மிகுந்த வனை	பதவியாய்	நீர்மையுள்ள வனாய்க்கொண்டு
கஞ்சனை	கம்ஸனை	மாணியாய்	ப்ரஹ்மசாரியாகி
கதவி	கோபித்துக் கொண்டு	பாணியால்	கையால்
காய்ந்து	கொன்றும்	நீர் ஏற்று	தான ஜலத்தைப் பெற்று
போர் யானை	போர் செய்ய வந்த குவலயாபீடம் என்ற யானையை	மாவலியை	மாவலியிடமிருந்து
ஒசித்து	கொம்பை ஒடித்து	மண் கொண்டிலையே	பூமியைப் பெற்றுக் கொண்டாயல்லவா?
அதவி	முடித்தும்		

எம்பெருமான் ஆச்ரிதர்களுக்காகச் செய்த சில காரியங் களைச் சொல்லி ஸந்தோஷமடைகிறார் இதில்.

கதவி:— ஸாதுக்களை ஹிம்ஸிப்பதையே தொழிலாகக் கொண்டு உன்பால் மிருந்த கோபங்கொண்ட கம்ஸனைக் காய்ந்து முடித்தாய். உலகங்களுக்கு உயிரான உன்னை முடிக்கக் கருதின குவலயாபீடமென்ற யானையை அதன் கொம்பை முறித்து முடித்தாய்; இந்திரனுடைய கார்யம் தலைக்கட்ட வேண்டி வஸிஷ்ட சண்டாள விபாகமின்றி எல்லார் தலையிலும் திருவடியை வைக்கும்படி நீர்மையுடன் மாணியாய் வந்து மண்ணை இரந்தாய். இப்படி நீ ஆச்ரிதர்களுக்காகச் செய்த காரியங்கள் எண்ணற்றவை என்றார்.

இங்கு இரண்டாமடியில் உதவிப் போர் யானை என்றும் பாடமுண்டு. கம்ஸனுக்கு உதவியாயிருந்த யானை எனப் பொருள்.

பாணியால் நீரேற்று— "மண் கையாலிரந்தான்" என்பது போல் கொடுப்பதையே தொழிலாகக்கொண்ட கையால் அவன் யாசிப்பது தகுமோ? வென்ற நெஞ்சாறல் காட்டப்பட்டது.

மண்ணுலக மாளேனே வானவர்க்கும் வானவனாய்
விண்ணுலகம் தன்னகத்து மேவேனே—நண்ணித்
திருமாலைச் செங்கணெடியானை எங்கள்
பெருமானைக் கைத்தொழுத பின். (90)

திருமாலை	ச்ரிய: பதியாயும்	மண் உலகம்	இப் பூவுலகத்தை
செம்கண்	சிவந்த கண்களையுடையவனும்	ஆளேனே	ஆளமாட்டேனோ?
நெடியானை	ஆச்ரிதவ்யாமோஹமுள்ளவனும்	வானவர்க்கும் வானவனாய்	நித்யஸூரிகளுக்கும் நிர்வாஹகனான ஸ்வாமியாய்
எங்கள் பெருமானை	எங்களுக்கு ஸ்வாமியுமான பெருமானை	விண் உலகம் தன் அகத்து	பரமபதமென்கிற லோகத்தில்
நண்ணி	ஆச்ரயித்து	மேவேனே	பொருந்தியிருக்க மாட்டேனோ
கைதொழுத பின்	கையால் அஞ்சலி செய்த பின்பு		

நாம் செய்த செயல்களைச் சொல்வது கிடக்கட்டும் நீர் இ
போது வேண்டுவதென்ன ? என்று பெருமான் வினவ ஆழ்வா
உன்னை அடைந்தபின் உபயவிபூதியிலும் எனக்கு ஒரு குறை
யில்லை என்கிறார்.

மண்ணுலகம்:— எனக்குப் புருஷகாரமும் "என்னடிய
ரது செய்யார்" "நகச்சிந்நாபராத்யதி" என்று சொல்லிக்கெ
ண்டும் இருக்கிற பிராட்டியும் உன்னருகே நிற்கிறாள். நீயு
வாத்ஸல்யம்தோற்றும் சிவந்த கண்ணனாயிருக்கிறாய். ஸ்வபாவ
தாலே நீ ஆச்ரித வ்யாமோஹமுள்ளவன். இப்படியுள்ளவனை
நான் வணங்கி யாச்ரயித்த பின் எனக்குக்கூடாததொன்றுமில்லை
இப்பூவுலகையும் வெண்குடைக்கீழ் அரசனாய் நின்றாள்வேன்
பரமபதத்திலும் சென்று ஸேனாபதியாழ்வானைப் போல் ஆட்சிபு
வேன். ஆதலால் எனக்கோர் குறையுமில்லை. ஆனதால் நீ
எனக்குச் செய்யவேண்டுவது ஒன்றுமில்லை என்று விண்ணப்ப
செய்தார்.

பின்னாலரு நரகம் சேராமல் பேதுறுவீர்
முன்னால் வணங்க முயல்மினோ—பன்னூல்
அளந்தானைக் கார்க்கடல் சூழ் ஞாலத்தை, எல்லாம்
அளந்தானவன் சேவடி. (91)

பின்னால்	உடம்பு விழுந்த பின்பு	கார்கடல் சூழ்	கருநிறமுள்ள ஸமுத்ரத்தால் சூழப்பட்ட
அரு நரகம்	மிகவும் க்ரூரமான நரகங்களில்	ஞாலத்தை எல்லாம்	பூமியை முழுவதும்
சேராமல்	சேராதபடிக்கு	அளந்தான் அவன்	ஆக்ரமித்தவனுமான அப்பெருமானுடைய
பேதுறுவீர்	மனக் கலக்கத்துட னிருக்கிறவர்களே !	சே அடி	சிவந்த திருவடியை
முன்னால்	இப்பொழுதே	வணங்க	தொழுவதற்கு
பல் நூல்	பலவிதமான சாஸ்த்ரங்களால்	முயல்மினோ	ப்ரயத்னம் செய்யுங்கோள்.
அளந்தானை	(ஆராய்ந்து) நிச்சயிக்கப்பட்டவனுமாய்		

பின்னால்:— இதுமுதல் நான்கு பாட்டுகளால் பரோபதேசம் செய்கிறார். ஓ ஸம்ஸாரிகளே! எதற்காகப் பாபங்களைச் செய்கிறீர்கள்? நீங்கள் இறந்த பின்பு உங்கள் பாபங்களுக்காகக் கோரமான நரகத்தில் நுழைந்து வருத்தப்படப் போகிறீர்கள். இறந்தபின் நரகத்தை அடைந்து கஷ்டப்படக்கூடாது என்ற எண்ணம் உங்களுக்கு உண்டானால் நான் சொல்வதைக் கேளுங்கள்; ஆலோட்ய ஸர்வசாஸ்த்ராணி விசார்யச புந: புந: | இதமேகம் ஸுநிஷ்பந்நம் த்யேயோ நாராயணோ ஹரி: என்றபடி எல்லா சாஸ்த்ரங்களாலும் இவன்தான் பரன் என்று தீர்மானிக்கப்பட்டவனும் கடல் சூழ்ந்த பூமியை ஒருகால் அளந்தவனுமான நாராயணனுடைய திருவடியை ஸேவிப்பதற்கு முயற்சி செய்யுங்கோள். பின்னால் வருத்தப்பட்டுப் பயனில்லை. (இறப்பதற்கு முன்னே) இப்பொழுதே திருமால் திருவடியை வணங்க முயற்சி செய்யுங்கோள்; வணங்க முயற்சித்தமாத்திரத்தாலேயே வரும் நரகம் தவிருமென்றபடி.

அடியால் முன் கஞ்சனைச் செற்று அமரரேத்தும்
படியான் கொடிமேல் புள்கொண்டான்—நெடியான்றன்
நாமமே யேத்துமின்களேத்தினால், தாம்வேண்டும்
காமமே காட்டும் கடிது. (92)

முன்	முற்காலத்தில்	நெடியான் தன்	ஸர்வாதிகனுமான பெருமானுடைய
அடியால்	திருவடியால்	நாமமே	பெயர்களையே
கஞ்சனை செற்று	கம்ஸனை உதைத்துக் கொன்று	ஏத்துமின்கள்	சொல்லித்துதியுங்கோள்;
அமரர் ஏத்தும் படியான்	தேவர்களால் ஸ்துதிக்கப்பட்ட ஸ்வபாவத்தையுடையவனும்	ஏத்தினால்	சொல்லித்துதித்தால்
கொடிமேல் புள்கொண்டான்	த்வஜத்தின்மேல் கருடனை வைத்துக் கொண்டவனும்	தாம் வேண்டும்	தாங்கள் ஆசைப்படுகிற
		காமமே	புருஷார்த்தத்தையே
		கடிது காட்டும்	அப்பெயர்களே சீக்கிரத்தில் கொடுக்கும்.

கீழ்ப்பாட்டில் அநிஷ்ட நிவ்ருத்தியைப் பேசினார். இ பாட்டில் அவன் திருநாமங்களைச் சொன்னால் இஷ்டப்ராப் உண்டாகுமென்கிறார்.

அடியால்:- தனக்கு விரோதியான கம்ஸனைக் காலால் உதைத்துக் கீழே தள்ளிக் கொன்றவனும், அச்செய்கையினால் பெ மகிழ்ச்சியடைந்தவானவர்களால் பலவாறாகத் துதிக்கப்பட்ட னும், வேதமயனான கருடனை தனது விஜயத்வஜத்தில் கொண்ட வனும், இப்படிப் பல படிகளால் ஸர்வேச்வரனாய் விளங்குகி பெருமானுடைய பெயர்களையே சொல்லிக்கொண்டு திரியு கோள். அவனது பெயர்களைச் சொல்லிக் கொண்டிருந்தால் நீ கள் விரும்பிய பொருள்களையெல்லாம் அப்பெயர்களே கூட்டி தரும். "குலந்தரும்" என்கிற திருமங்கையாழ்வார் பாசுரத்தின் படி அவன் திருநாமங்களே ஸகல புருஷார்த்தங்களையும் கொடு கும்; என்பதாம்.

கடிது கொடுநரகம் பிற்காலும் செய்கை
கொடிதென் றதுகூடா முன்னம்—வடிசங்கம்
கொண்டானைக் கூந்தல்வாய்க் கீண்டானைக் கொங்கை
சுண்டானை யேத்துமினோ வுற்று. (93) [நஞ்

கொடு நரகம்	கொடுமையான நரகமானது
கடிது	மிகவும் பயங்கரமானது.
பிற்காலும்	அதற்குமேலும்
செய்கை	யமபடர்களுடைய செயல்கள்
கொடிது	மிகவும் வருத்தத்தை விளைவிக்கக் கூடியன.
என்று	என்று நினைத்து
அது கூடா முன்னம்	அந்நரகம் நமக்கு ஸம்பவிப்பதற்கு முன்னமே

வடிசங்கம் கொண்டானை	கூர்மையான சப்தத்தையுடைய பாஞ்சஜன்யத்தை தரித்தவனும்
கூந்தல்வாய் கீண்டானை	கேசியின் வாயைப் பிளந்தவனும்
கொங்கை நஞ்சு உண்டானை	பூதனையின் முலையிலுள்ள விஷத்தைப் பருகினவனுமான கிருஷ்ணனை
உற்று	பொருந்தி
ஏத்துமினோ	ஸ்தோத்ரம் செய்யுங்கோள்.

விவேகமில்லாத ஸம்ஸாரிகளே! நரகம் என்கிற சப்தத்தைக் கேட்டாலே உலகம் பயந்து நடுங்கும்படியாயிருக்கிறது. பின்னும் அங்கே யமபடர்கள் செய்யும் துன்பச்செயல்களை நினைத்துப் பார்த்தால் உடல் நடுங்கும். ரத்தம் பெருகு மாறுகளில் போடுவது; வாள்போலிருந்துள்ள கோரை வனத்திலே தள்ளுவது; எரிபெருகின்ற செம்பினாலியன்ற பாவையைத் தழுவச் செய்வது; முதலிய கொடிய செயல்களை நினைத்தால் உள்ளம் பதறும். ஆதலால் அவ்வளவு பயங்கரமான நரகம் உங்களுக்கு வருவதற்கு முன்பே கூர்மையான ஸ்ரீபாஞ்சஜன்யத்தை படையாகக்கொண்டவனும் கம்ஸனால் ஏவப்பட்டுக் குதிரை வடிவுடன் வந்த கேசியென்றும் அஸுரனைக் கொன்றவனும் பூதனையின் விடம் தீண்டின முலையையுண்டவனுமான கிருஷ்ணனை ஸ்தோத்ரம் செய்யுங்கோள்; ரமா தயித ரங்கபூரமண க்ருஷ்ண விஷ்ணோ ஹரே த்ரிவிக்ரம ஜநார்த்தன த்ரியுக நாத நாராயண | இதீவ சுபதாநி ய: படதி நாமதேயாநி தே ந தஸ்ய யமவச்யதா நரகபாதபீதி: குத: என்றபடி அவனது நாமங்களைச்சொல்லி அவனைப் பொருந்தி ஏத்தினால் நரகபயமும் யமபடர்களின் செயல்களும் நம்மிடம் நெருங்காவென்பதாம்.

கூந்தல்வாய் கீண்டானை:— கூந்தல் என்னும் பதம் தலைமயிரைச்சொல்லும். அதை வடமொழியில் கேசமென்பார்கள். ஆகவே கூந்தல் என்பதற்கு கேசமென்பது வடமொழிப்பெயர். கேசமென்பது கேசியை ஞாபகப்படுத்தும். அதுபற்றி கேசியின் வாயைப்பிளந்து கொன்றவன் எனப்பொருள் வரையப்பட்டது. இப்படிக் கூந்தல் என்னும் பதத்திற்கு கேசி என்கிற அஸுரன் எனப்பொருள் கூறியது லக்ஷிதலக்ஷணையென்கிற வழியால் என்று வடமொழிப் புலவர்கள் வரைவார்கள்.

உற்று வணங்கித் தொழுமின், உலகேழும்
முற்றும் விழுங்கும் முகில் வண்ணன்—பற்றிப்
பொருந்தாதான் மார்பிடந்து பூம்பாடகத்துள்
இருந்தானை ஏத்துமென் நெஞ்சு. (94)

உலகு ஏழும்	உலகங்களனைத்தையும்
முற்றும் விழுங்கும்	பூர்ணமாகச் சாப்பிட்டவனும்
முகில் வண்ணன்	மேகம்போன்ற வர்ணமுள்ளவனும்
பொருந்தாதான்	விரோதியான ஹிரண்யகசிபுவினுடைய
மார்பு	மார்பை
பற்றி	பிடித்து
இடந்து	பிளந்தவனையும்

பூ பாடகத்துள் இருந்தானை	அழகான திருப்பாடகமென்கிற திருப்பதியில் கோயில் கொண்டவனுமான ஸ்வாமியை
என்நெஞ்சு	என் மனம்
ஏத்தும்	துதிசெய்யும். நீங்களும்
உற்று வணங்கித் தொழுமின்	பொருந்தி வணக்கத்துடன் பணிமின்கள்

உலகத்தவர்களே! முன்பொருகால் உலகங்களனைத்தையும் ப்ரளயங்கொள்ளப் போகுமளவில் அவையனைத்தையும் தனது வயிற்றில் வைத்துக் காத்தவனும், மற்றொருகால் ஹிரண்யனது மார்பைக் கிழித்துப்போகட்டவனும் திருப்பாடகம் என்கிற திருப்பதியில் கோயில்கொண்டவனுமான பெருமானை என்னெஞ்சு ஸ்தோத்ரம் செய்து கொண்டிருக்கிறது. அதுபோல நீங்களும் அவனையே துதிசெய்யுங்கோள் என்றுபதேசித்தபடி.

பாடகம்:— பாடு + அகம். பெருமை தோன்றுமிடம் என்பது பொருள். எம்பெருமான் தனது பெருமைகளெல்லாம் யாவர்க்கும் தோன்றும்படி பெரிய திருமேனியுடன் வீற்றிருப்பதால் இத்திருப்பதிக்குப் பாடகமெனப்பொருள். அத்திருப்பதியிற் பெரிய திருமேனியுடன் வீற்றிருக்கிற பெருமானுடைய ஸேவை பெருவியப்பைத்தரும். இந்த திவ்யதேசம் பெரிய காஞ்சீபுரத்தில் உளது. அப்பெருமானுக்கு பாண்டவதூதன் எனப்பெயர். கண்ணன் பாண்டவர்களுக்காகத் துரியோதனனிடம் தூது போனபோது பூமியில் ஒரு கள்ள அறைசெய்து அதிலே சில மல்லர்களை ஆயுதங்களுடன் நிறுத்தி மேலே மூங்கில் சிம்புகளால் அதை மூடி மேலே கம்பளத்தை விரித்து அதன் மேல் ஒரு ஆஸனத்தில் கண்ணனை துர்யோதனன் அமரச்செய்ய கண்ணனும் உட்காரவே, கீழே மூங்கில்கள் முறிந்து பள்ளத்தில்

கண்ணன் வீழ, அங்குள்ள மல்லர்கள் சண்டைசெய்யக் கண்ணன் விச்வரூபமெடுத்து அவர்களைக் கொன்றார்' என்கிற வரலாற்றுக் கிணங்க பெரிய ரூபத்துடன் எழுந்தருளியிருக்கிறார் என்று கற்றோர்கள் கருத்துடனுரைப்பார்கள்.

என் நெஞ்சமேயா னென் சென்னியான், தானவனை
வன் நெஞ்சம் கீண்டமணிவண்ணன்—முன்னம்சே
யூழியா னூழி பெயர்த்தான், உலகேத்தும்
ஆழியா னத்தி யூரான். (95)

தானவனை	ஹிரண்யாஸுரனுடைய	உலகு ஏத்தும் ஆழியான்	உலகத்தவர்கள் துதி செய்யும்படியாகப் பாற்கடலில் பள்ளி கொண்டவனும்
வல் நெஞ்சம் கீண்ட	கடினமான மார்பை பிளந்தவனும்	அத்திஊரான்	அத்தியூரில் எழுந்தருளியிருப்பவனுமான பெருமான்
மணி வண்ணன்	நீல மணிபோன்ற நிறத்தையுடையவனும்	என் நெஞ்சம் மேயான்	என்னெஞ்சிலே வாஸம் செய்கிறான்
முன்னம்	முன்காலம் முதல்	என் சென்னி யான்	எனது தலையிலே வந்துளான்.
சேய் ஊழி யான்	நீண்டகாலமாய் இருப்பவனும்		
ஊழி பெயர்த்தான்	காலம்முதலிய பொருள்களெல்லாவற்றையும் படைத்தவனும்		

முன்பொருகால் ஹிரண்யகசிபுவின் வலிய மார்பைக்கீண்டு பொகட்டவனும் நீலரத்நம்போன்ற திருமேனி நிறத்தையுடையவனும், முன்பே பிடித்து அநாதிகாலமாக விருப்பவனும், காலம் முதலிய தத்வங்களை உண்டுபண்ணினவனும் உலகத்தாரால் புகழப்படும் ஸுதர்சனாழ்வானைக் கையிலேந்தினவனும் ஸ்ரீஹஸ்திகிரி என்னும் க்ஷேத்திரத்திலிருப்பவனுமான ஸர்வேச்வரன் எனது நெஞ்சிலும் தலையிலும் வாஸம்செய்கிறான். இது என்ன சீர்மை! என்று ஸந்தோஷிக்கிறார்.

நம்மாழ்வார் திருவாய்மொழியில் முதற்பத்து ஒன்பதாவது தசகத்தில் கண், மார்பு, தோள், நெஞ்சு, நெற்றி, தலை முதலிய

தன்னுடைய ஒவ்வொரு அவயவத்திலும் திருமால் வந்துறைவதாகச் சொன்னதுபோல் இப்பாசுரமும் அமைந்திருக்கிறது.

ஸ்ரீ காஞ்சியில் ஹஸ்திகிரியின் கீழே ஸ்ரீந்ருஸிம்ஹ வடிவத்துடன் தோன்றும் பெருமானை இப்பாசுரம் மங்களாசாஸநம் செய்கிறதென்பது பெரியோர்களின் கொள்கை. தானவனை வன்னெஞ்சம் கீண்டமணிவண்ணன் என்றது இக்கொள்கைக்குப் பொருந்தியது.

ஸ்ரீ ஹஸ்திகிரியின்மேலே விளங்கும் பேரருளாளனை மங்களாசாஸநம் செய்கிறதிப் பாசுரம் என்பர் மற்றுஞ் சில பெரியோர்கள். அத்தியூரான் என்று பொதுவிலே சொன்னது இதற்குப் பொருத்தமுளதே.

அம்மலையிலுறையும் பெருமானைப் பண்டொருகால் திக்கஜங்கள் வந்து ஆராதித்தபடியால் அம்மலைக்கு அத்திகிரியெனப் பெயர். ஹஸ்தி என்கிற வடசொல்லின் திரிபு அத்தியென்பது.

அத்தியூரான் புள்ளையூர்வான் அணிமணியின்
துத்திசேர் நாகத்தின்மேல் துயில்வான்—முத்தீ
மறையாவான் மாகடல் நஞ்சுண்டான் றனக்கும்
இறையாவா னெங்கள் பிரான். (96)

புள்ளை	கருடனென்கிற பக்ஷியை
ஊர்வான்	ஏறி நடத்துகிறவனும்
அணிமணி	அலங்காரமாயிருக்கிற மாணிக்கமும்
இன் துத்தி	அழகான புள்ளிகளும்
சேர்	சேர்ந்திருக்கிற
நாகத்தின் மேல்	திருவனந்தாழ்வான் மேல்
துயில்வான்	படுத்துறங்குபவனும்
முத்தீ ஆவான்	மூன்று அக்நிகளாய் நிற்பவனும்.

மறை ஆவான்	வேதங்களாக நிற்பவனும்
மாகடல் நஞ்சு உண்டான் தனக்கும்	பெரிய கடலிலிருந்துண்டான விஷத்தைப் புசித்த ருத்ரனுக்கும்
இறை ஆவான்	ஸ்வாமியானவனுமான
எங்கள் பிரான்	எமக்கு ஸ்வாமியானவன்
அத்தி ஊரான்	ஹஸ்திகிரியில் நித்யவாஸம் செய்கிறான்.

பெரிய திருவடி எனப்படும் கருடனை வாஹநமாக வுடையவனும், திருப்பாற்கடலில் அழகிய மாணிக்க மணிகளும் பொறிகளும் சேர்ந்த படங்களையுடைய அனந்தன்மேல் பள்ளிகொண்டவனும், மூன்று அக்நிகளாக நிற்பவனும், வேதங்களால் ப்ரதிபாதிக்கப்படுபவனும், கடலிலிருந்துண்டான காலகூட விஷத்தையுண்டவனென்று கொண்டாடும் ருத்ரனுக்கும் ஸ்வாமியுமான எங்கள் பெருமான் ஸ்ரீ ஹஸ்திகிரியிலே நித்யவாஸம் செய்கிறான்.

நாகத்தின்மேல் துயில்வான்: பேரருளாளனே! "தேவரீர் தினந்தோறும் விடியற்காலையில் அனந்தனென்னும் பள்ளியிலிருந்து எழுந்தவுடன் எனது மனத்தில் வந்து கோயில் கொள்ள வேண்டு"மெனப் பொருள்கொண்ட பணிபதி சயநீயா துத்திதஸ்த்வம் ப்ரபாதே வரத ஸதத மந்தர் மாநஸம் ஸந்நிதேயா: என்கிற ஸ்ரீ தேசிகன் ஸூக்தியும் இப்பாசுரத்தைக் கருத்துள் கொண்டே அருளிச் செய்யப்பட்டது.

இங்கு மூன்றாமடியில் முத்தி மறையாவான் எனப் பாடமுமுண்டு. மோக்ஷத்தை போதிக்கிற வேதங்களால் சொல்லப்பட்டவனெனப் பொருள் இப்பாசுரமும் பேரருளாளன் மங்களாசாஸந பரமானது.

எங்கள் பெருமானிமையோர் தலைமகன் நீ
செங்கணெடுமால் திருமார்பா—பொங்கு
படமூக்கினாயிரவாய் பாம்பணைமேல் சேர்ந்தாய்
குடமூக்கில் கோயிலாக்கொண்டு (97)

திருமார்பா!	பிராட்டியை மார்பில் கொண்டவனே	குடமூக்கு இல்	திருக்குடந்தை யென்கிற க்ஷேத்ரத்தை
செம்கண்	சிவந்த கண்களையுடையவனும்	கோயில் ஆ கொண்டு	வாஸஸ்தானமாகக் கொண்டு
நெடுமால்	ஸர்வேச்வரனும்	பொங்கு	பரந்திருக்கிற
இமையோர் தலைமகன் நீ	நித்யஸூரிகளுக்கு நாதனாயுமிருக்கிற நீ	மூக்கு	நாஸிகையையுடையவனும்
எங்கள் பெருமான்	எங்கள் மூவருக்கும் ரக்ஷகனான ஸ்வாமியாகி	ஆயிரம் வாய்	ஆயிரம் வாயையுடையவனுமான

பாம்பு அணை மேல் { அனந்தனென்கிற படுக்கையின் மேல் சேர்ந்தாய் { பள்ளிகொண்டருளினாய்

இஃது திருக்குடந்தையென்கிற கும்பகோணத்தில் அடியார்களை விஷயீகரிப்பதற்கென்று சாய்ந்துகிடக்கும் ஸ்ரீ ஆராவமுதாழ்வானை மங்களாசாஸனம் செய்யும் பாசுரம்.

எங்கள்:—“ திருமார்பா! எங்களுக்கு ஸ்வாமியாயும் நித்ய ஸூரிகளுக்குத் தலைவனாயும் சிவந்த கண்களையுடையவனுமான நீ யாவரும் வந்து அடி வணங்கி வாழும்படி திருக்குடந்தையில் விசாலமான படங்களையுடைய திருவனந்தாழ்வான் மேல் சாய்ந்தருளினாய் ;

எங்கள் பெருமான்:— என்போன்ற அடியவர்களுக்கு ஸ்வாமியானவன் என்றபடி. முதலாழ்வார்கள் மூவரும் பகவத்ஞானம் பிறந்தபின்பு ஒருவரையொருவர் விட்டு பிரியாதிருந்தார்கள் என்பது அனைத்துலகமுமறிந்தவிஷயமே. ஆகவே இங்கு பூதத்தாழ்வார் எங்கள் பெருமான் என்று பிரயோகிப்பதால் மற்றைய விருவர்களையும் கூட்டி எங்கள் மூவருக்கும் ஸ்வாமி என்று அருளிச்செய்தார். ஆதலால் இவ்வெம்பெருமானைப் பொய்கையாழ்வார் மங்களாசாஸனம் செய்யவில்லையே; என்று சங்கிக்க வொண்ணாது. நடுவிலுள்ள இவ்வாழ்வார் மற்றவர்களைக்கூட்டி எங்கள் என்றபடியால் பல திவ்யதேசத் தெம்பெருமான்களை வணங்கினபோதிலும் திருக்குடந்தைப் பெருமானே தங்களுடைய பக்திக்கு ஆஸாதாரணமான விஷய பூதன் என்பது நன்கு விளங்கும். இத்தால் விண்ணோர்கள் நாதனாயிருந்து வைத்தும் நாம் வணங்கும்ஸ்வாமியானது பற்றிப் பரம ஸௌலப்யன் என்பதும் விளக்கப்பட்டது.

இமையோர் தலைமகன்:— நித்ய ஸூரிகளுக்கு நிர்வாஹகனானவன். இத்தால் பரத்வம் சொல்லப்பட்டது. பரம ஸௌலப்யனாயிருந்து வைத்தும் பரத்வம் மறையாது விளங்குகிறது என்பதாம்.

சேங்கண், நெடுமால் திருமார்பா:— உபநிஷத்துகள் தாமரைக் கண்ணன், என்கிற சின்னத்தாலும் பெரிய பிராட்டியாரின் கணவன் என்கிற சின்னத்தாலுமே பரதேவதை இன்னாரென்று தீர்மானித்தபடி முதலடியில் சொன்ன பரத்வத்தை காரணங்களால் விவரித்துச் சொல்லுகிறார் இரண்டாமடியால். ஆகவே தாமரையன்ன சிவந்தகண்ணும் மார்பிலே திருவும் தோன்றுவதால் வேதாந்தங்களில் நிர்ணயிக்கப்பட்ட பரம புருஷன் திருக்குடந்தைப் பெருமானே என்றபடி. திருமார்பா என்பதால் புருஷகாரயோகமும் சொல்லப்பட்டதாகவுமாம். போங்கு + சேர்ந்தாய்:- ஸர்வேச்வரன் தமது உடலில் கண்வளரப் பெற்றான் என்கிற மகிழ்ச்சியாலே விரிந்து பரம்பியிருக்கும் படங்களையும் நாஸிகைகளையுமுடைய ஆயிரம் வாய்களையுடைய நாகத்தின்மீது சாய்ந்தருளினாய். இத்தால் கிடந்ததோர் கிடக்கைகண்டும் எங்ஙனம் மறந்து வாழ்கேன்என்ற போக்யதை பேசப்பட்டது.

குடமூக்கில்:— கும்பகோணம் என்ற வடசொல்லுக்கு நேரான தென்சொல் குடமூக்கு என்பது. "சீரார் செந்நெல் கவரி வீசும் செழுநீர் திருக்குடந்தை" யென்றபடி அசேதனங்களும் ஆச்ரயிப்பதற்குப் பாங்கான ச்ரமஹரமான திருக்குடந்தையைக் கோயிலாக் கொண்டாய்; என்பது.

ஆகவே பரம ஸுலபனும் ஸர்வஸ்மாத்பரனும் வாத்ஸல்யம் தோற்ற சிவந்த கண்களையுடையவனும் நாம் நெருங்கியநுபவிப்பதற்கிடாகப் புருஷகாரபூதையான பிராட்டியுடன் கூடியிருப்பவனும் பரம போக்யனுமான திருக்குடந்தையில் பள்ளிகொண்ட பெருமானே எங்கள் மூவருக்கும் அஸாதாரணமான ஸ்வாமியாவன் என்பது இப்பாட்டின் திரண்டபொருள்.

கொண்டு வளர்க்கக் குழவியாய்த் தான் வளர்ந்தது
உண்ட துலகேழு முள்ளொடுங்கக்—கொண்டு
குடமாடிக் கோவலனாய் மேவி என்னெஞ்சம்
இடமாகக் கொண்ட விறை. (98)

கோவலனாய்	இடையனான கிருஷ்ணனாய் வந்து
குடம் கொண்டு	குடத்தை யெடுத்துக் கொண்டு
ஆடி	நர்த்தனம் செய்து
என் நெஞ்சம் மேவி	என் நெஞ்சத்தை ஆசைப்பட்டு
இடமாக கொண்ட	அதையே வாஸஸ்தானமாக ஸ்வீகரித்த
இறை	ஸ்வாமியானவன்
கொண்டு	(சிலர்) எடுத்துக் கொண்டு
வளர்க்க	வளர்க்கும்படியான
குழவியாய்	குழந்தையாய்
தான் வளர்ந்தது	தானே வளர்ந்து வந்தான்.
	(ஒரு காலத்தில்)
உலகு ஏழும்	ஸப்த லோகங்களையும்
உள்	வயிற்றினுள்ளே
ஒடுங்க	அடங்கும்படியாக
உண்டது	அமுது செய்தான்.

தம்மை விஷயீகரித்த ஆராவமுதாழ்வானுடைய சில திவ்ய சேஷ்டிதங்களை அநுபவிக்கிறார்.

கோண்டு:— ஒருகால் இடையனாய் வந்து தோன்றி அந்த ஜாதிக் கேற்கும்படி குடக்கூத்தாடி என்னெஞ்சிலும் நித்யவாஸம் செய்கிற ஆராவமுதாழ்வான் ஒருகாலத்தில் ஒருத்தி எடுத்து வளர்க்கும்படியான சிறு குழந்தையாய் வளர்ந்தான். அப்பொழுது அவன் உலகங்களேழையும் அமுது செய்திருந்தான். தனக்கு ஸ்வாதீனமில்லாமல் மற்றொருவர் எடுத்துத் தூக்கி வளர்க்கவேண்டிய குழந்தையாயிருக்கச்செய்தே உலகேழையும் உதரத்தில் வைத்துக் காத்தான். இது என்ன அகடிதகடனா சக்தி; என்று அவனுடைய ஜகத்ரக்ஷகத்வத்தைக் கொண்டாடினார்.

கீழ்ப்பாட்டில் திருக்குடந்தை யெம்பெருமானை அநுஸந்தித்திருப்பதாலும், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஸ்ரீ ஆண்டாள் இவர்களுடைய “குடந்தையன் கோவலன்” “குடத்தை யெடுத்தேறவிட்டுக் கூத்தாட வல்ல வெங்கோவே” “கோலால் நிரைமேய்த் தாயனாய்க் குடந்தைக் கிடந்தகுடமாடி” என்கிற பாசுரங்களின்படி “குடமாடி கோவலனாய் மேவி” என்கிற பதங்களின் சேர்த்தியாலும் இப்பாசுரமும் ஸ்ரீ ஆராவமுதாழ்வான் மங்களாசாஸந பரமே எனக் கொள்ளலாம்.

குடக் கூத்தாவது தலையில் அடுக்கடுக்காகக் குடங்களையும் இரு கைகளில் அடுக்கடுக்காக் குடங்களையும் வைத்துக்கொண்டு குடம் கீழேவிழாமல் குடத்தை மாறிமாறி எறிந்து கொண்டேந்தி விளையாடுமொரு நடனம்.

இறை யெம்பெருமா னருளென்று, இமையோர்
முறைநின்று மொய்ம்மலர்கள் தூவ—அறைகழல
சேவடியான் செங்க ணெடியான், குறளுருவாய்
மாவடிவின் மண்கொண்டான் மால். (99)

இமையோர்	தேவர்கள்
எம்பெருமான்	எனக்கு ஸ்வாமி (எங்களுக்கு)
இறை	கொஞ்சம்
அருள் என்று	கிருபை செய்யவே ணுமென்றுசொல்லி
முறை நின்று	தங்களுடைய அடிமைக்குத் தகுந்த படி நின்று
மொய் மலர்கள்	உயர்ந்த புஷ்பங்களை
தூவ	ஸமர்ப்பிக்கும்படியாக
	சப்திக்கிற [illegible]டைய செவ்விய திருவடிகளையுடையவனும்
செங்கண்	சிவந்த கண்களையுடையவனும்
நெடியான்	ஸர்வாதிகனுமான
மால்	மால்
குறள் உரு ஆய்	மனனாய்த் தோன்றி
மா வடிவின்	பெரிய வடிவால்
மண் கொண்டான்	பூமியைப் பெற்றுக் கொண்டான்

த்ரிவிக்ரமனுடைய திருவடிகளே நமக்குப் ப்ராப்யங்களென்கிறாரிதில்.

இறை;— சிவந்த தாமரைபோன்ற கண்களையுடையவனும் ஒலிக்கிற வீரக்கழல்களை அடிகளில் அணிந்து கொண்டவனுமான ஸர்வேச்வரனான திருமால், தேவர்களெல்லாரும் வந்து கூடி முறையே நின்றுகொண்டு எங்கள் பெருமானே! எங்களுக்குச் சிறிது அருள்புரியவேணும்; எனப் ப்ரார்த்தித்துப் புஷ்பங்களைத் தூவ, வாமனனாய்த் தோன்றி பெரிய வடிவாலே மண்ணளந்தான். மண்ணளக்கும் பொழுது தேவர்கள் வணங்கி நின்றார்களென்றபடி.

இத்தால் கதாபுந:— என்ற ஆளவந்தார் ஸ்ரீ ஸூக்தியின்படி த்ரிவிக்ரமனுடைய திருவடிகளை என்றைக்கோ தலைக்கணிவது; என்று வேண்டிக்கொண்டிருந்தாரென்பது தோன்றும்.

மாலே நெடியோனே கண்ணனே, விண்ணவர்க்கு
மேலா வியன்துழாய்க் கண்ணியனே —மேலால்
விளவின்காய் கன்றினால் வீழ்த்தவனே, என்றன்
அளவன்றால் யானுடைய அன்பு. (100)

மாலே	திருமாலே !	கன்றினால்	கன்றுக்குட்டியைக் கொண்டு
நெடியோனே	ஸர்வேச்வரனே !	வீழ்த்தவனே	உதிர்த்தவனே !
கண்ணனே	கிருஷ்ணனே !	யான் உடைய	நான் உன்பால் கொண்டிருக்கிற
விண்ணவர்க்கு மேலா	நித்யஸூரிகளுக்கு நாதனே !	அன்பு	அன்பானது
வியன்துழாய் கண்ணியனே	அற்புதமான திருத்துழாய் மாலையை அணிந்தவனே !	என் தன் அளவு அன்று	என்னுள் அடங்கியிருப்பதல்ல.
மேலால்	மற்றொருநாள்		
விளவின் காய்	விளாமரத்தின் காயை		

மாலே:— அடியவர்களிடத்தில் அன்புள்ளவனே ! எல்லோரிலும் உயர்ந்தவனே ! பரம ஸௌலப்யனான கண்ணனே ! நித்ய ஸூரிகளுக்குத் தலைவனே ! திருத்துழாய் மாலையைச் சாத்திக் கொள்பவனே ! ஒருகால் விளாங்கனியைக் கன்றையெறிந்து உதிர்த்தவனே ; என்று மதுரமொழிகளால் அழைத்து அழைத்து உன்னிடம் எனக்குள்ள அன்பு என்னளவில் அடங்கியிருப்பதல்ல. என்னையும் மீறி அளவு கடந்திருக்கிறது ; என்று விண்ணப்பம் செய்தார்.

எனது பசியையாவது அடக்கு ; அல்லது பசிக்குத்தகுந்த சோறாவது கொடு ; என்று கேட்பாரைப்போல் இவ்வாழ்வார் “என்றனளவன்றால் யானுடைய அன்பு” என்று விண்ணப்பம் செய்ததற்கு எனது காதலையாவது அடக்கு ; அல்லது என்

காதலுக்குத்தக்கபடி உனது ஸாக்ஷாத்காரத்தையாவது கொடு; என்று ப்ரார்த்தித்தார்போல் தோன்றுகிறது. நிற்க கண்ணனென்னும் கருந்தெய்வமே காதலுக்குரியது என்பதையும் காட்டிப் பிரபந்தத்தைத் தலைக்கட்டினார்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.
எம்பெருமானார் திருவடிகளே சரணம்.
தேசிகன் திருவடிகளே சரணம்.

திருக்குடந்தை ஸ்ரீ ஆராவமுதாழ்வான் ஸந்நிதி வீதி
ந்யாய சிரோமணி
ப. ஸ்ரீநிவாஸராகவாசாரியர் ஸ்வாமி
இயற்றிய
இரண்டாந் திருவந்தாதி உரை
முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

ப்ரபந்த ஸாரம்.

கடன் மல்லைக் காவலனே பூதவேந்தே
காசினிமே லைப்பசியி லவிட்டநாள் வந்
திடர்கடியுந் தண்கோவ லிடைகழிச்சென்
றிணையில்லா மூவருமா யிசைந்தே நிற்க
நடுவிலும்பி லொருவருமன் றறியாவண்ணம்
நல்லிருளில் மால்நெருக்க நந்தாஞானச்
சுடர்விளக்கேற்றிய வன்பே தகளியான
தொடைநூறு மெனக்கருள்செய் துலங்கநீயே.

கடல் மல்லை காவலனே	திருக்கடன் மல்லை என்கிற திருப்பதிக்கு நிர்வாஹகரான
பூத வேந்தே	பூதத்தாழ்வாராகிய ஸ்வாமியே!
நீ	தேவரீர்
காசினிமேல்	பூமியில்
ஐப்பசியில்	ஐப்பசி மாதத்தில்
அவிட்டநாள் வந்து	அவிட்டநக்ஷத்திரத்தில் அவதரித்து
இடர் கடியும்	துயரங்களைப் போக்குகிற
தண்	குளிர்ந்ததான (ரமணீயமான)
கோவல்	திருக்கோவலூரில்
இடைகழி சென்று	இடைகழியிலே (ரேழியிலே) போய்,
இணை இல்லா மூவருமாய்	ஒப்பில்லாதவர்களான (பொய்கையார், பேயார், தேவரீர்) ஆகிய மூவரும்
இசைந்து நிற்க	சேர்ந்து நிற்கிற அளவில்
அன்று	அப்பொழுது
நல் இருளில்	நெருக்கமான இருள் சூழ்ந்த அவ்விரவில்
உம்மில் ஒருவரும் அறியா வண்ணம்	உங்கள் மூவரில் ஒருவரும் தெரிந்துகொள்ள முடியாதபடி
நடுவில்	உங்கள் நடுவில்
மால் நெருக்க	திருமால் (வந்து) தேவரீர்களை நெருக்க
நந்தா	அணையாததான

ஞான சுடர் விளக்கு ஏற்றிய	ஞானமாகிற தேஜோ ரூபமான திருவிளக்கை ஏற்றிய
அன்பே தகளியான	அன்பே தகளியென்று ஆரம்பித்தருளின
தொடை நூறும்	இலக்கணங்களோடு கூடின தமிழ்ப் பிரபந்தமாகிற நூறு பாசுரங்களையும்
இலங்க	விளங்கும்படியாக
எனக்கு அருள் செய்	அடியேனுக்குக் கிருபைசெய்யவேணும்.

பூதத்தாழ்வார் அவதரித்த திவ்ய தேசம் மாதம் திருநக்ஷத்திரம் முதலியவற்றை அநுஸந்தித்து அவர் அருளிய இரண்டாந் திருவந்தாதி யென்னும் பிரபந்தத்தைத் தனக்கருள்புரியவேணுமென்று அவரையே வேண்டுகிறார்.

கடன்மல்லை:— மஹாபலிபுரம் என்கிற திருக்கடல்மல்லையிலே ஒரு குருக்கத்திமலரில் ஐப்பசி மாதத்தில் அவிட்ட நக்ஷத்திரத்திலே அயோநிஜராய் அவதரித்தருளிய பூதமுனிவரே! தேவரீர் திருக்கோவலூரிலே சென்று மிருகண்டு முனிவரதில்லத்தில் இடைகழியில் பொய்கையாருடன் இருள்சூழ்ந்த இரவில் சேர்ந்து நிற்குங்கால் ஸர்வேச்வரனும் தேவரீர்களைக் கொண்டு பிரபந்தங்களை வெளியிட்டு உலகத்தைஉய்விக்க நினைத்து உங்களுக்கும் தெரியாதபடி உங்கள் நடுவிலே வந்து உங்களை நெருக்குங்கால், அன்பைத் தகளியாகவும் ஆர்வத்தை நெய்யாகவும் இன்புருகு சிந்தையைத் திரியாகவும் அமைத்து ஒரு விலக்ஷணமான ஞானச் சுடர்விளக்கை ஏற்றினேன் என்று கருத்துக் கொண்ட "அன்பே தகளியா" என்ற பாசுரம் முதலாக தேவர் அருளிய நூறு பாசுரங்களையும், கற்கவேணுமென்று ஆசை பூண்ட அடியேனுக் கருள்புரியவேணுமென்று பிரார்த்திக்கிறார்.

ஞானச்சுடர்விளக்கேற்றிய:— "இறைவனைக் காணும் இதயத்திருள் கெட ஞானமென்னும் நிறைவிளக்கேற்றிய பூதத் திருவடி தாள்கள்" என்றபடி ஹ்ருதயத்திலுள்ள இருளையெல்லாம் விலக்கும்படியான ஞானதீபத்தை ஏற்றினரென்றபடி.

ஸ்ரீ தேசிகன் திருவடிகளே சரணம்.

சுபமஸ்து.

ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம், (லிமிடெட்,)
டவுன் ஹைஸ்கூல் ரோடு,
கும்பகோணம்.

ஸ்ரீ:

பூதத்தாழ்வார் திருவடிகளே சரணம்.

இரண்டாந் திருவந்தாதியின் செய்யுளகராதி.

பாசுரங்களின் லக்கம்.	செய்யுள்.	பக்கங்களின் லக்கம்.
1	அன்பே தகளியா	7
5	அடிமூன்றி லிவ்வுலகம்	16
6	அறிந்தைந்தும்	18
9	அன்றது கண்டஞ்சாத	23
12	அவரிவரென்றில்லை	28
22	அரிய தெளிதாகும்	47
24	அவன்கண்டாய்	51
50	அழைப்பன் திருமாலை	91
59	அருள்புரிந்த சிந்தை	106
85	அமுதென்றும் தேனென்று	145
92	அடியால் முன் கஞ்சனை	153
96	அத்தியூரான் புள்ளை	158
73	ஆய்ந்துரைப்பனாயிரம்பேர்	127
35	இனிதென்பர் காமம்	67
37	இருந்தண் கமலத்து	70
66	இதுகண்டாய் நன்னெஞ்சே	116
71	இடங்கை வலம்புரி	125
87	இன்றாவறிகின்றேன்	148
99	இறையெம்பெருமான்	163
8	உகந்துன்னை வாங்கி	22
45	உளதென்றிறுமாவார்	83
48	உணர்ந்தாய் மறை	88
77	உறுங்கண்டாய்	133
94	உற்றுவணங்கித் தொழுமின்	155
38	நாக்கினென்றிறைஞ்சியார்	72

பாசுரங்களின் லக்கம்.	செய்யுள்.	பக்கங்களின் லக்கம்.
55	என்றுமறந்தறியேன்	100
95	என்னெஞ்சமேயான்	157
97	எங்கள் பெருமான்	159
63	ஏறேழும்வென்று	112
39	ஓத்தின்பொருண்முடிவும்	73
60	ஓருருவனல்லை	107
7	கழலெடுத்துவாய்	19
11	கடைநின்றமரர்	27
64	கதையும் பெரும்பொருளும்	113
67	கண்டேன் திருமேனி	118
89	கதவிக்கதஞ்சிறந்த	150
93	கடிதுகொடுநரகம்	154
56	காணக்கழி காதல்	101
83	குறையாக வெஞ்சொற்கள்	142
18	கொண்டதுலகம்	40
98	கொண்டுவளர்க்க	161
69	கோவாகி மாநிலம்	121
36	சிறியார் பெருமை	69
44	சிறந்தார்க்கெழு	82
40	சுருக்காக வாங்கி	75
25	சென்றதிலங்கைமேல்	52
2	ஞானத்தால் நன்கு	9
16	தனக்கடிமைப்பட்டது	36
70	தமருள்ளம் தஞ்சை	122
78	தவஞ்செய்து நான்முகனே	134
21	தாமுளரே தம்முள்ளம்	45
23	தாழ்ந்துவரங்கொண்டு	49

பாசுரங்களின் லக்கம்.	செய்யுள்.	பக்கங்களின் லக்கம்.
57	திருமங்கை நின்றருளும்	103
88	திறம்பிற்றினியறிந்தேன்	149
15	திரிந்தது வெஞ்சமத்து	34
33	துணிந்தது சிந்தை	65
13	தொடரெடுத்தமால்யானை	30
43	தோளிரண்டெட்டேழும்	80
4	நகரிழைத்துநித்திலத்து	13
86	நவின்றுரைத்த	146
58	நாம்பெற்ற நன்மையும்	104
42	நினைப்பன் திருமாலை	79
52	நிறங்கரியன் செய்ய	94
61	நின்றதோர் பாதம்	109
30	நீயன்றுலகளந்தாய்	59
53	நெறியார் குழல்	96
80	நேர்ந்தேனடிமை	137
3	பரிசு நறுமலரால்	11
14	பண்டிப்பெரும்பதியை	32
20	பழிபாவம் கையகற்றி	43
27	பதியமைந்துநாடி	55
46	பயின்றதரங்கம்	85
65	பணிந்தேன் திருமேனி	115
81	பகல்கண்டேன்	138
31	பிரானொன்று நாளும்	62
79	பின்னின்று தாயிரப்ப	135
91	பின்றுலருநரகம்	152
75	பெருகுமதவேழம்	130
10	பேர்த்தனை மாசகடம்	25
62	பேரொன்றுமுன்	111
41	பொருளாலமருலகம்	76
72	போதறிந்து வானரங்கள்	126

பாசுரங்களின் லக்கம்.	செய்யுள்.	பக்கங்களின் லக்கம்.
17	மற்றுரியளாவார்	39
28	மனத்துள்ளான்	57
29	மகனைக்கொண்டு	58
32	மகிழ்ந்தது சிந்தை	64
49	மலையெழும் மாநிலங்கள்	89
51	மதிக்கண்டாய் நெஞ்சே	92
90	மண்ணுலகமாளேனே	151
47	மாலையரியுருவன்	86
100	மாலே நெடியோனே	164
74	யானே தவம்செய்தேன்	129
19	வழக்கன்று கண்டாய்	42
26	வந்தித்தவனை	54
34	வகையாலவனி	66
68	வலிமிக்கவாளெயிற்று	120
76	வரைச்சந்தன	132
82	வடிக்கோலவாள்	140
84	வரம் கருதித்தன்னை	144
54	வெற்பென்றிரும் சோலை	97

சுபமஸ்து.